
# கடலலைகள்

# கொஞ்சும் நகர்



கலையார்வன்

(கு. இராயப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலலைகள் கொஞ்சும் நகர்

கலையார்வன்

(கு. இராயப்பு)

வெளியீடு

நெயோ கல்சரல் கவுன்சில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைவாழ்வில்
துணைநின்ற
என்
பெற்றோருக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | : | கடலைகள் கொஞ்சும் நகர் |
| விடயம் | : | சமூக வாழ்வியல் தரவுகள் |
| ஆசிரியர் | : | கலையார்வன் (கு. இராயப்பு)<br>28 , மாட்டின் வீதி,<br>யாழ்ப்பாணம். |
| பக்கங்கள் | : | XVI + 180 |
| முதற் பதிப்பு | : | டிசம்பர் 2005 |
| பதிப்புரிமை | : | ஆசிரியர் |
| வெளியீடு | : | நெயோ கல்சரல் கவுன்சில்<br>28/1, சென் ஜேம்ஸ் மேற்கு வீதி,<br>யாழ்ப்பாணம். |
| அச்சுப்பதிப்பு | : | ஏ. சி. எம். அச்சகம்<br>464 ,ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம். |
| கணினி – வடிவமைப்பு | : | ஜெயந்த சென்ரர்<br>28 , மாட்டின் வீதி,<br>யாழ்ப்பாணம். |
| அட்டைப்படம் | : | ஜெயந்த் சென்ரர் |
| விலை | : | 200/= |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 1. அறிமுகம் | ............................... | 1 |
| அருமுகம் | ............................... | 2 |
| 2. ஆளுமை | ............................... | 3 |
| 3. சமூகம் | ............................... | 6 |
| குழுமம் | ............................... | 6 |
| 4. இல்லிடம் | ............................... | 11 |
| 5. சடங்குகள் | ............................... | 16 |
| அற்ஹோம் | ............................... | 16 |
| ஞானஸ்ஞானம் | ............................... | 18 |
| திருமணம் | ............................... | 19 |
| மரணச்சடங்கு | ............................... | 25 |
| 6. புனித யாத்திரைகள் | ............................... | 29 |
| மடுத்திருவிழா | ............................... | 29 |
| புல்லாவெளி | ............................... | 30 |
| பாலைதீவு | ............................... | 31 |
| கச்சைதீவு | ............................... | 33 |
| 7. தொழில் வளர்ச்சி | ............................... | 35 |
| 8. கடற்கலம் | ............................... | 39 |
| தோணி | ............................... | 39 |
| சுக்கான் | ............................... | 40 |
| பாய்மரம் | ............................... | 41 |
| சவள் | ............................... | 43 |
| கூறப்பாய் | ............................... | 43 |
| 9. கலங்களின் பயன்பாடுகள் | ............................... | 45 |
| தோணி | ............................... | 45 |
| வள்ளம் | ............................... | 46 |
| படகு | ............................... | 47 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. தொழில் உபகரணங்கள்................................ 49
சணல் - கயிறு ................................ 49
நூல் ................................ 50
வலை ................................ 50
மடங்கு ................................ 51
கம்பான்கயிறு ................................ 52
ஓலைக்கயிறு ................................ 53
மடி ................................ 53

11. தொழிற் பண்புகள் ................................ 55
சம்மாட்டி ................................ 55
குத்தகையாளர் ................................ 56
தொழிலாளர் ................................ 56
அரச மரக் கூட்டுத்தாபனம்...................... 60
பொருட்களை ஏற்றி இறக்குதல்............. 61
சீநோர் அபிவிருத்தித் திட்டம்................. 62
அரச உத்தியோகங்கள்............................ 63
குருநகர் எழுச்சி ................................ 66

12. வலைகளின் அமைப்புகளும் தொழில்முறைகளும் 69
கரைவலை ................................ 71
பாச்சுவலை ................................ 80
கொண்டடி ................................ 83
கூட்டுவலை ................................ 85
ஒளிமீன்பிடி ................................ 86
பேசியன்வலை ................................ 87
றோளர் ................................ 88
வளிச்சல்வலை ................................ 92
படுப்புவலை ................................ 93
இறால்மடி ................................ 94
பொறிவலை ................................ 95
சிறகுவலை ................................ 96
ஆழ்கடல் சிறகுவலை.......................... 97
கட்டை சிறகுவலை................................ 99
பிதைப்புவலை ................................ 100
களங்கட்டி ................................ 100
கணவாய்ப்பொறி ................................ 101
வீச்சுவலை ................................ 101
இழுவை இறால் ................................ 102
இழுவை இறால் மடி............................ 103



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| | |
|---|---|
| கைத்தூண்டல் ................................ | 103 |
| தூண்டில்வலை ................................ | 104 |
| **13. தொழிலாற்றுகையில் எதிர்கொள்ளும் அபாயங்கள்** ................................ | 107 |
| டைனமெற் வைத்து மீன்பிடித்தல்......... | 107 |
| கடற்றொழிலாளரை அச்சுறுத்துபவை.... | 108 |
| தொழில்சார்ந்த பழமொழிகள்............... | 113 |
| அம்பா பாடல்கள் ................................ | 113 |
| **14. குருநகர்கொண்ட ஆலயங்களும் அவற்றின் வரலாறுகளும்**...................... | 116 |
| புனித யாகப்பர் ................................ | 116 |
| புதுமை அன்னை ................................ | 119 |
| கார்மேல் அன்னை................................ | 123 |
| புனித பேதுரு ................................ | 124 |
| லூர்துமாதா ................................ | 125 |
| இறைபணியாளர்கள்............................ | 126 |
| **15. விளையாட்டு** ................................ | 128 |
| விளையாட்டுக் கழகங்கள்...................... | 128 |
| திறமைபெற்ற வீரர்கள்........................... | 133 |
| **16. கலை** ................................ | 134 |
| நாடக நடிகர்கள் ................................ | 136 |
| ஒப்பனை ................................ | 148 |
| **17. சிற்பம் ஓவியம்** ................................ | 153 |
| **18. மண்ணின் நினைவுகள்** ................................ | 159 |
| **19. வழக்கிலிருந்த சொற்கள்**................................ | 180 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணத்திலிருந்து...



கலையார்வன் கு. இராயப்பு நவீன தொழில் நுட்பத் துறையோடு மிகுந்த தொடர்புடையவர் என்பதைக் 'கணிப்பொறி' பற்றி அவர் வெளியிட்ட நுல்கள் தெளிவுபடுத்தின. தொழில்நுட்ப அறிவுடையோர் கலையின் பக்கம் தலைவைக்கும்பொழுது, அதிலே ஒரு நேர்த்தியும் - செம்மையும் இருப்பது பெரும்பாலும் இயல்பானதே. ஒருவித விஞ்ஞான அணுகுமுறை அவர்களது நோக்கு நிலையாக அமைவது தவிர்க்க முடியாததே. இந்த வகையிலேதான் நாம் 'கலையார்வன்' இராயப்புவை நோக்கவேண்டும்.

இராயப்பு வெளியிட்ட நுல் வரிசையிலே அவரது 'களம் தந்த களங்கம்' எனும் தென்மோடி நாட்டுக்கூத்துப் பதிப்பு மிகவும் முக்கியமானது. அருகிவரும் நாட்டுக்கூத்துக் கலைக்குப் புத்துயிர் அளிக்கும் செயற்பாடுகள் இன்று பரவலாக மேற்கொள்ளப்படுகின்றன. பழமையும் புதுமையும் கைகோர்க்கும் பல நாட்டுக் கூத்துக்களை எழுதியும், ஆடியும் பாதுகாத்த பெருமை குருநகர் மண்ணுக்கு உண்டு.

ஈழத்தமிழ் மக்களின் கலைமூலங்களைக் கண்டறிய முனைவோர் குருநகர் பகுதியை, அப்பகுதியின் கலை வெளிப்பாடுகளை நிச்சயமாகப் பார்த்தே ஆகவேண்டும். இவரால் அச்சுவாகனம் ஏற்றப்பட்ட, இவர் தந்த 'களம் தந்த களங்கம்' போல இன்னும் பல நாட்டுக் கூத்துக்கள் இருக்கலாம். அவற்றைத் தேடிப் பிடித்துச் செப்பமாக வெளியிடும் பொறுப்பினையும் இராயப்பு போன்றோர் செய்யவேண்டும் என விரும்புகின்றேன்.

'களம் தந்த களங்கம்' என்னும் நுலிலே இடம் பெற்றுள்ள குருநகர் கலைமாட்சி என்னும் பகுதி மிகுந்த கவனிப்புக்குரியது. கலையார்வனின் ஆய்வுத் தேடலின் வெளிப்பாடாக இதனைக் கொள்ளலாம். குருநகர் மக்கள் மத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ் பெற்று விளங்கிய கலையையும், கலைஞர்களையும் பதிவு செய்துகாட்டும் ஆவணமாக இப்பகுதி அமைகின்றது.

தான் பிறந்த மண்ணை நேசிக்கின்ற கலையார்வன் இப்பொழுது தருகின்ற 'கடலலைகள் கொஞ்சும்நகர்' என்னும் நூல் இவரின் இன்னொரு பரிமாணத்தைக் காட்டுகின்றது. குருநகர் மக்களின் வாழ்வியலை அவர்களின் தொழில்சார் பண்பாட்டோடு இணைத்து நோக்கியமை பாராட்டிற்குரியது. கலைவாழ்வு மாத்திரமன்றித் தொழில்சார் நுட்பங்களையும் 'மண் மணம் கமழ' இந்நூலிலே இராயப்பு படம் பிடித்துள்ளார்.

பல் பரிமாணங்களிலே தன்னை வளர்த்துக் கொள்ளுகின்ற கலையார்வன் தொழில்நுட்பம், கலையார்வம், வாழ்வியல் ஆய்வு முதலான மூன்று துறைகளிலே தனது தடத்தினைப் பதித்துள்ளார்.

இவரது ஆக்கங்களில் புலம் பெயர்ந்து வாழ்ந்த அனுபமும், ஈழத்து வாழ்வு அனுபவமும் சங்கமித்துச் செல்வதைக் கண்டு கொள்ளமுடிகின்றது.

இவரது பணிகள் தொடர வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர். எஸ். சிவலிங்கராஜா**
தலைவர்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுள்ளிருந்து...



மனித வாழ்வியல் வேறு - வரலாறு வேறல்ல. இரண்டும் இரண்டறக் கலந்து ஏற்ற இறக்கம், நன்மை தீமைகள், சாதனை வேதனை எனத் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. இந்த வரலாற்றுத் தொடரில் புதையுண்டுபோனவைகள் - புதைக்கப்பட்டவைகள் - தூர்ந்துபோனவைகள் எத்தனை எத்தனை? அவற்றில் சிலவற்றையேனும் தற்போது வாழும் சிலரிடம் தோண்டி எடுக்கலாம். அதிலும் எவ்வளவுதூரம் வெற்றிகிடைக்கும்? அவர்களில் நினைவுகளிலிருந்து வார்த்தைகளாக வெளிவருபவைகளைத் தவிர ஏனையவைகள் இல்லாதவைகளாக - கிட்டாதவைகளாகவே மாறிவிடுகின்றன. இதனால் ஒரு சமூகத்தின் தனித்துவங்கள் - அடையாளங்கள் - பிரபல்யங்கள் கணிசமான அளவில் மூழ்கடிக்கப்படுகின்றன.

இந்த நிலை, நான் பிறந்த மண்ணுக்கும் விதிவிலக்கல்ல. அவ்வாறு ஏற்பட்டுவிடக்கூடாது என்ற ஆதங்கம் எனக்கு. அந்த ஆதங்கத்தின் வெளிப்பாடாகவே 2003 இல், வெளிவந்த 'குருநகர் கலைமாட்சி' நூல் அமைகின்றது. அதன் தொடராக இந்த நூல் வெளிவருகின்றது. நான் என் மண்ணை நேசிப்பதும் அதன் தடங்களை வெளிக்கொண்டுவர முனைவதும் தவறான ஒன்றல்ல. 'சாகியத்தின் வெளிப்பாடு' என்று எவரேனும் கருதுவார்களேயானால் அது தவறான கருத்தேயாகும். ஏனென்றால் இதுபோன்ற பல நூல்கள் ஏற்கனவே வெளிவந்திருக்கின்றன. அவைகளெல்லாம் அவ்வாறு நோக்கப்பட்டதல்லவே?

கடற்கோளால் குமரிக்கண்டம் மறைந்தபோது, பூம்புகார் பட்டினத்தின் சிறப்பை வெளிக்கொண்டுவரவேண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்ற துடிப்பில், அதன் வரலாற்றுத் தடங்களைத் தேடி வரலாற்று ஆய்வாளர்கள் அலையவில்லையா? வெளிக்கொண்டு வரவில்லையா? ஏன்?.. அதன் சிறப்புக்கள் - உண்மைகள் மழுங்கடிக்கப்படாமல், அனைவரும் அறிந்து கொள்வதற் கேற்றவாறு வெளிக்கொண்டுவரவேண்டு மென்ற உயரிய எண்ணம்.

அதேபோன்றதுதான் என் செயற்பாடும். 'குருகுலம்' என்றொரு சமூகம் நீண்ட வரலாற்றுத் தொடரைக் கொண்டது. பலவகையிலும் சிறப்புடன் வாழ்ந்திருக்கிறது. அந்த சமூகத்தின் எச்சங்கள் யாழ்நகரில் - குருநகர் என்று தற்போதும், கரையூர் என்று முன்னரும் அழைக்கப்படட இடத்தில் வாழ்கின்றனர். அந்த சமூகத்தின் தனித்துவங்கள் - அடையாளங்கள் - பிரபல்யங்கள் புதைக்கப் பட்டதுடன், வெளிக்கொண்டுவர எவரேனும் முனையாதலால் புதையுண்டும்விட்டது என்பது என் எண்ணம். அவ்வாறு புதைக்கப்பட்ட, புதையுண்டவைகளை பிறரறியச்செய்திடவேண்டும் என்ற எனது நோக்கம் தவறானதா? இவற்றில் கிடைப்பவற்றையேனும் தோண்டி யெடுக்கவேண்டும் என்ற அவா. அதனையே செய்தேன். அவ்வளவுதான்.

இது எனது முயற்சியாயினும் பலரது நினைவுகளிலிருந்து கறக்கப்பட்டு கலக்கப்பட்டவைகளேயாகும். நான் அணுகிய ஒவ்வொருவரும் தத்தமது சிரமங்களைப் பொருட்படுத்தாது ஒத்துழைப்பு வழங்கினார்கள். அந்த வகையில் முதற்கண் எனது நன்றிகள் அவர்களுக்கே. என்னால் முடிந்தவரை என் நினைவுகளிலிருந்து மீட்டவற்றையும், தகவலாளர்களிடமிருந்து கிடைத்தவற்றையும், பரவலாக விசாரித்து - நூல்களில் படித்து அறிந்தவற்றையும் வெளிக்கொண்டுவந்திருக்கிறேன். இவைகள் நிறைவுபெற்றவை என்று நான் சொல்லமாட்டேன். கிடைத்தவற்றை மட்டுமே தந்திருக்கிறேன். கிடைக்காதவைகள் வெளிக்கொணரப் பட்டவைகளைவிட அதிகமாகவும் இருக்கலாம், சொற்பமாகவும் இருக்கலாம். இந்நூலில் தகவல்கள் தவறவிடப்பட்டதாக எவரேனும் உணருவார்களேயானால் அத் தகவல்களைத் தெரியப்படுத்துவதன் மூலம் தொடர் பதிப்புகளில் நிறைவுசெய்ய ஒத்துழைத்தவர்களாக இருப்பீர்கள்.

பல சிரமங்களின் மத்தியில், குருநகர்வாழ் குருகுல மக்களின் இறந்தகால - நிகழ்கால தகவல்களை சேகரித்து அச்சுவாகனமேற்றி உங்கள் கைகளில் ஒப்படைத்துள்ளேன். நிகழ்கால நிகழ்வுகளின் வெளிப்பாடுகளால் சிலவேளை சுவையற்றதாககூட உங்களுக்கு தெரியலாம். நீங்கள் எடுத்துநோக்கும் தன்மையைப் பொறுத்து சுவையற்றதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்படினும் இதனை, அடுத்துவரும் எமது சந்ததியினருக்கு விட்டுச்செல்லும் வரலாற்றுப் பதிவாக ஒப்படைக்கிறேன். அந்தவகையில் என் கடமையை ஓரளவேனும் நிறைவேற்றிக் கொண்டதில் ஆத்ம திருப்தி எனக்கு.

கிட்டத்தட்ட ஒரு ஆண்டுகள் சிறுகச் சிறுகச்சேர்த்து வெளிச்சத்துக்குக் கொண்டுவந்திருக்கிறேன். இதில் எவரது மனத்தையும் புண்படுத்தவேண்டும் என்ற நோக்கம் அறவே கிடையாது. அறிந்ததை மனதிற்பட்டதை அப்படியே எழுத்தாக்கியி ருக்கிறேன். அவ்வாறு எழுத்தாக்குவதற்கு தூண்டுகோலாக, வழிகாட்டியாக, உறுதுணையாக நின்ற என் நண்பர்களுக்கும், எனது சந்தேகங்களை உறுதிப்படுத்த உதவிய அன்பு உள்ளங்களுக்கும், நான் அறியாத தகவல்களை இன்முகத்துடன் வழங்கிய இனிய நெஞ்சங்களுக்கும் என் இதயம்நிறைந்த நன்றிகள். உங்கள் ஒவ்வொருவரினதும் சேவை எதிர்கால சந்ததிக்கு பயனுள்ளவையாக இருக்கும் என்றே கருதுகின்றேன்.

பல்வகை இடர்களின் மத்தியிலும் கணினிசார் வேலைகளைச்செய்து வடிவமைத்து உதவிய 'ஜெயந்த் சென்ரர்' நிறுவனத்தாருக்கும், சிரமத்தைக் கருத்திலெடுக்காது அச்சிட்டு உதவிய 'ஏ.சி.எம். அச்சகத்'தாருக்கும் வெளியீடுசெய்ய முன்வந்த 'நெயோ கல்சரல் கவுன்சில்' நிறுவனத்தாருக்கும் எனது இதயம் நிறைந்த நன்றிகள்.

நன்றி

அன்புடன்
**கலையாரிவன்**
(கு. இராயப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளத்திலிருந்து...



அலைகடல் கொஞ்சும் குருநகரில் குடிகொண்ட குருகுல மக்களின் பூர்வீகம், அவர்களது செழிமை மிக்க வரலாறு, சிறப்பான வாழ்வியல், அறிவியலும் அரசியலும் ஏற்படுத்திய மாற்றங்களுக்கு இசைவாக அவர்கள் மேற்கொண்ட பொருளாதார முயற்சிகள், ஆட்கொண்ட சிறப்புக்கள், அர்த்தமுள்ள சமய வெளிப்பாடுகள் ஆழ்ந்த சமூக நட்புகள் அவர்களது வலிமை மிக்க பாரம்பரியத்தினை உறுதிசெய்யும் வீர விளையாட்டுக்கள், நேர்த்தியான கலை கலாசார செயற்பாடுகள் எனப் பல பரிமாணங்களில் குருகுல மக்களின் சிறப்பியல்புகளை கடல் அலைகள் கொஞ்சும் நகர் என்னும் இந்நூலில் ஆய்ந்தறிந்த தன் தேடலின் மூலம் முடிந்தவரை ஒழுங்குபட ஆவணப்படுத்தியுள்ளார் கலையார்வன் கு. இராயப்பு அவர்கள்.

இவர் தொட்டுக் காட்டியுள்ள பல விடயங்கள் வரலாற்றுத் துறையில் ஆர்வம் மிகுந்தவரை தொடர்ந்து முழுமையான தேடல்களை செய்வதற்கும் ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் நிச்சயமாக ஊக்குவிக்கும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய ஒரு பெரு முயற்சியின் பெறுமதியையும் கனாகனத்தையும் நலனாய்வுச் சுவையையும் துறைசார்ந்தோர் கண்டு கொள்வர்.

குருநகர் மக்கள் புலம்பெயர்ந்து இன்று குவலயம் முழுவதும் வாழ்ந்து வருவது கண்கூடு. நள்ளிரவில் சூரியன் தோன்றும் நோர்வே நாட்டில் குட்டி குருநகர்கூட உண்டு என அறியப்படுகிறது. புலம் பெயர்ந்துள்ள இவர்களில் பலர் தம் சொந்த இடங்களுக்கு மீண்டுவர வாய்ப்பே இல்லை. இத்தகையவர்களின் சந்ததிகள் பெருமைமிக்க தம் மூதாதையரின் பூர்வீகத்தை, சிறப்பான அடையாளங்களை இப்போதே அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்க வேண்டியது அவசியம் என்ற தூய்மையான ஆதங்கத்தால் கலையார்வன் அவர்கள் இந்நூலினைப் படைத்துள்ளார் என நாம் நம்புகிறோம். அவருக்கு எம் நெஞ்சம் நிறைந்த பாராட்டுக்கள்.

சமூக சிந்தனையுடனும், தூரப்பார்வையுடனும் இவர் எழுதிய குருநகர் கலை மாட்சி எனும் நூலினை 2003 ஆம் ஆண்டு நாம் வெளியிட்டு வைத்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதன் நீட்சியாக பன்முகப்பார்வையுடன் பரிணமித்துள்ள கடலலைகள் கொஞ்சும் நகர் என்னும் இச் சிறப்பான நூலினையும் நாம் வெளியிட இசைவு தந்தமைக்கு எமது மேலான நன்றியும் வணக்கமும் உரியனவாகுக.

எமது வேண்டுகோளுக்கு அமைவாக இந்நூலிற்கு சிறப்பான அணிந்துரை வழங்கியுள்ள யாழ் பல்கலைக்கழக தமிழ் துறைத் தலைவர் பேராசிரியர் S. சிவலிங்கராஜா அவர்களுக்கும் எம் மனம் நிறைந்த நன்றிகள்

**V. J. Constantine**
All Island Justce of the Peace.
Director,
NEO CULTURAL COUNCIL
28/1, James West Street,
Jaffna
Phone: 021/222 3224



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்தகால பதிவுகளை
நிகழ்கால - எதிர்கால சந்ததியினருக்கு
வழங்கும்பொருட்டு
தகவல்களைச் சேகரிக்கச் சென்றபோது
இன்முகத்துடன் வரவேற்று
ஒத்துழைப்பு வழங்கிய,
பல நிலையிலும்
அனுசரணையாய் இருந்த
அனைவர்
கரங்களையும்
நன்றியுணர்வுடன்
பற்றிக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. அறிமுகம்

**'குருநகர் கலைமாட்சி'** (ஜுலை 2003) நூலில் குருநகர் கலைநகராய் இருந்தமையை அனைவருக்கும் தெளிவுற உணர்த்தியதோடு பலராலும் மறைக்கப்பட்ட, மறுக்கப்படமுடியாத உண்மைகள் பல வெளிக்கொண்டுவரப்பட்டன. அந்நூலில் வெளியான விபரங்கள் பின்வருமாறு:

1. அலையாளும் குருநகர் (பூர்வீகம், இழப்புகள்)
2. குருநகர் எழுத்தாளர்களால் வெளியிடப்பட்ட நூல்கள்
3. குருநகர் மக்களாலும், குருநகரிலிருந்தும் வெளியிடப்பட்ட வெளியீடுகள்
4. குருநகர் கலை, இலக்கிய, நாடக மன்றங்கள்
5. குருநகர் நாடக எழுத்தாளர்கள்
6. குருநகர் இசைக் கலைஞர்கள்
7. குருநகர் நாட்டுக்கூத்துச் சிறப்பு
8. குருநகர் கவிஞர்களால் எழுதப்பட்ட கூத்துகள்
9. குருநகர் பிரசவித்த (நாட்டுக்கூத்து) அண்ணாவிகள்

'குருநகர் கலைமாட்சி' நூலில் தொட்டவற்றில் சில இந்நூலில் தொடரப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருமுகம்

"கலாசாரத்துறைகளில் வறண்ட பகுதியெனத் 'தூரத்து மனிதர்களால்' பிழையாகக் குறிக்கப்படும் குருநகரிலிருந்து வெளித் தெரியவருபவர்களில், இவரும் ஒருவர்."

**பிரபல விமர்சகர் அ. யேசுராசா,**
*(17.10.1976 'அம்பா')*

"யாழ்ப்பாணத்திலே சித்திரங்கள் வரைவதில் திறமை வாய்ந்து ஐரோப்பியர்களாலும் பாராட்டப்பட்டவருள் மேஸ்திரி சந்தியோகு ஒருவராவர். இவர் குருநகர் வாசியும், சந்தியோகு அப்போஸ்தலர் பங்கைச் சேர்ந்தவருமாவர். இவரால் நிர்மாணிக்கப்பட்ட சந்தியோகுமையோர் ஆலயத்தின் தூபி வியப்புக்குரியது."

**யோண் எச். மாட்டின்,**
*(யாழ்ப்பாணத்தைப் பற்றிய குறிப்புகள்)*

"பண்டிதருடைய (சுவாமி விபுலானந்தர்) வாழ்க்கையின் அடிப்படையாக அமைந்த அன்புநெறி யாழ்ப்பாணத்துக் கரையூர் மக்கள் இட்ட வித்திலே தோன்றி செழுமையுற்றோங்கியது என்றால் அது மிகையாகாது... 'கரையூர் மக்கள் கங்கை வேடனாகிய குகனுடைய மரபினரே' எனக் (பண்டிதர்) கூறி மகிழ்வார்."

**இ. சிவகுருநாதன்,**
*(ஸ்ரீலங்கா, நவம்பர் 1951)*

"இப்பொழுது கலைமீது ஆர்வம்கொண்ட அநேக இளைஞர்கள் எம் நாட்டில் பல இடங்களிலும் இருக்கிறார்கள். அவைகளில் ஒன்றாக குருநகர் சிறந்து விளங்குகிறது. இதற்குச் சான்றாக அச்சிறு ஊரில் தற்சமயம் பன்னிரு நாடக மன்றங்களை ஸ்தாபித்து சிறந்த நாடகங்களை இயற்றி நடித்து வருவதை அறிகிறோம்."

**கலைச்சுடர் க. சொர்ணலிங்கம்**
*(06.08.1972 கலைக்கதிர் நாடகமன்ற 5வது ஆண்டு பூர்த்திவிழா மலர்)*

"சந்தியோகுமையோர் கோவில் (யாகப்பர் ஆலய) கிறிஸ்தவர்கள், இப் பட்டினத்தில் மிகவும் குருபக்தி உள்ளவர்கள். மேற்றாணிமாருக்கும் – குருமாருக்கும் வீரத்துவம் நிறைந்த இச்சனங்களை அவர்களின் மெய்க்காப்பாளர் என வர்ணிக்கிறேன்."

**அதி வண. கியோமர் ஆண்டகை**
*(27.12.1932 இல், யாகப்பர் ஆலயத்தில் நடைபெற்ற முதற் திருநிலைப்படுத்தல் நிகழ்வின்போது கூறப்பட்டது.)*

"கரையூரைக் குருநகராய்க் காண்கிறோம் நாம்
குருநகரை கலைநகராய் உயர்த்துதற்கு"

**பண்டிதர் க. யோ. ஆசிநாதன்**
*(புத்தொளி கலைவிழா மலர் - 1964)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உ. ஆளுமை

குருநகர் வாழ் மக்களின் பண்டைய ஆளுமையை வெளிக்கொண்டுவர A.J.B. அன்ரனைனஸ் அடிகளாரின் 'Who are the Kurukulams of Jaffna' என்னும் நூலிலிருந்து சிலவற்றைத் தகவலாகத் தருகிறேன்.

"போர்த்துக்கேய வரலாற்று ஆசிரியர் குரோஸ் அடிகளாரின் (Fr. Queyroz S.J.) நூல் கூடிய வரலாற்று உண்மைகள் உடையது என்பது உறுதிப்படுத்துகிறது. யாழ்ப்பாண மக்களை வெளிநாட்டு படையெடுப்பிலிருந்து காத்தவர்கள் கரவ மக்களே. போர்த்துக்கேயரோடு சமர்புரிய சங்கிலி "தஞ்சாவூர் நாயக்கர்களின் உதவியை நாடியபொழுது போர்த்துக்கேயரின் மகா விரோதியான வர்ணகுலக் கரையாரையும் வள்ளம் வள்ளமாக அனுப்பினார்" (Queyroz P. 468 Tran. S. G. Perara.)

அவர் அவர்களைப் "போர்வன்மை மிக்கோர்" என்றும், போரில் வல்லவரான கரையாரை முதலியார் சேர்த்து, 1619 இல் "தஞ்சாவூரில் இருந்து வந்தோரும் கரையார மக்களும் இரவிரவாக மீனவர் வீடுகளில் ஒளித்திருந்தனர். இவ் இராச்சியத்திலேயே மிகப் போர் வல்லமை உடையவர்கள் 20,000 இற்கு மேற்பட்டவர்களுடன் கரையாரின் முழுக்குடிகளும் போர்த்துக்கேயர் தோற்பார்களென எதிர்பார்த்து நின்றனர். பல கரையார வீரர்கள் போரிலே மாண்டார்கள்." (P,631)..."

"முத்துத்தம்பிப்பிள்ளை தன்னுடைய யாழ்ப்பாணச் சரித்திரத்தில் டொன் பிலிப்பு குருகுல நாயக்க முதலியின் நியமனம் வின்றோடா குருகுலமுதலியின் நியமனத்திற்கு முன்னதாக நடைபெற்றது போன்று குறிப்பிட்டு வேளாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரமே முதலி பட்டத்திற்குத் தகுதியுள்ளவர் என நியமிக்கப்பார்க்கிறார். (P.77) "ஊர்காவத்துறை குருகுலத் தலைவன் புண்ணியாந்தன் அங்கு தலைவனாக ஆற்றிய சேவைகளுக்கு ஒல்லாந்தர் கொழும்புத்துறை என்னும் கிராமத்தைக் கொடுத்தனர்" (P.18) குருகுல மக்களின் ஆதி வரலாறு அறியாத போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆசிரியர்கள் தங்கள் காலங்களுள் இவர்களுள் சிலர் மீன்பிடித்த தொழிலைக் கையாளுவதைக்கண்டு இவர்களை மீனவர் என்ற வகுப்புக்குள்ளே சேர்த்துக் கொண்டனர். குருகுல மக்கள் மீனவர்கள் அல்ல. மீனவர்கள் எல்லோரும் குருகுல மக்கள் அல்ல என்பதை அவர்கள் அறியாதிருந்தனர். குவேறாஸ் கரவ மக்களைப் போர்த்திறன் மிக்க சாதியினர் என்று மாத்திரமே விபரித்தார். (P. 467)

குருகுல மக்கள் ஒரு சாதியினர் என்பதைவிட ஓர் ஆதிக் குழுவினர் என்பதே பொருந்தும். மறத்த அல்லது றாஜ்புட் (Mahratta or Rajput) போன்ற ஒரு இனப் பெயராகும். வான்றி அல்லது பல்டேயஸ் போன்றவர்கள் குருகுலத்தாரை மீனவ சாதிக்குள் அடக்குவது நியாயமானது அல்ல. W. H. தம்பையா 'இலங்கைத் தமிழரின் பழக்க வழக்கங்களும் சட்டங்கள்' என்னும் நூலில் வான்றியுடைய கருத்தைக் குருட்டுத்தனமாக ஏற்று யாழ்ப்பாண குருகுல மக்களின் பாரம்பரியம் வரலாறு, பழக்கங்கள் எல்லாவற்றையும் பற்றிய பெரும் அறிவிலி என தன்னைக் காட்டிவிட்டார்.

சுவாமி ஞானப்பிரகாசர் 'சார் இமேசன் ரெனன்ரை' (Sir Emersan Tennent) இலங்கையில் கத்தோலிக்க திருச்சபை வரலாறு என்ற நூலில் 116 ஆம் பக்கத்தில் மீளாய்வு செய்கிறார். "சார் இமேசன் ரெனன்ருடைய சாதிபற்றிய கருத்துக்கள் பழையதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததுமாகும். அது தர்க்கத்திற்குப் பொருந்தாததாகும். பரவர்களையும், கரையாரையும் கீழ்சாதியினர் என்று பாகுபடுத்த முடியாது. ஆசிய சாதி பகுப்பு முறையில் பவுரவ, கௌரவ என்ற பெயர்களிலிருந்து அவர்களை சத்திரியர்கள் என்றே அழைக்கவேண்டும்.

கங்கை வருண குருகுலமாம் கதிசேர் அனுமத்து - மதுவும்
செங்கை முருகன் கலைமகளும் திருவும் பிறந்தது - அக்குலத்தே
அங்கண் மரபில் நூற்றுவரோடைவர் பிறந்தார் - இமயமலை
மங்கை பிறந்தாள் ஆதலினால் மரபிற் பெரியது - வருணகுலம்

இது வர்ண குலத்தில் பிறந்த அனுமத்து, செங்கை முருகன், கலைமகள் திருவு (திருவை) அவர்கள் பிறந்த குருகுலத்தை உயர்த்திப் பேசுகிறது. இறுதி வரி வர்ணகுலமே உலகத்தில் மிகச் சிறந்தது என்கிறது.

காஞ்சி நகரிலேதான் சமஸ்கிருத ஸ்கந்தபுராணத்தில் ஊன்றப்பட்டதான தமிழ் கந்தபுராணம் 10 ஆம் நூற்றாண்டில் கச்சியப்ப சிவாச்சாரியரால், அந்நகரின் சிவாலயத்தில் பெரிய குருவாக இருந்தபொழுது எழுதப்பட்டது. உரைநடையில் யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலர் இதை எழுதி, வேண்டுமென்றே அந்த அடிகளை (வரிகளை) விட்டிருக்கிறார். வல்வெட்டித்துறையின் வைத்திலிங்கம்பிள்ளை எழுதிய சிந்தாமணி நிகண்டில் இவர் (ஆறுமுகநாவலர்) வேண்டுமென்றே இருட்டடிப்பு செய்த இது போன்ற பலவரிகளை வெளிக் கொணர்ந்திருக்கிறார். இவர் ஆறுமுகநாவலரின் சமகாலத்தில் வாழ்ந்தவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே தரப்படும் பா மாதோட்ட குருகுல மக்களால் பண்டைய நாட்கள் தொட்டு பாடப்பட்டு வந்தது. தாங்கள் சத்திரிய வர்ணகுலம் என்கின்ற உயர்குலத்திற்கு அவர்கள் சார்ந்தவர்கள் என்பதையே இது இன்னும் உறுதியாக நிரூபிப்பது.

ஏண்டதே சத்திரியர் உயர்குல வர்ணகோத்திரம்
நன்றதே விறுமாநெஞ்சன் அவர் பிறந் தெழுந்த போதே
சன்றதே தெய்வர்சாதி இவர் குருகுலத்தின் மன்னன்
சன்றதே விருது மூவேழும் சாற்றிடு மிவர்கட்கேதான்
பப்பாதர் குலத்தவர்க்கு அயோதியநாடு
பரிவான கடம்பை மலர்மாலை பூண்டோன்
ஒப்பான சிலம்புடனே உயர்மேற் கட்டி
உவப்புடனே செவ்வாலை வட்டக் குடைகள்தானும்
மெய்யான மயில் கொடி வெள்ளான சங்கு
விளங்கு சவர்கோல் கரத்திலேந்தும்
தப்பாது சங்கை வருதுள்ளதென்று சாற்று பேராம்..."

"ஒல்லாந்தர் காலத்தில் 1790 இல் வர்ணகுலசூரிய அரசநிலையிட்ட டொன் தீயோகு முதலியார் மிகவும் உயர்ந்த பதவியாகிய 'றெஸ்பதேறோ' (Respadore) என்ற பதவியை வகித்தார். இவர் காலத்திலேயே டொன் பிலிப் என்கிற தெல்லிப்பளையைச் சேர்ந்த வேளாளர் ஒருவர் 'ஞானாந்த புராணம்' என்ற ஒரு மதப் பாடலை 1823 ஆம் ஆண்டு எழுதினார். தன்பாடலில்

"டொன்டியர்கோ முதலி 'குருகுல' இளவரசன்
இவ்வுலகத்தின் உயர் சாதியினன்
குரு நாட்டின் மதிப்பிற்குரிய ஆபரணம்..."

என்று அவரைக் குறிப்பிட்டு அவரையே காப்பாளராகக் கொண்டான் (Cf. Verse 10 and 65)..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. சமூகம்

## குழுமம்

'குருநகர் கலைமாட்சி' நூலில் குறிப்பிட்டமைபோல் பல்வேறு தொழில்களைச் செய்த குருகுல மக்கள் தமது ஜீவனோபாயத் தொழிலாக கடற்தொழிலைத் தேர்வுசெய்துகொண்டனர். அவர்கள் தத்தமது அனுபவங்களினூடாக மாறுபட்ட முறைகளைக்கொண்ட மீன்பிடித்தொழில்களில் நாட்டம் செலுத்தினர். அவ்வாறான மாறுபட்ட முறைகளைக்கொண்ட தொழில்களாக 'பாச்சுவலை', 'கொண்டடி', 'கரைவலை' போன்றவை இனங்காணப்படுகின்றது. இவர்கள் தத்தமக்கு விரும்பிய தொழில்களில் ஈடுபடுவதற்கு தனித்தனி குழுமங்களாக இணையவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. இதனால் தாம் தேர்ந்தெடுத்து செய்துவந்த தொழில்களைச் சார்ந்து குழுமங்களாக இணைந்துகொண்டதுடன், தத்தமது வாழ்விடங்களையும் அவற்றைச் சார்ந்தே அமைத்துக்கொண்டமையை உணரக்கூடியதாக இருக்கின்றது. மீன்பிடித் தொழில் செய்பவர்கள் மட்டுமல்ல அவ்வவ் தொழில்களைச் சார்ந்த குழுமங்களின் உறவினர்கள் அதாவது மீன்பிடித் தொழில் அல்லாத வேறு தொழில்களைச் செய்பவர்கள், உத்தியோகஸ்தர் போன்றோர்களது வாழ்விடங்களும் அவர்களுடன் ஒன்றித்தே இருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. அவ்வாறு செய்யப்பட்ட தொழில்களின் பெயர்களை முன்னிறுத்தி காரணப் பெயர்களால் அவ்வவ் குழுமங்கள் அழைக்கப்படலாயிற்று. அவைகளாவன:

'பாச்சுவலை'க்காரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கொண்டடி'க்காரர்
'கரைவலை'க்காரர்

குழுமங்களின் வளர்ச்சியிலும், பணத் தேக்கங்களிலும் ஏற்ற இறக்கங்களும் காணப்பட்டன. வருமானங்களிலும் பெரும் வேறுபாடுகளை உடையவர்களாகவும் காணப்பட்டார்கள். சில குழுமங்கள் கல்வியில் நாட்டம் கொண்டவர்களாகவும், அரச உத்தியோகங்களை விரும்பி ஏற்றவர்களாகவும் இருந்துள்ளார்கள். பலர் இராணுவத்தில் இணைந்து சேவையாற்றியுள்ளார்கள். இராணுவத்தில் உயர் பதவிகளைக்கூட வகித்துள்ளார்கள். முதலாம், இரண்டாம் உலக மகாயுத்தத்தில் பங்கேற்றுள்ளார்கள். நான் சிறுவனாக இருந்தபோது இரண்டாம் உலக யுத்தத்தில் பங்கேற்ற சிலரிடம் கதைகள்கேட்டு மகிழ்திருக்கிறேன். யுத்தம் காரணமாக மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் சேவையாற்றியுள்ளார்கள். அவ்வாறு சேவையாற்றி யவர்களில் சிலர் அந் நாடுகளிலே நிரந்தரமாக குடியேறியிருக்கிறார்கள். இவர்களின் தலைமுறையினர் இப்போதும் அந்நாடுகளில் வாழ்கின்றமையை காணக்கூடியதாக இருக்கின்றது.

யேசுக்கிறிஸ்து துன்புற்று இறந்தநாள் **'பெரிய வெள்ளி'** என அழைக்கப்படுகிறது. யேசுவின் துன்பியல் நிகழ்வுகளை பொம்மைகளைக்கொண்டு சித்தரிக்கும் வகையில் நிகழ்த்தப்படுவதை **'உடக்குப் பாஸ்'** என அழைப்பர். 1935 ஆம் ஆண்டு முதல் பெரிய கோயிலில் (ஆசனக்கோவில்) ஆயர் கியோமரினால் நெறிப்படுத்தப்பட்டு தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டும் உடக்குப்பாஸ் நடைபெற்றது. இது **'பசான்'** என அழைக்கப்படும் ஒன்பது பிரசங்கங்களுக்கு ஏற்ற விதமாக ஒழுங்கமைக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஒவ்வொரு பிரசங்கமும் வாசிக்கப்படும்பொழுது அதிற் கூறப்படும் நிகழ்வுகள் காட்சிகளாக பொம்மைகள்மூலம் ஆற்றுகைப் படுத்தப்படும். 1–4 ஆம் பிரசங்கங்களுக்கு பாச்சுவலைக்காரர்களும், 8 ஆம் பிரசங்கத்திற்கு கரைவலைக்காரர்களும், 9 ஆம் பிரசங்கம் மற்றும் **'ஆசந்தி'** (இறந்த யேசுவின் உடலம் வைக்கப்பட்டிருக்கும் கட்டில்) வீதிஉலா வருதலுக்கு கொண்டடிக்காரர்களும் பொறுப்பாக நின்று உரியவற்றை நிகழ்த்திக் காண்பித்தார்கள். இந்த நிகழ்வுகள் மூன்று குழுமங்கள் இருந்தமையைச் சித்தரித்து நிற்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது.

குடிசனப் பெருக்கம், உத்தியோக வசதி, பணம் படைத்தமை, கௌரவம் பார்த்தல், விலகி வாழ்வதில் உள்ள விருப்பம் போன்ற காரணிகளால் குழுமங்களை விட்டு சற்று விலகி வெவ்வேறு இடங்களில் குடியேறியிருக்கிறார்கள். இவர்களில் சிலர் தமமை இனங்காட்ட விருப்பாதவர்களாகவும் வாழ்ந்திருக்கிறார்கள். பெருங் கல்விமான்களாக இருந்தவர்கள் தம்மைத் தனிமைப்படுத்தியே வாழ்ந்திருக்கிறார்கள். இம்மக்கள் சில பின்னைடைவுகளை எதிர்நோக்கியதற்கு இவைகளும் காரணியாக அமைந்தது என்றால் மிகையாகாது.

இவ்வாறு தம்மைத் தனிமைப்படுத்தி வாழ்ந்தவர்களும், பரவலாக பிரதான வீதிக்கு வடக்கால் வாழ்ந்த குருகுல மக்களும் பெரிதும் அரச உத்தியோகங்களையும், கடற்றொழில் அல்லாத சுயதொழில்களையுமே செய்துவரலாயினர். இதனால் இவர்கள் தம்மைத்ததாமே 'மேலங்கிக் கரையார்' (மேல் அங்கி) என அழைத்து மகிழ்ந்தனர். உத்தியோகங்களுக்காக உடலில் மேற்பகுதியில் அங்கி (உடை) அணிந்து கொள்வதால் இவ்வாறு தம்மை அழைப்பதை விரும்பினார்கள். இச்சொல் திரிவுபட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மேலோங்கி கரையார்' என அழைப்பவர்களுமுண்டு. இதற்கு எடுத்துக்காட்டாக 'சென் யுவானியார்' ஆலய சுற்றாடலில் வாழும் குருகுல மக்களைக் குறிப்பிடலாம். அதேவேளை பிரதான வீதிக்கு தெற்காக வாழ்ந்த கடற்றொழில் செய்த குழுமங்களைச் சார்ந்தவர்களை இவர்கள் 'கீழங்கிக் கரையார்' (கீழ் அங்கி) என்று குறிப்பிடுவதுண்டு. கடற்றொழில் செய்வதற்காக உடலின் கீழப் பகுதியில் (வயிற்றுக்குக் கீழ்) அங்கியை அணிவதால் அவ்வாறு குறிப்பிட்டழைத்தார்கள். இச்சொல் திரிவுபட்டு 'கீழோங்கி கரையார்' (கீழ் ஓங்கி) என அழைப்பவர்களுமுண்டு. (ஓங்கு என்பது உயர்வு. கீழே உயருதல் என்று சொல்வது வழக்கிலில்லை.)

கடற்றொழிலுக்குச் செல்பவர்கள் தொழிலுக்குச் செல்லும் நேரங்கள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் பெரும்பாலும் இளைஞர்கள் சாரம், சேட்டு அணிபவர்களாகவும், முதியவர்கள் வேட்டி, சால்வை, நைஸ்னல் அணிபவர்களாகவும் இருந்தார்கள். திருவிழா, விசேட தினங்களுக்கு இளைஞர்கள் சேலம்பட்டு வேட்டி, நைஸ்னல் அணிவதுண்டு. அவர்கள் அவ்வாறு அணியும் முதல்நாள் அதனை சிறப்பு நாளாகக் கருதி தமது நண்பர்களுக்கு விருந்து கொடுப்பது வழக்கமாகவிருந்தது.

குருநகர் மக்களது உறவுகளின் தொடர்கள் 'சுதுமலை' வாழ்மக்களோடு சம்பந்தப்பட்டிருக்கின்றன. இதனால் இவர்களின் மூதாதையர் சுதுமலையில் வாழ்ந்தவர்களாக இருக்கவேண்டும். சுதுமலையில் கமத்தொழிலே பிரதான தொழிலாகும். ஆனால் அவர்கள் இடம்பெயர்ந்து மீன்பிடித்தொழிலைச் செய்தமைக்கு சுவாமி S. ஞானப்பிரகாசர் குறிப்பிடுவது போன்று:

"அவர்களில் வறியவராயுள்ளோர் வருவாயுள்ள தொழில் இல்லாமையால் மீன்பிடியைத் தொழிலாகக் கொண்டனர்." அல்லது "பண்டைய சத்திரியர்களே போர்க்காலத்தைத் தவிர்ந்த ஏனைய வேளைகளில் தங்கள் சாதாரண தொழிலாக மீன்பிடியை வைத்திருக்கலாம் வேட்டையாடுதல் போன்று மீன்பிடித்தலும் பண்டைய காலங்களில் அரச பொழுதுபோக்காகவே கணிக்கப்பட்டது" **(யாழ்ப்பாண பாதுகாவலன் – 30.04.1921)** எனக் கொள்ளலாம்.

'கடைஞர்' குல மக்களின் வாழ்விடமும் குருநகராகவே இருந்தது. புதுமைமாதா ஆலயம் கட்டப்பட்டதன் பின்னர்தான் இவர்கள் குடியேறியிருக்கவேண்டும். புதுமைமாதா ஆலயச் சுற்றாடலிலேயே ஒரு குழுமமாக வாழ்ந்துவந்துள்ளார்கள். இவர்கள் கடற்றொழிலை செய்யவில்லை. சிப்பியைச் சுட்டு அதனைக் 'கடைந்து' சுண்ணாம்பு ஆக்கி, வெள்ளை பூசுவதையே தமது ஆரம்பத் தொழிலாகக் கொண்டிருந்தார்கள். இதனாலேயே இவர்கள் 'கடைஞர்' என அழைக்கப்பட்டார்கள். சித்திரம், படங்கள் வரைதல், சிற்பம் செதுக்குதல் போன்றவற்றில் அபார திறமை படைத்தவர்களாக காணப்பட்டார்கள். இவர்களை 'கமண்டல குல' மக்கள் என்றும் சிலர் குறிப்பிடுவதுண்டு. அது தவறு என்றே எண்ணத்தோன்றுகின்றது. 'கமண்டலர்' தீந்தை பூசும் தொழிலைத் தம் தொழிலாகக் கொண்டவர்களல்லர். கப்பல் செலுத்துதலே அவர்களின் பூர்வீகத் தொழிலாக இருந்திருக்கின்றது. கமண்டல குலத்தைச் சார்ந்தவர்கள் ஊர்காவற்றுறை பகுதியில் வசித்து வருகிறார்கள். அவர்களில் சிலரது வீடுகளில் தத்தமது மூதோர்கள் பாதுகாத்து வைத்திருந்த 'கப்பலின் எச்சங்கள்' சிலற்றை தாமும் பாதுகாத்து வைத்திருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது. குருநகர் வாழ் கடைஞர் குல மக்களது உறவுகளின் தொடர்புகள் 'மன்னார்' வாழ் மக்களோடு சம்பந்தப்பட்டிருக்கின்றன. இவர்களின் மூதாதையர் மன்னாரில் வாழ்ந்துள்ளமையே இதற்குக் காரணம். இம்மக்கள் குருநகரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்ல மன்னாரிலும் குருகுல மக்களுடன் இணைந்தே வாழ்ந்திருக்கிறார்கள்.

"1542 இல் போர்த்துக்கல் தேசத்தில் இருந்து இந்தியாவந்த புனித பிரான்சீஸ் சேவியர் என்னும் குருவானவர் கத்தோலிக்க வேதத்தைப் போதித்தார். அவரின் போதனையால் தூத்துக்குடியில் இருந்த திரளான மீனவர்கள் கத்தோலிக்க வேதத்தைதச் சார்ந்து போர்த்துக்கேயரின் உதவியால் நாயக்கரின் கொடுங் கோன்மைக்குத் தப்பி மகிழ்ச்சியாக வாழத்தொடங்கினார்கள். இதைக் கேள்வியுற்ற மன்னாரிலுள்ள பரதவரும், கடைஞரும் தங்கள் மத்தியில் சவேரியார் வந்து தங்களைக் கத்தோலிக்கர்களாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஆனால் புனித பிரான்சீஸ் சேவியருக்கு இங்கு வரச் சந்தர்ப்பம் இல்லாமையினால் தமது பெயர்கொண்ட ஒரு சுதேச குருவானவரை அனுப்பிவைத்தார். இக் குருவின் முயற்சியினால் மன்னாரிலிருந்த 500-700 பேருக்கிடையில் ஞானஸ்ஞானம் பெற்று கத்தோலிக்கர்களாக மாறினார்கள்" என **'யாழ்ப்பாண வைபவ கௌமுதி-46'** இல் அறியக்கூடியதாக இருக்கிறது.

"1544 இல் செகராசசேகரன் அரசனினால், மன்னாரில் வெட்டிக் கொலை செய்யப்பட்ட 'முதல் வேதசாட்சிகள்' இம்மக்களே" என **சுவாமி S. ஞானப்பிரகாசர்** தமது நூலில் குறிப்பிடுள்ளார் (The Kings of Jaffna - 6-9).

மன்னார் சம்பவம் பற்றி அன்ரனைனஸ் அவர்களின் நூலில்,

"அன்றிக்க அன்றிக்கஸ் (Anrriquez Anrrique) அடிகளார் மன்னாரின் முதல் பங்குக் குரவராக இருந்தபொழுது தூத்துக்குடியில் இருந்து 1564-ம் ஆண்டு மார்கழி 22 இல் இவ்வாறு எழுதுகின்றார். "மன்னாரில் கரையாரச் சாதியினருக்கு இரண்டு கிறிஸ்தவ கிராமங்கள் உள்ளன. பெரியதில் சென்ற வருடம் வந்த நோய் இவ்வருடம் பரவவில்லை." சிறியதில் மன்னாரில் இருப்பவர்களாகச் சொல்லப்படும் கிறிஸ்தவர்கள் வசிக்கின்றனர். ஆகவேதான் அங்கு இரண்டு கரையாரப் பட்டணங்கள் இருக்கவேண்டும். இதையே தேஸ்ரனும் குறிப்பிடுகிறார். பெரிய கரையாரக் கிராமத்தில் இருந்தவர்கள் அன்றிக்கஸ் அடிகளார் குறிப்பிட்டபடி இந்திய மீன்பிடிக் கரைகளிளிருந்து மன்னாருக்கு 1560 இல் குடிபெயர்ந்தவர்கள் கரையாரும், பரவர்களுமே. (Cf. his. letter dated 19.12.1561) அவர் குறிப்பிடும் பெரிய கரையாரப் பட்டணம் இப்பொழுது மன்னாரிலுள்ள எருக்கலம்பிட்டியாகும். முன்பு இது சென் தொம்மே பட்டணம் என அழைக்கப்பட்டது. சின்னக் கரையாரப்பட்டணம் கோட்டையிலிருந்து அரை லீக் (Half a league) பட்டிம் (பட்டித்தோட்டம்) ஆகும். இங்கேதான் புனித சவேரியாரின் சீடர்களினால் மனந்திரும்பப்பட்டோர் மார்கழி 1544 இல் யாழ்ப்பாணத்து சங்கிலி மன்னனால் தங்கள் கத்தோலிக்க விசுவாசத்திற்காகக் கொல்லப்பட்டனர். (Of. Martyrs of Mannar, Fr.A.J.B.Antaninus. o.m.i. p.3)..."

மேலும் குருநகரில் கணிசமான மக்கள் குடியிருந்தமையால் வெவ்வேறு தொழில்களைச் செய்பவர்கள் தத்தமது தொழில்களை விருத்தி செய்வதற்கு களமாகக் குருநகரைத் தேர்வுசெய்தும், குருநகரில் பலவகைப்பட்ட மீன்பிடி மற்றும் கடல் சார்ந்த தொழில்கள் செய்யப்பட்டுவந்ததால் வருமானத்திற்காக தொழில்தேடியும் குருகுலத்தை சாராத மக்களும் குருநகரில் குடியேறத் தொடங்கினார்கள். பொது நன்மைகருதி இவர்களின் 'சமூகப்பெயரை' இங்கு குறிப்பிடவில்லை.

அவ்வாறு குடியேறி வாழ்ந்த மக்களும் வதிவிடநிலை காரணமாக 'குருநகர் மக்கள்' என பொதுவாக அழைக்கப்படலாயினர். ஆயினும் கொண்டாட்டங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறக்கூடிய விருந்துகளில் கரைவலை, பாச்சுவலை, கொண்டடி ஆகிய குழுமங்களைச் சார்ந்தவர்களைத் தவிர ஏனையோரை அனுமதிக்காத நடைமுறை இருந்திருக்கின்றது. குருநகரின் 'குடிமகன்' எனும் தகமை உடையவராக ஒரு 'அம்பட்டன்' (சிகை அலங்கரிப்பாளர்) அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பார். இவர் சிகை அலங்கரிப்பு சமூகத்தில், குறித்த குடும்பத்தின் தலைமுறை வழிவந்தவராகவும், குருநகரில் நிரந்தரமாக வசிப்பவராகவும், குருநகர் வாழ் மக்கள் அனைவரையும் நன்கு அறிந்தவராகவும் இருப்பார். கொண்டாட்டங்களின்போது விருந்து பரிமாறப்படுமுன் பந்தியில் அமர்ந்திருப்பவர்களை 'குடிமகன்' நோட்டமிடுவார். மேற்படி மூன்று குழுமங்களையும் சார்ந்தவர்கள் மட்டும் பந்தியிலிருந்தால் விருந்து பரிமாற அனுமதி கொடுப்பார். அவ்வாறில்லாமல் மூன்று குழுமங்களையும் சாராத வேறு எவரேனும் பந்தியிலிருப்பாராயின் அவரை அணுகி, அவரிடம் ஏதோ கதைப்பதுபோல் கதைத்து அவரை வெளியே அழைத்து வருவார். அதன்பின்னரே விருந்து பரிமாற அனுமதியளிப்பார். நீண்ட காலங்களாக நடைமுறையிலிருந்த இந்த வழக்கம், இப்போது நடைபெறுவதில்லை. நான் அறிந்தவரை இறுதியான குடிமகனாக 'பொன்னுத்துரை' இருந்திருக்கிறார். இவருக்கு தொழிலாளர்களால் தினமும் மீன்கள் இலவசமாக வழங்கப்படும். அதேவேளை தொழிலாளர்களுக்கான சிகை அலங்கரிப்பு வேலைகளுக்குகென கூலி பெறுவதில்லை.

குருநகர் என்ற பெயர் முனைப்புப்பெறும் முன்னர் 'கரையூர்' என்றே அழைக்கப்பட்டு வந்தது. கடற்கரை ஓரமாக அமைந்திருந்த ஊர் (கரை + ஊர்) என்பதன் காரணமாகவோ, 'கரையார்' என அழைக்கப்படும் சமூகத்தவர் செறிந்து வாழ்ந்ததன் காரணமாகவோ, அல்லது வண. அன்ரனைஸ் அடிகளார் தமது நூலில் கூறுவதைப்போல் "கரையூர் என்றால் 'கரை நிலம்' அல்லது 'குரு நிலம்' இதுவே ஆதிக் கௌரவர்களின் தாயகமாகும். இதையே சூளாமணி, நிகண்டு குறிப்பிடுகின்றது. கரையார்களின் பூர்வீக நாடு குருநிலம் இதுவே பண்டையகால பூர்வீக சத்திரியர்களின் நாடு. காசிச் செட்டி ஏற்றுக்கொள்வது போன்று இன்றைக்கும் அவர்கள் குருகுலத்தார் என்றே யாழ்ப்பாணத்தில் அழைக்கப்படுகின்றனர். (F. Gazeteer p.235)" என்பதன் காரணமாகவோ அழைக்கப்பட்டிருக்கலாம்.

ஒல்லாந்தர் கால வரைபடங்களிலும் 'கரையூர்' என்று குறிக்கப்பட்டுள்ளது அவ் வரைபடம் கிழக்கில் நல்லூரரையும், தெற்கில் சுண்டிக்குளியையும், வடகிழக்கில் வண்ணார் பண்ணையையும் எல்லையாகக் கொண்டிருக்கின்றது.

ஆதியிலே இந்து மதத்தவர்களான இம்மக்கள், 1560 இல் போத்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டு கத்தோலிக்க சமயத்தைப் பரப்பியபோதும், யாழ்ப்பாண இராச்சியத்திற்கு முதற் தேசாதிபதியாக நியமனம் பெற்ற பிலிப் டீ ஒலிவேயிறா என்னும் தளபதியின் காலத்தில், கோட்டையில் புதுமைமாதா ஆலயம் முற்றுப்பெற்ற பின்னர் 07.11.1624 இல் அரச பரம்பரையைச் சேர்ந்த பலருடன் ஞானத்தீட்சை பெற்று கத்தோலிக்கர்களாக மாறியுள்ளார்கள்.

இம்மக்கள் இன்றுவரை கூட்டு வாழ்க்கையை விரும்புகிறவர்களாகவே இருக்கிறார்கள். இல்லிடத்தை பகிர்ந்து வாழ்வதைத்தவிர பிரிந்துசெல்ல விரும்பாதவர்களாகக் காணப்படுகிறார்கள். தம் வளங்களை பகிர்ந்துகொள்வதற்கு தயங்குபவரல்லர். மிகவும் இரக்க குணம் படைத்தவர்கள். கோபமும், ஆவேசமும் நிறைந்தவர்களாக இருப்பினும் இரத்தத்தைக் கண்டால் துடிப்பவர்கள். துன்புறுவோருக்கு உதவுவதில் ஆர்வத்துடன் ஈடுபடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. இல்லிடம்

குருநகரை கிழக்கு - மேற்காக ஊடறுத்துச் செல்லும் கடற்கரை வீதி முன்னர் கடலை மருவியதாகவும், சில இடங்களில் ஐந்து மீற்றர் தூரம்வரை வடக்கு நோக்கி அகன்றதாகவும் அமைந்திருந்தது. இந்தக் கடற்கரை வீதிக்கும் தற்போது கடலோடு மருவியதாகச் செல்லும் புதிய கடற்கரை வீதிக்கும் இடைப்பட்டதும், கடலாக இருந்ததுமான பகுதி 1914 ஆம் ஆண்டின் பின்னர்தான் சிறைக் கைதிகளைக்கொண்டு படிப்படியாக மணலால் மேவப்பட்டது. இச் சிறைக் கைதிகளுடன் மறைந்த இலங்கையின் முதற் பிரதமர் திரு. டீ. எஸ். சேனநாயக்காவும் வேலைசெய்ததாக பலர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். மேவிய பகுதியை **'றெக்கிளமேசன்'** என அழைப்பர் இப்பகுதியில் வணபிதா பி. எம். பிரான்சீஸ் அடிகளாரின் அயராத முயற்சியினால் 1950 இல் குடியேற்றத்திட்டம் உருவாக்கப்பட்டது.

குடியேற்றத்திட்டம் அமைக்கப்படும் முன்னர் குருநகரை மத்தியாக ஊடறுத்துச் செல்லும் கடற்கரை வீதியை அண்மியதாக வடக்குப் பக்கமாக பல மதகுகள் அமைந்திருந்தது. இம் மதகுகள் கடற்றொழிலாளரின் பொழுது போக்குகளுக்கும், தொழில் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் பேருதவியாக இருந்தன. இப்போது அந்த மதகுகளைக் காணமுடியாவிட்டாலும் பெரிய வாய்க்காலிலிருந்து தெற்குநோக்கி சிறிய இடைவெளியில் ஆரம்பித்து அருகாமையிலுள்ள குறுக்கு ஒழுங்கைவரை, கிட்டத்தட்ட 25 மீற்றர் நீளமானதாகவும் முற்றுப்பெற்றதாக அல்லாமல் இருபக்கமும் இடிக்கப்பட்டதான நிலையில் காணப்பட்ட மதகையும், மதகை மருவியதாக பழைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரை வீதிக்கென நெருக்கமாக அடுக்கி அமுக்கப்பட்டுக்கிடந்த கற்கள் வீதிபோன்று காணப்பட்டதையும் நான் அறிவேன்.

நான் சிறுவனாய் இருந்த காலத்தில் இரவுவேளை பெற்றோருடன் அந்த வீதியால் வந்தபோது காலில் ஏதோ குற்றிவிட்டது. உடனே எனது தந்தையார் பக்கத்திலிருந்த மதகில் என்னைத் தூக்கி இருத்தி தீப்பெட்டியைத் தட்டி அதன் வெளிச்சத்தில் காலில் குற்றியிருந்த பித்தளை ஆணியை இழுத்து எடுத்தமை என் ஞாபகத்திலிருக்கிறது.

கடற்கரை வீதியை மருவியதாக தெற்குப் பக்கமாக காணப்பட்ட பாரிய பூவரசம் மரங்களே கடற்கரை வீதிவரை கடல் இருந்தமைக்கு சான்றாக விளங்கின. முன்னர் கடற்கரை நெடுகிலும் பூவரசம் மரங்களே நடப்பட்டிருந்துள்ளன. அவ்வாறான பூவரசம் மரங்கள் தொடராக மேவிய குருநகர் பகுதியிலும் காணப்பட்டு, கடல் இருந்தமைக்கான உண்மையை எடுத்தோதிக்கொண்டிருந்த எந்தவொரு மரமும் இப்போது இருப்பதாகத் தெரியவில்லை. நாம் சிறுவயதில் அப் பூவரசம் மரங்களில் ஏறிவிளையாடிய நினைவுகள் மட்டுமே நிற்கின்றது.

'சம்பேதுருவார்' ஆலயத்திற்கு எதிர்ப்புறமாக கடற்கரையோரம் (தற்போது கடற்கரை வீதியும், இரண்டாம் குறுக்குத்தெருவும் சந்திக்கும் சந்தி) மீன்வாடி அமைந்திருந்தது. அனைத்துத் தொழில்களின் மீன்களும் இங்கேதான் சந்தைப் படுத்தப்படும். இது ஆழம் குறைந்த கடற்பிரதேசமென்பதால் தோணிகளை கரைக்குக் கொண்டுவர முடியாது. இதனால் மீன்கள் முதல் அனைத்துப் பொருட்களும் தொழிலாளரால் காவிக்கொண்டுவரப்படுவதே வழமையாக இருந்தது.

1950 இல் தலா முக்கால் பரப்புக் காணியில் அமைக்கப்பட்ட குடியேற்றத் திட்டத்தில் 404 வீடுகளில் மக்கள் குடியமர்த்தப்பட்டார்கள். இக் குடியேற்றத்தில் கல்வீடுகள், நன்நீர் விநியோகம், மின்சாரம் வசதி, வீதிகள், பல் தேவைகளை நிறைவுசெய்ய தரிசு நிலங்கள், விளையாட்டுத் திடல், அழகிய கடற்கரை, கடல் நீரிலிருந்து 6 அடிகள் உயரத்திற்கு சுற்றவர அமைக்கப்பட்ட அணை, நன்கு திட்மிட்டு அமைக்கப்பட்ட இறங்குதுறை. 'T' அமைப்பிலமைந்த அந்த இறங்குதுறையில் பாரிய பாரந்தூக்கி அமைக்கப்பட்டிருந்தது. கூடவே சிறு மண்டபம் தங்குமடம் போன்றவையும் அமைக்கப்பட்டிருந்தது. 'ரேகு' என அழைக்கப்பட்ட களஞ்சியப்பகுதி துறைமுக அமைப்பில் அமைக்கப்பட்டிருந்தது. அதில் பாரிய கொட்டகை, பாரிய களஞ்சிய அறைகள், பாரந்தூக்கி போன்றவைகளும் அமைக்கப்பட்டிருந்ததுடன், புகையிரதப் பாதையும் இணைக்கப்பட்டிருந்தது. அரச மரக்கூட்டுத்தாபனம் குடியிருப்புகளின் மேற்குப் பக்கமாக அமைந்திருந்தது.

குடியிருப்புகளின் தெற்குப்பக்கமாகவும், மலாயன் புகையிலை நிறுவனத்தின் கிழக்குப்பக்கமாகவும், படகுகள் பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கென சதுரமான துறைமுகம் அமைக்கப்பட்டிருந்து. இத் துறைமுகம் ஒரு பாதையால் கடலுடன் இணைகிறது. இப்பாதையில் புதிய கடற்கரை வீதியின் மேம்பாலம் அமைக்கப்பட்டிருந்தது. பாதையின் கிழக்குப்பக்கமாக கடற்கரை வீதியுடன் இணைந்தாற்போல் சிறிய இறங்குதுறையும் அமைக்கப்பட்டிருந்து. தொழிலாளர்களின் தேவையைப் பூர்த்திசெய்ய துறைமுகத்திற்கும், மலாயன் புகையிலை நிறுவனத்திற்குமிடையில் பனிக்கட்டி ஆலை அமைக்கப்பட்டிருந்தது. இத்தகைய பல வசதிகளுடன்கூடிய நவீன குடியிருப்பாகக் காணப்பட்டது. இக் குடியிருப்பு அமைந்துள்ள பகுதியே தற்போது குருநகர் என பெரும்பாலும் பிறரால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கப்படுகிறது.

இதற்கு சில காரணங்கள் இருக்கலாம். கடற்கரை வீதிக்கு தெற்கே உருவாக்கப்பட்ட குருநகர் குடியேற்றத்திட்டத்தில் குடியமர்த்தப்பட்டவர்கள் கடற்கரை வீதிக்கும், பிரதான வீதிக்கும் இடையில் வாழ்ந்த, வீட்டுவசதிகளற்ற குடும்பத்தினர் களேயாவர். குடியேற்றப்பட்டபோது இவர்களில் பெரும்பான்மையோர் வறியவர்களாகவும், கடற்றொழிலை செய்பவர்களாகவும், கல்விநிலையில் சற்றுப் பின்தங்கியவர்களாகவும் காணப்பட்டனர். கடற்கரை வீதிக்கு வடக்கே இருந்தவர்களில் பெரும்பான்மையோர் சொந்த நிலங்களை உடையவர்களாகவும், பொருளாதார வசதியும், கல்வியறிவும் உடையவர்களாகவும், உத்தியோகஸ்தர்களாக இருந்தனர். இவை பிறரை வேறுபடுத்திப் பார்க்கத் தூண்டியிருக்கவேண்டும். பிறரது நோக்கின் பிரகாரம் மூன்று பக்கம் கடலும், ஒரு பக்கம் கடற்கரை வீதியுமாக குறுகிய வட்டத்திற்குள் சுட்டிநிற்கும் குருநகர் பிரதான வீதியை மையமாகக்கொண்டு பரந்த அளவில் அமைந்திருந்தமையையும், இப்பகுதி உருவாக்கப்படும்வரை குருநகர் மக்களின் வதிவிடம் பற்றியும் எனது 'குருநகர் கலைமாட்சி' நூலில் குறிப்பிட்டிருக்கிறேன்.

கடற்கரை வீதிக்குத் தெற்கில் 404 குடும்பங்கள் குடியிருந்த வீடுகளில் தற்போது 2000 குடும்பங்கள் வரை குடியிருக்கிறார்கள். வடக்கில் இந்த நிலை சற்றுக் குறைவாகக் காணப்படுகின்றது. தற்போது பொருளாதார வளத்தில் வடக்குக்கும், தெற்குக்குமிடையே பெரிய வேறுபாடு இல்லாவிட்டாலும் தெற்கு மேலோங்கியே நிற்கிறது. உத்தியோகத்திலும் சமநிலையே காணப்படுகின்றது. படிப்பில் வேறுபாடு காணப்படுகிறது. குருநகரில் இரண்டு பாடசாலைகள் இருக்கின்றன. தெற்கில் வசிப்பவர்களில் பெரும்பான்மையோரது பிள்ளைகள் இங்கு கல்வி கற்கிறார்கள். ஆரம்பக் கல்வியை மூன்று ஆண்டுகள் வரை ஒழுங்காக கற்கிறார்கள். அதாவது முதல்நன்மை (கிறிஸ்தவச் சடங்கு) பெறுவதற்கு கண்டிப்பாக பாடசாலை செல்லவேண்டுமென்ற கட்டாயம் இருந்தது. இதன் காரணமாக ஆரம்பக் கல்வியைக் கற்போர் தொகை அதிகமாகவும், காலப்போக்கில் குறைந்தும் பாடசாலை வரவுகள் காணப்படுகின்றன. வசதி படைத்தவர்கள் தங்களது பிள்ளைகளை வேறு பாடசாலையில் சேர்த்தல், மாணவர்கள் படிப்பை நிறுத்தி இடைவிலகி தொழிலுக்குச் செல்லுதல், பெற்றோரின் போதிய கவனமின்மையால் பிள்ளைகள் ஒழுங்காக பாடசாலை செல்லாமல் விடுதல் போன்றவற்றால் பாடசாலை வரவுகளின் எண்ணிக்கை ஆரம்பத்திற்கும், பின்னருக்குமிடையே வேறுபாடு காண்பதற்கு காரணமாகும். பெண்கள் படிப்பறிவிலும், பாடசாலை வரவுகளிலும் உயர்வாகவே காணப்படுகிறார்கள்.

ஆண்களுக்கென அமைப்பட்டிருந்த பாடசாலை கட்டிடம் எந்தவகையிலும் கற்பித்தலுக்கு உகந்ததாக காணப்படவில்லை. கோவிலுக்கேற்ற கட்டிடமாகவே காணப்பட்டது. அந்நேர புத்திஜீவிகள் இதில் ஏன் கவனம் செலுத்தவில்லையென்பது புரியாத புதிராக இருக்கிறது. அந்நாளில் பாடசாலைகள் யாழ்ப்பாண கத்தோலிக்க மேற்றாசனத்தின் கீழேயே இயங்கிவந்தன. அதனால் இப்பாடசாலையை யாழ்ப்பாண மேற்றாசனமே கட்டிக்கொடுத்தது. பயன்படுத்தலுக்கு சாதகமற்றதான கட்டடத்தை ஏன் அவர்கள் கட்டிக்கொடுத்தார்கள்? என, நான் ஐந்தாவது வகுப்பு படிக்கும்போது என்னுள் எழுந்த கேள்விக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை. அகண்டு விரிந்த பெரியதொரு மண்டபம், சிறிய மண்டபமுமாக இரண்டு மண்டபங்கள் 'T' அமைப்பில் அமைக்கப்பட்டிருந்தன. பின்பக்கம் இரண்டு பாரிய அறைகள் இருக்கின்றன. வேறு வகுப்பறைகள் இல்லாத நிலையில் குறுக்கே மறைப்புத் தட்டிகள் வைக்கப்பட்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்புகள் நடைபெற்றன. ஆரம்பகாலந்தொட்டே 'இலங்கை மலாயன் புகையிலைக் கம்பெனி' இருந்த இடத்தில் பாடசாலையை மாற்றம் செய்யவேண்டுமென்று பலராலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் அரசால் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதும் அவை அரசியல்வாதிகளின் தேர்தல்நேரக் கதையாகவும், புத்திஜீவிகளின் அக்கறையின்மை, கையாலாகத்தனமாகவும் அமைந்துவிட்டது. அந்தக் கட்டடத் தில்தான் இன்று 'சீநோர்' (வடகடல்) வலைத் தொழிற்சாலை இயங்குகிறது.

இதேபோன்றுதான் பாடசாலைக்கென விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு, குடியிருப்புகளின் மேற்குப்புறமாகவிருந்த 'உப்புமால்க் கந்தோர்' என அழைக்கப்படும் பரந்த வெளியில் ஒதுக்கித் தருவதாகக் கூறப்பட்டது. ஆனால் அந்த இடத்தில் காலத்துக்குக் காலம் தேர்தலில் வெற்றிகண்ட அரசியல்வாதிகளால் குடியிருப்புகள் அமைத்துக் கொடுக்கப்பட்டதே தவிர மைதானத்திற்கான இட ஒதுக்கீடு இடம்பெறவில்லை. ஆயினும் குருநகர் பொது அமைப்புகளின் முயற்சியால் மரக்கூட்டுத்தாபனத்தின் ஒரு பகுதி பெறப்பட்டு அதில் பாடசாலைக்கான விளையாட்டு மைதானம் உருவாக்கப்பட்டுள்ளது.

தெற்கில் வாழும் குடும்பங்களின் இயல்பான பெருக்கத்தால் முன்னர் தரிசு நிலங்களாக இருந்த பல காணிகள் இன்று வீடுகளாக மாறிவிட்டன. காற்றோட்டத்திற்காகவும், பயன்படுத்தலுக்காகவும் விடப்பட்ட ஒழுங்கைகள், இடைவெளிகள் யாவும் ஒற்றையடிப் பாதைகளாக மாறிவிட்டன. சில மறைந்தும்விட்டன. வீதிகள் இருபக்கங்களாலும் குறுகிக்கொண்டன. குடியிருப்பாளர்கள் தத்தமக்குரிய வசதிகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு வரம்புகளைமீறிச் செயற்பட்டுள் ளார்கள். இன்று வீடுகளில் இடநெருக்கடி, வீட்டின் ஓரங்களில் வெளியின்மை, விளையாட்டுப் போட்டிகளையும், கொட்டகைகள்போட்டு கூத்துகள், கலை நிகழ்வுகளையும் ஆங்காங்கே நடத்த உதவிய தரிசுநிலங்கள் அபகரிக்கப்பட்டமை போன்றவற்றால் ஒவ்வொருத்தருக்கும் அமைதியற்ற ஓய்வு, பொழுதுபோக்கமுடியாத நிலை, மக்கள் செறிவாக வாழ்வதால் ஏற்படும் இயல்பான இடையூறுகள் ஆகியவை காரணமாக இளைஞர்கள் சந்திக்கு வந்துவிட்டார்கள். மாணவர்கள் அமைதியாக கல்வி கற்கமுடியாமல் தவிக்கிறார்கள். சமூக குறைபாடுகள் முளைவிடலாயின. இதற்கு குடியிருப்பாளர்களை மட்டும் குற்றம்சொல்ல முடியாது. காலத்துக்குக் காலம் முளைத்த அரசியல்வாதிகளே அடிப்படைக் காரணர்களாக அமைந்திருக் கிறார்கள். அவர்கள் தமக்கு வேண்டிய வாக்குச் சேகரிப்புக்காக, மக்கள் வரம்புமீறிய செயல்களைச் செய்வதற்கு மறைமுக அனுமதியும், ஒத்துழைப்புகளையும் போட்டிபோட்டு வழங்கினார்கள். அவற்றைப் பெரும் சேவைகளென பெருமையாக மார்தட்டிக்கொண்டார்கள். யாழ். மாநகரசபையும் தன் கடமையில் ஏனோதானோ என்ற போக்கு, அரசியல்வாதிகளின் பின்னணியால் எழும் மூடிமறைப்பு, உத்தியோகஸ்தர்களின் நேர்மையீனம், 'பூவுக்கும் தலைக்கும் முடிச்சுப்போடும் நிலை' போன்றவை குருநகரின் இன்றைய இந்த நிலைக்கு காரணிகளாக அமைந்துவிட்டன என்றே சொல்லவேண்டும்.

தற்போது குருநகரிலுள்ள வீடொன்றில் நிகழ்வு என்றால் (திருமணம், மரணம், வேறு கொண்டாட்டங்கள்), போதிய வசதியின்மை காரணமாக வீதியில்தான் கொட்டகை போடப்படுகிறது. இதனால் குடியிருப்பாளர்கள் முதல் பயணிகள், வாகனச் சாரதிகள வரை பலதரப்பட்ட இடையூறுகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகிறார்கள். இதனைத் தவிர்க்கும் நோக்கமாக மண்டபங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்து நிகழ்வுகளை நடத்தும் முறையை வழமையாக்கவேண்டுமென்று பலர் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டபோதும் நிறைவேற்ற எவரேனும் முன்வரவில்லை. குறைந்த வசதிகளைக்கொண்ட 'கார்மேல் மண்டபம்' ஒன்றுதான் பலரது மண்டபத் தேவையை நிறைவு செய்துவந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் கார்மேல் ஆலயத்தைச் சேர்ந்த இளைஞர்களின் முயற்சியால் பழைய கார்மேல் மண்டபம் புனரைப்பு செய்யப்பட்டு பல புதிய, வசதிகளைக்கொண்ட மண்டபமாக ஆவணி 2004 இல் திறந்துவைக்கப்பட்டது. அதேநேரம் 'குருநகர் சனசமூக நிலையத்'தினால், குருநகர் சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் பாரிய 'கலாசார மண்டபம்' பல சிரமங்களின் மத்தியில், மேல்மாடி முற்றுப்பெறாத நிலையில், ஆடி 2005 இல் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கார்மேல் மண்டபத்தைவிட பெரிதாகவும், மேலதிக வசதிகளைக் கொண்டதாகவும், சுற்றுப்புற வெளிகளைக் கொண்டதாகவும் இம்மண்டபம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறியதும் பெரியதுமான இரண்டு மண்டபங்கள் இருந்தபோதும், எத்தனைபேர் தமது மாமுல் நிலையிலிருந்து விலகி மண்டபத்தில் நிகழ்வுகளை நிகழ்த்துவதற்கு முன்வருவார்களென்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. இதனை மக்கள் மத்தியில் புகுத்திடவும், பாரிய வேலைத்திட்டத்தின்மூலம் நடைமுறைச் சாத்தியத்தை ஏற்படுத்தவும் இளைஞர் சமூகம் முன்வரவேண்டும்.

இந்நிலையில் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியும், யாழ். மறைமாவட்ட கடற்றொழிலக மேம்பாட்டு மையமும் இணைந்து 04.09.2004 இல் உருவாக்கிய 'குருநகர் குடியேற்றம் புனரமைப்பிற்கான இணையம்' (இணையம்), காலத்தின் தேவையறிந்து உருவாக்கப்பட்டதேயாகும். இந்த இணையத்தினால் அல்லைப்பிட்டி பகுதியில் காணிகள் கொள்வனவு செய்யப்பட்டு அனைத்து அடிப்படை வசதிகளுடனும் (வீதியமைப்பு, கலாசார மண்டபம், பாலர் பாடசாலை, சந்தை, சனசசமூக மையம், வைத்திய மையம் போன்ற பல), எதிர்காலத் தேவைகளின் ஏற்பாடுகளுடனும் 300 குடும்பங்கள் வரை (தலா 1 பரப்பு) குடியமர்த்த எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சி குருநகர் வாழ் மக்களின் எதிர்கால சமூக வாழ்விற்கு ஏற்றப்பட்ட தீபமாகவே அமைகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. சடங்குகள்

## அற்றோம்

**'அற்றோம்'** (அற்ஹோம்) என்பது ஒருவருக் கொருவர் உதவுவதை, பகிர்தலை அடிப்படையாகக் கொண்ட ஒரு சம்பிரதாய நிகழ்வாகும். 'அற்ஹோம்' என்று அழைப்பது இடையிலே புகுந்துகொண்டதாகும். பணம் சேகரிப்பதையே இலக்காகக் கொண்டிருந்ததால் ஆரம்பத்தில் **'பணச்சடங்கு'** என்றே அழைக்கப்பட்டது. பணம் தேவைப்படும் ஒருவர் திகதியைக் குறிப்பிட்டு அற்றோமுக்கு அழைப்பு விடுப்பார். இவ் அழைப்பானது ஆரம்ப காலத்தில் அற்றோம் வைப்பவர், ஒவ்வொரு வீடாகச் சென்று தகவலைச் சொல்லி அழைப்பு விடுப்பார். காலப்போக்கில் அழைப்பிதழ் அச்சிடப்பட்டு வீடுவிடாக விநியோகிக்கப்பட்டது. அத்துடன் அற்றோமுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் நினைவூட்டலுக்காகவும், மதிய உணவுக்கு அழைப்பு விடுவதற்காகவும் வீடுகள்தோறும் சென்று சொல்லுவதுண்டு.

அற்றோம் தினமன்று வீட்டிற்கு முன்பாக பந்தல் போடப்பட்டிருக்கும். அதிகாலை ஒலிபெருக்கி ஒலிக்கத் தொடங்கிவிடும். காலை முதல் வீடு கலகலப்பாக இருக்கும். அழைப்பை ஏற்று வருபவர்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். இரவு 8 மணிக்கு அற்றோமுக்கான பணக் கொடுப்பனவு ஆரம்பமாகிவிடும். உறவுமுறையான வர்கள் முதல் தமது நிதியைக் கொடுப்பார்கள். பெரும்பாலும் உறவினர்கள், நண்பர்களது நிதி ஏனையோரைவிட அதிகமானதாக இருக்கும். கொடுக்கப்படும் நிதிகள் அனைத்தும் ஒரு கொப்பியில் பதிவுசெய்யப்படும். சற்று உயர்ந்த பெட்டகத்தின் மேல் கொப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்பட்டிருக்கும். பெயர்களைப் பதிவுசெய்வதற்கென ஒருவர் இருப்பார். பெட்டகத்தின் முன்னால் பெரிய வட்டத் தட்டத்தில் வெள்ளைச் சீலை விரிக்கப்பட்டிருக்கும். அதன்மேல் பணத்தை போடுவார்கள். கொடுப்பவர்களின் பணத்தைப் பெற்று எழுதுபவருக்குப் பெயரைச் சொல்லுவதற்கென மூவர் இருப்பார்கள். இவர்களே பணத்தின் பாதுகாவலராகவும் இருப்பார்கள். பணத்தைப் பெறும் மூவரில் ஒருவர், கொடுப்பவரின் பெயரை உரத்துச் சொல்லுவார். இது கொடுப்பவருக்கும் எழுதுபவருக்கும் திருப்தியைத் தரும். ஒருவரது பெயர் எழுதப்படும்வரை பணத்தைப் பெற்றவர் அதனைத் தமது கையிலேயே வைத்திருப்பார். பதிவுசெய்ததை உறுதிப்படுத்திய பின்னர்தான் பணத்தை தட்டத்தில் போடுவார். இந்தக் குழுவினர் நன்கு ஆட்களை அறிந்தவர்களாகவும், அனுபவம் உள்ளவர்களாகவும் இருப்பர்.

அற்ஹோம் நான்கு நாட்கள் நடைபெறும். முதல் நாளைய சிறப்பு ஏனைய நாட்களில் இருக்காதாயினும், நான்கு நாட்களும் உறவினர்கள் கூடவே இருந்து சமைத்து உண்ணுவதால் உணர்வுபூர்வமான பிறிதொரு சிறப்பு அங்கே மேலோங்கி இருக்கும். நான்கு நாட்கள் வரை அற்ஹோம் நடைபெறுவதால் நான்கு நாட்களும் பண வரவிற்காய் காத்திருப்பர்.

இப் பணமானது ஒவ்வொருவரும் கொடுக்கும் வட்டியில்லாக் கடனாகும். கடன் கொடுத்தவர் அற்றோம் வைக்கும்போது கடன் பெற்றவர் அவர்கொடுத்த பணத்தில் இரட்டிப்பு அல்லது அதற்குமேலும், சிலர் சிறிய தொகை அதிகமாகப் போடுவார்கள். இரட்டிப்பாகக் கொடுத்தவர் மீண்டுமொரு அற்ஹோம் வைப்பதற்கு எண்ணங்கொண்டவராக இருப்பார். தமது கடன் கிட்டத்தட்ட கொடுத்து முடியும் தருவாயில் அவர் மீண்டுமொரு அற்ஹோமுக்கு அழைப்பு விடுப்பார். சிறிய தொகை மேலதிகமாகக் கொடுத்தவர். மீண்டுமொரு அற்ஹோம் வைப்பதற்கு எண்ண மில்லாதவராக இருப்பார். அதனால் தமது கடனை முடித்துக்கொள்ளுகிறார் என்பது அனைவருக்கும் புரிந்ததொன்றாகும். இதனை **'மட்டம் கட்டுதல்'** எனச் சொல்லுவர். அற்ஹோம் மூலம் கடன்கொடுத்த ஒருவர் தாம் வைத்த அற்ஹோமில் அக்கடன் மீளளிக்கப்படாதிருந்தால் நான்கு நாட்களின் பின்னர் சம்பந்தப்பட்டவரிடம் சென்று விபரத்தைக்கூறி தாம் கொடுத்த அற்ஹோம் கடனை நினைவூட்டுவார். அவர் நான்கு நாட்கள் வரை மீளளிக்காமைக்கு பல காரணங்கள் இருக்கும். அதனை தெரியப்படுத்தி பணத்தைக் கொடுப்பார். இருவருக்குமிடையே புரிந்துணர்வு இருக்கும்.

இப்படியே அற்ஹோம் சங்கிலித் தொடராக நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். அற்றோம் வைப்பவருக்கு பெருந்தொகை நிதி கிடைப்பதால் அதன்மூலம் புதிய தொழிலுக்கு முதலிடவோ, எவற்றையேனும் கொள்வனவு செய்யவோ, வேறு வருவாய் தரக்கூடியவற்றை உருவாக்கவோ அவரால் முடியும். அதனில் கிடைக்கின்ற ஊதிபத்தின் மூலம் அற்றோம் கடனை மீளச் செலுத்தக்கூடியதாக இருக்கும். பெருகிய சனத்தொகை காரணமாக அற்ஹோம் வைப்பவர்கள் தொகை வாராவாரம் அதிகரிக்கத் தொடங்கியது. ஒரு வாரத்தில் 5 முதல் 8 வரையிலான அற்றோமுகளுக்கு மக்கள் முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. தொழில் உரிமையாளர்களைத் தவிர ஏனையோர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாயிற்று. இதனை உணர்ந்துகொண்ட குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி நிர்வாகம், வாரத்திற்கு ஓரிரு அற்ஹோமுகள் மட்டுமே நடத்தவேண்டுமென்ற நடைமுறையை எண்பதுகளில் முன்வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்ஹோம் நடத்தவுள்ளவர்கள் முன்கூட்டியே ஐக்கிய முன்னணியில் பதிவு செய்துகொள்ளவேண்டும். அவர்களே அற்ஹோமுக்கான திகதியை முடிவுசெய்வார்கள். இதனால் அற்ஹோமுகளின் எண்ணிக்கை கட்டுப்பாட்டுக்குள் வந்தது. ஆரம்பத்தில் பல மட்டங்களிலும் எதிர்ப்புகள் எழுந்போதும் நாளடைவில் அவர்கள் முயற்சி வெற்றிபெற்றது. தற்போதும் இந்த நடைமுறையே தொடர்கிறது.

## ஞானஸ்ஞானம்

கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்த குழந்தையை கத்தோலிக்கராக இணைத்துக்கொள்வதற்கென நடத்தப்படும் திருச்சபையின் சடங்காகும். இச் சடங்கு குழந்தை பிறந்த எட்டாம் நாள் நடைபெறுகின்றது. குழந்தை பிறந்தபின்னர், ஞானஸ்ஞானம் கொடுப்பதற்கு முன்னர் பெற்றோரால் **'தொட்ட தாய்', 'தொட்ட தகப்பன்'** தீர்மானிக்கப்படுவார்கள். (ஞானத் தாய், ஞானத் தந்தை அல்லது ஞானப் பெற்றோர்) ஆரம்பகாலங்களில் தொட்ட தாய், தொட்ட தகப்பன் பெரும்பாலும் உறவினர்களாகவே இருந்தார்கள். அண்மையில் திருமணம் நடைபெற்ற தம்பதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். பின்னாளில் நண்பர்கள், அயலவர்கள் என மாற்றமடைந்துள்ளது. பெற்றோரால் தீர்மானிக்கப்பட்ட ஞானப் பெற்றோருக்கு அழைப்பு விடுத்தால் அவர்கள் மறுப்பின்றி ஏற்றுக்கொள்வார்கள். இதில் ஏழை, பணக்காரன் என்ற வேற்றுமையில்லை. பெற்றோருக்கும், ஞானப்பெற்றோருக்கும் இடையிலான உறவை **'கும்பா'** என்று சொல்வார்கள். ஒருவரையொருவர் 'கும்பா' என்று அழைப்பதுமுண்டு.

ஞானப் பெற்றோர் பெற்றோர்களுக்கு சமமாக மதிக்கப்பட்டார்கள். பிள்ளைகள் அவர்களுடன் மதிப்பும் மரியாதையுடனும் பழகுவார்கள். ஞான காரியங்களில் பிள்ளையை வழிநடத்துவதற்கு பெற்ரோரைவிட ஞானப்பெற்றோர் கூடிய கவனம் செலுத்துவார்கள். **'தொட்டபிள்ளை'**யை பெற்ற உணர்வுடன், அக்கறையுடனும் கவனித்துக்கொள்வார்கள். குறித்த பிள்ளையின் முக்கிய நிகழ்வுகளுக்கு அப்பிள்ளையின் ஞானப்பெற்றோர் முக்கியமானவர்களாகக் கருதப்பட்டு கண்டிப்பாக அழைக்கப்படுவார்கள். அவர்களும் முன்னின்று செய்வார்கள். பிள்ளைகள் அடிக்கடி ஞானப் பெற்றோரை சந்தித்து வருவது வழமை.

கோவிலில் புதன், சனி ஆகிய தினங்களில் குருவானவரால் **'ஞானஸ்ஞானச் சடங்கு'** நிறைவேற்றப்படுகிறது. குழந்தை பிறந்த எட்டாம் நாளுக்குப் பின்னர் வருகின்ற புதன் அல்லது சனி தினத்தில் தொட்ட தாயும், தொட்ட தகப்பனும் குழந்தையை கோவிலுக்குக் கொண்டுசெல்வார்கள். ஆண் குழந்தையாக இருந்தால் நீல நிறத்திலும், பெண் குழந்தையாக இருந்தால் றோஸ் நிறத்திலும் உடலை முற்றாக மூடியவாறு ஆடை அணிந்திருப்பார்கள். அதே நிறத்தில் சேலையாலான தொப்பியும், கால்களுக்கு காலுறையும் அணிந்திருப்பார்கள். குழந்தை பார்வைக்கு பொம்மைபோல் அழகாகக் காட்சிதரும். அங்கே குருவானவர் செபம் செய்து ஆசிநீரினால் குழந்தையின் தலையில் ஊற்றுவார். அவ்வாறு ஊற்றிய நீரை தொட்டதாய், தொட்ட தகப்பன் துடைத்துக்கொள்வார்கள். (குழந்தையின் தலையைத் தொட்டுத் துடைத்ததால் தொட்டதாய், தொட்டதகப்பன் என்னும் பெயர் வரலாயிற்று. பேச்சுவழக்கில் "யார் தலைதொட்டது" என்று கேட்பதுமுண்டு) பிள்ளைக்குரிய பெயரும் அப்போதுதான் இடப்படும். அப்பொழுதிருந்தே ஞானப்பெற்றோர் என்னும் உரிமை அவர்களுக்குக் கிடைக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானஸ்ஞானம் முடிந்ததும் வீட்டிற்குச்சென்று குழந்தையை பெற்றோரிடம் ஒப்படைப்பார்கள். அன்றையதினம் ஒரு விழாவாக இருக்கும். தத்தமது வசதிக்கேற்ப விழாவைச் சிறப்பாக செய்வர். ஞானப்பெற்றோர் அன்றைய தினம் பூராகவும் அங்கே தங்கிநின்று விருந்துண்டு செல்வர். தத்தமது வசதிக்கேற்ப நகையோ, பணமோ குழந்தைக்குக் கொடுப்பார்கள். ஞானஸ்ஞானம் நடைபெற்ற தினத்திற்கு அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை பனை ஓலையால் பின்னப்பட்ட பல **'கடகங்களி'**ல் பலவகைப் பலகாரங்கள், பழ வகைகள் போன்றவற்றை வைத்து வெள்ளைத்துணியால் மூடி ஏவலாளர்கள் மூலம் ஞானப்பெற்றோருக்கு கொடுத்தனுப்புவர்கள். இவற்றை வரிசையாகக் கொண்டுசெல்லும் காட்சியை பலரும் பார்த்து ரசிப்பர்.

## திருமணம்

திருமணங்கள் பெற்றோர்களால் கலந்துபேசி நிச்சயிக்கப்படுகின்றன. ஒருசில காதல் திருமணங்களாகவும் இருக்கும். காதல் திருமணங்கள் பெற்றோர்களின் சம்மதத்துடன் நடைபெறுவதுமுண்டு. சம்மதமில்லாமல் காதலர்கள் சுயமாக திருமணம் செய்துகொள்வதுமுண்டு. இதனை **'ஓடுதல்'** என்பர். ஓடிய காதல் திருமணங்கள் பெற்றோர்களால் புறக்கணிக்கப்படும். காதலர்களாக ஓடிய பின்னரும் சில பெற்றோர்கள் திருமணத்தை முன்னின்று நடத்தியும் வைப்பார்கள். இவை பெரும்பாலும் ஒருதலைப்பட்சமானதாகவே இருக்கும்.

திருமணத்தை **'மெய்விவாக திருச்சடங்கு'** என கத்தோலிக்க திருச்சபை ஒரு சடங்காக அங்கீகரித்திருப்பதனால் ஆலயத்திலேயே மெய்விவாகம் நிறைவேற்றப் படுகிறது. இதற்கென ஒழுக்கமுறைகள் இருக்கின்றன. இதனால் முறையான திருமணங்கள் தவிர்ந்த ஏனைய திருமணங்கள் ஆலயத்தில் நிகழ்துவதற்கு பற் பல நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. அந் நடைமுறைகளால் எழக்கூடிய அவமானம் காரணமாக முறையான திருமணத்தையே அனைவரும் விரும்பினார்கள்.

முறையான திருமணத்தை எடுத்து நோக்கினால் முதலில் திருமணப் பேச்சு நடைபெறும். பெண் வீட்டார்தான் மாப்பிள்ளை தேடுவதும், தீர்மானம் செய்பவர்களுமாக இருப்பர். சில சந்தர்ப்பங்களில் மாப்பிள்ளை வீட்டாரும் தமது நண்பர்கள் ஊடாக பெண்வீட்டாருக்கு தகவலை சொல்லி தீர்மானமெடுக்கத் தூண்டுவதுமுண்டு. எவ்வாறாயினும் ஒருதலைப்பட்சமாக மாப்பிள்ளை தீர்மானிக்கப்பட்டால் கும்பாவுடன் (பெண்ணின் ஞானப்பெற்றோர்) கலந்து பேசி முடிவுக்கு வருவார்கள். இருவரினதும் சம்மதத்துடன் மாப்பிள்ளை வீட்டாருக்குக்கு தகவல் சொல்லி விடுவார்கள். இந்தத் தகவலை சொல்வதில் பெரும்பாலும் கும்பாவே முன்னின்று செயற்படுவார்.

திருமணம் பற்றிய தகவல் மாப்பிள்ளை வீட்டாருக்குக் கிடைத்ததும், பெற்றோர் மாப்பிள்ளையுடன் கலந்துபேசி தீர்மானத்திற்கு வருவார்கள். பெண்ணை மாப்பிள்ளைக்குத் தெரிந்தோ, தெரியாமலோ இருக்கலாம். தெரியாதிருக்குமாயின் அடுத்து வரக்கூடிய ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலி முடிந்ததும் மணமகனுக்கு பெண்ணைக் காண்பிப்பார்கள். இது பெரும்பாலும் பிறர் அறியாத வகையில் நண்பர்கள், உறவினர்மூலம் நடைபெறும்.

இரு பகுதியும் திருமணத்திற்கு சம்மதமானதும், முதல் நிகழ்வாக, நாள் குறித்து பெண்வீட்டார் மாப்பிளை வீட்டிற்கு தம் உறவினர்கள், நெருங்கிய நண்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகிதம் சம்பிரதாய ரீதியாக **'கலியாணம் கேட்டு'**ப் போவார்கள். அங்கே சீர்வரிசை பற்றி பேசப்படும். இருபகுதியினதும் பேச்சுக்கள் சுமூகமாக முடிவுற்றதும். சம்மதம் தெரிவிக்கப்பட்டு உணவு பரிமாறப்படும். அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை மூன்று வேளையும் சமைத்த உணவுகளை மாப்பிள்ளை வீட்டாருக்கு, பெண்வீட்டார். அனுப்பிவைப்பார்கள். தொடர்ந்து இருவீட்டாரும் இடைக்கிடையே சிற்றுண்டி வகைளை அனுப்பிவைப்பார்கள். அடிக்கடி சந்தித்துக்கொள்வார்கள் இந்த செயல்களின்மூலம் இரு குடும்பத்தினர்களின் உறவு மேலும் வலுவுள்ளதாக மாறும்.

பெண் வீட்டாரின் நிகழ்வுகள் போன்றே மாப்பிள்ளை வீட்டாரின் நிகழ்வுகளும் இருக்கும். நாள் குறித்து மாப்பிளை வீட்டார் பெண் வீட்டிற்கு தம் உறவினர்கள், நெருங்கிய நண்பர்கள் சகிதம், பேசப்பட்ட திருமணத்தை சம்பிரதாய ரீதியாக உறுதிப்படுத்தச் செல்வார்கள். அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை சமைத்த உணவு அனுப்புவார்கள். சிற்றுண்டிகள் அனுப்புதல், அடிக்கடி சந்தித்துக் கொள்ளுதல் போன்றவைகள் பெண்வீட்டார்போன்றே நடந்துகொள்வார்கள்.

இரண்டாவது நிகழ்வு **'வார்த்தைப்பாடு'**. வார்த்தைப்பாடு என்பது திருமணம் செய்யப்போகும் ஆணும், பெண்ணும் உத்தியோகபூர்வாக தமது சம்மதத்தை குருவானவர் முன்னிலையில் தெரியப்படுத்துதலாகும். இதுவே தற்போது பதிவுத் திருமணமாக பதிவாளர் முன்னிலையில் நடைபெறுகிறது. வார்த்தைப்பாடு ஆலயத்தில் உள்ள குருவானவரின் குருமனையில் நடைபெறம். குறித்த நாளன்று வார்த்தைப்பாட்டுக்காக இருபகுதியினரும் தனித்தனியாக வந்து குருமனையில் கூடுவார்கள். குருவானவர் மணமக்கள் இருவரிடமும் தனித்தனியாக சம்மதத்தைப் பெறுவார். இருவரும் திருமணம் செய்வதற்கு தமது ஒப்புதலை குருவானவருக்குத் தெரியப்படுத்தி பத்திரத்தில் ஒப்பம் இட்டதுடன் வார்த்தைப்பாடு முடிவுறுகிறது. அன்றைய தினத்தை ஒரு விழாவாக தத்தமது வசதிக்கேற்ப செய்பவர்களுமுண்டு. இதுமுதல் இருவரும் திருமணம் செய்வதற்கு தகமைபெற்றவர்களாகிறார்கள்.

மூன்றாவது நிகழ்வு **'கல்யாணம் கூறல்'**. திருமணம் செய்யப்போகும் மணமக்கள் பற்றிய தகவலை சமூகத்திற்கு தெரியப்படுத்துவதாகும். வார்த்தைப்பாடு முடிந்தபின்னர் தொடர்ந்துவரும் மூன்று ஞாயிற்றுக்கிழமைகள் இவ் அறிவிப்பு விடப்படும். இவற்றை 1ம் கூறல், 2ம் கூறல், 3ம் கூறல் என்பர். கூறல் கூறும் முறை பின்வருமாறு இருக்கும்.

> "புனித யாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்களான யேசுராசாவுக்கும், பெண் மெற்றிலீனாவுக்கும் மகனாகிய அலோசியஸிற்கும், இதே கோவிலைச் சேர்ந்த கிறிஸ்தவர்களான பாவிலுப்பிள்ளை, பெண் மரியம்மாவிற்கும் மகளாகிய மேரி ஸ்ரெலாவுக்கும் 1990 ஐப்பசி மாதம் 10 ஆம் திகதி மெய்விவாகத் திருச்சடங்கிற்கான வார்த்தைப்பாடு கேட்கப்பட்டது. இந்த வார்த்தைப்பாட்டுக்காரர்களிடையே ஏதாவது விக்கினங்கள் இருக்குமாயின் கோவில் கட்டளைக் குருவானவரிடம் அறிவிக்க விசேஷ கடமையுடைய வர்களாக இருக்கிறீர்கள். இது முதலாம் கூறல்"

இந்த அறிவிப்பு கோவிலில் **'சங்கிலித்தாம்'** ஆகக் கடமையாற்றுபவரால் வாசிக்கப்படும். கூறலின் மூலம் பிறரால் இனங்காணப்படவேண்டிய விக்கினங்களாவன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திருமணம் செய்யப்போகும் இருவருக்கும் இரத்த உறவு தொடர்பான முறையீனங்கள் இருக்கின்றனவா?
- இருவருக்கும் ஏற்கனவே உடல் உறவு இருக்கிறதா?
- திருச்சபையின் ஆறாம் கட்டளையான 'மோகபாவம் செய்யாதிருப்பாயாக' எனும் கட்டளைக்கு மாறான விபசார ஈடுபாடுடையவர்களா?
- இருவரில் எவரேனும் இரகசியத் திருமணம் செய்துள்ளார்களா?
- வருடத்தில் ஒருமுறையேனும் நல்ல பாவசங்கீஸ்தனம் (பாவ மன்னிப்பு பெறல்) செய்யாதிருந்தார்களா?

போன்றவைகளாகும். வார்த்தைப்பாடு நடைபெற்ற திருமணம் தொடர்பான விக்கினங்கள் எதுவும் இல்லாமல் இருப்பின் குருவானவர் மெய்விவாகத் திருச்சடங்கை நிறைவேற்ற சம்மதமளிப்பார்.

விக்கினங்கள் இருக்குமாயின் அவற்றை நுணுக்கமாக பரிசீலித்து விக்கினங்களின் நியாபூர்வமானவற்றை மனிதாபிமான ரீதியில் கருத்திலெடுத்து, திருச்சபையின் மேல்நிலையினரிடம் அனுமதிபெற்று திருமணத்திற்குச் சம்மதிப்பார். அவ்வாறாயின் அவர்களுக்கு சிறு தண்டனை விதிக்கப்படும. தண்டனையானது பணமாக இருக்காது பிறருக்கும் உணர்த்தும் நடவடிக்கையாக இருக்கும். சில திருமணங்களை முற்றாக மறுத்தே விடுவார். அவர்களை கோவில் வெளி வாசலில் இருத்தி திருமணத்தை நடத்திவைப்பார். திருப்பலி இடம்பெறாது.

திருமணத்தின் முன்னோட்டமாக **'கன்னிக்கால்'** நடும் வழக்கம் இருந்தது. தற்போது நல்ல நேரம் பார்த்து முள்முருக்கம் தடியை தலைவாசலில் நடுவதுண்டு. முள்முருக்கு இயற்கையின் பாதிப்புகளுக்குள் இலகுவில் சிக்குறாமல் நெடிதுயர்ந்து வளரக்கூடியது என்பதால அதனை நடுகிறார்கள். ஆனால், முன்னர் 'கன்னிக்கால் என்பது திருமணத்திற்கென பந்தல் போடுவதற்கு நடப்படும் முதலாவது கம்பு' எனக் கொள்ளப்பட்டது. திருமண வைபவத்திற்கென கம்புகள் பல நட்டு ஓலையால் கூரையிட்டு பந்தல் போடுவது வழமை. இப் பந்தலுக்கான கன்னிக்காலினை திருமண தினத்திற்கு முன்னர் வரக்கூடிய திங்கள், புதன், சனி ஆகிய தினங்களில் மதியம் 12 மணிக்கு ஆலயத்தில் மணி அடித்ததும் (ஆலயத்தில் மதியம் 12, மாலை 6 மணிக்கு தினமும் மணி அடிப்பது வழமை) ஏற்கனவே தோண்டப்பட்டுள்ள பள்ளத்தில் வயதில் முதியவர் ஒருவர் சிறு செபத்துடன் நடுவார். பின்னர் எப்போதேனும் அந்தக் கம்பில் இணைத்து பந்தலைப் போடுவார்கள்.

பந்தலின் உட்புறம் **'கட்டாடி'** (சலவைத் தொழிலாளி) வெள்ளை கட்டுவார். நாளுக்கு வெள்ளை கட்டும்போது கட்டாடிக்கு அரிசி அன்பளிப்பு செய்யப்படும். திருமணத்திற்கு அழைப்பதற்கு இரு வீட்டாராலும் வீடுவீடாகச் சென்று அழைப்பு விடப்படும். அவரவர் வசதிற்கேற்ற விழாவாக அமைவதற்கு அழைப்பின் தொகை மாறுபட்டுக் காணப்படும். தற்போது இவ் அழைப்புடன் அழைப்பிதழ்களும் வழங்கப்படுகிறது.

ஞாயிறு ஓய்வுநாளாக இருந்ததால் ஆரம்பத்தில் சனிக்கிழமையும், காலப்போக்கில் ஏற்பட்ட இயல்பான தேவையின் நிமித்தம் புதன், சனி ஆகிய தினங்களிலும் திருமணங்கள் நடைபெற்றன. இயேசுக்கிறிஸ்துநாதரின் திருப்பாடுகளின் தொடக்கம் முதல், அவர் அடக்கம்செய்யப்பட்ட கல்லறையிலிருந்து உயிர்தெழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை உள்ள காலம் **'குறோசுமை'** காலமாகும் (தவக்காலம்). இக்காலத்தில் மெய்விவாகத் திருச்சடங்கு நிறைவேற்ற தடைசெய்யப்பட்டுள்ளது.

திருமணத் தினங்களில் காலை 7.30 மணிக்கு ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியில் மெய்விவாகத் திருச்சடங்கு குருவானவரால் நிறைவேற்றி வைக்கப்படும். மணமக்கள் ஏற்கனவே பாவசங்கீஸ்தனம் செய்து, குருவானவரால் உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டவர்களாக இருப்பார்கள். திருமணத் திருப்பலியில் பங்குகொள்ளும்போது மணமக்கள் அதிகாலை உணவோ, பானமோ அருந்தாமல் உபவாசமாக இருப்பார்கள். பெண் தூய வெண்மையான சேலை அணிந்திருப்பார். தலையில் வெள்ளை அல்லது வெள்ளி நிற முடி இருக்கும். முடியுடன் **'வேல்'** இணைக்கப்பட்டிருக்கும். (வேல் என்பது வெண்மையான, நெருக்கமான வலை (Net)) வேல் நீளமானதாக இருக்கும். நிலத்தில் இழுபட்டு வருவதைத் தடுப்பதற்காக தோழியர் கைகளில் ஏந்தியவாறு வருவர். பொதுவாக கோவிலிற்குள் நிலத்தில் இழுபட்டவாறே வருமாறு செய்வர். முகம் சிறியதொரு வெள்ளை வலையால் மூடப்பட்டிருக்கும். தாலி கட்டும் நேரம்தான் முகத்தை மூடியுள்ள வலை அகற்றப்படும்.

சுபநாள், சுபநேரம் போன்றவை கடைப்பிடிக்கப்படுவதில்லை. தற்போது அவ்வாறில்லை திருமண வீட்டாரினால் சுபநாள், சுபநேரம் கடைப்பிடிக்கப்பட்டு அவர்கள் விருப்பத்திற்கமைய, அவர்களால் கோரப்படும் நேரங்களில் திருப்பலிகள் நடைபெறுகின்றன. திருமணத்திற்கான திருப்பலி விசேட திருப்பலியாக இருக்கும். திருப்பலியின் இடையில் குருவானவர் மணமக்களிடம் மீண்டுமொருமுறை சம்மதத்தைப் பெறுவார். குருவானர் ஆசி வழங்க, அவரின் முன்னிலையில் மணமக்களின் கரம் இணைக்கப்படும். இதனைக் **'கைப்பிடித்தல்'** என்பர். கைப்பிடிக்கப்பட்ட பின்னர் மணமகன் எழுந்துநின்று குருவானவரால் ஆசீர்வதிக்கப்பட்ட மாங்கல்யத்தை மணமகளுக்கு அணிவிப்பார். மாங்கல்யத்தின் இணைப்பைத் தவறாது பொருத்துவதற்கு மாப்பிள்ளையின் சகோதரி அல்லது தாய் பிரதானமானவராக இருக்க, நெருங்கிய உறவினர் உதவிசெய்வார்கள். அந்த நேரம் சிறு தடங்கல்கூட ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் மிகக் கவனமாக இருப்பர். மாங்கல்யமானது தங்கத்தாலான கொடியில் (தாலிக்கொடி), கத்தோலிக்க மரபிலமைந்த தாலி இணைக்கப்பட்டிருக்கும். மாங்கல்யம் அணியும் நேரம் சங்கிலித்தாம் கோவில் மணியை தொடர்சியாக அடிப்பார். ஒவ்வொரு வெளிப்பாட்டிற்கும் ஏற்றவகையில் கோவில்மணி அடிக்கப்படுவது வழமை. மங்கலமான நிகழ்வு இடம்பெறுகின்றதென்பதன் அடையாளமாக மணி தொடர்ச்சியாக அடிக்கப்படுகிறது. மாங்கல்யம் அணிந்த பின்னர் ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணுமாக மோதிரம் அணிவித்துக் கொள்வார்கள். பின்னாளில் மாலை அணிவதும் வழமையாகக் கருதப்பட்டு மணமகன் மணமகளுக்கும், மணமகள் மணமகனுக்கும் மாலை அணிவிப்பார்களள. மெய்விவாகத் திருச்சடங்கு நிறைவேற்றப்பட்டதும் தொடர்ந்து திருப்பலி நடைபெறும்.

திருமணத்திற்கான திருப்பலியில் **'முட்டுக்காலி'** (முட்டு) எனப்படும் இருக்கை பலிபீடத்திற்கு முன்பாக மணமக்களுக்குப் போடப்பட்டிருக்கும். விக்கனங்கள் உடையவர்களுக்கு திருமணம் செய்துவைக்கப்படுமானால் இந்த வசதி இருக்காது. சாதாரண இருக்கையே போடப்பட்டிருக்கும். பீடத்திற்கு அண்மையில்கூட இருக்கைகள் இருக்கமாட்டாது. பீடப்பகுதிக்கு வெளியே அல்லது ஆலயத்திற்கு வெளியில் (புறக்கோயில்) போடப்பட்டிருக்கும். முழுமையற்ற திருப்பலி அல்லது திருப்பலியே நடைபெறாது. இதனைப் பெரும் தண்டனையாகக் கருதுவர். இந்தத் தண்டனையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரும் எதிர்கொள்ள விரும்புவதில்லை. இதனால் விக்கினங்கள் இல்லாத ஒழுகுதலையே கடைப்பிடிப்பார்கள்.

திருப்பலி முடிந்ததும் குருவானவரிடம் ஆசிபெறுவர். பின்னர் நடைபவனியாக (சிலர் மேளவாத்தியங்களுடன்) பெண் வீட்டிற்குச் செல்வார்கள். திருமணத்திற்கு வருகைதருபவர்களுக்கு பந்தலின் வாசலில் சந்தனப் பொட்டிட்டும், பன்னீர் தெளித்தும், தாம்பூலம் கொடுத்தும் வரவேற்பார்கள். வீட்டு வாசலில் தோழன் மாப்பிள்ளையின் பாதங்களுக்குப் பால் ஊற்றுவார். மாப்பிள்ளை தன் விரலில் இருக்கும் மோதிரத்தை அவருக்கு அன்பளிப்புச் செய்வார். பெண்ணுக்கு இளைய சகோதரன் இருந்தால் அவன் தோழனாகவும், ஆணுக்கு இளைய பெண் சகோதரி இருந்தால் அவள் தோழியாகவும் இருப்பது வழமை. அவ்வாறு சகோதரர்கள் இல்லாதவிடத்து இந்த உறவுமுறையான உறவினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். தற்போது பல தோழன், தோழிகள் பயன்படுத்தப்படுகிறார்கள்.

பெண்வீட்டில் பலகாரம் வழங்கப்படும். (தற்போது திருமண கேக் வெட்டும் நடைமுறையிருக்கின்றது). உபசரிப்புகள் முடிந்த பின்னர் பெண்ணை வீட்டில் விட்டுவிட்டு மாப்பிளைளையை அழைத்துக்கொண்டு கூறைச்சேலை எடுத்து வருவதற்காக மாப்பிள்ளை வீட்டிற்குச் செல்வார்கள். அங்கும் சந்தனப் பொட்டிட்டும், பன்னீர் தெளித்தும், தாம்பூலம் கொடுத்தும் வரவேற்பார்கள். தொடர்ந்து பலகாரங்கள் வழங்கப்படும். உபசரிப்புகள் முடிந்த பின்னர் கூறைச் சேலையை எடுத்துக்கொண்டு அனைவரும் பெண் வீட்டிற்கு திரும்புவார்கள். அங்கு வைத்து மணமகனால் மணப்பெண்ணுக்கு கூறைச்சேலையும், மணப்பெண்ணால் மணமகனுக்கு வேட்டி, சால்வையும் (சோமன்சோடு) அன்பளிப்புச் செய்யப்படும். கூறைச்சேலை ஒரு தாம்பாளத்தில் வைக்கப்பட்டு, விழாவிற்குக் கலந்துகொண்ட அனைவரது தரிசனத்திற்கும், ஆசி பெறுவதற்குமென குடிமகனால் எடுத்துச்செல்லப்படும்.

இந்நிகழ்வு முடிவுற்றதும் பெண்ணிற்கு கூறை வழங்கும் நிகழ்வு நடைபெறும். கூறை வழங்கும்போது பெண் மாப்பிள்ளையின் காலடியில் முழங்காலில் இருப்பார். மாப்பிள்ளை கூறைச்சேலையால் பெண்ணின் தலையை மூடி உடலைப் போர்த்து விடுவார். பெண் தனது கரங்களால் சேலையின் முனைகளைப் பற்றிப் பிடித்துக்கொள்வார். கூறைச்சேலை உரிய முறையில் மடிக்கப்பட்டே போர்க்கப்படும். இதற்கு தேர்சிபெற்ற முதியவர்கள் முன்னின்று செய்வார்கள். கூறையைப் பெற்றுக்கொண்ட பெண்ணையும், வேட்டி சால்வை பெற்றுக்கொண்ட ஆணையும் தனித்தனியே அழைத்துச் செல்வார்கள். இருவருக்கும் அவை உடுத்தப்பட்டு மணவறைக்கு அழைத்து வருவார்கள்.

தம்பதிகள், பெற்றோர் – ஞானப்பெற்றோரின் காலடியில் வீழ்ந்து வணங்குவார்கள். அவர்களும் ஆசி வழங்கி அன்பளிப்புகளைச் செய்வர். வேறு வயது முதிர்ந்த நெருங்கிய உறவினர்களிடத்திலும் பாதத்தில் வீழ்ந்து ஆசி பெறுவார்கள். இந் நிகழ்வு முடிவுற்றதும் விருந்து ஆரம்பமாகும். இதனை கும்பா முன்னின்று நடத்துவார். மிகவும் வேண்டியவர்களை முதன்மைப் பந்திக்கு அழைத்து இருத்துவார். இதேநேரம் மாப்பிள்ளை வீட்டாருக்கு சமைத்த உணவுகள் பல பாத்திரங்களில் அனுப்பப்படும். திருமணத்தின் பின்னர் பெண்ணின் பெற்றோருக்கும், மாப்பிள்ளையின் பெற்றோருக்குமுள்ள உறவுமுறை **'சம்மந்தி'** எனப்படும். இருவரும் ஒருவரையொருவர் பெயர்சொல்லி அழைக்காமல் 'சம்மந்தி' என்றே அழைப்பர். சில தவிர்க்கமுடியாத காரணங்களால் ஒரு வீட்டுக் கலியாணங்களும் நடைபெறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதுண்டு அவ்வாறு நடைபெற்றால் மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று வரும் நிகழ்வு இடம்பெறமாட்டாது. மாப்பிள்ளை வீட்டார் பெண்வீட்டிலேயே இருந்து தாங்கள் தங்கள் வீட்டில் பரிமாறவேண்டிய பலகாரங்களை அங்கேயே பரிமாறுவார்கள். இது அவர்களின் விருப்பத்திற்கமையவே இடம்பெறுகிறது.

தம்பதிகளின் இரவுப் படுக்கையில் வெள்ளைச் சேலை விரிக்கப்பட்டிருக்கும். வயதில் முதிர்ந்தவர் அல்லது, பெண்ணின் தாய் வெள்ளைச் சேலையை படுக்கையில் விரிப்பார். மறுநாள் காலை **'வெள்ளாப்பு'** நேரம் (அதிகாலை முகமறியா இருள்) மாப்பிள்ளை வீட்டிலிருந்து வரும் அவரது தாய், சம்மந்தியுடன் (பெண்ணின் தாய்) சேர்ந்து தம்பதிகள் தங்கியிருக்கும் அறைக் கதவைத் தட்டுவார்கள். அவர்கள் எழுந்து வந்ததும் பெண்ணின் தாய், தன் பெண்ணின் கன்னித்தன்மையை காண்பிக்க, சம்மந்தியை அறைக்குள் வருமாறு அழைப்பார். (நீண்ட காலங்களுக்கு முன்னர் இந்த வழக்கம் நடைமுறையில் இருந்திருக்கிறது. பெண்ணின் தாய், தன் பிள்ளையை தூய்மையாய் வளர்த்திருப்பதை நிரூபித்துக் காண்பிப்பதில் பெருமிதமடைகிறாள்) சம்மந்தி மறுப்பார். பொதுவாகப் பார்க்கச் செல்வதில்லை. சிலர் விதிவிலக்காக இருந்திருப்பார்களென்பதை மறுப்பதற்கில்லை. தம்பதிகள் முதன்முதல் வேறு எவரினது முகத்திலும் விழிக்காமல் தங்களில் விழிக்கவேண்டும் என்ற எண்ணமும் பெற்றோரிடையே இருப்பதனாலும் அதிகாலை எழுப்புதலின்மூலம் நிறைவேற்றிக் கொள்கிறார்கள். மாப்பிள்ளையின் தாய், மாப்பிள்ளையின் கையில் சுருட்டைக் கொடுத்து வீட்டுக்கு வருமாறு அழைப்பார். (சுருட்டுக் கொடுப்பதற்கான காரணம் தெரியவில்லை.) மாப்பிள்ளையும் சேட்டை அணிந்து தாயுடன் செல்வார். அங்கே பல் துலக்கி தேனீர் அருந்தி, சொற்பமாக காலை உணவும் உண்பார். பின்னர் பெண் வீட்டிலிருந்து மைத்துனர் சென்று மாப்பிள்ளையைக் கூட்டி வருவார். அந்த இடைப்பட்ட நேரத்தில் தம்பதிகள் தங்கியிருந்த அறை துப்பரவு செய்யப்பட்டு, பெண் நீராடி முடித்திருப்பாள்.

திருமணம் முடிந்த நான்காவது நாள் அதாவது புதன்கிழமை திருமணம் நடந்தால் சனிக்கிழமையும், சனிக்கிழமை திருமணம் நடந்தால் புதன்கிழமையும் தம்பதிகளை மாப்பிள்ளை வீட்டிற்கு அழைத்துச் செல்வர். இதனை **'நாலாம் சடங்கு'** என அழைப்பர். இந்தச் சடங்கை மாப்பிள்ளை வீட்டுக்காரரே கொண்டாடுவார்கள். தத்தமது வசதிக்கேற்ப விமரிசையாகவும் செய்வார்கள். தம்பதிகளை அழைப்பதற்கு மாப்பிள்ளை வீட்டிலிருந்து கூட்டமாக வருவார்கள். பெண்வீட்டில் வரவேற்று பலகாரம் வழங்கப்படும். உபசாரம் முடிந்ததும். மாப்பிள்ளை வீட்டாரால் அழைக்கப்பட்ட பெண்வீட்டைச் சார்ந்தவர்களும், மாப்பிள்ளை வீட்டாரும் இணைந்து தம்பதிகளை அழைத்துச் செல்வார்கள். கூடவே பல கடகங்களில் பலகாரங்கள், வாழைப்பழங்கள் வைக்கப்பட்டு வெள்ளைச் சீலையால் மூடப்பட்டு கொண்டு செல்லப்படும்.

மாப்பிள்ளை வீட்டில் வரவேற்கப்படுவார்கள். மணமக்கள் பெற்றோரின் காலடியில் வீழ்ந்து ஆசி பெறுவார்கள். வருகைதந்தவர்களுக்கு பலகாரம் வழங்கி, உணவு பரிமாறுவார்கள்.

மீண்டும் எட்டாம் நாள் காலையில் தம்பதிகள் பெண்வீட்டிற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். இது **'எட்டாம் சடங்கு'** என அழைக்கப்படும். இதனைப் பெரு விழாவாகச் செய்வதில்லை நெருங்கிய உறவினர்கள் மட்டுமே கலந்துகொள்வார்கள். பொதுவாக காலையிலேயே தம்பதிகள் அழைத்துவரப்படுவார்கள். பெண்வீட்டுக்கு வந்த தம்பதிகளை உடனேயே முழுக அனுமதிப்பார்கள். அன்றைய மதியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பதிகள் சேர்ந்திருக்க அனுமதிக்கமாட்டார்கள். உறவினர்கள் பெண்ணை அழைத்து தம்முடன் கூடவே வைத்திருப்பார்கள்.

எட்டாம் நாள் முடிந்த பின்னர் தம்பதிகள் சுயமாக வெளியே செல்ல அனுமதிக்கப்படுவார்கள். மணமக்கள் தமது நெருங்கிய உறவினர்கள் வீடுகளிற்குச் சென்று சந்தித்து தமது சந்தோஷத்தை, நன்றியைத் தெரியப்படுத்தி மகிழ்வார்கள். அன்று முதல் உறவினர்கள் தத்தமது வீட்டிற்கு விருந்துண்ண வருமாறு அழைப்பு விடுப்பார்கள். அழைப்பை ஏற்று தினமும் ஒரு வீட்டிற்கு காலை புறப்பட்டுச் செல்லும் தம்பதிகள், மூன்று வேளையும் விருந்துண்டு மாலையே திரும்புவார்கள்.

## மரணச்சடங்கு



வீட்டில் மரணம் நிகழ்ந்த தகவல் அறிந்ததும் அயலவர்கள், உறவினர்கள் விரைந்து ஒன்றுகூடுதல், தகவல் அறியாத தூரத்திலுள்ளவர்களுக்கு தகவல் சொல்லி அனுப்புதல் - தேவைக்கேற்ப பந்தல் போடுதல் - இறந்தவரின் உடலம் அடக்கம் செய்யப்படும்வரை மரணவீட்டிலுள்ளவர்கள், **முறைக்காவல்** இருப்பவர்களுக்கான (உறவு முறைகள் காரணமாக மரணவீட்டில் உடனிருப்பவர்கள்) உணவுகளை, தூரத்து உறவினர்கள், அயலவலர்கள், குடும்ப நண்பர்கள் போன்றவர்களால் வழங்குதல் ஆகியவைவ் பொதுவானவையாகவே காணப்படுகின்றன. ஆயினும் பல நிகழ்வுகளில் மாறுபாட்டைக் காணக் கூடியதாக இருக்கின்றது. ஒருவர் மரணமடைந்தவுடன் கோவில் சங்கிலித்தாமுக்கு தகவல் அனுப்பப்படும். தகவலைப்பெற்ற சங்கிலித்தாம் கோவில் மணியை அடிப்பார். மரண நிகழ்வு அறிவிபுக்கென அடிக்கப்படும் மணி தொடர்ச்சியாக அல்லாமல் 1 - 2 என ஓசை வருமாறு விட்டுவிட்டு அடிப்பார்கள். இதனை **'மணி இறப்பாரித்தல்'** என்பர். மணியின் ஓசை சொல்லும் செய்தி ஊரவர்களுக்கு இலகுவாகப் புரிந்துவிடும்.

மரணவீட்டில் பகலில் **'பறைமேளம்'** அடிக்கப்படும். புதியவர்கள், உறவினர்கள் வருகைதரும் நேரங்களிலெல்லாம் மேளம் அடிக்கப்படும். 1960 களின் பின்னர் இந்த முறை மறைந்துவிட்டது. மரணம் நிகழ்ந்த இரவு **'ஒப்பாரி'** பாடும் வழமை முக்கியமான நிகழ்வாகும். மரண வீட்டில் உள்ளவர்கள் இரவு பூராவும் விழித்திருப்பதற்காகவும், மரண வீட்டுத் தகவலை ஊரிலுள்ளவர்களுக்கு பகிரங்கப்படுத்துவதற்காகவும் ஒப்பாரி பாடப்படுகிறது. பாடப்படும் ஒப்பாரிப் பாடல்கள் ஒவ்வொன்றும் மரணத்தின் பயங்கரத்தை, 'மரணம் ஒவ்வொருவருக்கும் நிகழும்' என்ற தத்துவத்தை எடுத்தோதுகின்றது. ஒருவர் மாறி ஒருவர் ஒப்பாரிப் பாடல்களை ஓசை நயத்துடன் பாடுவதும், ஏனையோர் ஒருமித்து கோரஸ் எழுப்புவதும் கேட்பவர்களின் உள்ளத்தை உருக்காமல், உணர்வைக் கிளறாமல் இருக்கமாட்டாது. குருநகர் மக்கள் நாட்டுக்கூத்து பாடுவதில் உச்சநிலையில் இருந்தமையால் அவர்கள் இராகம் மாறாமல், ஓசை பிரளாமல் ஒப்பாரிப் பாடல்களைப் பாடுவதும் இதற்குக் காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவலுக்காக மாறுபட்ட ஒப்பாரி பாடல்களில் சில வரிகளைத் தருகிறேன்.

"கை நீட்டி கால் நீட்டி
கண்களிரண்டுமே மூடி
ஒய்யார நித்திரையோ - இப்
போது வந்ததுவோ மகனே"

"அன்று நான் உன்னைப் பெற்று
அக்களிப் பெல்லாம் உற்றேன்
இன்று நான் உனைப் பிரிந்து
இருப்பேனோ மகனே பாலா"

ஒருவர் மரணமடைந்த மறுநாள் அது எந்த நாளாக இருந்தாலும் அந்நாளில் பிற்பகல் 4.00 – 5.00 மணி அளவில் பூதவுடல் அடக்கம் செய்வதற்காக எடுத்துச் செல்லப்படும். (இப்போது வெள்ளிக்கிழமைகளில் அடக்கம் செய்வதில்லை, வெளிநாடுகளில் இருப்பவர்களின் வருகைக்காக தாமதம் செய்வதுமுண்டு.) பிற்பகல் 4.00 - 5.00 மணியானது தொழிலாளர்கள் அன்றைய தமது தொழிலை முடித்துக்கொண்டு இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்கு வசதியான நேரமாக இருந்தது. பொதுவாக மரண இறுதி ஊர்வலம் நடைபெறும் நாட்களில் அனைவரும் பங்குகொள்ளவேண்டும் என்பதற்காக வழமையைவிட முன்னதாக தொழிலை முடித்துக்கொண்டு திரும்புதலே நடைமுறையாக இருந்தது.

கத்தோலிக்க மதத்தவருக்கென உருவாக்கப்பட்டுள்ள சவக்காலையிலேயே இறந்தவரின் உடலம் அடக்கம் செய்யப்படும். ஆரம்பமுதல் மேற்றாசனமாக கொஞ்செஞ்சி மாதா ஆலயம் விளங்கியமையால் அந்த ஆலயச் சுற்றாடலிலேயே சவக்காலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இன்றுவரை அதன் பராமரிப்பு, கட்டுப்பாடு அனைத்தும் கொஞ்செஞ்சி மாதா ஆலய நிர்வாகத்திடமே இருக்கிறது.

அவரவர் வசதிக்கேற்ப பெறுமதியுள்ள சவப்பெட்டிகளில் இறந்தவரின் உடலம் வைக்கப்பட்டிருக்கும். குறித்த நேரத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்வதற்கு ஒற்றைக் குதிரை பூட்டிய 'குதிரை வண்டி'யே பயன்படுத்தப்பட்டது. அழகான மர வேலைப்பாடுகளுடன் அமைந்த குதிரை வண்டி யாகப்பர் ஆலய நிர்வாகத்தினரின் பொறுப்பில் இருந்தது. குதிரைக்குச் சொந்தக்காரர் வேறொருவராக இருப்பார். அந்நாளில் குதிரைகள் வாடகைக்கு விடப்படுவதுண்டு. குதிரைக்கு உரிமையாளன் அல்லது குதிரையை வாடகைக்குப் பெறும் ஒருவன் குதிரை வண்டிலை கோவில் நிர்வாகிகளிடமிருந்து பெற்று பயன்படுத்தலானான். இறுதி ஊர்வலத்திற்கான குறித்த நேரத்தில் வண்டிலின் மத்திய பீடத்திற்கு வெள்ளைத்துணி விரிக்கப்பட்டு தயார் நிலையில் நிறுத்தப்பட்டிருக்கும். அனைவரின் அழுகுரல், கண்ணீர்களுக்கு மத்தியில் இறந்தவரின் புதவுடல் அடங்கிய சவப்பெட்டி, வெள்ளைத்துணி விரித்த பீடத்தின்மேல் வைக்கப்படும். சவ ஊர்வலம் ஆரம்பமாகும் நேரம் கோவில் மணி இறப்பாரிக்கும்.

ஆலய பரிபாலக சிறார்கள், தமக்குரிய சீருடை அணிந்தவாறு செம்பினால் செய்யப்பட்ட சிலுவை அடையாளமுடைய நீண்ட கோலை ஒருவர் மத்தியிலும், செம்பினால் செய்யப்பட்ட மெழுகுதிரி தாங்கிகளை இருவர் கையில் ஏந்தியவாறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம் – இடமாகவும், ஒருவர் சிறிய மணியை அடித்து ஒலியை எழுப்பியவாறு முன்செல்வார்கள். சிறிய மணி ஓசையை கேட்கும் எவருக்கும் மரண ஊர்வலம் என்பது இலகுவாகப் புரிந்துவிடும். கோவில் சங்கிலித்தாம் நல்மரணச் செபத்தை உரத்து வாசித்தவாறு ஊர்வலத்துடன் செல்வார். சில ஊர்வலங்களில் குழுவினர் ஒப்பாரி பாடியவாறும் செல்வார்கள். ஊர்வலத்தின் இறுதியில் வெள்ளை உடை அணிந்த 'பான்ட்' குழுவினர் பான்ட் இசை எழுப்பியவாறு செல்வார்கள். போத்துக்கேய இனத்தின் வழிவந்தவர்களே இவ்வாறு பான்ட் வாசிப்பது வழக்கமாக இருந்தது. தற்போதைய பான்ட் வாத்தியக் குழுவினர் போலன்று, அவர்கள் பான்ட் இசையை தத்ரூபமாக வழங்கி மரண ஊர்வலத்திற்கு உரிய சிறப்பை வழங்கினார்கள். சீருடை அணிந்தவாறும், பான்ட் வாத்தியத்திற்குரிய மரபு சற்றேனும் மாறாத வகையிலும் செயற்பட்டார்கள். இதனால் பலராலும் விரும்பப்பட்டார்கள்.

குதிரை மற்றும், குதிரை வண்டிலுக்கும், பான்ட் வாத்திய இசைக் குழுவினருக்கும் மிகக் குறைந்த கட்டணமே அறவிடப்பட்டதால் மரண வீடுகளுக்கு இவை பயன்படுத்தப்படலாயிற்று. பான்ட் வாத்திய இசைக் குழுவினரைத் தொடர்ந்து இறந்தவரின் உடலத்தைத் தாங்கிய குதிரைவண்டி தொடரும். இந்த நடைமுறை 1950 களின் பிற்பகுதி வரை நடைமுறையிலிருந்தது. அந்தியகால சேவை நிறுவனங்களின் வரவால் வாகனம் பயன்படுத்தப்படத் தொடங்கியமையும், 'பாடை' கட்டி கைகளில் ஏந்திச்செல்வதில் பலர் நாட்டங்கொண்டமையும் இதன் மறைவுக்குக் காரணமாயீற்று.

இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களுக்கு சவக்காலையில் வெற்றிலை, பாக்கு, புகையிலை, சுருட்டு மற்றும் சிகரெட் வழங்கப்படும். கலந்து கொண்டவர்கள் அனைவரும் சவக்காலையிலிருந்து மரண வீட்டிற்கு வருவார்கள். அங்கு தேனீர் வழங்கப்படும். பெண்கள் ஊர்வலத்தில் கலந்துகொள்வதில்லை. அதனால் ஊர்வலம் புறப்பட்டுச் சென்றதன் பின்னர் அவர்களுக்குத் தேனீர் வழங்கப்படும். தற்போது பக்திச் சபைகளைச் சேர்ந்த பெண்கள் மரணவீட்டில் வழிபாடு செய்வதுடன் கோவில்வரை ஊர்வலத்துடன் செல்கிறார்கள். மிக நெருக்கிய உறவுள்ள பெண்களும் கோவில்வரை ஊர்வத்துடன் செல்வதுண்டு. இறுதி நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் தேனீர் அருந்தி விடை பெறும்போது இரவு உணவில் பங்குகொள்ளுமாறு அழைப்பு விடப்படும். அவ் அழைப்பை ஏற்று அனைவரும் கலந்துகொள்வார்கள். அனைவருக்கும் இரவு உணவு பரிமாறப்படும்.

மரணம் நிகழ்ந்த ஏழாம் நாள் **'பிச்சை'** கொடுக்கப்படும். இறுதி ஊர்வலத் தினத்திற்கும், பிச்சை கொடுக்கும் தினத்திற்கும் இடைப்பட்ட நாட்களில் நெருங்கிய உறவினர்கள் இணைந்து மரண வீட்டில் உணவு சமைப்பார்கள். சமையலுக்குரிய செலவை மரண வீட்டுக்காரர் தவிர்ந்த ஏனைய (சமையலில் பங்குகொளளும்) உறவினர்கள் தமக்குள் பகிர்ந்துகொள்வார்கள். 31 நாட்கள் வரையிலும் இவ்வாறான சமையல்கள் நிகழ்வதுண்டு.


மரண இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் வீடுவீடாகச்சென்று 'பிச்சை'யில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடப்படும். இது மரண வீட்டுக்காரரின் செலவாகவே இருக்கும். பிச்சை தினத்தன்று அற்ஹோமைப்போன்று நிதியுதவி வழங்கப்படுவதுண்டு. பெருந்தொகை நிதியாக இல்லாவிட்டாலும், அந்நிதி மரணம் நிகழ்ந்த குடும்பத்தினருக்கு பேருதவியாக இருக்கும். இப்பணத்தை அற்ஹோமைப் போன்று திரும்பவும் எதிர்பார்த்திருப்பதில்லை. ஆயினும் நிதி வழங்கியவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தில் மரணம் நிகழ்ந்தால் நிதி பெற்றவர், தம்மிடம் வசதி இருக்குமாயின் பணம் கொடுத்து உதவும் வழக்கம் இருந்தது. சிலர் உணவுப்பொருட்களாகவும் அன்பளிப்புச் செய்வர்

கார்த்திகை 2 ஆம் திகதியை 'இறந்த ஆத்துமாக்கள் தினமா'க திருச்சபை பிரகடனப்படுத்தியுள்ளது. அத்தினத்தை முன்னிட்டு சவக்காலையில் இறந்த உறவினர்களின் கல்லறைகளைத் துப்பரவு செய்வது வழக்கம். அன்றைய தினம் ஆலயத்தில் நடைபெறும் விசேட வழிபாடுகளில் கலந்து, இறந்தவர்களின் ஆத்ம இளைப்பாற்றிக்காக வேண்டுதல் செய்தல், கல்லறைகளைத் தரிசித்து இறந்தவர்களை நினைவுகூருதல், தானம் கொடுத்தல் போன்றவையும் இடம்பெறும். அன்று முழுவதும் ஆலய மணி இறப்பாரித்தவண்ணமே இருக்கும். தற்போது இந்த நடைமுறையில் சிறிய மாறுதல்கள் காணப்படுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. புனித யாத்திரைகள்

பிரசித்தமான கத்தோலிக்க ஆலயங்களுக்கு யாத்திரையாகச் சென்று விடுமுறையாகக் கழிப்பதற்கு இம்மக்கள் பெரும் விருப்பம் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். செலவினத்தைப் பொருட்படுத்தாது, சீட்டுகள் போட்டும், சிறிது சிறிதாகச் சேமித்துவைத்தும், ஏன்? கடன்வாங்கியும் குறித்த தினங்களில் யாத்திரை செல்வதற்குத் தவறுவதில்லை. இவற்றில் முக்கியமானவை மடுமாதா திருவிழா, புல்லாவெளி புனித செபஸ்ரியார் திருவிழா, பாலைதீவு அந்தோனியார் திருவிழா, கச்சைதீவு அந்தோனியார் திருவிழா போன்றவையாகும். இத் திருவிழாக்களின்போது குருநகர் வெறிச்சோடிக்கிடக்கும். வேறு பல திருவிழாக்களுக்கு யாத்திரை சென்றாலும் இவற்றைப்போன்று முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

## மடுத்திருவிழா யாத்திரை

நீண்டகாலத் தொடரைக்கொண்டது மடுமாதா திருவிழா யாத்திரை. மிகவும் கொடிய காட்டு விலங்குகள் வாழும் பகுதியே மருதமடுவாகும். அத்தகைய பயங்கரமான இடம்நோக்கி நம்பிக்கை ஒன்றையே ஆயுதமாகக்கொண்டு துணிவுடன் செல்வதற்கு ஆயத்தமாவார்கள். அடர்ந்த காடுகளைக்கொண்ட பூநகரி பாதையூடாக கடலையும், சேறுகளையும், மணற்திட்டிகளையும் கடந்து மடுநோக்கி கால்நடையாகச் செல்வார்கள்.

இரண்டு மூன்று குடும்பங்கள் சேர்ந்து மாட்டுவண்டியில் தத்தமக்கு தேவையான பொருட்களை ஏற்றுவார்கள். மாட்டுவண்டி முன்செல்ல அனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னால் நடந்துசெல்வார்கள். நடந்துசெல்வதே வழமையாக இருந்ததால் தங்கி இளைப்பாறுவதற்கும், உணவு சமைப்பதற்குமென சில இடங்களைத் தேர்வுசெய்து வைத்திருந்தார்கள். அவ்விடங்களில் தங்கித் தங்கித் தமது பயணத்தைத் தொடர்வார்கள். போக்குவரத்துப் பாதைகளும் அவற்றிற்கு இசைவாகவே அமைந்து விட்டன. முன்னர் ஆடி 02 ஆம் திகதியே மடுமாதா திருவிழா நடைபெற்றது. காலப்போக்கில் தேவை கருதி பல திருவிழாக்கள், பல மாதங்கள் நடைபெறலாயிற்று இப்போது ஆவணி 15 ஆம் திகதியே பிரபல்யமான திருவிழாவாகும்.

மடுமாதாவைத் தேடி ஆனி மாதம் நடுப் பகுதியில் யாத்திரையாகப் புறப்படுபவர்கள். மருதமடுவில் ஆலயச் சுற்றாடலிலுள்ள காடுகளைத் துப்புரவுசெய்து மரங்களின்கீழ் விடுதி அடைத்து தங்குவார்கள். இதனை **'விடுதி விடுதல்'** என்பர். 10 நாட்கள்வரை தங்கி ஆடித் திருவிழாவை முடித்துக்கொண்டு வந்த பாதையால் வீடு திரும்புவார்கள். புல்லாவெளி புனித செபஸ்ரியார் ஆலயம் கட்டபட்டதன் பின்னர் ஆடித் திருவிழாவை முடித்துக்கொண்டு புல்லாவெளித் திருவிழாவிற்கு செல்பவர்களுமுண்டு. கால்நடைப் பயணங்கள் மாறி வாகனங்களில் பயணிக்கத் தொடங்கியதன் பின்னரும் இந்த வழக்கம் தொடர்ந்துகொண்டேயிருந்தது. தற்போது மடுமாதாவின் ஆவணித் திருவிழா பல காரணங்களால் முனைப்புப் பெற்றமையால் ஆடித் திருவிழாவுக்குச் செல்வோர் தொகை குறைந்து ஆவணித் திருவிழாவுக்குச் செல்வோர் தொகையே அதிகமாக உள்ளது.

## புல்லாவெளி திருவிழா யாத்திரை

"புல்லாவெளிக் கோயிலில் புதுமை நடக்குதடா" என்று கடற்றொழிலாளர் தொழில் செய்யும்நேரம் பாடப்படும் 'அம்பா'வில் பாடப்படுவதென்றால் குருநகர் மக்களைப் பொறுத்தவரை புல்லாவெளியின் முக்கியத்துவத்தை கூறவேண்டியதில்லை. புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலயம், இயக்கச்சிக்கும் வெற்றிலைக்கேணிக்கும் இடைப்பட்ட, ஒழுங்கான போக்குவரத்துப் பாதைகளற்ற மணற்பாங்கான பகுதியில் பற்றைக் காடுகளுக்கு மத்தியில் 1917 இல் மரத்தூண்களால் அமைக்கப்பட்டது. மரத்தூண்களால் அமைக்கப்பட்ட ஆலயம் 1933 இல் இடிந்து வீழ்ந்தது. பின்னர் தாளையடி பங்குக்குருவின் முயற்சியால் குருநகர் மக்கள் உதவியுடன் ஆலயம் மீண்டும் நிர்மாணிக்கப்பட்டது. ஆடிமாதம் 08 ஆம் திகதி திருவிழா நடைபெறுகிறது. ஆலையத்திற்கு அண்மையில் இரண்டு சிறிய குளங்கள் இருக்கின்றன. ஒன்றின் பெயர் 'பாற்குளம்'. சற்றுத் தூரத்தில் 'கிளவி ஓடை' என அழைக்கப்படும் வாய்க்காலும் இருக்கின்றது. இவைகளே புல்லாவெளி யாத்திரிகர்களின் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்தது. பின்னர் சில கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. பிரதான பாதையில் அமைந்துள்ள 'இயக்கச்சி' சந்தியிலிருந்து வரம்புகளும், வெளிகளும், மணல்கள், மணற்பாதைகளென பலவற்றைக் கடந்து கால்நடையாகச் சுமைகளைத் தூக்கியவாறு செல்லவேண்டும். சில இடங்களில் வண்டில்களே செல்லமுடியாது தடுமாறும்.

மடுமாதாவின் ஆடித் திருவிழா முடிந்த பின்னர் நேராகப் புல்லாவெளிக்கு செல்லும் குருநகர் யாத்திரிகர்கள், அங்கு தங்கி புனித செபஸ்ரியார் திருவிழாவையும் முடித்துக்கொண்டு வீடு திரும்புவதே வழமையாகவிருந்தது. மடுவிலிருந்து புல்லாவெளிக்குச் செல்பவர்களைவிட, மேலும் பல யாத்திரிகர்கள் குருநகரிலிருந்து நேரடியாகவே செல்வதுண்டு. அவர்களில் பெரும்பாலோர் கடலால் செல்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோணியில் ஆனையிறகு பாலம் ஊடாக 'ஊரியானு'க்குச் செல்வர். ஆனையிறகு பாலம் போக்குவரத்துக்கு வசதியாகவே அமைந்திருந்தது. கடல் வெள்ளமான நேரங்களில் பெரிய தோணிகள் பாலத்துக்குள் புகுவது கடினம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் கடல் வடு விழும்வரை (கடல்நீர் உயரம் குறைதல்) காத்திருந்து வடு நேரம் புகுத்திச் செல்வர். ஊரியானிலிருந்து தத்தமது சுமைகளுடன் புல்லாவெளி நோக்கிச் செல்வார்கள். இந்த பாதை அவர்களுக்கு இயக்கச்சிப் பாதையைவிட இலகுவானதாக இருந்தது.

புல்லாவெளி திருவிழா 'குடும்பவிழா' போன்ற தோற்றத்தையே கொடுக்கும். பற்றைகளைத் துப்புரவுசெய்து மர நிழலின் கீழ் விடுதி அடைத்து தங்குவார்கள். குருநகரில் பற்றைக் காடுகள், மணற்பாங்கான நிலம், பரந்த வெளிகள் போன்றவற்றின் தன்மைகள் சுவைக்க வாய்ப்பில்லை. இதனால் இங்கு தங்கியிருக்கும் நாட்களை மகிழ்ச்சிகரமானதாக அனுபவிப்பர். அந்நாட்களில் ஆண், பெண் எல்லோருமே சுதந்திரமாக உலாவருவதும், கிளித்தட்டு, கிட்டுச்சுள்ளி, ஒளித்துப் பிடித்தல் போன்ற பல விளையாட்டுகள் மற்றும், பனங்கொட்டைகளைக்கொண்டு சிறுசிறு விளையாட்டுகளை விளையாடுவதிலும் செலவழிப்பார்கள்.

பகலில் வெய்யிலின் அகோரம், சாயந்தரமானால் குளிர்மை. அதனால் இரவில் நெடுநேரமாக விழித்திருந்து பனை ஓலைகளைக் கொழுத்தி அதன் வெளிச்சத்தில் விளையாட்டுடன் பொழுதைக் கழிப்பார்கள். குடும்பம் குடும்பமாகச் சந்தித்து மகிழ்வார்கள். இந்நாட்களில் ஒருவரையொருவர் இலகுவாக அறிந்துகொள்ள, புரிந்துகொள்ள, பழகக்கூடிய வாய்ப்பு அதிகமாகவே இருக்கின்றது. இதனால் பெரியவர்களிடையே கலியாணப் பேச்சுக்களும் நடைபெறுவதுண்டு. இளம் உள்ளங்களிடையே காதலும் உருவாகுவதுண்டு. தங்கியிருக்கும் நாட்களில் உணவுத் தேவைக்காக சிலர் கட்டாக்காலி மாடுகளை வெட்டுவதும் இடைக்கிடை நடந்தேறும். திருவிழா நடைபெறும் ஆடி 08 ஆம் திகதியன்று இரவு ஏதாவதொரு நாட்டுக்கூத்து இடம்பெறும். மறுநாள் முதல் மெல்லமெல்ல கூட்டமாக வெளியேறத் தொடங்குவார்கள். சிலர் வேதனையுடனும், பலர் சந்தோஷத்துடனும் புறப்படுவது பலரறிந்த இரகசியம். புல்லாவெளி திருநாள் முடிந்தால் குருநகரில் பல திருமணங்கள் நடக்கும்.

புல்லாவெளி திருவிழாவிற்கான சகல ஏற்பாடுகளையும் அந்தோனிப்பிள்ளை (மாணாக்கன்) என்பவர் நெடுங்காலமாக, சேவையாக செய்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாலைதீவு திருவிழா யாத்திரை

தபக் காலத்தில் 3ம் ஞாயிறு பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நடைபெறுகின்றது. பாலைதீவு குருநகரிலிருந்து 11 மைல் தூரமுள்ளதும், மூன்று மைல் சுற்றளவைக்கொண்டதுமான சிறிய தீவாகும். அங்கு புனித அந்தோனியார் திருநாள் கொண்டாடப்படுகின்றது. மூன்று நாட்கள் ஆராதனையுடன் ஞாயிறு காலை திருவிழா கொண்டாடப்படும். பாலைதீவு அழகான தீவாகும். சுற்றுப்புறமும் ஆழங் குறைந்த கடற்பகுதியைக் கொண்டிருப்பதால் கடற் குளிப்பிற்கு முக்கியத்துவம் பெறுகிறது. பற்றைக் காடுகளைக் கொண்டது. நன்னீர் அங்கு இல்லை. இதனால் யாத்திரிகர்கள் தம்முடன் நன்னீரையும் கொண்டுசெல்ல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். யாழ்ப்பாணத்திலேயே நீளங்கூடியதும், பெரியதுமான தோணிக்குச் சொந்தக்காரரான பாக்கியமுத்து மூப்பர் அவர்கள் தமது தோணியில் தண்ணீரைக் கொண்டுசென்று பாலைதீவு யாத்திரிகர்களுக்கு வழங்குவது வழக்கமாக இருந்தது.

திருநாள் நடைபெறவுள்ள வாரத்தில், புதன்கிழமை அனைத்துத் தொழில்களும் தொழிலுக்குச் செல்லாது கட்டி, தொழில் உபகரணங்கள் அனைத்தையும் கரையில் இறக்கி வைத்துவிடுவார்கள். பாலைதீவு யாத்திரிகர்களை ஏற்றிச் செல்வதற்கும், நன்னீர் மற்றும் பொதுத்தேவை கருதி தேவையான பொருட்களை ஏற்றிச்செல்வதற்கும் தோணிகள், படகுகளை பயன்படுத்துவதற்கே அவ்வாறு செய்வார்கள். கடற்றொழிலாளர்கள் பாலைதீவு அந்தோனியாரில் அதீத நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். தமது கடற் பயணத்தில் ஆபத்துகளைத் தவிர்க்கும் வல்லமை அவருக்குண்டென்று நம்புகிறார்கள். இதனால் பாலைதீவில் தரையிறங்குவோர் தகாத வார்த்தைகளைப் பேசமாட்டார்கள். சினிமாப் பாடல்களை பாடமாட்டார்கள். மது அருந்தமாட்டார்கள். பக்தியுடன் கூடிய மரியாதை அத்தீவில் காணப்படும். சில சந்தர்ப்பங்களில் அடி அழித்து வருவதுமுண்டு. கடற்றொழிலாளர் ஒவ்வொருவரும் தத்தமது பெருங் கடமையாக அனைத்தையும் செய்வார்கள்.

சொந்தமாக படகுகளை வைத்திருப்போர் ஒரு வாரத்திற்கு முன்னரே தமது கடல் யாத்திரையைத் தொடங்கிவிடுவர். பற்றைகளைத் துப்புரவு செய்து விடுதி அடைத்து தங்கியிருப்பர். ஏனையோர் புதன்கிழமைக்குப் பின்னர்தான் புறப்பட்டுச் செல்வார்கள். அந்தச் சிறிய தீவு நிரம்பி வழிவதுபோன்று காட்சிதரும். பக்தி மேலோங்கியிருக்கும். நான் சிறுவனாய் இருந்தபோது பாலைதீவில் உள்ள புனித அந்தோனியார் ஆலயத்திற்கு தோணியில் சென்ற ஞாபகம் இருக்கின்றது.

அதிகாலை, இருள் நீங்காத சூழ்நிலை. அரிக்கன் லாந்தர் ஒளிதர 'குருநகர் மலாயன் புகையிலைக் கம்பெனி'க்கு அருகாமையிலிருந்த துறையிலிருந்து தோணியில் புறப்பட்டோம். எனது குடும்பத்தினர் மட்டுமல்ல பல குடும்பங்களைச்சேர்ந்த அறுபதுக்கும் மேற்பட்டவர்கள் இருந்தார்கள். தோணி பாய் விரித்து சாதாரணமாகப் போய்க்கொண்டிருந்தது. காற்றின் வேகம் குறைவாகவே இருந்ததினால் தோணி மெதுவாகவே சென்றுகொண்டிருந்தது. கடலில் வெய்யிலின் அகோரம் அதிகமாக இருந்தது. அதனைத் தாங்குவதே கடினமாக இருந்தது. தாகத்தைத் தீர்ப்பதற்காக 'பிப்பினிக்காய்' சாப்பிட்ட வண்ணம் பயணிக்கிறோம்.

திடீரென காற்று வேகமாக வீசியது. கடலில் சிறு கொந்தளிப்பு. தோணி கடல் அலையோடு சேர்ந்து ஆட்டம்போட்டது. தோணியில் இருந்தவர்கள் செபம் செய்யத்தொடங்கினார்கள். தண்டையல் உரத்த சத்தமாய் "யார் இங்கே தூஷணம் பேசியது? யாராவது சாராயம் கொண்டுவந்தீர்களா?...." என்று பல கேள்விகளைக் கேட்டார். சற்றுநேரம் மௌனம். அணியப் பக்கமிருந்து (தோணியின் முன்பக்கம்) சலசலப்புக் கேட்டது. உடனே தண்டையல் அங்கே சென்று ஒருவரது உடுப்பு வைத்திருந்த பெட்டியைத் திறந்து சாராயப் போத்தலை வெளியே எடுத்து எல்லோருக்கும் காண்பித்தார். கோபமாக அவரை ஏசிவிட்டு சாராயப் போத்தலை கடலில் வீசிவிட்டார். எல்லோரும் சாராயம் வைத்திருந்தவரை ஏசிக்கொண்டிருந்ததை அவர்களது முணுமுணுப்புகளில் இருந்து உணரக்கூடியதாக இருந்தது.

எனக்கு புரியவில்லை. அம்மாதான் தெளிவுபடுத்தினார். கடல்கடந்து கோவிலுக்குப் பிரயாணம் செய்யும்போது, சாராயம் கொண்டுபோதல், தூஷண


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தை பேசுதல், பக்தியின்றி வேடிக்கை செய்தல் போன்றவற்றால் கடல் பிரயாணத்திற்கு இடைஞ்சல் ஏற்படுமாம். அதைக் கண்டுபிடித்து நீக்கினால் இடைஞ்சலில்லாமல் போகலாமாம். தூஷண வார்த்தை பேசியவர்களை கரையை அடையும்வரை பாய்மரத்தின் அடியில் கட்டிவைப்பார்களாம். இதுதான் அவர்களுக்குத் தண்டனை. அவர்களது நம்பிக்கை உண்மைபோல் சிறிது நேரத்தின் பின்னர் இடையூறுகளின்றி எமது பிரயாணம் வழமையைவிட வேகமாகவும், அமைதியாகவும் தொடர்ந்தது.

மேலும் அம்மா கூறும்போது, கச்சைதீவு புனித அந்தோனியார் ஆலயத்திற்குச் செல்லும்போது பயணங்கள் திசைமாறிய சந்தர்ப்பங்களில் கடலில் பாம்பு தோன்றி உரிய திசையைக் காண்பித்துச் செல்லுமாம். பாம்பின் பின்னால் பயணத்தைத் தொடர்வார்களாம். கரை தெரியவந்ததும் பாம்பு மறைந்துவிடுமாம். இதுபற்றி பலர்சொல்லக் கேட்டிருக்கிறேன். காணக்கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததாக ஞாபகமில்லை. ஆனால் பாலைதீவு புனித அந்தோனியார் கோவிலில் நேர்த்திக்கடனை நிறைவேற்றத் தவறியவர்களுக்கு நினைவூட்டிட அவர்களது விடுதிகளிலுள்ள மரத்தில் பாம்பு தோன்றியதை நான் பார்த்திருக்கிறேன். நிழலுக்காக மரங்களின் கீழ் அல்லது மரநிழல் விழக்கூடிய இடங்களில் விடுதி அடைப்பது வழமை. விடுதியில் உள்ளவர்கள் எவரேனும் தமது அல்லது பிறரினது நேர்த்திக்கடன்களை செய்வதற்குத் தவறியிருந்தால் அவர்களது விடுதியின் மேல் பாம்பு தோன்றும். உரியவர்களுக்கு ஞாபகம் வந்ததும் மறைந்துவிடும். பலநூறு மக்கள் விடுதிகள் அடைத்திருக்கும் சுற்றாடலில் எப்படி? எங்கிருந்து பாம்பு வந்தது? குறிப்பாக உரியவர்களின் விடுதியை எவ்வாறு இனங்கண்டது? எப்படி மீளச்சென்றது? என்பதை ஆச்சரியாமாகப் பார்த்தவர்கள் பலர். அவர்களில் நானும் ஒருவன். இது பாலைதீவு அந்தோனியாரின் புதுமையென்று அனைவரும் சொல்வதுண்டு.

இயந்திரப் படகுகளின் வருகையின் பின்னர் முன்னைய நடைமுறைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டது. பக்தி என்ற நிலையிலிருந்து பொழுதுபோக்கு என்ற நிலைக்கு பலர் மாறிவிட்டார்கள். இலகுவான போக்குவரத்து அமைந்ததால் பெருந்திரளானோர் பாலைதீவுக்குச் செல்லத் தொடங்கினர். மிதமிஞ்சிய பயணிகளை ஏற்றிச் சென்றதால் 07.03.1970 இல் படகு நீரில் அமிழ்ந்து 80 பயணிகளை பலிகொண்ட வரலாறும் உண்டு.

## கச்சைதீவு திருவிழா யாத்திரை

தபக் காலத்தின் 4ஆம் ஞாயிறு கச்சைதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நடைபெறுகின்றது. கச்சைதீவு குருநகரிலிருந்து 35 மைல் தூரமுள்ளதும், ஒன்றரை மைல் சுற்றளவைக்கொண்டதுமான சிறிய தீவாகும். இத் தீவு இந்தியாவுக்கு மிகவும் அண்மையில் இருக்கின்றது. கச்சைதீவில் ஆங்கிலேயரால் பயன்படுத்தப்பட்ட காவற்கோபும் சிதைவுற்ற நிலையில் இருக்கின்றது. அவ்விடம் சற்று உயரமாக அமைக்கப்பட்டுள்ளது. அதனில் நின்று பார்த்தால் இந்தியா, இராமேஸ்வரத்தில் வாகனப் போக்குவரத்துகளை இனங்காணமுடியுமளவிற்கு அண்மையிலிருக்கிறது. இத்தீவு இந்தியாவுக்கா, இலங்கைக்கா சொந்தமென்ற சர்ச்சையிலே நீண்ட ஆண்டுகள் ஓடிமறைந்தது. இருப்பினும் சிறிமா - சாஷ்திரி ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கைக்குச் சொந்தமானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு புனித அந்தோனியார் திருநாள் கொண்டாடப்படுகின்றது. பாலைதீவைப்போன்று மூன்று நாட்கள் ஆராதனையுடன் ஞாயிறு காலை திருவிழா கொண்டாடப்படும். இத்தீவைச் சுற்றி ஆழமான கடற்பகுதியே காணப்படுகின்றது. கடற்குளிப்புக்கு உகந்ததல்ல. பாலைதீவைப்போன்று அதிக யாத்திரிகர்கள் செல்வதில்லை. அதிக தூரம், மிகவும் ஆழமான கடற்பிரதேசம், நீண்டநேரக் கடற்பயணம், சாதகமற்ற காற்றுகளின் இடையூறுகள் போன்றவற்றால் ஏற்படக்கூடிய அசெகரியங்களால், குருநகர் யாத்திரிகர்கள் பாலைதீவுக்குச் செல்வதில் பாதி அளவே செல்வதைக் காணக்கூடியதாக இருக்கும். இந்திய யாத்திரிகர்களும் பெருந்தொகையாக கச்சைதீவுக்கு வருகைதருவார்கள். பாலைதீவைப்போன்ற பக்தி பரவசங்களை பிரயாணங்களின்போதும், கச்சைதீவிலும் காணக்கூடியதாக இருக்கும்.

இந்தியாவுக்கு சுதந்திரமாகப் போய்வரக்கூடிய காலங்களில் இந்திய, இலங்கை யாத்திரிகர்கள் பக்தியாகவும், உணர்வுபூர்மான சகோதரத் தன்மையுடனும் திருநாளைக் கொண்டாடினார்கள். சுதந்திரமாக இந்தியா சென்றுவரக்கூடிய நிலைமாறி விசா கட்டாயமாக்கப்பட்டதன் பின்னர் அரசின் சட்ட திட்டங்கள், கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகள், அம்மைப்பால் ஊசி ஏற்றுதல் போன்றவற்றால் யாத்திரிகர்கள் பல இடையூறுகளை எதிர்கொண்டனர். இதனால் யாத்திரிகர்களின் வீதம் குறைந்து குறைந்து வரலாயின. இயந்திரப் படகுகளின் வரவினால் பயணிப்போர் சற்று அதிகமாகக் காணப்பட்டது. இதற்குக் காரணம் குறைந்த நேரப் பயணம், இந்தியப் பொருட்களைக் கொள்வனவுசெய்யக்கூடிய சந்தர்ப்பம் போன்றவையாகும். இந்தியா சென்றுவர கொண்டுவரப்பட்ட விசா காரணமாக கச்சைதீவு ஒரு வர்த்தக மையமாக மாறத்தொடங்கியது. பண்டமாற்றுகள், கொள்வனவுகள் போன்றவை வெகு விமரிசையாக நடைபெறலாயின. காலப்போக்கில் திருவிழாவிற்காகவன்றி பண்டமாற்று மற்றும் கொள்வனவிற்காகவே இருநாட்டு யாத்திரிகர்களும் கச்சைதீவைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள்.

"நெருக்கமான வீட்டுச்சூழலில் அடர்த்தியான குடும்ப உறவுகளில் வாழ்வோருக்கு இவ்வாறான யாத்திரைகள் நோய்களை குணமாக்கும், உள்ளத்தை ஆற்றுப்படுத்தும். உடல்நோய்களை மட்டுமல்ல ஆழ்மனதில் படிந்திருக்கும் மனக்காயங்கள் கசப்புணர்வுகளை போக்கவல்லது. சுத்தமான நீர், சுத்தமான காற்று, நல்ல இயற்கை சூழல் பிள்ளைகளோடும் உறவினர்களோடும் பேசிப்பழக அத்துடன செபிக்க, தியானிக்க போதிய நேரவாய்ப்பு. இயந்திர வாழ்வுச் சூழலிலே இவர்கள் முன்னோர்கள் காட்டிச்சென்ற வழிகள் முழுமனித மேம்பாட்டிற்கு உந்தலாக அமையும்." என அருள் கலாநிதி அ. பி. ஜெயசேகரம் அடிகளார், குருநகர் திரு இருதய சபையின் நூற்றாண்டு விழா மலருக்கு (2005) எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. தொழில் வளர்ச்சி

பூர்வீகத் தொழில்களான பாச்சுவலை, கொண்டடி, கரைவலை போன்ற தொழில்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் கடலில் சுயமாக மின்பிடித்தலை மேற்கொண்டார்கள். கரையை அண்மியதாக கற்களை வட்டமாக நெருக்கி அடுக்கி, அதற்கு ஒடுங்கிய வாசல் வைத்து, ஒடுங்கிய வாசலிலிருந்து தலைகீழான 'V' போன்று விரிந்ததாக இருபக்கமும் சற்றுத் தூரத்திற்குக் கற்களை அடுக்கி வைப்பார்கள். கடல் வெள்ளம் வரும் நேரங்களில் மீன்கள் கரையை நோக்கி வருவது வழமை. அந்நேரங்களில் கடலில் கணிசமான தூரம் நடந்துசென்று தடிகளால் கடல் நீரில் ஓங்கி அடித்து, அடித்து மீன்களைக் கற்கள் அடுக்கிய வட்டத்து வாசல்நோக்கி கலைத்து வருவார்கள். தடி அடிகளால் வெருட்சியடைந்த மீன்கள் பாதுகாப்புத் தேடிவந்து வட்டத்திற்குள் புகுந்ததுவிடும். உடனே வாசலை கல்லால் அடைத்துவிடுவார்கள். வட்டத்திற்குள் மீன்கள் சிறைப்பட்டுவிடும். இம் மீன்களை பின்னர் இலகுவாகப் பிடித்துவிடுவார்கள்.

காலப்போக்கில் தடிகளுடன், ஓலைகள் செருகிய கயிற்றை கடலில் சற்றுத்தூரம் கொண்டுசென்று நீருக்குள்போட்டு இருபக்கத்தாலும் இழுத்து வாசல்வரை மீன்களை கொண்டு வந்தார்கள். சற்று மேல்நோக்கிச்சென்று கயிற்றால் வலைபோன்று பின்னி கடலிலிட்டு இருபக்கமும் பிடித்து இழுத்து வாசல்வரை மீன்களை கொண்டு வந்தார்கள். இந்த வழிமுறையை ஒத்ததாகவே பாச்சுவலை, கொண்டடி, கரைவலை போன்ற தொழில்கள் காணப்படுகின்றன. இவை இவர்களது வளர்ச்சிப்படிகளின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடிப்பா? அல்லது, புகுத்தப்பட்டதா? என்பதுபற்றி போதிய தெளிவில்லை.

கயிற்றால் பின்னப்பட்ட வலைக்கு முனைகளில் கற்களைக்கட்டி மீன்களை இனங்கண்டு அவற்றைத் தேடி எறிவார்கள். மீன்களுக்கு மேலாக வலை விழுந்துவிடும். உடனே வலையுடன் சேர்த்து மீனையும் அழுத்திப் பிடித்துக்கொள்வார்கள். இதே தன்மையை ஒத்ததாக வீச்சுவலை காணப்படுகிறது. முனை மடிக்கப்பட்ட இரும்புக் கம்பியைக் கயிற்றின் முனையில்கட்டி, அதனில் மண் புழுக்களைக் குற்றி கடலில் எறிவார்கள். மண்புழுவை உண்பதற்காக மீன்கள் கம்பியைக் கௌவும். உடனே மடிக்கப்பட்ட கம்பி மீனின் வாயிற்குள் சிக்குண்டுவிடும். மீன் தப்பிக்கவே முடியாது. அதனை இழுத்து எடுத்துக்கொள்வார்கள். இந்த மீன்பிடி முறை 'தூண்டில்' என அழைக்கப்பட்டது. இது வருமானம் பெறக்கூடிய தொழிலாகக் கொள்ளப்படவில்லை. பொழுதுபோக்குத் தொழிலாகவே செய்யப்பட்டுவந்தது. காலப்போக்கில் பல மாற்றங்களுடன் வருமானத்தைத் தரக்கூடிய தொழிலாக ஏற்றம்பெற்றது.

ஆரம்ப தொழில்களின் காரணமாக குறிப்பிட்ட பெயர்களில் குழுமங்கள் அழைக்கப்பட்டாலும் இவர்கள் தொடர்ச்சியாக இதே தொழில்களை மட்டும் செய்துகொண்டிருக்கவில்லை. காலத்திற்கேற்ற வளர்ச்சிப் படிமாணங்களில் இணையான புதிய முறைகளைப் புகுத்தியும், மற்றும் புதிய தொழில்களை தேர்ந்தெடுத்தும் தொழில் செய்துவரலாயினர். அவ்வாறு ஆரம்பத்தில் தேர்வுசெய்யப்பட்ட தொழில்களில் பல்கிப்பெருகியிருப்பது சிறகுவலைத் தொழிலாகும். இதனிலும் மாறுபட்ட தொழிற்பிரிவுகள் உண்டு.

மீன்பிடித் தொழிலைக்கொண்டு குழுமங்கள் பிரிக்கப்பட்டாலும் குழுமங்களின் உறுப்பினர்கள் 75 அடிக்கும் மேற்பட்ட நீளங்களையுடைய பாரிய தோணிகள் (வத்தை) மூலம் மீன்பிடி அல்லாத பல தொழில்களையும் செய்து வந்துள்ளார்கள். (தோணி பற்றிய விளக்கத்தில் தொழில் விபரங்களை அறியலாம்) இம்மக்களது மூதாதையர் படைவீரர்களாக, கப்பலோட்டிகளாக, கடல்கடந்து வியாபாரம் செய்யும் வியாபாரிகளாக இருந்ததன் காரணமே பாரிய தோணிகளைக் கையாள்வது இவர்களுக்கு சிரமமாயிருக்கவில்லை. "ஆள் இளக்காரம் கண்டால் தோணி மிதந்தலைபாயும்" என்று இவர்கள் அடிக்கடி கூறும் பழமொழியாகும். தோணி செலுத்துவதில் உள்ள சிரமத்தை விளக்க வேறொன்றும் தேவையில்லை.

பாரிய தோணிகள் மூலம் மீன்பிடி அல்லாத தொழில்களும், சற்று சிறிய தோணிகள் மற்றும் நடுத்தர வள்ளங்கள் மூலம் மீன்பிடித் தொழில்களும் செய்யப்பட்டுவந்துள்ளன.

கொழும்புத்துறையில் பணம்படைத்தவராக இருந்த 'சங்கிலி வேலுப்பிள்ளை' என்பவர் தச்சுத்தொழிலை செய்பவராவர். குருநகரில் தோணிகளின் தேவை பெருகி வருவதை அறிந்து தாமே பல தோணிகளை உருவாக்கி மீன்பிடித் தொழிலுக்காக அவற்றை நாளாந்த குத்தகைக்கு வழங்கியிருந்தார் என்பதை அறியக்கூடியதாக இருக்கிறது.

இவர்கள் மீன்பிடித் தொழில், தோணிகளைச் செலுத்துதல் மட்டுமல்லாமல் முத்துக் குளிக்கும் தொழிலையும் செய்துவந்துள்ளார்கள். முத்துக் குளிப்பதற்கென கடல்கடந்து இந்தியாவிலுள்ள தூத்துக்குடிக்கே சென்றுள்ளார்கள். அங்கே முத்துக் குளித்ததால் போதிய வருவாய் கிடைத்ததும் சிலநாட்கள் இங்குவந்து தங்கிவிட்டு மீண்டும் தூத்துக்குடிக்கு முத்துக் குளிக்கச் செல்வதுண்டு. ஒருதடவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூத்துக்குடியில் தொற்றுநோய் உண்டாகி பலர் இறந்ததினால் அங்கு வேலைசெய்த குருநகர் தொழிலாளர் கால்நடையாக **'தீடை'** (இராமர் அணை) வழியாக வந்து குருநகரை அடைந்துள்ளார்கள். இவர்களில் ஒருவர் இராயப்பு என்பவராவர். இவர் நீக்கிலான் முடியப்புவின் பேரனாவர்.

இலங்கையில் முத்து விளைவதில் பேர்பெற்றது **'முத்துச் சிலாபம்'**. இங்கேயும் முத்துக் குளித்திருக்கிறார்கள். இவர்களில் பணம்படைத்த சிலர் பலரைக் கூலிக்கமர்த்தி முத்துக் குளிக்கும் தொழிலைச் செய்திருக்கிறார்கள். இதன் காரணமாக இவர்களில் பலருக்கு முத்துச் சிலாபத்தில் காணிகளும், தென்னந்தோட்டங்களும் இருந்திருக்கின்றன. தற்போது அங்கு வசிப்பவர்கள் பற்றிய முழுமையான விபரங்கள் தெரியவில்லை. ஆனால் வஸ்தியாம்பிள்ளை என்பவருக்குச் சொந்தமான காணியில் அவர் பரம்பரையைச் சேர்ந்த துரை என்பவர் வசித்து வருகிறார். பலரது நிலங்கள் அன்பளிப்பு மற்றும் விற்பனை செய்யப்பட்டும், பல தேடுவாரற்று கைவிடப்பட்டும் உள்ளமையையும் அறியக்கூடியதாக இருக்கின்றது.

1950 இல் பக்கிரி சின்னத்துரை அவர்களால் முதன் முதலாக சிறிய தோணிக்கு உள்ளிணை இயந்திரம் பொருத்தப்பட்டது. 1955 இல் தோணியின் அமைப்பிலிருந்து மாறுபட்ட அமைப்பைக்கொண்ட படகு ஸ்ரனிஸ்லோஸ் அவர்களால் முதன்முதலாக பயன்படுத்தப்பட்டது. புதிய அமைப்பிலான உள்ளிணை இயந்திரப் படகுகள் அதிகரித்ததுடன் நவீனத்துவமுடைய பல புதிய தொழில்கள் உருவாக்கப் படலாயிற்று. சில பழைய தொழில்களுக்கும், உருவான புதிய தொழில்களுக்கும் இயந்திரப் படகுகளே பயன்படுத்தப்பட்டன. நவீனத்துவமுடைய தொழில்கள் உருவானதன் காரணமாகவோ என்னவோ பாச்சுவலை, கொண்டடி போன்ற தொழில்கள் மரணித்தும், கரைவலை தனது முழுமையை இழந்தும் நிற்கின்றது. சிறிய தோணிகள் தமது உருவ அமைப்பை இழந்தும்விட்டன. 70 இற்கும் மேற்பட்ட பாரிய தோணிகள்வரை பயன்படுத்தியிருந்த போதும் இயந்திரப்படகுகளின் அதிகரிப்பு, பாரவூர்திகளின் போக்குவரத்து போன்றவற்றால் முடக்கநிலை அடைந்த தோணிகள் குருநகர், காங்கேசன்துறை போன்ற துறைகளுக்கு கப்பலால் கொண்டுவரப்படும் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. போதிய பாவனையற்ற நிலை, பராமரிப்பிற்கு வேண்டிய அதிக பணம், மற்றும் இயற்கையின் தாக்கங்களுக்குள் சிக்குண்டதாலும் அழிவுற்று 1984 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தோணிகளின் பாவனை முற்றாக நிறுத்தப்பட்டன. அனைத்தும் அழிவுற்றுவிட்டது.


குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தின் கணக்கெடுப்பின்படி (தோணிகள் தவிர்த்து) 1990 இல் மூன்றரை தொன் உள்ளிணை இயந்திரப்படகுகள் 291, 17 அடி வெளியிணை இயந்திர நார்இழைப் படகுகள் 82, 17 அடி மர வள்ளங்கள் 129 போன்றவை பாவனையில் இருந்திருக்கின்றன. சிறகுவலை கடற்றொழிலாளர் சங்கத்தின் தகவலின்படி 17 அடி மற்றும் சிறிய மர வள்ளங்கள் 300 இற்கு மேற்பட இருந்துள்ளது. வள்ள உரிமையாளர்கள் தமது அஜாக்கிரதையால் புதிய பதிவுகள் மற்றும் பதிவு மாற்றங்களை கடற்றொழில் திணைக்களத்தில் செய்துகொள்ளாமையால் அவை கணக்கிலிருந்து தவறிவிட்டன என்கிறார்கள். இதன் உண்மை நிலையை என்னால் உணர முடிகின்றது. ஏனென்றால் நான் 1975 - 1980 காலப்பகுதியில் சிறகுவலை கடற்றொழிலாளர் சங்கத்தின் செயலாளராக இருந்திருக்கிறேன். 1000 இற்கு மேற்பட்ட சிறகுவலைத் தொழிலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவர்களாக இருந்தவர்கள். எனவே 300 வள்ளங்களைவிட அதிகமாகவே பயன்படுத்தப்பட்டிருக்கவேண்டும். யுத்த நிலமை காரணமாக மர வள்ளங்களில் சிலவற்றைத்தவிர ஏனையவை முற்றாகவே அழிக்கப்பட்டுவிட்டது. அதனால் முழுமையான விபரங்களை பெறமுடியவில்லை. தற்போது புதிதாக கொள்வனவு செய்யப்பட்டே தொழில்கள் நடைபெறுகின்றது. ஆதுவும் மரத்தால் செய்யப்பட்டவைகளல்ல நாரிழையால் செய்யப்பட்டவைகளேயாகும்.

ஞாயிற்றுக்கிழமை, விசேட தினம், கோவிற் திருநாள் போன்ற நாட்களில் தொழில்களைக் **'கட்டி'** தொழிலாளர்களுக்கு விடுமுறை கொடுப்பது வழமை. தொழிலுக்கு செல்லாது தோணியை துறையில் கட்டிவைப்பதையே **'தொழில் கட்டுதல்'** என்பர். இந்நாட்களில் எவரும் தொழிலுக்குச் செல்வதில்லை. மீறிச் செல்வது குற்றமாகக் கருதப்பட்டது. பல்லினத் தொழில்களின் பெருக்கம், போதிய வருமானமின்மை, இந்திய மீனவர்களின் தொழில் இடையூறு போன்றவற்றால் இந்த நடைமுறை இப்போது கடைப்பிடிக்கப்படுவதில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. கடற்கலம்

### தோணி

ஆரம்பத்தில் தொழில்சார்ந்த கடற்கலமாக 'தோணி' பயன்படுத்தப்பட்டுள்ளது. தோணியானது 50 முதல் 100 அடி வரையிலான நீளங்களைக் கொண்டவையாக இருக்கும். கடற் கலங்களைப் பொறுத்தவரை கண்டிப்பாக நீளத்திற்கு ஏற்ற அகலம் தேவை அன்றேல் கடலில் பயன்படுத்த முடியாது. இதனால் நீளத்தை மட்டுமே குறிப்பிடுவது வழமை. தோணியை உருவாக்குவதற்கு வேம்பு. தேக்கு, சமண்டலை, இலுப்பை போன்ற மரங்களைப் பயன்படுத்துவார்கள். வேம்பைக்கொண்டு **'வங்கு'**கள் செய்வார்கள். வங்கு தோணியின் உள்பக்கம் எலும்புக்கூடுபோல் பொருத்துவது. இவை **'U', 'V'** அமைப்புகளில் இருக்கும். மனிதனுக்கு முள்ளந்தண்டைப்போல் தோணிக்கு **'ஏரா'** உண்டு. போதிய கனத்தையுடைய நீண்ட சதுர மரக்குற்றியாக இருக்கும். இதனைக் கீழே வைத்து இவற்றின்மீது வடிவமைப்பிற்கேற்ப வங்குகளைப் பொருத்துவார்கள். மேற்கொண்டு வங்கைச்சுற்றி பலகைகளால் மூடி, இறுக்கி, நெருக்கிப் பொருத்தி விடுவார்கள். நித்தமும் தண்ணீரில் நனையும் பகுதிக்கு (கீழ்ப்பக்கம்) இலுப்பை மரப்பலகையும், ஏனையவற்றிற்கு தேக்கு, சமண்டலை மரங்களின் பலகையையும் பொருத்துவார்கள். ஒவ்வொன்றிற்கும் சரியான அளவுத்திட்டம், அமைப்புமுறை உண்டு.

தோணியின் முன்பக்கம் உயர்ந்து கூராக அமைந்திருக்கும். இது **'அணியம்'** எனப்படும். காற்றையும், கடலையும் கிழித்துச் செல்வதற்கு ஏற்ற தன்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுங்கியும், கூராகவும், உயரமாகவும் இருக்கும். கடலின் தாக்கத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் பலமானதாகவும் இருக்கும். ஏராவிலிருந்து உப முள்ளந்தண்டைப்போல் அணியத்திற்கான **'அணியக்கட்டை'** பொருத்தப்பட்டிருக்கும். அணியக் கட்டையிலும் அமைப்பிற்கேற்ப வங்குகள் பொருத்துவார்கள். அனைத்து வங்குகளையும் மூடி அணியக் கட்டைவரை பலகைகள் பொருத்தப்படும்.

அணியத்தால் கிழிக்கப்பட்ட கடல்நீர் பின்னால் ஒடுங்கிச் செல்வதற்கு ஏற்ற தன்மையில் ஒடுங்கியும், கூராகவும், சற்று உயரமாகவும் பின்பக்கம் அமைந்திருக்கும். இது **'கடையால்'** எனப்படும். அணியத்தைப்போன்று **'கடையால் கட்டை'**யும், வடிவமைப்பும் அமைந்திருந்தாலும், உயரம் அணியத்தைவிட குறைவாகவும், மையப்பகுதியைவிட சற்று உயரமாக இருக்கும்.

அணியம், கடையாலுக்கு இடைப்பட்ட பகுதி அதாவது மையப்பகுதி தோணியின் நீளத்திற்கேற்ற தாக்குப்பிடிக்கக்கூடியவாறு அகலமாக இருக்கும். உயரே நின்று பார்த்தால் நீள்வட்டமாக காணப்படும். அணியம் முதல் கடையால் வரை வங்கின் மேற்பகுதியின் உட்புற விளிம்பில் அகலம் குறைந்த பலகையும், வெளிப்புற விளிம்பில் அதாவது வெளிப் பலகையின் விளிம்பில் அகலம் குறைந்ததும் கனம் கூடியதுமான பலகையைப் பொருத்துவார்கள். இதனை **'வெளி ஒட்டம்' 'உள் ஒட்டம்'** என அழைப்பர். இந்த உள், வெளி ஒட்டங்களுக்கு இடைப்பட்ட மேற்பகுதி **'தளம்'** எனப்படும். இந்தத் தளத்தின்மீது நடந்து அணியத்திலிருந்து கடையால்வரை சென்றுவரமுடியும். இதனை ஒரு பாதையாகவே பயன்படுத்துவர். பல தேவைகளுக்கும் இந்தத் தளம் பயன்படுவதனால் இது முக்கியத்துவம் பெறுகிறது.

## சுக்கான்



தோணியை சீரிய முறையில் செலுத்துவதற்கு உயிர்நாடியாக இருப்பது **'சுக்கான்'** ஆகும். இது பலகையாலும், மரச் சட்டங்களாலும் செய்யப்படுகிறது. தோணியின் மேற்தளத்திலிருந்து ஏரா வரை நீளமானதாகவும், கடையாலின் வளைவிற்கு ஏற்ப உட்புறம் வளைந்தும் இருக்கும். வலம், இடமாகத் திருப்பக்கூடிய வகையில், கடையால் கட்டையுடன் சுக்கானின் வளைந்த பக்கம் பொருத்தப்படும். இவ்வாறு பொருத்துவதற்கு கடையால் கட்டையின் மேல், கீழ் பகுதிகளில் இரும்பிலான இரண்டு கொழுக்கிகள் பயன்படுத்தப்படும். தண்ணீருக்குள் இருக்கும் சுக்கானின் பகுதி அகலமாகவும், உயர்ந்து வர வர சற்று குறுகியதாகவும் காணப்படும். தோணியின் அளவுடன் ஒப்பிடும்போது மிகச் சிறிதுதான். ஆனால், தோணியை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கும், விரும்பிய இடத்திற்கு செலுத்துவதற்கும் மிகவும் முக்கியமானதொன்றாகும். தோணியின் கடையால் பக்கம் ஒடுங்கி இருப்பதும் சுக்கானின் அசைவுக்கு இசைந்து அணியத்தைத் திருப்பி சீரிய முறையில் செலுத்துவதற்கு காரணியாக அமைகின்றது.

சுக்கானின் மேற்பக்க மெலிந்த பகுதி தோணியின் தளத்தைவிட ஒரு முளம் உயரமாக இருக்கும். அதில் பெரிய துவாரம் இருக்கும். அந்தத் துவாரத்திற்குள் பலமானதும் ஆறு அடி நீளமானதுமான தடி இடப்படும். இதனை **'கானாத்தடி'** என அழைப்பர். கானாத்தடியானது அரை அடி விட்டமுடையதும், துவாரத்திலிடும் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டமின்றி இரண்டு பக்கத்தாலும் ஒடுக்கப்பட்டதாகவும் இருக்கும். இந்தத் தடியை அசைக்கும்போது சுக்கானை திருப்பலாம். சுக்கானை அசைக்கும்போது அணியத்தைத் திருப்பலாம்.

அணியம் திரும்பவேண்டிய (செல்லவேண்டிய) திசைக்கு எதிர்ப்பக்கம் கானாத்தடியின் கைப்பிடி முனையை தள்ளும்போது அதற்கேற்றாற்போல் எதிராக சுக்கான் திரும்பும். அப்போது அணியமும் உரிய திசைநோக்கித் திரும்பும். சுக்கான் சிறிதேயானாலும் எந்தப் பாரிய தோணியையும் இலகுவாய் திசை திருப்ப உதவுகிறது. சுக்கானைத் திருப்புகின்ற அளவுக்கேற்றவாறேதான் அணியமும் அடிபணிந்து திரும்பும்.

## பாய்மரம்

அணியத்திலிருந்து தோணியின் நீளத்தில் மூன்றிலொரு பகுதி அளவில் குறுக்கே இரண்டுபக்க தளங்களையும் இணைக்கும்வண்ணம் கனமான, அகலமான பலகை இடப்பட்டிருக்கும். அப்பலகையில் மத்தியில் பெரியதொரு துவாரம் இருக்கும். இந்தத் துவாரத்தின் ஊடாக 40 அடிக்கும் உயரமான மரம் நிறுத்தப்படும். இம்மரத்தின் அடிப்பாகம் தோணியின் கீழ்ப்பகுதியிலிருக்கும் வங்கின் மேற்பகுதியில் தரித்து நிற்பதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டிருக்கும். இவ்வாறு இடப்படும் உயரமான மரமே **'பாய்மரம்'** ஆகும். இம்மரத்தில் தோணியைச் செலுத்துவதற்கு வேண்டிய பாயைக் கட்டுவதனால் இது பாய்மரம் எனப்படுகிறது.

இப்பாய்மரத்தின் நுனியில் இரண்டு உருளைகளையுடைய கப்பி கட்டப்பட்டிருக்கும். பாய்மரம் இடப்பட்டி ருக்கும் குறுக்குப் பலகைக்கு சற்று மேலே பாய்மரத்தில் (அடிப்பாகம்) ஒற்றை உருளையுடைய கப்பி கட்டப்பட்டிருக்கும். மேல் கப்பியில் இரண்டு அடுக்கும், கீழ்க் கப்பியில் ஒற்றை அடுக்குமாக இரண்டு கப்பிகளும் மொத்தமான கயிற்றால் இணைக்கப்பட்டிருக்கும். இக்கயிற்றை **'ஆஞ்சான் கயிறு'** என்பர். மேல் கப்பியிலிருந்து வருகின்ற இரண்டு கயிற்று முனைகளில் ஒன்றில் பாயின் மேற்பகுதியில் இணைக்கப்பட்டுள்ள குறுக்குத்தடியில் கட்டப்படும். இந்தக் குறுக்குத்தடியை **'பருமல்'** என அழைப்பர். பருமலில் ஆஞ்சாங் கயிற்றைக் கட்டும்போது பருமலின் மூன்றிலொரு பகுதி அணியப் பக்கம் வரக்கூடிய தன்மையில் கட்டப்படும். பருமலில் கயிற்றின் ஒரு முனையைக் கட்டியபின்னர் கயிற்றின் மறுமுனையைப் பிடித்து இழுப்பர். பருமல் பாய்மரத்தின் முனைக்கு சென்றடையும்வரை இழுத்தபின்னர் கயிற்றை எதிர்ப்புற ஒட்டத்தில் கட்டிவிடுவார்கள். காற்று வேகமாக வீசுகின்றபோது பாய் காற்றின் அமுக்கத்தால் தோணியைக் **'கெழிய'**வைக்கும். (காற்றின் சாய்பக்கத்தால் தோணியின் பக்கம் கடல்நோக்கி அமிழ்வது) இவ்வாறான கெழிவிற்கு எதிராகவும், பாய்மரத்திற்குப் பொறுப்பாகவும் காற்றின் எதிர்த்திசையில் ஆஞ்சான் கயிற்றை இழுத்துக் கட்டுவார்கள். இதனை அவதானமாக மேற்கொள்ள வேண்டும். அன்றேல் காற்றின் அமுக்கத்தால் பாயும், பாய்மரமும் கடல்நோக்கி சரிய தோணி கடலில் மூழ்க நேரிடும். பாயை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர இழுக்கும்போது அதனை ஒடுக்கி, சுருக்கி வைத்திருக்கவேண்டும். அன்றேல் உயர இழுக்கமுடியாது. இங்கே **'பாய்'** என்று பொதுவாகக் குறிப்பிட்டாலும். இது சிறப்பாக **'கூறப்பாய்'** என்றே அழைக்கப்படுகிறது.

தளத்திலிருந்து பாய்மர முனைவரை உயர்ந்து நிற்கும் சுருங்கிய நிலையில் பிடித்திருந்த பாயின் கீழ்ப்பக்கத்தை விரித்து முன்பக்கத் தலைப்பை அணியத்தில் கட்டுவதற்கு உரிய இடத்திலும், பின்பக்க தலைப்பை, அது வரக்கூடிய இடம்வரை (கிட்டத்தட்ட மத்திக்கும், கடையாலுக்கும் இடையில்) இழுத்தும் கட்டவேண்டும். இப்போது, விரிக்கப்பட்டுள்ள முழுமையான பாயைப் பார்க்கமுடியும். மேற்கொண்டு பாயின்மீது அழுத்தும் காற்றின் வேகத்திற்கு ஏற்றாற்போல் தோணி பயணிக்கத் தொடங்கிவிடும்.

கட்டப்பட்டிருக்கும் பாய், அணியப்பக்கம் உள்ள முன்பகுதி பாய்மரத்தின் முனையைவிட மேலே உயர்ந்து காணப்படும். பாயின் உயரப்பக்க முனையில் (பருமலும், பாயும் இணைக்கப்பட்டுள்ள அணியப்பக்க முனை) கயிறு கட்டியிருப்பார்கள். இதனை **'கடைப்பாய்க்கயிறு'** என்பர்.

காற்று முழுமையாக பாயை அழுத்தாமல் விலகிப்போகும் திசையில் படகு செலுத்தவேண்டிய தேவையேற்பட்டால், கடைப்பாய்க் கயிற்றை இழுக்க வேண்டும். இதனை இழுப்பதன்மூலம் தோணிக்குக் குறுக்காக பாயின் மேற்பக்க பகுதியைக் கொண்டுவரமுடியும். இதன்மூலம் காற்றின் அழுத்தத்தை பாயில் திணிக்கமுடியம். தோணி காற்றின் திசைக்கு மாறாக செல்லவேண்டியேற்பட்டால். அல்லது காற்று தன்திசையை மாற்றிக்கொண்டால் பாயை மறுபக்கம் மாற்றுவதற்கு இந்தக் கடைப்பாய்க்கயிறு பெரிதும் உதவியாக இருக்கும். கடைப்பாய்கயிற்று முனைக்கும், அணியத்தில் கட்டப்பட்டுள்ள கீழ்ப்பக்க பாயின் முனைக்கும் இடையில் உள்ள விளிம்பில் சுருக்கு வளையம் வைக்கப்பட்டிருக்கும். இந்த வளையத்தில் நீண்டதொரு தடியைப் புகுத்தி பாயை விரித்தும் காற்றின் அழுத்தத்தை பாயில் திணிக்கமுடியம். இந்தத் தடியைப் **'பாவல்'** என அழைப்பர்.

சாதாரண வேகத்தில் காற்று வீசும்போது தூர இடங்களுக்கு விரைவாகச் செல்லவேண்டிய தேவை ஏற்படுமிடத்து, வழமையான பெரிய பாயுடன் சேர்த்து சிறிய பாயைப் பயன்படுத்துவார்கள். இந்தப் பாய் காற்றின் திசைக்கு ஏற்ப அணியப் பக்கம் அல்லது கடையால் பக்கம் கட்டுவார்கள்.

பிரயாணத்திற்கு காற்றின் வேகம் போதாதிருக்குமாயின் பாயை இறக்கிவிட்டு **'மரக்கோல்'** இனால் **'தாங்கி'** (கடல் நிலத்தில் உந்தல்) செல்வார்கள். மரக்கோல் இரண்டு தரங்களில் உண்டு. ஒன்று இருபது அடி வரையுள்ள சாதாரண மரக்கோல். மற்றையது, 35 அடிக்கு மேற்பட்ட **'வலிந்த மரக்கோல்'**. இரண்டு மரக்கோல்கள் உயரமாகப் பிணைக்கப்பட்டிருப்பதே வலிந்த மரக்கொலாகும்.

தோணியில் பயணிப்போர் இரவில் அரிக்கன் லாந்தரை பயன்படுத்துவார்கள். பின்னாளில் **'லோமியோ'** என்னும் விளக்கைப் பயன்படுத்தினார்கள். இந்த விளக்கு பூக்கன்றுகளுக்குத் தண்ணீரூற்றும் பாத்திரத்தைப்போன்ற அமைப்பு உடையது. விளக்கின் ஒருபக்க கீழ்ப்பகுதியிருந்து சரிந்து மேல்நோக்கிச் செல்லும் குழாயில் பல நூறு இழைகளிலாலான திரி இடப்பட்டிருக்கும். எந்தக் காற்றுக்கும் அணையாது எரியக்கூடிய தன்மையைக்கொண்டது. இதற்கூா டீசல் எண்ணெய் பாவனையில் இருந்ததை நான் அறிவேன். அதற்கு முன்னா் பாவனையில இருந்த எண்ணெய் பற்றிய விபரத்தை அறிய முடியவில்லை. உணவு சமைப்பதற்கு ஒரு மரப்பெட்டியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதியளவுக்கு மண் போடப்பட்டு மண்ணுக்கு மேலே அடுப்பு வைத்திருப்பார்கள். இதனை **'சுடுவான்பெட்டி'** என அழைப்பர். அனைத்துச் சமையலும் இதனில் மேற்கொள்ளப்படும்.

## சவள்



தோணி சென்றுகொண்டிருக்கும்போது காற்றின் பக்கசார்பான அழுத்தத்தி னால் அல்லது குறுக்கான நீரோட்டத்தின் அழுத்தத்தால் தோணி **'வழிந்து'** செல்வதற்கு வாய்ப்புண்டு. (காற்றின், நீரோட்டத்தின் சாய்புக்கு ஏற்றவாறு தோணி பக்கவாட்டில் அகன்று செல்வது.) இதனால் குறிப்பிட்ட இடத்திற்கு நேர்த்திசையில் செல்லாமல் பிறை வடிவில் அகன்றுதான் செல்லமுடியும். இவ்வாறு வழியாமல் தடுப்பதற்கு, நீண்ட பலகையைப் பயன்படுத்துவார்கள். அதனைச் **'சவள்'** என அழைப்பர். சவள் 10 அடி நீளமும், மூன்று அடி அகலமும் கொண்டதாகவும், முனைகள் வட்டமாக்கப்பட்டதாகவும் (400 மீற்றர் ஓட்ட மைதானம் போன்ற அமைப்பு) உள்ள கனமான பலகையாகும்.

தோணி வழிந்துபோகின்ற பக்கமாக தோணியின் மத்தியில் வெளிப் பலகையில் மருவியதாகவும், செங்குத்தாகவும் கடலுக்குள் சவளை இறக்கிக் கட்டுவார்கள். காற்றுக்கும், நீரோட்டத்திற்கும் எதிராகவும், கடல்நீரை குறுக்காக ஊடறுத்தும் சவள் கட்டப்படுவதால், அது தோணி வழிந்துசெல்லும் வேகத்தைக் கட்டுப்படுத்துகிறது. வேகமான காற்று அல்லது வேகமான நீரோட்டமானால் வளியும் தன்மையை பூரணமாகக் கட்டுப்படுத்த முடியாது. வளிந்து செல்லும் அகலத்தைக் குறைக்கமுடியும்.

## கூறப்பாய்

சாதாரண சிறிய பாய்களுக்கு காரிக்கன் துணி பயன்படுத்துவார்கள். (தற்போது விற்பனையிலுள்ள காரிக்கன் போலன்று சற்றுத் தடிப்புக் கூடியது.) ஆனால் தோணிக்கு உரிய பாய்க்கு இரட்டிப்புத் தடிப்பையுடைய துணியையே பயன்படுத்துவார்கள். இந்தச் சீலையை **'இரட்டு'** என அழைப்பர்.

தோணியின் அளவுக்கேற்ப கூறப்பாயின் அளவுகள் நிர்ணயிக்கப்படுகிறது. பாயின் கீழ்ப்பக்கம் சமாந்தரமாகவும் மேற்பக்கத்தில் ஒரு முனை உயர்ந்ததாகவும் அமையக்கூடியவாறு தைக்கப்படுகிறதது. சீலையின் அகலம் மூன்று அடியாகும். ஆனால் பாய் நாற்பது அடிவரை அகலமாக இருக்கும். எனவே சீலையை பொருத்தவேண்டும். சீலை பொருத்தப்படும்போது இரண்டு பொருத்து முனைகளுக்கும் இடையில் விசேடமாக திரிக்கப்பட்ட முறுக்குக் கயிற்றையும் வைத்து சேர்த்து இணைப்பார்கள். இந்தக் கயிற்றை **'நரம்பு'** என்பர். இந்த நரம்புகளால்தான் சீலை காப்பாற்றப்படுகிறது. காற்றின் வீச்சைத் தடுத்து தோணியை செலுத்தும்போது காற்றின் தாக்கத்தை பாயின் நரம்புகள் தாங்கி துணிக்கு வேண்டிய பாதுகாப்பைக் கொடுக்கின்றது.

நரம்புகள் சீலையின் இணைப்புகளில் மட்டுமன்றி இருபக்க கரைகளிலும் இருக்கும். இவை சற்று மொத்தமான கயிறாக இருக்கும். இந்த நரம்பில்தான் சுருக்கு வளையம் இட்டு பாவல் தடி புகுத்தப்படுகிறது. பாயின் கீழ்ப்பக்கத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுக்காக மொத்தமான கயிறு இருக்கும். இக் கயிற்றில் நரம்புகளின் கீழ் முனைகள் அனைத்தும் கட்டப்பட்டிருக்கும். இக்கயிறுதான் பாய் ஏற்றப்பட்டபின்னர் அணியத்திலும், கடையாலை அண்மியதாகவும் இழுத்துக் கட்டப்படுகிறது. கீழ்ப்பக்கம்போன்று மேற்பக்கமும் குறுக்குக் கயிறு இருக்கும். இக்கயிற்றில் நரம்பின் மேல் முனை கட்டப்படுவதுடன் பாவல் தடியும் சேர்த்தும் கட்டப்படுகிறது.

அதிவேகமான காற்று வீசும் வேளைகளில் முழுமையான பாயை பயன்படுத்தினால் தோணி கெழிந்து கவிழ்வதற்குச் சாத்தியக்கூறுகள் உண்டு. இத்தகைய சந்தர்ப்பங்களில் பாயை முனைவரை கட்டாமல் மத்திவரை உயர்த்திக் கட்டுவதற்கு ஏற்றவாறு சுருக்கிக் கட்டக்கூடிய கயிறு ஒவ்வொரு நரம்புகளிலும் விடப்பட்டிருக்கும். இதனை **'தரித்துக்கட்டும் கயிறு'** என்பர்.

தோணி செலுத்தப்படும்போது பாய் உலர்ந்திருந்தால் சீலையின் நூலடுக்குகளில் உள்ள இடைவெளியால் காற்று **'அரிந்து'** செல்ல (வெளியேற) வாய்ப்புண்டு. இதனால் காற்றின் முழுமையான அழுத்தம் பாய்க்குக் கிடைக்காமல் போய்விடும்.. இவ்வாறான சந்தற்பங்களில் கடல்நீரை அள்ளி ஊற்றி பாயை முற்றாக நனைத்து ஈரமாக்குவார்கள். அவ்வாறு கடல்நீரை அள்ளி ஊற்றுவதற்கு பாவிக்கப்படுவது **'யாழி'** ஆகும். இந்த யாழி **'மாவிலங்கு'** மரத்தில் செய்யப்படுகிறது. கிணற்றில் தண்ணீர் அள்ளப் பாவிக்கப்படும் பட்டையை ஓரளவு ஒத்ததாக தோற்றமளிக்கும். யாழியின்மூலம் தளத்திலிருந்து குனிந்து மூன்று லிற்றர் நீர வரை அள்ளமுடியும். அவ்வாறு அள்ளிய நீரை தளத்திலிருந்தவாறே பாயை நோக்கி பலமுறை ஊற்றி பாயை முற்றாக நனைத்துவிடுவார்கள். இதற்குப் பலமும், அனுபவமும் தேவை. நூலிடுக்குகளை நீர் நிரப்பிக்கொண்டதும் தோணி மேலும் வேகமாகச் செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. கலங்களின் பயன்பாடுகள்

## தோணி

ஆரம்ப நிலையில் தோணிகள் மட்டுமே பயன் படுத்தலுகுரியதாய் இருந்தமையால் அதன் தேவை பெரிதும் அவசியமாக இருந்து. அதனால் தேவைக்குரிய அனைத்து நிலைகளுக்கும் ஈடுகொடுப்பதற்கு ஏற்றவாறு தோணிகளை உருவாக்கவேண்டிய கட்டாயத்தில் இருந்தார்கள். அவ்வாறு உருவாக்கப்பட்ட தோணிகளின் பயன்பாடு பின்வருமாறு இருந்தது.

◆ மீன்பிடித் தொழில் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது.

◆ வன்னிப் பகுதியிலிருந்து தளபாடங்கள், வீட்டுத் தேவைகள் போன்றவற்றிற்கு பயன்படுத்தும் மரங்கள், பலகைகள், மற்றும் விறகுகள் போன்றவற்றை ஏற்றிவர பயன்படுத்தப்பட்டது.

◆ தேவன்பிட்டியிலிருந்து **'பெரிய பாலியாற்று'** மணலும், கௌதாரிமுனைப் பகுதியிலிருந்து **'சிறிய பாலியாற்று'** மணலும் ஏற்றிவர பயன்படுத்தப்பட்டது. இம்மணல்கள் தூய்மையானவை, தரமானவையானதால் பலரும் விரும்பிப் பயன்படுத்தினார்கள். மக்களின் தேவையில் பெரும்பகுதியை ஈடுசெய்தது என்றே சொல்லலாம்.

◆ மன்னார், புத்தளம் போன்ற தூர இடங்களுக்கு உணவுப்பொருட்கள், மற்றும் வர்த்தகப் பொருட்களை ஏற்றிச்செல்வதற்கும், ஏற்றிவருவதற்கும் பயன்படுத்தப்பட்டது.

◆ இந்தியாவுக்கு வர்த்தகப் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கும், ஏற்றி வருவதற்கும் பயன்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ வெளிநாடுகளிலிருந்து பொருட்களை ஏற்றிக்கொண்டுவரும் கப்பல்கள், இந்தியாவிலிருந்து வரும் கப்பலையொத்த பாரிய டிங்கிகள் போன்றவை கரைக்கு வரக்கூடிய ஆழம் வடகடல் பக்கமாக இல்லை. கரைக்கு வரமுடியாமல் தூரத்தில் ஆழமான பகுதியில் நிற்கும் இவற்றிலுள்ள பொருட்களை ஏற்றிக் கரைக்குக் கொண்டுவருவதற்குப் பயன்படுத்தப்பட்டது.

◆ யாழ்ப்பாணத்தை சூழவுள்ள தீவுகளில் இருக்கின்ற ஆலயங்கள் மற்றும், கடல்கடந்து செல்லவேண்டிய பல இடங்களிற்கு மக்கள் சென்றுவரவும். அவ்விடங்களுக்கு தேவையான குடிநீர் மற்றும் பிற பொருட்களை கொண்டு செல்வதற்கும் பயன்படுத்தப்பட்டது.


## வள்ளம்



தோணியின் அமைப்பை ஒத்ததாகவே வள்ளம் இருக்கும் ஆனால சிறியது. 12 அடிமுதல் 25 அடிவரை நீளமுள்ளதாகவே இருக்கும். தோணியின் பாரிய பயன்பாடுகளை நீக்கிப்பார்த்தால் ஏனைய நடைமுறைகள் இதற்கும்பொருந்தும். இதனால் சுமக்கக்கூடிய சுமை, பிரயாணம் செய்யக்கூடிய ஆட்கள் சொற்பமாக இருப்பதால் அதற்குரிய வகையில் சிறு தொழில்களுக்குப் பாவிக்கப்பட்டது. விரைவாக சென்றுவரவும், இலகுவான பயன்படுத்தலுக்கும் ஏற்றது.

தோணிகள் பயன்படுத்தப்பட்ட சமகாலத்தில் இச் சிறிய வள்ளங்களும் இருந்ததா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. ஆரம்பத் தொழில்களில் ஒன்றான 'கொண்டடி'க்கும், மற்றும், 'தூண்டில்', 'சிறகுவலை' போன்ற தொழில்களுக்கும் வள்ளங்களே பயன்படுத்தப்படுகின்றன. 'கொண்டடி'யில் ஏழு பேர்கள் மட்டுமே தொழில் செய்வதால் தோணிகளைப் பயன்படுத்தியிருக்கமாட்டார்கள். எனவே தோணிகளின் சமகாலத்தில் வள்ளங்களும் உருவாக்கப்பட்டிருக்கவேண்டும். அல்லது ஆரம்பத் தொழிலான கொண்டடி, பல தொழிலாளர்களைக்கொண்டு தோணிகளில் செய்யக்கூடிய தொழிலாக இருந்து பின்நாளில் சிறுதொழிலாக மாற்றமடைந்திருக்க வேண்டும்.

இந்தியாவிலிருந்தே வள்ளங்கள் இங்கு கொண்டுவரப்பட்டதாக அறியக்கூடியதாக இருக்கிறது. அவ்வள்ளங்களை **'பீடி வள்ளம்'** என அழைத்தார்கள். சமகாலத்தில் பலர் இந்தியா சென்று தமக்குத் தேவையான மற்றும் விற்பனைக்காக **'ஆசிநீர்'** மரப் பலகையில் வள்ளங்களைச் செய்து இங்கு கொண்டுவந்தமையை சிறுவயதில் பல முதியவர்கள் வாயிலாக அறிந்திருக்கிறேன். எனது தந்தையாரும் அடிக்கடி கூறுவார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படகு

சற்று சிறிதான தோணிகள் மீன்பிடித் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டன. மீன்பிடித் தொழிலுக்குச் செல்லும் தோணிகள் 'படகு' என அழைக்கப்பட்டன. கரைவலைத் தொழிலையும் 'படகு' என்றும் அழைப்பர். இன்றும் பல முதியவர்கள் "படகுக்கு போகையில்லையா?, படகு வந்திற்றா?" என்று கேட்பதுமுண்டு. தோணியின் பாரிய பயன்பாடுகளை நீக்கிப்பார்த்தால் ஏனைய நடைமுறைகள் இதற்கும் பொருத்தமாக அமையும்.

தொழில் உபகரணங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக தோணிகள் சுமக்கவேண்டிய சுமை குறைவானதாக மாற்றம் பெற்றது. இதனால் மீன்பிடிக்கு தோணிகளைப் பயன்படுத்தவேண்டிய தேவை அருகிவர, அவை சரிபாதி தோணிகளாக அதாவது படகுகளாக மாற்றம் பெற்றன. படகின் நீளம் 30 முதல் 45 அடிகள் வரை காணப்பட்டது. இதனால் தொழிலாளர்களது வேலைப்பழு குறைந்து காணப்பட்டது. தோணியைவிட விரைவாக சென்றுவரவும், பயன்படுத்தலுக்கு இலகுவாகவும் அமைந்திருந்து.

1950 இல் பக்கிரி சின்னத்துரை என்பவரால் முதன்முதலாக படகுக்கு உள்ளிணை இயந்திரம் பொருத்தப்பட்டது. இந்த இயந்திரம் 'டீசல்' எண்ணெயில் இயங்கக்கூடியது. 'பட்டாஸ்' என அழைக்கப்பட்ட ஆறு அங்குலம் நீளமான திரியை இயந்திரத்தின் குறிப்பிட்ட பகுதியில் புகுத்தி அதனை எரியவைத்து, இயந்திரத்திற்கு சூடேற்றிய பின்னரே இயந்திரத்தை இயங்கவைக்கமுடியும். இந்த இயந்திரம் வெள்ளை இனத்தவரால் அறிமுகத்திற்காக அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகும். இதனைத் தொடர்ந்து சாதாரண முறையில் 'பெற்றோல்' இல் இயங்கக்கூடிய மூன்று இந்திரங்களும், 'டீசல்' இல் இயங்கக்கூடிய ஒரு இயந்திரமும் பொருத்தப்பட்ட படகுகள் பாவனையில் இருந்துள்ளன.



1956 இல் தோணியின் அமைப்பிலிருந்து மாறுபட்ட அமைப்பை அதாவது கடையாலின் மேற்பகுதி கூம்பியதாக அல்லாமல் குறுக்கே வெட்டப்பட்டதான அமைப்பைக் கொண்டதுமான படகு பாவனைக்கு வந்தது. இந்தப் படகு 3½ தொன் படகு என அழைப்படும். 'பீடி சப்பி' என அழைக்கப்பட்ட, வெள்ளை இனத்தைச்சேர்ந்த மேல்நாட்டவர் ஒருவரினால் இரும்பும், கனமான தகரத்தினால் செய்யப்பட்டதும், சாதாரண முறையில் டீசலில் இயக்கக்கூடியதுமான உள்ளிணை இயந்திரத்தையுடைய இரண்டு படகுகள் அறிமுகத்திற்காகவும், பயிற்சி அளிப்பதற்காகவும் குருநகருக்குக் கொண்டுவரப்பட்டது. இதற்காக முன்னின்றுழைத்தவர் குருநகர் 6 ஆம் குறுக்குத தெருவில் வசித்த திரு. சேவியர் அவர்களாவர். இவர் ஜப்பானில் பயிற்சி பெற்றவர். இயந்திரப் படகைப் பயன்படுத்தி செய்யக்கூடிய 'பேசியன் வலை'த்தொழில் (சுருக்குமடி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகப்படுத்தப்பட்டதுடன் பயிற்சிகளும் அளிக்கப்பட்டது. பயிற்சி முடிந்து திரும்பும்போது ஒரு படகு, பேசியன் வலை ஆகியவற்றை ஸ்ரனிஸ்லோஸ் என்பருக்கு விற்பனைசெய்துவிட்டு மறு படகுடன் பீடி சப்பி திரும்பிச் சென்றார்.

புதிய அமைப்பிலான படகு, விரைவான பயன்பாட்டிற்குரிய இயந்திரம், நவீனத்துவமான தொழில் அமைப்பு, நவீன தொழில்களால் பெறப்பட்ட அதீத வருமானம், குறைந்த தொழிலாளர் களுடன் செய்யக்கூடிய தொழில்முறை போன்றவை அனைவரையும் பெரிதும் கவர்ந்திழுக்கலாயின. இதனால் இயந்திரப் படகுகள் பெருகத் தொடங்கின. அரச கடன் வசதித்திட்டத்தின் ஊக்குவிப்பு, பணம் படைத்தவர்கள் மட்டுமல்லாது பலரைத் தொழில் உரிமையாளர் ஆக்கியது.

நவீன தொழில்கள் பல ரகங்களில் அறிமுகமாகத் தொடங்கியதும் அவற்றின் ஈர்ப்பால் அவை பல்கிப் பெருகத்தொடங்கின. புதிய அமைப்பிலான படகுகளை நவீன தொழில்கள் ஆக்கிரமிக்க, சிறிய தோணிகளிலேயே இயந்திரங்கள் பொருத்தப்பட்டு பூர்வீகத் தொழில்கள் நடைபெறலாயிற்று. இவ்வாறாக இயந்திரங்களின் பெருக்கம் பாய்ப் படகுகளை அதாவது மீன்பிடித்தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்ட சிறிய தோணிகளை முடங்கச்செய்தது. படகுகள் என்றால் இயந்திரத்துடன் கூடியது என்னும் நிலை உருவாகியது. இயந்திரங்கள் இணைத்துக்கொள்ளப்பட்டமையினால் பூர்வீகத் தொழில்களில் மேலும் பல மாற்றங்களும், நவீனத்துவங்களும் புகுத்தப்பட்டு பல கூறுகளாக அவை உடைந்தன. பணம் படைத்தவர்கள், உதவிபெற வசதியுள்ளவர்கள் இயந்திரப்படகுகளுடன் முன்னேற, வசதியற்றவர்களின் பாய்ப்படகுகள் அழிவுநிலைக்குச் சென்றன.



காலப்போக்கில் தோணிகளும் முற்றாகவே மரணித்துவிட்டன. வள்ளங்களுக்கு சிறிய வெளியிணை இயந்திரமும் பயன்படுத்தப்படுகிறது. பெரிய இயந்திர படகுகள்போன்று வெளியிணை இயந்திரம் பொருத்தப்பட்ட சிறிய கல்நாரிழைப் படகுகளும் ( Fibre glase boat) பாவனைக்குக் கொண்டுவரப்பட்டன. இப் படகுகள் 'சீநோர்' (Ceynor) நிறுவனத்தினாலேயே அறிமுகப்படுத்தப்பட்டது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கல்நாரிழைப் படகுகளில் நவீன தொழில்கள் பல வடிவங்களில் செய்யப்படலாயிற்று. அவசியம் ஏற்படுகிறபோது சிறிய வள்ளங்கள், சிறிய படகுகள் போன்றவற்றிற்கு தற்போதும் பாய் பயன்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. தொழில் உபகரணங்கள்

## சணல் - கயிறு

மீன்பிடிப்பதற்கான பிரதான உபகரணமாக வலையையே சொல்லலாம். 'வலை' என்று பொதுவாக அழைக்கப்பட்டாலும் அது, தொழில் தேவையின் நிமித்தம் மாறுபட்ட அமைப்பு, தன்மை, பெயர்களைக் கொண்டதாக இருக்கின்றது. தொழில் தேவைக்கு ஆரம்பத்தில் 'இளைக் கயிறு'களே பயன்படுத்தப்பட்டன. மெல்லியதாகவும், இறுக்கமான முறுக்காகவும் திரிக்கப்பட்ட கயிறு வலை பின்னுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. 'சணல்' நூல் பாவனைக்கு வந்தபோது கயிற்றினால் செய்யப்பட்ட சில வலைகள் சணல் நூலுக்கு மாறியது. கயிற்றின் தேவை தொடர்ந்து பேணப்பட்டே வந்ததுள்ளது. சணல் மற்றும் கயிறுகள் தேவையின் நிமித்தம் பல இழைகளாகவும் இணைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. களி நூல் பாவனைக்கு வந்ததும் சணல் நூல் மெல்லமெல்ல மறைந்து போய்விட்டது. தற்போது இயந்திரங்களினால் பின்னப்படுகின்ற வலைகளைத் தவிர்த்து நோக்கினால் தொழில் உபகரணங்களின் உருவாக்கம் கயிற்றில் இருந்து தற்போதைய பாவனையிலுள்ள கொர்லோன், நைலோன் நூல்வரை வளர்ச்சியடைந்துள்ளது. ஆனால் இவற்றின் வளர்ச்சியில் கையால் பின்னப்படுகின்ற தொழில் உபகரணங்களின் உற்பத்தி முறை மாற்றமடையாமல் ஒன்றாகவே காணப்படுகின்றது. இதனால் களி நூல் கொண்டு பின்னப்படுகின்ற தொழில் உபகரணங்களை பற்றிய விளக்கங்களை இங்கே தருகின்றேன். இவை கயிறு, சணல் போன்றவற்றிற்கும் பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்

நூலை மிக மெல்லிய களி நூல் இழைகளிலிருந்துதான் எடுக்கவேண்டும். அதற்காக களிநூலை கொள்வனவுசெய்து, அதனை றாட்டணத்தில் இட்டு களியிலிருந்து தனித்தனி இழைகளாகப் பிரித்து எடுக்கவேண்டும். தேவையான இழைகளுக்கேற்ற (உதாரணம்: 4, 5, 6) களிகளை எடுத்து றாட்டணத்தில் அனைத்தையும் இடவேண்டும். ஒவ்வொரு களியிலிருந்தும் ஒவ்வொரு இழையைப் பிரித்தெடுத்து அவற்றின் முனைகளனைத்தையும் ஒன்றாக்குவார்கள். ஒன்றாக்கிய இழைகளை இழுக்கும்போது றாட்டணம் மெதுவாக சுழரும். அவ்வாறு தொடர்ந்து இழுத்து இழைகளை ஒன்றாக்கி அவற்றை பந்தாகச் சுற்றவேண்டும். றாட்டணமும் சுழன்று சுழன்று தன்மீது உள்ள நூலைக் கொடுத்துக்கொண்டே இருக்கும். தேவைக் கேற்றவாறு பல பந்துகளில் சுற்றுவார்கள்.



அவ்வாறு சுற்றப்பட்ட பல இழைகளைக்கொண்ட நூற்பந்தில் உள்ள நூல் முனையை **'வடிக்கல்'** இல் கட்டுவார்கள். வடிக்கல் கிட்டத்தட்ட மூன்று அங்குல விட்டத்தையும், கால் அங்குல கனத்தையும் கொண்ட வட்டமான பித்தளைத் துண்டின் நடுவில் துளையிட்டு, அத்துளையின் ஊடாக ஒரு அடி அளவிலான தடி இடப்பட்டிருக்கும் தடியானது பித்தளைத் துளை உள்ள இடத்தில் சற்றுக் கனமானதும் மேல்நோக்கி வரவர கனம் குறைந்து மெல்லியதாகவும் இருக்கும் (பனங்கிழங்கைப்போன்ற அமைப்பு ஆனால் மொத்தமானதல்ல) மெல்லிய முனையில் நூலைக் கட்டி, நூற் பந்தை ஒருகையில் பிடித்தவண்ணம் மறுகையால் வடிக்கல் தடியை துடையில் வைத்து உருட்டி சுழற்றிவிடுவார்கள். அதுவும் வேகமாகச் சுழரும். வடிக்கல் சுழரும்போது நூல் முறுக்கேறும். இதனை மதகு போன்ற உயரங்கலில் நின்ற வண்ணமே செய்வார்கள். அப்போதுதான் கணிசமான நூலை ஒரே தடவையில் முறுக்க முடியும். வடிக்கலில் கட்டிய நூலிலிலிருந்து கணிசமான அளவு நீளமான நூலை வெளியேற்றி, வடிக்கல் வட்டமாகச் சுற்றி (ஆளை) சுற்றி வருமாறு சுழட்டுவார்கள். இதன்மூலமும் நூல் முறுக்கேறும். நூலின் முறுக்கு போதுமாயிருந்தால் வடிக்கலில் அடிப்பாகத்தில் தடியுடன் முறுக்கிய நூலைச் சுற்றுவார்கள். தொடர்ந்துவரும் முறுக்காத நூலை முன்னர் வடிக்கலில் கட்டியஇடத்தில் சிறு மடிப்பைப் போட்டுக் (கட்டி) தொடருவார்கள். இப்படியே பந்திள்ள நூல் முடியும்வரை முறுக்குவார்கள். பின்னர் வடிக்கலில் சுற்றப்பட்டுள்ள முறுக்கிய நூலை பிறிதொரு பந்தாக சுற்றி வடிக்கலிலிருந்து எடுத்துவிடுவார்கள். இந்த நூலையே வலை தயாரிக்க பயன்படுத்துவார்கள்

## வலை

நூல்கொண்டு முடிச்சுகளிட்டு பின்னுவதனால் வலை உருவாகிறது. அவ்வாறு பின்னுவதற்கு மூங்கிலாலான ஊசியும், மூங்கிலாலான அளவு பலகையும் வேண்டும். ஊசி என்னும்போது கூரானதல்ல. அரை அங்குலம் அகலம், ஆறு அங்குல நீளம், கால் அங்குல கனமும்கொண்ட மூங்கில் பலகையில் இரு முனைகளிலும் 'ப' வடிவில் ஒரு அங்குல உள்நோக்கி வெட்டப்பட்டதாகும். இரு முனைகளிலுள்ள 'ப' வடிவ வெட்டிற்குள் நூல்கள் தங்கி நிற்கக்கூடியதாக மேல் கீழாக நெருக்கமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்கள் சுற்றப்படும். இதனையே ஊசி என்பர். இவ்வாறே அளவு பலகையும் ஆறு அங்குல நீளமும் அளவுகளுக்கேற்ற கனமும், அகலமுமாக இருக்கும்.

ஊசியையும் அளவு பலகையையும்கொண்டு பின்னும்போது, அவை சமஅளவைக் கொண்டவையாக இருக்கும். சமஅளவைக்கொண்ட பின்னல் இடைவெளிகளை **'கண்'** என்பர். பல கண்கள் பின்னப்படும்போது வலை ஆகின்றது. ஒரு கண்ணை சதுரமாக இல்லாமல் இரு முனைகளில் பிடித்து நீளமாக இழுக்கும்போது காணப்படும் நீளமே கண்ணின் அளவாகும். இந்த நீளத்தை **'ஊண்'** என்பர். கண்கள் தேவையின் நிமித்தம் பல அளவுகளைக் கொண்டதாக இருக்கும். பின்னப்படுகின்ற கண்களின் அளவுக்கு ஏற்றவாறு ஊசியும், அளவு பலகையில் அகலமும், கனங்களும் மாறுபடும். களிநூல் பாவனைக்கு வந்தபின்னர் பயன்படுத்தப்பட்ட மிகக் குறுகிய கண் அளவு ¼ அங்குலம். கூடியது 1½ அங்குலம் ஆகும். கண்களுக்கு அளவு இருப்பதுபோல் நூல்களுக்கு இழை அளவுகள் உண்டு. தேவையின் நிமித்தம் 6 இழையிலிருந்து 15 இழை வரையிலுள்ள நூல்களைப் பயன்படுத்துவார்கள்.

பல கண்கள் சேர்ந்ததால் உருவாகும் வலைக்கும் அளவு உண்டு. வலையின் உயரம் அல்லது அகலம் 50 கண்களைக் கொண்டதாக இருக்கும். நீளம் தேவைக்குரிய நீளமாக இருக்கும். இதனை ஒரு தட்டு என்பர். 100 கண்களைக் கொண்டதாகவும் அகலம் இருக்கும். மிகக் குறுகிய கண்களை உடையவற்றிற்கு இவ்வாறு பின்னுவதுண்டு. இதனை இரண்டு தட்டு என்பர். அதிக நீளமாக பின்னுவதிலுள்ள சிரமத்தைத் தவிர்ப்பதற்காக 50 X 100 அல்லது 100 X 100 என கண்கள் வரக்கூடியவாறு பகுதி பகுதியாக பின்னிக்கொள்வர்.

ஒரு பகுதி வலையைக் குறிப்பிடும்போது நூல் இழையின் அளவு, கண்ணின் அளவு, நீளத்திற்குரிய கண்களின் எண்ணிக்கை போன்றவற்றைக் கருத்திற்கொண்டே குறிப்பிடுவார்கள். இப்பகுதிகளை தத்தமது தேவைக்கேற்றவாறு பொருத்தி நீளமான தட்டாக உருவாக்கிக்கொள்வர். இவ்வாறு பகுதி பகுதியாக இருப்பது, வலையை உருவாக்குபவர்கள் கணக்கிட்டு அமைப்பதற்கு இலகுவாக இருக்கும்.

வலை என்பது பொதுவானதொரு சொல் எனக் குறிப்பிட்டிருந்தேன். தொழிலின் தேவைக்கேற்ப உருவாக்கப்படுகின்ற வலைகள் தொழிற்பெயரை முன்னிறுத்தி தனித்துவப் பெயர்களால் அழைக்கப்படும். உதாரணமாக, 'கரைவலை மடி' என்பது கரைவலைத் தொழிலுக்குரிய வலை. இதனை எடுத்துநோக்கினால். இது பல்வேறு இழை நூல்களால் பின்னப்பட்ட, பல அளவுகளையுடைய கண்களையும், பல்லாயிரம் கண்கள் நீளத்தையுமுடைய, பல தட்டுக்களையும் கொண்டதாக இருக்கும்.

## மடங்கு

களிநூல்களிலிருந்து பல இழைகளைக்கொண்ட வலை பின்னுவதற்குரிய நூல் தயாரித்ததைப்போல் 12 – 30 வரையிலான இழைகளைக்கொண்டு முறுக்கப்பட்ட மொத்தமான நூலால் பின்னப்படும் நீண்ட ஊண்களை உடைய அகலம் குறைந்த வலையே மடங்கு எனப்படும்.

மடங்கானது மாறுபட்ட கனங்களையுடைய நூல்களையும், மாறுபட்ட அளவுகளையுடயை கண்களையும், மாறுபட்ட நீள, அகலங்களையும் கொண்டதாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். வலைக்கு 50 கண் அகலமாக இருப்பதுபோல் மடங்கிற்கு 1, 1½ -10 கண்கள்வரை அகலங்களாக இருக்கும். ஊனின் நீளம் 1 முதல் 2 அங்குலம் நீளம் வரையிலான பல அளவுகளில் இருக்கும். தயாரிக்கப்பட்ட வலையின் மோவலை, மடவலை அல்லது இரண்டிற்கும் மொத்தமான கயிறு இணைக்கப்படவேண்டுமானால் இம் மடங்குகள்தான் கைகொடுக்கும். ஏனென்றால் வலை சிறிய கண் என்பதால் மொத்தமான கயிறு உள்நுழையாது. எனவே வலைக் கண்ணுடன் மடங்கைவைத்து பொருத்தி அம்மடங்கினூடாக கயிற்றை நுழைக்கலாம். மடங்கு போதிய அளவுகளில் பெரிதாக இருப்பதனால் வலையின் விழிம்புக் கண்கள் சேதமுறாமல் பாதுகாப்பாக இருக்கும். வலையைத் தேவைக்கேற்ப கயிற்றில் சுருக்கிக்கொள்ள இலகுவாக இருக்கும். இதுபோன்ற பல தேவைகளை நிறைவுசெய்துகொள்ள வசதியாக இருக்கும்.

## கம்பான் கயிறு

நானறிந்தவரை கொழும்புத்துறை கிராமம் கயிறு திரித்து விற்பனை செய்வதில் முன்னிலை வகித்தது. ஆரம்ப காலத்தில் இக் கயிறுகள் எங்கிருந்து பெறப்பட்டது என்பதை அறியமுடியவில்லை. மெல்லிய கயிறு **'இழைக்கயிறு'** என்று அழைக்கப்படும். அவ் இழைக் கயிறுகளை தேவைக்கேற்றவாறு 4, 5, 6 என ஒன்றிணைப்பார்கள். இவ்வாறு ஒன்றிணைக்கப்பட்டவை **'புரி'** எனப்படும். கம்பான் கயிறு உருவாக்குவதற்கு மூன்று புரிகளை தயார்படுத்தவேண்டும். பின்னர் மூன்றையும் தனித்தனியே எடுத்து இருபக்க முனைகளையும் பிடித்து முறுக்குவார்கள். மூன்று புரிகளுக்கும் போதிய முறுக்கு கிடைத்ததும். ஒருபக்கத்தால் மூன்று முனைகளையும் இணைத்து ஒரு மரத்தில் கட்டிவிடுவார்கள். இணைத்த பக்கமிருந்து மூன்று இழைகளையும் ஊடறுத்து ஒரு தடியை திணிப்பார்கள். மறுமுனையில் நிற்பவர்கள் மீண்டும். மூன்று புரிகளையும் தனித்தனியாக முறுக்கத்தொடங்குவார்கள். இணைந்த பகுதியில் மூன்று புரிகளுக்கும் இடையில் சொருகிய தடியை மெதுவாக நகர்த்தி நகர்த்தி மறுமுனை நோக்கி செல்ல, தடி விலகிச்செல்லும் பகுதியில் மூன்றுபுரிகளும் முறுக்காகிக்கொண்டே இருக்கும். தடியை நகர்த்தும் தன்மையைப்பொறுத்து முறுக்குகளின் நெருக்கம் அமைந்திருக்கும். மறு முனையை தடி எட்டியதும். அப்பக்கத்தையும் இணைத்துக் கட்டிவிட்டு இருபக்கமும் பிடித்து இழுத்து கயிற்றை நிமிர்த்துவார்கள். இப்போது முறுக்குகள் அனைத்தும் சமநிலைக்கு வந்துவிடும். இதுவே கம்பான் கயிறு ஆகும்.

தோணிகள், படகுகளுக்கு 'நங்கூரம்' கட்டுவதற்கும், (தோணிகள் கடலில் தரித்து நிற்பதற்கு போடப்படும் இரும்புச் சட்டங்களால் செய்யப்பட்டது நங்கூரம்) ஏனைய தொழில்த் தேவைகளுக்கும் இந்தக் கம்பான் கயிறு பயன்படுத்தப்படுகிறது. கம்பான் கயிறுகளின் கனங்களில் மாற்றங்கள் ஏற்படுமேதவிர செய்முறையில் மாற்றமிருக்காது.

களிநூல்களை புரியாகச் சேர்த்தும் இவ்வாறு கயிறு தயாரிக்கப்படுகிறது. ஆனால் அது கம்பான் கயிற்றைப்போல் மொத்தமாக இருக்காது. பலமானதாக இருக்கும. வலைகளின் முக்கியமான தேவைகளுக்கு இதனையே இணைத்துப் பயன்படுத்துவார்கள். தூண்டில் வலைக்குப் பயன்படுத்தப்படும் தூண்டில் கயிறும் இவ்வாறுதான தயாரிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓலைக்கயிறு

கம்பான் கயிறுக்கு செய்த முறைபோன்று பல இழைக் கயிறுகளைச் சேர்த்து இரண்டு புரிகளை தயார்படுத்துவார்கள். இரண்டையும் தனித்தனியே முறுக்குவார்கள். நன்றாக முறுக்கிய பின்னர் ஒரு முளம் நீளமுள்ள தடியில் ஒரு புரியை முற்றிலும் சுற்றுவார்கள். மறு புரி நீளமாக இருக்குமாறு இழுத்துப் பிடித்திருப்பார்கள். நீளமாக உள்ள புரியின் ஒரு முனையையும், தடியில் சுற்றியுள்ள புரியின் முனையையும் இணைத்து ஒரு மரத்தில் கட்டுவார்கள். நீளமாக பிடிக்கப்பட்டுள்ள புரியை தடியிலுள்ள புரியால் சுற்றி முறுக்கி எடுப்பார்கள். ஒரு சாண் முறுக்கப்பட்டதும் ஏற்கனவே ஒருசாண் அளவில் வெட்டப்பட்டு தயார் நிலையிலுள்ள பனை ஓலையை இடையில் சொருகி தொடர்ந்து சுற்றி முறுக்குவார்கள். இவ்வாறே ஒவ்வொரு சாண் இடைவெளிகளில் ஒவ்வொரு ஓலையை இட்டு முறுக்கி கயிற்றைப் பூர்த்திசெய்வார்கள். மறுபக்க இரு முனைகளும் சந்தித்தபின் இணைத்துக் கட்டிவிட்டு இழுத்து நிமிர்த்துவார்கள். இதுவே ஓலைக்கயிறு ஆகும்.

ஓலை இலகுவில் சேதமாகக்கூடியவை. இடைக்கிடை சேதமடைந்த ஓலைகளை அகற்றி அந்த இடத்தில் புதிய ஓலைகளைச் சொருகுவார்கள். ஆரம்பத்தைப் போன்று சிரமமிருக்காது. ஒருவர் கயிற்றை இரு கரங்களிலிட்டு அதன் முறுக்கை நிமிர்த்திப் பிடிக்க மற்றையவர் ஓலையை அகற்றி உடன் புதிய ஓலையைச் சொருகிக்கொள்வார்.

## மடி

**'மடி'**யில் பல வகைகள் இருக்கின்றன. பொதுவாக 'மடி' என்று சொல்லப் பட்டாலும் தொழிலின் பெயரை முன்வைத்து அழைப்பது வழமை. மாறுபட்ட வகைகளிலான மடிகளைப் பயன்படுத்தி செய்யக்கூடிய பல தொழில்கள் உருவாகியுள்ளன. அவற்றுள் சில மறைந்துமுள்ளன. மடியானது பல்வேறு இழை நூல்களால் பின்னப்பட்ட, பல அளவுகளையுடைய கண்களையும், பல்லாயிரம் கண்கள் நீளத்தையுமுடைய, பல தட்டுக்களை கொண்டதாக இருக்கும். எனக் குறிப்பிட்டிருந்தேன். அவ்வாறு பல தட்டுகளைக் கொண்டதாக இணைக்கப்பட்ட பின்னர் வாய்ப்பக்கம் கீழ்ப் பக்கத்தைவிட சற்று அகன்ற சாக்குப் பை இனைப் போன்றதாகக் காணப்படும். இதுவே மடியின் பொதுவான தோற்றமாகும்.

மடி தயாரிக்கும்போது, கையால் பின்னப்பட்ட வலையின் பல பகுதிகள் நீளப்பாட்டில் இணைக்கப்பட்ட முழுமையான நீளத்தைக்கொண்ட தட்டை ஒரு **'சுத்து'** என்பர். மடி தவிர்ந்த ஏனைய தேவைகளுக்கு இதனை **'தட்டு'** என்றுதான் அழைப்பர். எத்தகைய அளவுள்ள கண்களாயினும், 50 கண்கள் அகலத்தையுடைய நீளமான வலை இணைக்கப்படும்போது அது ஒரு சுத்து (1 தட்டு) என்றும், 100 கண்கள் அகலத்தையுடைய நீளமான வலை இணைக்கப்படும்போது அது இரண்டு சுத்து (2 தட்டு) என்றும் சொல்லப்படும்.

மிகக் குறுகிய கண்களாகப் பின்னப்பட்ட வலையில் சில சுத்துக்களை பக்கவாட்டில் பொருத்துவார்கள். இதனைத் **'தூறு'** என்பர். இதுவே மடியின் அடிப்பாகமாகும். சுத்துக்களைப் பக்கவாட்டில் பொருத்தும்போது சுத்துகளின் நீளம் ஒரே அளவாகவும், அகலம் பொருத்தும் சுத்துகளின் எண்ணிக்கைகேற்றவாறு அகன்று கொண்டேயிருக்கும். அகலமாய் மாறிவிட்ட தூறுடன் சற்றுப் பெரிய கண்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னப்பட்ட வலையில் சில சுத்துகளை மேலும் பொருத்துவார்கள். தொடர்ந்து மடியின் குறித்த அளவுவரை அதிகரித்துச் செல்லக்கூடிய கண்களையுடைய வலைச் சுத்துகளைப் பொருத்துவார்கள். பொருத்தப்படுகின்ற ஒவ்வொரு சுத்துகளின் நீளங்கள் அளவில் சற்றுக் கூடியதாகவே இருக்கும். அப்போதுதான் மேற்பக்கம் கீழ்ப்பக்கததைவிட சற்று அகலமாக இருக்கமுடியும்.

இப்போது பார்த்தால் இணைக்கப்பட்ட ஒவ்வொரு சுத்தும், கண்களின் அளவாலும், நீளத்தாலும் சற்று அதிகரித்துக் காணப்படுவதுடன் சதுரத் தன்மை யிலேயே இருக்கும். பக்கவாட்டில் சுத்துகள் பொருத்தும் வேலை முடிந்ததும். சுத்துகளின் இரண்டு பக்க முனைகளையும் இணைப்பார்கள். இந்த இணைப்பினால் சுத்துக்கள் ஒவ்வொன்றும் வட்ட நிலையை அடைகின்றது. தூறின் அடிப்பகுதி முனைகளையும் இணைப்பார்கள். இப்போது ஒரு சாக்குப் பை போன்ற வடிவம் தெரியும்.

மடியின் அடிப்பாகத்தை தூறு என்பதுபோல் முன்பாகத்தை **'வாய்வலை'** என்றும், தூறுக்கும் வாய்வலைக்கும் இடைப்பட்ட பகுதியை **'நடுமடி'** என்றும் அழைப்பார்கள். ஒரு வலையின் கீழ்ப் பகுதி அதாவது கடல் நிலத்தில் உரசும் பகுதி **'மடவலை'** எனவும், நீரின் மேல் மட்டத்திற்கு வரக்கூடிய பகுதி **'மோவலை'** எனவும் அழைப்பார்கள். மேற்கொண்டு வாய்வலையுடன் இணைக்கக்கூடிய மேலதிக **'கைவலை'**களை இணைப்பார்கள். இக் கைவலையானது வாய்வலையிலிருந்து விரித்த கைபோல இருக்கும். கைவலையின் மடவலை, மோவலைக்கு இடைப்பட்ட பகுதியை **'அளி'** என்பர். கைவலை, வாய்வலையின் இணைப்பில் ஒரு வாசல் இருக்கும். அப்போதுதான் உள் நுழையும் மீன்கள் வெளியேறாது. மீன் வெளியேறுவதை **'மீன் மீளுதல்'** என்பர்.

ஒரு முழுமையான மடிக்கு சரியான அளவுத்திட்டம் உண்டு. அதற்கேற்றாற் போலவே சுத்துக்களைப் பொருத்துவார்கள். இதனால் மடியை உருவாக்குபவர் நன்கு அனுபவம் உள்ளவராக இருப்பார். தேவைக்கேற்ப சிறிய, பெரிய கண்களையுடைய வலைகளைத் தேர்வுசெய்தல், சிறிய, பெரிய கண்களின் இணைப்பில் சுருக்குகள் எழாதவாறு பொருத்துதல், நீளத்துக்கேற்ற அளவில் சுத்துகளை, அகலங்களை கணக்கிடுதல், பொருத்தமான அளவுகளில் கைவலைகளை இணைத்தல், மடியின் அளவுக்கேற்ற வாசலை கணக்கிட்டு அமைத்தல், அளி தொய்வின்றி வருமாறு அமைத்தல் போன்றவற்றை அனுபவசாலிகளால்தான் செய்யமுடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. தொழிற் பண்புகள்

## சம்மாட்டி

தொழிலுக்கு உரிமையாளர் 'சம்மாட்டி' என அழைக்கப்படுவர். இவர் பலவகையிலும் பெருந்தொகைப் பணத்தை முதலீடு செய்திருப்பார். தோணி அல்லது படகு, தொழிலுக்குத் தேவையான உபகரணங்கள் போன்றவற்றின் சொந்தக்காரராக இருப்பார். போதிய மீன் பிடிபடாமல் நட்டம் ஏற்படக்கூடிய நாட்களில் இவரது நிதியே தொழிலாளருக்கு ஊதியமாக இருக்கும். இதனால் இவருக்கு கணிசமான நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது வழமை.

பெரிய முதலீடு என்பதாலும், தனித்து ஒருவர் செய்யக்கூடிய தொழிலல்ல என்பதாலும் ஆரம்ப காலங்களில் பலர் கூட்டாக, பங்காளராக இணைந்து முதலிட்டு, தொழில் உபரணங்களை உருவாக்கி தாமே தொழிலையும் செய்தார்கள். பெறப்படும் வருமானத்தை தங்களுக்குள்ளே சமமாகத் பகிர்ந்துகொண்டனர். தற்கால கூட்டுறவு முறைக்கு முன்னோடிகளாக இருந்துள்ளமையை உணரக்கூடியதாக இருக்கின்றது. குருநகர் மக்களிடையே கூட்டுக் குடும்பமுறை இன்றுவரை கடைப்பிடிக்கப்பட்டு வருதற்கு இது ஆரம்பக் காரணியாக இருக்கலாம்.

காலப்போக்கில் பங்காளிகளில் ஒருசிலர் பணம் படைத்தவர்களாக மாறினர். கடின முயற்சி, தொழிலுக்குச் செல்லக்கூடிய குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை, தேவையற்ற செலவுகளின் கட்டுப்பாடு, சேமிப்பு போன்றவற்றால் பங்காளர்களிடையே பணத் தேக்கத்தில் ஏற்ற இறக்கம் ஏற்பட்டது. சிலர் பணம் படைத்தவர்களாக மாறிய அதேவேளை சிலர் முன்னேற்றமற்று ஆரம்ப நிலை, அதனிலும் கீழ்ப்பட்ட நிலையிலேயும் இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் படைத்தவர்களில் ஒருசிலர் இணைந்து கூடிய முதலீட்டில் தொழில்களை உருவாக்கினர். இதனைக் **'கொம்பனிப் படகு'** என்று அழைத்தனர். அவ்வாறான கொம்பனிப் படகுகளாக 'ஜேர்மன் கொம்பனி', 'ஜப்பான் கொம்பனி', 'மரையன் கொம்பனி', 'பெரிய கொம்பனி' போன்ற பல இருந்திருக்கின்றன. முதலிட பணவசதிகளற்ற தொழிலாளர்கள் கொம்பனிப் படகுகளில் கூலித்தொழிலாளர்களாகச் செல்லத்தொடங்கினர். ஆரம்பத்தில் சமமாகப் பங்கிடப்பட்ட வருமானம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு இரண்டு பகுதி கொம்பனிக்கும், ஒரு பகுதி தொழிலாளருக்கும் பங்கிடப்பட்டது.

காலப்போக்கில் பணம் படைத்த ஒருவன் எவருடனும் கூட்டின்றி தானே தனியாகத் தொழிலை ஆரம்பித்தான். வருமானப் பங்கீட்டில் கொம்பனி படகுகளின் நடைமுறையே கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. தனியொருவன் தொழிலுக்கு உரிமையாளனாக மாறிய பின்னரே 'சம்மாட்டி' என்று அவன் அழைக்கப்படலானான். சம்மாட்டியின் ஆதிக்கம் பலவகையிலும் மேலோங்கிய நிலையியேயே இருந்தது.

## குத்தகையாளர்

பிடிபட்ட மீன்கள் விற்பனை செய்யப்படும்பொழுது விற்பனைக் கணக்கு எழுதி பணம் வசூலிப்பதை தொழிலாகக்கொண்டவர். இவர் வருடந்தோறும் கோவிலுக்கான பராமரிப்பு நிதி செலுத்தி குத்தகை உரிமையைப் பெற்றுக்கொள்வார். பராமரிப்பு நிதியை **'தீர்வைப் பணம்'** என அழைப்பர். தீர்வைப்பணம் வருடாவருடம் மாறுபடும். கேள்வி முறையில் தீர்மானிக்கப்படுகிறது. வருட இறுதிநாளில் கோவிலின் சார்பாக ஒருவர் வீதிகளிலும், சந்திகளிலும் தீர்வைப்பணத் தொகையைப் பகிரங்கமாக அறிவிப்பார். குத்தகையாளர் தனித்தனியே அணுகி தங்களது கேள்வித் தொகையைக் கூறுவர். அதனை மீண்டும் அறிவிப்பார். குத்தகையாளரிடம் போட்டி ஏற்பட தொகை அதிகரித்துச் செல்லும். இறுதியாக கூடுதலான கேள்வியைக் கேட்டவருக்கு குத்தகை உரிமை வழங்கப்படும். இது மொத்தத் தொழிலுக்கான குத்தகை அல்ல. ஓவ்வொரு தொழிலுக்கும் குத்தகை கோரப்படும். தொழில் செய்பவர்களின் ஊக்கம், கடந்த ஆண்டில் அவர்களது மீன்பிடி வருவாய் போன்றவற்றைக் கருத்திலெடுத்து தொழில்களுக்கிடையே கேள்வித் தொகையில் மாற்றமிருக்கும். கேள்வி அறிவித்தலை கூறுபவராக இறுதியாக 'கருகர் அப்பு' செயற்பட்டுள்ளார்.

குத்தையாளர், தீர்வைப் பணத்தை பகுதியாகவோ, மொத்தமாகவோ கோவிலுக்குச் செலுத்துவர். அதேநேரம் தத்தமது குத்தகைக்குரிய தொழில்களின் நாளாந்த மொத்த மீன் விற்பனையில் இரண்டு சதவீதத்தை தமக்குரிய தரகுப் பணமாக கழித்தெடுத்துக்கொள்வார். குத்தையாளரின் தரகுப்பண கழிவுவீதம் காலத்துக்குக் காலம் மாற்றமடைந்துள்ளது. இந்நிதியிலிருந்து வருடத்தில் இரண்டு தடவைகள் குறிப்பிட்ட தொகைப்பணத்தை தத்தமது குத்தைக் தொழில்களுக்கு வழங்குவார். இப்பணம் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

## தொழிலாளர்கள்

தொழில் புறப்படும் நேரம் தோணியண்டை வருபவர்கள் அனைவரும் தொழிலுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். உழைக்க வந்த எவரும் திரும்பிச் செல்லக்கூடாது என்பதற்காகவே அனைவரையும் அழைத்துச்செல்வது வழமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களில் தொழில் தெரிந்தவர்களும், தெரியாதவர்களும், புதியவர்களும் இருப்பார்கள். குருநகரை சார்ந்தவர்களும், சாராதவர்களும் இருப்பார்கள். புதியவர்கள் தவிர்ந்த ஏனையோர் சாதாரண தொழிலாளர்களாகவும், பலதரப்பட்ட தரங்களை உடையவர்களாகவும் இருப்பர். அவரவர் தரத்திற்கேற்ற ஊதியமும் மாறுபடுகின்றது. சிலர் சில பொறுப்புக்களை கொண்டவர்களாக இருப்பர். சிலர் அபார திறமை உடையவர்களாக இருப்பர். அவரவர் சேவைகளுக்கேற்ப பிரத்தியேகமான ஊதியம் வழங்கப்படும்.

இலங்கையில் பல இடங்களில் மாதாந்த சம்பளத்திற்கு தொழிலாளர்கள் அமர்த்தப்படும் வழமை இருந்திருக்கின்றது ஆனால் குருநகரில் அவ்வாறான முறை இருந்ததற்கான தகவல்கள் இல்லை. இதனால் தொழிலாளர்களது ஊதிபம் தினமும் ஒரே அளவானதாக இருக்காது. அன்றைய வருவாய்க்கேற்ப பங்கிடப்பட்டதாகவே இருக்கும்.

மீன் விற்பனையால் கிடைத்த மொத்த வருவாயில் குத்தகையாளர் தரகுப்பணம் கழிக்கப்பட்டு மீதி வருமானத்தில் சில விகிதாசார ஒதுக்கீடுகள், பொறுப்பாளர்களுக்கான நிதி போன்றவை கழிக்கப்பட்டே நிகரமொத்தம் கணிக்கப்பட்டு பங்கிடப்படும். அவைகளாவன:

1. **தண்ணிர்ச்செலவு**

   தொழிலுச்செல்லும்போது பாவனைக்குத் தேவையான குடிநீரை தோணியில் எடுத்து வைப்பவர்.

2. **தோடைக்காரர் செலவு**

   தோணிக்குப் பயன்படுத்தப்படும் பாயை பராமரித்தலுடன் அதற்கு வேண்டிய திருத்தங்களையும் மேற்கொள்பவர்.

3. **மடிச் செலவு**

   மடியைப் பராமரித்தல், தினமும் உலரவைத்து எடுத்தல், திருத்தங்களை மேற்கொள்பவர்.

4. **தண்ணீர் எறிபவர்செலவு**

   தோணியில் பயணிக்கும்போது தேவையேற்படும்போதெல்லாம் பாய்க்கு யாளியால் தண்ணீர் எறிபவர்.

5. **தண்டையல் செலவு** (சுக்கான் செலவு)

   சுக்கான்தான் ஒரு கடற்கலத்திற்கு உயிர்நாடி. அதன்மூலம்தான் கலத்தை சரியான பாதைக்கு செலுத்தமுடியும். தோணியை உரிய பாதையில், உரிய இடத்திற்கு செல்வதற்கு சுக்கான் பிடிப்பவர்.

6. **தாங்கல் செலவு**

   எப்போதும் காற்று தோணிக்கு சாதகமாக இருப்பதில்லை. அவ்வாறான சந்தர்ப்பங்களில் மரக்கோல்கொண்டு தாங்குபவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. **ஆளரட்டுபவர் செலவு** (ஆள் எழுப்புபவர்)

தொழில்கள் யாவும் அதிகாலையிலே புறப்பட்டுச்செல்லும், சிலவேளைகளில் அதாவது தொழில் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்ட இடத்தின் தூரம் அதிகமாக இருக்குமானால், நீர்நிலைக்கேற்ற பாடு ஆனால் நேரத்துடன் புறப்படுவதுண்டு. எப்போதாயினும் தொழிலுக்குச் செல்பவர்களை நித்திரையிலிருந்து உரிய நேரத்திற்கு எழுப்புபவராவர். இவர் ஆளரட்டாவிட்டால் ஏதேனும் காரணத்திற்காகத் தொழில் அன்று போகாது என்று தொழிலாளர்கள் கருதுவார்கள்.

இந்தக் கொடுப்பனவுகளுடன் விசேட தேவைகளுக்கென சொற்ப தொகை கழித்தெடுக்கப்பட்டு சேமிப்பாக வைக்கப்படும். பின்னர் சம்மாட்டிக்குரிய கொடுப்பனவு கழிக்கப்படும். மிகுதி தொழிலாளருக்குப் பகிரப்படும். தொழிலாளர்களில் பல தரம் உண்டு என்று குறிப்பிட்டிருந்தேன். அவைகளாவன:

1. **தற்காலிகத் தொழிலாளி**

இவர் தமது வசதிக்கேற்ப விரும்பிய வேளைகளில் தொழிலுக்கு வருபவராக இருப்பர். தொழில் புறப்படும்நேரம் இவர் வரவை எதிர்பார்த்து காத்திருக்கமாட்டார்கள்.

2. **சாதாரண தொழிலாளி**

மூன்று கிழமைகளுக்கு மேல் தொடர்ச்சியாக தொழிலுக்கு வருபவர்கள் சாதாரண தொழிலாளியாகக் கணிக்கப்படுவர். தொழில் புறப்படும்போது இவர் வரவை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள்.

3. **நிரந்தர தொழிலாளி**

இவர் தொழிலின் ஆரம்பமுதல் தொடர்ச்சியாக தொழில் செய்தவராக இருப்பர். அனுபவமும், ஆற்றலும் உள்ளவராக விளங்குவர். தொழில் புறப்படும்போது இவர் வரவை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். வரத் தாமதமானால் தேடிச்செல்வதுமுண்டு.

4. **மேலாப்பாச்சி**

கடல் வளங்கள், நீர்நிலைகள் பற்றி நன்கு அறிந்தவராகவும், நுணுக்கங்களை உடையவராகவும், கால மாற்றங்களுக்கேற்ப மீன் பிடிபடக்கூடிய கடல் பகுதிகளை இனங்காணக் கூடியவராக இருப்பார். தொழில் நடைபெறுகின்ற கடல் எல்லைக்குள் அரவமின்றி நுழைந்து பிடிபடக்கூடிய மீன் இனங்கள், மீன்களின் அண்ணளவான எண்ணிக்கைகள் போன்றவற்றைச் சொல்லக்கூடியவர்.

இவரின் முதிர்ந்த தொழில் அனுபவம் காரணமாக தொழில் செய்யும் வேளையில் ஏற்படுகின்ற தவறுகளை இனங்கண்டு உடனுக்குடன் நிவர்த்தி செய்பவராகவும், ஏனையோரையும் செய்விப்பதற்கு ஆணையிடுபவராக இருப்பர். பாட்டின் சூழ்நிலைக்கேற்ப இவரின் ஆலோசனைப்படி மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் வேறு பகுதிகளில் மேலாப்பாச்சியை **'மண்டாடி'** என்றும் அழைப்பார்கள். இங்கு வழக்கிலில்லையாயினும், காலப்போக்கில் தொழிலாளர்களின் கலப்பு, தொழில்செய்யும் இடங்களில் மாற்றம் காரணமாக இங்கும் அழைக்கப்படலாயிற்று

## 5. தண்டையல்

படகை குறிப்பிட்ட இடம்நோக்கிச் செலுத்துவது இவரது முக்கிய வேலையாகும். படகு முதல் அதில் அடங்கியுள்ள பொருட்கள் வரை அனைத்தையும் பராமரிப்பது இவரின் கடமையாகும்.

இத்தகைய பிரிவுகளுக்கேற்ப ஊதிபமும் மாறுபடும். சாதாரண மற்றும் தற்காலிகத் தொழிலாளிக்கு வழங்கப்படும் ஊதிபத்தை ஒரு பங்கு என்பர். ஏனையோருக்கு ஒன்றரை முதல் மூன்று பங்கு வரை மாறுபட்ட வகைகளில் உண்டு. சம்மாட்டி தொழிலுக்குச் செல்பவராயின் அவருக்கும் பங்கு உண்டு. தொழிலாளி என்று குறிப்பிடுவது வாலிப வயதும் அதற்கு மேற்பட்டவர்களுமேயாவர். ஆனால் சிறுவர்களும் தொழிலுக்குச் செல்வதுண்டு அவர்களுக்கு கால், அரை, முக்கால் பங்கு என வகைகள் உண்டு. தொழிலுக்குச் செல்லும் அனைவருக்கும் வீட்டுக்கு எடுத்துச் செல்வதற்கு மீன்கள் வழங்கப்படும. இதில் சிறுவர் தவிர ஏனையோருக்கு ஏற்ற இறக்கம் இல்லை. குறைந்த வீத பங்குத் தொழிலாளர்கள் முழுப் பங்குக்கு உரியவராக மாற்றப்படும் தினமன்று, தொழில் முடிந்து திரும்பும்போது அவரை பாய்மரத்தில் கட்டிவிடுவர். அவரை அவிழ்த்து விடுபவர் அன்று பிற்பகல் ஏனைய தொழிலாளர்களுக்கு செலவுசெய்யவேண்டும்.

தற்காலிகத் தொழிலாளி தவிர்ந்த ஏனையோருக்கு நாள்தோறும் மேலதிக கொடுப்பனவாக சிறுதொகை வழங்கப்படும். இதனை **'போடுகாசு'** என்பர். பாச்சுவலைத் தொழிலாயின் வலை வைத்திருக்கும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் வலைக்குரிய வாடகைப் பணமாக **'வலைப்பங்கு'** வழங்கப்படும். ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமையில் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். இதனைத் **'தனிப்பங்கு'** என்பர். இதில் ஏற்ற இறக்கம் உண்டு.

தொழில் முடித்து வந்தபின்னர் சம்மாட்டியின் வீட்டில் அல்லது குறிப்பிட்ட இடத்தில் அனைவரது ஊதிபகங்களும் பகிர்ந்தளிக்கப்படும். இதனைக் **'கிடைத்தகாசு'** என்பர். கிடைத்த காசு பகிர்வதற்கென சிறு மண்டபமும் கட்டியிருப்பார்கள். அவ்வாறானதொரு மண்டபத்தை, சற்று அழிவுற்ற நிலையில் நான் பார்த்திருக்கிறேன். புதுமைமாதா கோவில் கிழக்கு வீதியில், 'மாதர் படகு'த் தொழிலாளர்களுக்காகக் கட்டப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட 15 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்டதாக காணப்பட்டது. மரக்கப்புகள் நட்டு ஓலையால் வேயப்பட்டிருக்கவேண்டும். மரக்கப்புகளைத் தவிர கூரையை நான் காணவில்லை. மரங்களுக்கிடையில் மூன்றுபக்கம் களிமண், செங்கல் போன்றவற்றால் அரைச்சுவர் கட்டப்பட்டு உட்புறம் ஆட்கள் இருக்கக்கூடியவாறு படியாகக் கட்டப்பட்டிருந்தது. களிமண்ணை மூடி சுண்ணாம்பு மற்றும் சீமேந்துக் கலவை பூசப்பட்டிருந்தது. கதவு இருந்ததற்கான அடையாளம் இல்லை. முன்பக்கம் திறந்ததாகவே இருந்தது.

தொழிலில் விபத்துக்கள், பாதிப்புகள் ஏற்படுவது வழமை. அதாவது தவறுதலால் ஏற்படும் காயங்கள். திருக்கை, கெளிறு போன்ற மீன்களின் முள்ளு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றியதால் ஏற்படும் காயங்கள், **'ஆர்க்கு'** எனும் கடற் தாவரம் வெட்டியதால் ஏற்பட்ட காயம் போன்றவையாக இருக்கும். இவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் முழுமையான பங்கு கொடுப்பனவாக வழங்கப்படுகிறது. கறிக்கான மீனும் வழங்கப்படும். பூரண குணமாகுமுன்னர் தொழிலுக்கு வருவது தடுக்கப்பட்டுள்ளது. தடுத்தும் அவர் தொழிலுக்குச்சென்று முன்னைய காயத்தில் பாதிப்பு ஏற்படுமாயின் பின்னர் அவருக்கு நோயாளிக்கான கொடுப்பனவு முழுமையாக வழங்கப்படமாட்டாது.

ஒரு வருடத்தை இரண்டு தொழிற் காலங்களாக வகுத்துள்ளனர். தை மாதம் முதல் ஆடி மாதம் வரை ஒரு தொழிற் காலமாகவும், ஆவணி முதல் மார்கழி வரை மறு தொழிற் காலமாகவும் இருக்கும். இவ் இரண்டு தொழிற்காலங்களின் இறுதியில் அதாவது மார்கழி மாதத்தில் நத்தார் பண்டிகை, ஆடிமாதத்தில் யாகப்பர் ஆலயத் திருநாள், கொஞ்சேஞ்சிமாதா ஆலயத் திருநாள் ஆகியவற்றை முன்னிட்டு மேலதிக கொடுப்பனவு கொடுக்கப்படுகின்றது. இது, தொழிற் காலம் வரை தொழிலுக்குச் செல்பவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இதனை **'சதக்காசு'** என்பர். இது குத்தகையாளரால் வழங்கப்படும் நிதியுடன், சம்மாட்டியால் வழங்கப்படும் நிதியும் சேர்ந்த தொகையேயாகும். ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவர்கள் தொழிலுக்குச் சென்ற காலங்களுக்கேற்ப கணிசமான தொகை வழங்கப்படுவதால் பண்டிகை காலங்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும். பெரும்பாலான தொழிலாளர் குடும்பங்கள் இந் நிதியை எதிர்பார்த்திருப்பார்கள்.

## அரச மரக் கூட்டுத்தாபனம்

குருநகரில் இயங்கிய அரச மரக்கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்த தொழிலாளர்களும், தமக்கிடையே கடற்றொழிலாளர்களை ஒத்த நடைமுறையையே கடைப்பிடிக்கலானார்கள். புகையிரதம், மற்றும் பேரூர்திகளில் வரும் மரங்களை இறக்குதல், அவற்றை உரிய இடத்திற்கு நகர்த்தி அடுக்குதல், விற்பனை செய்யப்பட்ட பின்னர் பேரூர்தியில் ஏற்றுதல் போன்ற வேலைகள் இவர்களுடையதாகும். ஒரு குழுவாக சிறப்பாக இயங்கி வந்துள்ளார்கள். பாரம் தூக்குதலில் அவர்களது தொழில்நுட்பம் அபாரமானது. நெடியதும், கணிசமான சுற்றளவைக்கொண்டதுமான மரங்களை புகையிரதப் பெட்டிகளிலிருந்து இறக்கி அவை காட்சிக்கு வைக்கப்பட வேண்டிய இடம்வரை அதனை நகர்த்தி, விற்பனைக்கு இலகுவான வகையில் அடுக்கி, விற்பனை செய்யப்பட்ட பின்னர் பேரூர்தியில் ஏற்றுவர். பேரூர்தியில் ஏற்றுதல் என்பது சுலபமான செயலென்று சொல்லிடமுடியாது. மனித சக்தி, மனித வளங்களைப் பிழிந்து எடுக்கும் செயல். இவ்வாறான செயல்களின்மூலம் பாதிப்படைபவர்களுமுண்டு. பெரிய பாரந்தூக்கி இயந்திரங்கள் (Crane) செய்யவேண்டிய வேலைகளை இவர்கள் 6 அங்குல விட்டமும் 6 – 10 அடி நீளமுள்ள **'முண்டிகள்'** (உருண்டையான மரங்கள்), துண்டாடப்பட்ட சிறிய மரக் குற்றிகளைக்கொண்டு உச்ச மனித பலம் மற்றும் நுட்ப அறிவைப் பயன்படுத்தி செய்துள்ளார்கள். மேலும் இவர்கள் தமது வேலையை இலகுபடுத்த அலவாங்கு, 6 அங்குல விட்டமும் 10 – 16 அடி நீளமுள்ள **'காவார்'** (உருண்டையான மரங்கள்) போன்றவற்றை பயன்படுத்துவார்கள்.

இவர்களது சேவையை மரக்கூட்டுத்தாபனம் மட்டுமன்றி தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் போன்றனவும் பெற்றிருக்கின்றன. இக்குழுவினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்குக் கிடைக்கும் வருவாயை சிறந்த முறையில் பங்கிடுவதற்கென தமக்குள் ஒருவரை பொறுப்பாளராக நியமித்திருந்தார்கள். லாசறஸ் மனவல் என்பவர் இக் குழுமத்தின் பொறுப்பாளராக நீண்டகாலம் இருந்துள்ளார். இவர் நிறையவே வாசிக்கும் பழக்கமுள்ளவர். இதனால் அவர்களை நெறிப்படுத்தக்கூடியவராக இருந்தார். அவரது அனுபவம் இலகுவான வழிகளைக் கடைப்பிடிப்பதிற்கு ஏதுவாக அமைந்திருந்தது.

இத்தொழிலை குருநகர் தொழிலாளர்களே செய்துவந்தனர். இவர்கள் அல்லது இவர்களின் பெற்றோர் பரம்பரையாக கடற்றொழிலை செய்துவந்ததன் காரணத்தால் கடற்றொழிலாளரின் நடைமுறையையே தாமும் பின்பற்றினார்கள். இவர்களில் எவரேனும் நிரந்தர அல்லது மாதாந்த சம்பளத்திற்கு வேலை செய்பவர்களல்லர். செய்யும் வேலைக்கேற்ற கூலியைப்பெற்று அவற்றை தமக்கடையே பகிர்ந்து கொள்பவர்கள்.

இவர்களுக்குத் தினமும் கிடைக்கும் கூலியில் பண்டிகை காலங்களில் பகிர்ந்துகொள்வதற்கென ஒரு பகுதி தொகையை உண்டியலில் சேகரித்து வைப்பார்கள். ஞாயிற்றுக்கிழமையில் பகிர்ந்துகொள்வதற்கெனவும் ஒருபகுதி தொகையை சேகரித்து வைப்பார்கள். இத் தொகையை பிரதி ஞாயிறுதோறும் பகிர்ந்துகொள்வார்கள். ஏனையவற்றை தமக்குள்ளே தினமும் பகிர்ந்துகொள்வார்கள். உடன் வேலைசெய்யும் தொழிலாளி விபத்தில் சிக்குண்டால் அவர் சுகம்பெற்று மீண்டும் வேலைக்கு வரும்வரை அவருக்கென ஒரு பங்கும், வைத்திய செலவும் தினமும் ஒதுக்கீடுசெய்து அத் தொழிலாளிக்கு வழங்குவார்கள். விபத்தில் சிக்கிய தொழிலாளி நடமாடக்கூடிய நிலையிலிருந்தால் அவர் தினமும் சமூகமளித்து சிறுசிறு ஒத்தாசைகளை புரிவார். வேலைசெய்ய அனுமதிக்கப்படார்.

பண்டிகை காலங்களில், அதற்கென சேகரித்த உண்டியல் உடைக்கப்பட்டு அப்பணம் தொழிலாளர்களிடையே பகிரப்படும். இப்பணத்தில் மீதமாகவரும் தொகையை யாகப்பர் ஆலயத்திற்கு நன்கொடையாக வழங்குவர். இதனை அனைவரும் மனநிறைவுடன் செய்துகொள்வார்கள்.

## பொருட்களை ஏற்றி இறக்குதல்

கொழும்பு, திருகோணமலை, காலி போன்ற முக்கிய துறைமுகங்களில் சரக்குக் கப்பலில் கொண்டுவரப்பட்ட பொருட்களை இறக்குவது போன்று வடபகுதியில் சோளகக்காற்று வீசும் காலங்களில் காங்கேசன்துறையிலும், வாடைக்காற்று வீசும் காலங்களில் குருநகர் துறையிலும் கப்பலில் கொண்டுவரப்படும் பொருட்கள் இறக்கப்பட்டன. இரண்டு துறைகளையும் எடுத்துக்கொண்டால் கப்பல் கரைக்கு வரக்கூடிய ஆழம்முள்ள கடல்களல்ல. காங்கேசன்துறையில் ஒரு மைல் தூரமளவிலும், குருநகரில் 3-6 மைல் தூரம் வரையிலும் கப்பல் நங்கூரமிட்டுக் கிடக்கும். அங்கிருந்து பொருட்களை இறக்கிக் கரைக்கு (துறைக்கு) கொண்டுவருவதற்கு தோணிகளே பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொரு தோணியிலும் ஐந்து தொழிலாளர்கள் செல்வார்கள்.

பாரிய தோணிகளில் இறக்கப்படும் பொருட்களை அடுக்கி, பாதுகாப்பாக கரைக்குக் கொண்டுவருவது இவர்களின் வேலை. கரையில் இறக்குவதற்கென வேறு ஆட்கள் காத்திருப்பார்கள். கப்பல் வருகைதரும் நாட்களில் தோணி உரிமையாளர் மற்றும் செலுத்தும் தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல வேறுபலருக்கும் வேலைவாய்ப்புகளுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பலின் வருகையோடு மீன் கூட்டங்களும் பின்தொடர்ந்துவரும். கப்பலைச் செலுத்தும் புறப்பெல்லரின் (Propeller) அசுர சுழற்சியால் எழுகின்ற கடல் நீரின் சுழற்சி கடலின் நிலத்தை கிளறி நீருடன் மேலெழுப்பும். இந்த நீர்ச் சுழற்சியில் கிடைக்கக்கூடிய உணவை உட்கொள்வதற்காக மீன்கூட்டங்கள் கப்பலைத் தொடர்ந்துகொண்டே வரும். அம்மீன் கூட்டங்கள் கப்பல் வந்த பாதை, கப்பல் தரிக்கும் சுற்றாடல்களிலேயே தங்கிவிடுகிறது. இதனால் கடற்றொழில் செய்பவர்களுக்கு தொடர்ந்து சில மாதங்கள் மீன்பிடி நன்றாக இருக்கும். சில சந்தர்ப்பங்களில் படகில் ஏற்றமுடியாத மீன்களை கடலில் கொட்டிவிட்டு வருவதுமுண்டு இதனால் கப்பல் வரும் காலங்கள் குருநகரைப் பொறுத்தவரை செழிப்பான காலமாக இருந்தது.

குருநகர் துறைச் சுற்றாடல் 'கருக்கோப்பு' என அழைக்கப்பட்டது. இதற்கான காரணம் தெரியவில்லை. திரிவுபட்ட சொல்லாக இருக்கலாம். கருக்கோப்பில் துறைமுகம், பாரிய கொட்டகை, பல களஞ்சியங்கள், சுங்கப்பகுதி, புகையிரப்பாதை என பல் வசதிகள் அமைந்துள்ளன. இதற்கு அண்மையில் அமைந்துள்ள 'மலாயன் புகையிலைக் கூட்டுத்தாபனத்'தின் உற்பத்திகள் யாவும் இந்தத் துறையினூடாகவே டிங்கிகளில் ஏற்றி இந்தியாவுக்குக் கொண்டுசெல்லப்பட்டன. இந்தியாவிலிருந்து டிங்கிகள் மூலம் கொண்டுவரப்படும் உணவுப்பொருட்கள், ஓடுகள், கடல் ஆமைகள் யாவும் இந்தத் துறையினூடாகவே இறக்கப்பட்டன.

## இலங்கை -நோர்வே அபிவிருத்தித் திட்டம்
## (Cey-Nor Development Foundation)

இலங்கை - நோர்வே அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பிக்கவும், செயல்வடிவம் கொடுக்கவும் முன்னின்றுழைத்தவர் சந்தியோகு மேஸ்திரியின் பூட்டனான திரு அன்ரனி வின்சலோஸ் இராசேந்திரம் (குட்டி மூப்பர்) ஆவர். இவர் குருநகரைச் சேர்ந்தவர். மிக இளம் வயதிலேயே நோர்வேயில் குடியேறி கடற்றொழில் சார்ந்த கல்வியைக் கற்று, வேலைவாய்ப்பும் பெற்று, அந்நாட்டுப் பெண்ணை மணந்து நோர்வே குடியுரியையாளனாக மாறியவர். நோர்வேயில் கல்நார் மூலம் படகு கட்டும் தொழில்நுட்பத்தைக் கற்று அதனை இலங்கை மக்கள் பயன்பெற வழிவகுக்கவேணடும் என்ற எண்ணத்தில் இவரால் தீட்டப்பட்ட திட்டமே 'இலங்கை – நோர்வே அபிவிருத்தித் திட்டம்' ஆகும். இத்திட்டத்தை அங்கீகரிக்கச் செய்வதற்கான அனுகூலங்கள் நிறையவே இவருக்கு இருந்தன.

இவர் கற்றுத்தேறிய தொழில், அந்நாட்டு குடியுரிமை, இலங்கையில் செயற்படுத்தவேண்டிய அவசியம், நோர்வேயின் உதவித்திட்ட நடைமுறை போன்றவற்றால் கிடைக்கப்பெற்ற அனுகூலங்களைப் பயன்படுத்தி, திட்டத்தை செயற்படுத்தும் ஆதரவைப் பெற்று, நோர்வே அரசின் விசேட பிரதிநிதியாக இலங்கைக்கு வந்தார். படகு கட்டும் தொழிற்சாலைக்கான வேலைத்திட்டத்தை குருநகரிலேயே உருவாக்கவேண்டுமென்று பலர் கருத்துத் தெரிவித்தும், சில மேலதிக வசதிகள் காரணமாக காரைநகரில் செயல்வடிவம் பெற்றது. மிகக் குறுகிய காலத்திலே வளர்ச்சிபெற்ற சீநோர் திட்டம், அதன் விரிவாக்கத்தில் ஒன்றாக 'குருநகர் வலைத் தொழிற்சாலை' அமைந்தது. தற்போதும் இயங்குநிலையிலிருக்கும் வலைத்தொழிற்சாலை அரசியல் நெருக்குவாரங்களுக்குள் சிக்குண்டு 'வடகடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலைத் தொழிற்சாலை' ஆக மாற்றம் பெற்றுள்ளது. சீநோர் திட்டத்தின் மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

23.05.2000 இல் உலக BBC தமிழோசையின் செய்திக் கண்ணோட்டத்தில் திரு அன்ரனி வின்சலோஸ் இராசேந்திரம் பற்றிய பலதரப்பட்ட தகவல்கள் வெளிக்கொண்டு வரப்பட்டன. அதில் 'அபிவிருத்திச் செயற்திட்டங்களுடன் நோர்வே இலங்கையில் காலூன்றுவதற்கான அனைத்துச் செயற்பாடுகளையும் முன்னின்று செய்தவர்' என்ற குறிப்பு பல விபரங்களுடன் ஒலிபரப்பட்டன. 50களில் இலங்கையிலிருந்து முதன்முதலாக மோட்டார் சைக்கிளில் ஐக்கிய இராட்சியத்திற்குத் தனது நண்பர் ஒருவருடன் சென்று, பின் நோர்வேயில் குடியேறியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரச உத்தியோகங்கள்

ஆரம்பத்தில் போர்வீரர்களாகவும், கப்பல் செலுத்துபவர்களாகவும் விளங்கிய குருகுல மக்கள், அரசியல் மாற்றம், பொருளாதார விருத்தி, புதிய கண்டுபிடிப்புகளால் உலகில் ஏற்பட்ட மாறுதல்கள் காரணமாக தத்தமது தொழிலை இழக்கநேரிட்டது. அவ்வாறு தொழிலை இழந்தவர்கள் தத்தமது வசதிக்கேற்ப விரும்பிய இடங்களில் குடியேறி வாழத் தலைப்பட்டார்கள். கமத்தொழில் சார்ந்த பகுதிகளில் குடியேறியவர்கள் கமத்தொழிலையும், கடற்கரையை அண்டிய பகுதிகளில் வாழத் தலைப்பட்டவர்கள் கடற்றொழிலையும் ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டுவாழ முனைந்தார்கள். அவ்வாறு கடற்றொழிலை தமது சீவியத்துக்குரிய தொழிலாகத் தெரிந்துகொண்டவர்களே குருநகரில் வாழ்கிறார்கள்.

இவர்களில் பலர் தமது கல்வியை முடித்து அரச உத்தியோகங்களிலும். வாத்தக நிறுவனங்களிலும் சேவையாற்றி வந்திருக்கிறார்கள். உத்தியோகங்களுக்காக இலங்கையின் பல பாகங்களிலும் வசிக்கவேண்டிய நிலையேற்பட்டதனாலும், பலதரப்பட்ட அந்தஸ்துள்ளவர்களுடன் பழகவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டதனாலும், மாறுபட்ட கலாசாரச் சூழல்களைச் சந்திக்கவேண்டிய நிர்ப்பந்தம் உண்டானதாலும் உத்தியோகம் செய்பவர்களின் வாழ்வியல் நடைமுறையில் சிறு மாறுதல்கள் தென்பட்டன. இந்த மாறுதல்கள் மற்றவர்களிடமிருந்து தம்மைப் பிரித்துப்பார்க்கும் மனநிலையையும் பலரிடம் தோற்றுவித்தது. சிலர் தமது வசிப்பிடங்களையும் மாற்றம்செய்த நிகழ்வுகள் இத்தகைய மனநிலையின் பிரதிபலிப்புகளேயாகும்.

சிலரது நடவடிக்கைகள் கசப்பான நிகழ்வாக இருந்தபோதும் பலர் தாம் வகித்த அரச உத்தியோகங்களால் பெருமையைத் தேடித்தந்துள்ளார்கள். அரச உத்தியோகம் வகித்தவர்களின் பெயர்களை தவறவிடாமல் பட்டியலிடுவது பெரும் சிரமமென்பதால் நான் அறிந்தவரையிலும், கிடைத்த தரவுகளின் அடிப்படையிலும் எண்ணிக்கையிலமைந்த சில குறிப்புகளையும், அறிந்வரை உயர்பதவி வகித்தவர்களின் பெயர்களை மட்டுமே தருகிறேன். தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், யாழ். மாநகரசபை போன்றவற்றில் கணிசமானோர் பணியாற்றியுள்ளார்கள் அவர்களின் முழுமையான தரவுகள் கிடைக்கப்பெறாமையால் எண்ணிக்கைக் குறிப்புகளில் அவர்கள் சேர்க்கப்படவில்லை. தம்மை இனங்காட்ட விரும்பாமல் விலகி வாழ்ந்த உயர்பதவி வகித்தவர்களும் சேர்க்கப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- யாழ். மாநகர சபையின் மேயராக திரு. P.M. யோண், திரு M. ஜேக்கப் மாஸ்ரர் ஆகியோரும், உதவி மேயராக திரு. ச. அலோசியஸ் அவர்களும் பணியாற்றியுள்ளார்கள்.
- அமெரிக்காவில் நாசா விண்வெளிக் கழகத்தில் 'மண்ணியல்' விஞ்ஞானியாக திரு. பிலிப் கிறிஸ்சாந்தூஸ் பணியாற்றுகிறார்.
- திரு அல்பிரட் அன்ரனி கிறிஸ்ரி பௌதீகத்துறையில் நிபுணத்துவம் பெற்று அமெரிக்க பல்கலைக்கழகத்தில் அதே துறையில் விரிவுரையாளராக பணியாற்றுகிறார். இவரது துறைசார்ந்த ஆக்கங்கள் பல, பல்வேறு நூல்களில் வெளிவந்துள்ளமை பாராட்டுக்குரியது.
- அன்ரன் அல்பிறட், அல்பிரட் சவுந்தரசிங்கி ஆகியோர் யாழ். அரச அதிபர்கள், அன்ரன் அல்பிரட் இளைப்பாறிய பின்னர் மக்கள் வங்கியின் உயர்பீட ஆலோசகர்களில் ஒருவர், சவுந்தரசிங்கி அல்பிரட், பினனர் முன்னாள் இலங்கைப் பிரதமர் S.W.R.D. பண்டாரநாயக்காவின் நிரந்தர செயலாளராகவும் பணியாற்றி, தொடர்ந்து ஐக்கியநாடுகள் சபையில் South East Asia வின் Food & Agricultural Organization (F.A.O.) இல் பிராந்திய பணிப்பாளர் நாயகமாக பதவி வகித்துள்ளார்.
- கல்வித் திணைக்களத்தில் 70 இற்கும் மேற்பட்டோர் ஆசிரியர்கள், திரு. சீமான்பிள்ளை, ஜேக்கப் ஆகியோரும் கல்விப் பணிப்பாளர்கள், திரு. அ. எமலியூஸ் நிர்வாக அலுவலகர், திரு. S.S. தங்கராஜா யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர், அருள் திரு. ஏ.ஜே.பி. அன்ரனைனஸ், அருள் திரு. பி.ஜே. ஸ்ரனிஸ்லோஸ், திரு. பி.ஜே. மரியநாயகம், திரு. ச. சூசைப்பிள்ளை, திரு. சி. அகஸ்ரின, திரு. சி. தார்சியஸ், திரு. அ. றிக்மன், திரு. சி. கைடிபொன்கலன், திருமதி யூலியானா அல்வீனஸ், திரு. அ. அலெக்சாண்டர், திரு. சூ. மரியநாயகம், திரு. S.S. தங்கராஜா, திரு. செ.யோ. எஸ்பீரியா், திருமதி. M.R.C. கொன்ஸ்ரன்ரைன் (இணைப்பு பாடசாலை அதிபர்), திருமதி M.C. நெல்சன் ஆகியோர் அதிபர்கள், திருமதி ஹெ. குணசிங்கம். திரு. யே. அமலசீலன், திருமதி அ. அலோசியஸ், திருமதி எ. பெனடிக்ற் ஆகியோர் உப அதிபர்கள், திரு. வேல்மாறன் புலவர்.
- கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சில் விளையாட்டுத்துறை இயக்குனராக S. மரியதாஸ்.
- தபால் திணைக்களத்தில் 10 பேர். இவர்களில் ம. கிறிஸ்சாந்தூஸ், அ. யேசுராசா உயர் பதவியினர்.
- உள்ளூராட்சி திணைக்களத்தில் 12 பேர். இவர்களில் திரு. இ. டோறஸ் நிர்வாக அலுவலகர், மற்றும் யாழ் மாவட்ட சாரணர் இயக்க ஆணையாளர், திரு. S.N. யோசவ் இறைவரி பரிசோதகர், ம. தங்கத்துரை, S.N.J. மரியாம்பிள்ளை ஆகியோர். எழுதுவினைஞர், பெ. பொன்னுத்தம்பி பிரதான லிகிதர்.
- கலால் திணைக்களத்தில் 5 பேர்.
- சிறைச்சாலைத் திணைக்களத்தில் 8 பேர். இவர்களில் G.P. பேர்மினஸ் களஞ்சியப் பொறுப்பாளர்.
- கலாநிதி பட்டம்பெற்ற வைத்தியர்களாக Dr. A.L. ஏபிரகாம், Dr. J.P.C.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலிப், Dr. சூ. லூக்ஸ் (F.R.C.S.), Dr. த. திருமாறன், Dr. மி. தூயமணி, Dr. பொ. அலோசியஸ், Dr. அ. ஞானசோதி, Dr. ச. மகேஸ் ஆகியோர், வைத்தியசாலை ஊழியர்கள் இருவர், திரு. ச. றிச்மன் இரத்தவங்கி, திரு. க. ஜேம்ஸ் திரு. D.S. தேவசகாயம் (பொறுப்பாளர்) விஞ்ஞான ஆய்வுகூடம்.

ஆயுர்வேத வைத்தியர்களாக பரியாரி. G.B. அன்ரனி (அதிபர், யாழ். ஆயுள்வேத வைத்திய கல்லூரி), பரியாரி நீக்கிலாஸ், பரியாரி இரத்தினம், பரியாரி தம்பித்துரை, பரியாரி லா. வஸ்தியாம்பிள்ளை, பரியாரி சூசைப்பிள்ளை ஆகியோர்.

- காவல்துறையில் 7 பேர். திரு. மு. இராசநாயகம், திரு. M.L. குணசிங்கம் பிரதான லிகிதர்கள்,
- தரைப்படையில் 4 பேர். இரண்டாம் உலப்போர் காலத்தில் பலர் இராணுவத்தில் சேவையாற்றியிருக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கை பெறமுடியவில்லை. பின்னர் அறிந்தவரையில் 14 பேர்கள் கடமையாற்றி யிருக்கிறார்கள் அவர்களில் திரு. A.P.R. டேவிற் – மேஜர் ஜெனரல், திரு. மே. புண்ணிய புவிராஜசிங்கி RASC, P.M. யோண், திரு. பாக்கியநாதர் (அண்ணன்), திரு. பாக்கியநாதர் (தம்பி) ஆகியோர் சாஜன்ட், திரு M. ஜேக்கப் – கேணல் கடெற்.
- கடற்படையில் 6 பேர். இவர்களில் ஞா. பிரான்சீஸ் களஞ்சியப் பொறுப்பாளர்.
- கிரமசேவகர்கள் 7 பேர். இவர்களுக்கு முன்னர் விதானையாக வேலை செய்தவர்களின் எண்ணிக்கைகள் பெறமுடியவில்லை. திரு. பெஞ்சமின் அவர்கள் முதலாவது விதானையாவர்.
- சட்டத்தரணிகளாக 6 பேர். இவர்களில் திரு பெ. பற்றிக் பதில் நீதிவான்
- புகையிர சேவையில் 9 பேர். இவர்களில் திரு. மணிவண்ணன் சாரதி. திரு. மரியாம்பிள்ளை, திரு. பெ. கிறீஸ்துதாஸ் ஏபிரகாம் ஆகியோர் புகையிரதநிலைய அதிகாரிகள்.
- நீதிமன்ற பணியாளர்கள் 7 பேர். இவர்களில் சு. செபஸ்ரியன் செயலாளர், பெ. சின்னத்தம்பி பதிவாளர், திரு. தீயோப்பிள்ளை ஆராச்சியார்.
- மரக்கூட்டுத்தாபனம் 4 பேர். இவர்களில் திரு. L. கிறகரி, அ. மரியதாஸ் ஆகியோர் டிப்போ கீப்பர்கள்.
- உப்புக்கூட்டுத்தாபனத்தில் A.S.P. இரட்ணசிங்கம் – பரிசோதகர்.
- காட்டு இலாகா 4 பேர். இவர்களில் இருவர் உயர் பதவியினர்.
- செயலகம் 5 பேர். இவர்களில் திரு. செபஸ்ரியாம்பிள்ளை சீனி லிகிதர்.
- போக்குவரத்து சபை 13 பேர்
- வங்கி 10 பேர். இவர்களில் திரு. பே. வேதநாயகம் முகாமையாளர், திரு பே. பிரான்சீஸ் உதவி முகாமையாளர்.
- திரு. தா. விவியன் விமலானந்த், திரு. மைக்கல் ஆஞ்லலோ கட்டட படவரைஞர்கள்.
- நில அளவையாளர் 6 பேர். இவர்களில் திரு. பெ. இராசதுரை மேற்பார்வையாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மீன்பிடி கூட்டுத்தாபனம் 6 பேர். இவர்களில் திரு. இ. செபஸ்ரியாம்பிள்ளை யாழ். மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரி அதிபர். திரு. ஆ. சூசைதாசன் பொறுப்பதிகாரி. திரு O.T. மனுவல் அரியநாயகம், திரு. P.M. யேக்கப், திரு அவுறான் பிரான்சீஸ் மீன்பிடி பரிசோதகர்கள்.
- நீர்ப்பாசனப் பகுதி திரு. A.S. வின்சநாயகம்.
- பெருந்தெருக்கள் திணைக்களத்தில் திரு. M.K. மரியதாசன் – ஓவசியர்.
- கூட்டுறவுத்திணைக்களத்தில் 5 பேர். இவர்களில் திரு. அ.யோண்பின்ரன் தலைமைக் காரிலாய பரிசோதகர்.
- காணிக்கந்தோரில் திரு. இ. பிளேவியன் – உதவி D.R.O.
- விவாகப் பதிவாளர் திருமதி க. மருசலீன்.
- துறைமுகம் 3 பேர்.

## குருநகரின் எழுச்சி

என்னால் பெற்றுக்கொள்ளமுடிந்த தகவல்களின் அடிப்படையில், குருநகரின் எழுச்சி மிக்க காலம் முப்பதுகளில் தோற்றம் பெற்றுள்ளது. முப்பதுகளில், யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியில் ஆங்கில மொழியில் உயர் கல்வி பயின்று வெளியேறிய ஒரு தொகுதி குருநகர் இளைஞர்கள், தம்மை உணர்ந்தவர்களாக புதிய சிந்தனையுடனும், உத்வேகத்துடனும் சமூக மாற்றத்திற்காக புரட்சிகரமாக செயற்படத் துணிந்தார்கள். இவர்கள் பாரம்பரிய தொழிலை நம்பியிருக்காது புதிய தொழில் வாய்ப்புக்களைத் தேடுவதில் சுயமாகவே முனைந்து வெற்றியும் கண்டார்கள். இவர்களின் வெற்றியுடன் பாரம்பரியத் தொழில்நிலையிலிருந்து மாற்றங்காணும் எழுச்சி தோற்றம்பெறுகிறது. இவர்களில் சம்பத்திரிசியார் கல்லூரி உதைபந்தாட்ட குழுவுக்கு முன்பு கப்டனாக விளையாடிய அன்ரனி வெலிசோர் அவர்கள் தலைநகர் கொழும்பில் ஐரோப்பியரால் நடாத்தப்பட்ட G. O. H. நிறுவனத்தில் பொறுப்பதிகாரியாக பணியாற்றினர்.

குருநகரைச் சேர்ந்த எவராவது கொழும்பில் கருமமாற்ற வேண்டுமானால் வெலிச்சோர் அவர்கள் இல்லத்திற்குச் செல்வதே ஆரம்பத்தில் வழக்கமாக இருந்தது. அவரது இல்லத்தில் தங்கும் வசதி, உணவு பரிமாற்றம் போன்றவற்றுடன், அவரவர் கருமங்களைச் செய்வதற்கான ஒழுங்குகளும் செய்துகொடுக்கப்பட்டு பாதுகாப்பாக வழியனுப்பியும் வைக்கப்படுவர்.

இவரது சகாக்களான பிலிப் ஜேக்கப், A.R.M. இராஜசிங்கம், A.B. அன்ரனிப்பிள்ளை, செபஸ்ரியன் ஆகியோருக்கும் கொழும்பில் வேலைசெய்யும் வாய்ப்பு கிட்டியது. இவர்கள் வாராவாரம் வெலிச்சோர் அவர்கள் இல்லத்தில் ஒன்றுகூடி சமூக ஆய்வுகளை மேற்கொண்டனர். ஆய்வுகளின் அடிப்படையில் குருநகரைச் சேர்ந்த படித்த இளைஞர்களுக்கு அரச/தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதில் முன்னின்று உழைத்தார்கள்.

அரசியல், கல்வி, சமய, சமூக ரீதியாக பொருத்தமான தலைமைத்துவமின்றி பல விதமான இடர்களுக்குள் சிக்குண்டிருந்த குருநகரை வழிநடத்துவதற்கும், குருநகரை அபிவிருத்தி செய்வதற்குமான திட்டங்கள் தூரநோக்குடன், இவர்களால் மறைமுகமாக உருவாக்கப்பட்டு முன்னெடுத்துச் செல்லப்பட்டன. இதற்கென


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருநகரில் தமது ஏனைய சகாக்களின் உதவிகளைப்பெற்று ஒரு நிழல் நிர்வாகத்தையே நடத்தினர். இதன் மூலம் கல்வி, விளையாட்டு போன்றவற்றில் அதிக அக்கறை மேற்கொள்ளப்பட்டது.

குருநகர் வீடமைப்புத்திட்டம், மற்றும் சமூக மேம்பாட்டு நடவடிக்கைகள் யாவற்றிற்கும் இவர்களே காரணகர்த்தாக்களாக இருந்துள்ளமையும் அறியக்கூடியதாக இருக்கின்றது. புனித யாகப்பர் ஆலயத்தில் இயங்கிய திருப்பாலத்துவ சபையின் முன்னாள் அங்கத்தவத்களான இவர்கள் அச்சபையின்மூலம் இளைஞர்களை உருவாக்கம் செய்வதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்கள். பின்னாளில் இச்சபையில் இருந்தவர்களில் பலர் சமூகத்தின் பல்வேறு தலமைத்துவத்தை ஏற்றுக் கொண்டமை கண்கூடு.

கொழும்பில் இயங்கிய இவர்கள் தமது செயற்பாடுகளுக்கு வலுவேற்றும் முகமாக 'அகில இலங்கை சத்திரிய மகா சபா' வில் இணைந்து கொண்டதுடன் குருநகரைச் சேர்ந்த படித்த இளைஞர் பலரையும் அதில் இணைத்துக் கொண்டனர்.

தவிர, 'அகில இலங்கை நெய்தல் மாநில அபிவிருத்தி சங்கத்'தில் உறுப்பினராய்ச் சேர்ந்ததோடல்லாமல் அதன் கிளை ஒன்றினை யாழ்ப்பாணத்திலும் நிறுவி, தமது சகாக்கள் மூலம் இயக்குவித்து குருநகரில் பல அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டார்கள். இவ்வமைப்புக்களின் மூலம் இவர்கள் அரசுடனும், தூதரகங்களுடனும் ஏனைய அமைப்புக்களுடனும் தொடர்புகொண்டு பல கருமங்களைச் சாதித்துள்ளமை என்றும் நினைவுகொள்ளத்தக்கது.

திரு. பிலிப் யேக்கப் அவர்கள் தம் சுய முயற்சியால் கொழும்பில் 'Jacob & Co' என்ற வர்த்தக நிலையத்தை உருவாக்கியமையும், அன்ரனிப்பிள்ளை அவர்கள் 'சுவெப்ஸ்' (Scheweps) குளிர்பான முகவராக நியமனம் பெற்றமையும் குருநகர் மக்கள் முதன் முதலாக அகில இலங்கை ரீதியான வர்த்தகத் துறையில் பிரவேசித்த நிகழ்வுகளாகும்.


இவர்களைத் தொடர்ந்து சிலர் வர்த்தக ஸ்தாபனங்களில் பல்வேறு சேவைகளில் ஈடுபட்டுள்ளனர். இலங்கையின் பிரபலமான வெளிநாட்டு, உள்நாட்டு கம்பனிகளில் விற்பனையாளர்களாக, வர்த்தக முகாமையாளர்களாக, இயக்குநர்களாக பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலத்தின் ஓட்டத்தில், மக்கள் தொகையின் பெருக்கத்தில், சமூக வாழ்வியலில் மேலும் எழுச்சி தேவைப்பட்டது. அந்த எழுச்சிக்காக எழுபதுகளில் குருநகரைச் சேர்ந்த இளைஞர்கள் ஒன்று கூடி வீறு கொண்டு எழுந்தார்கள். அதனால் தோற்றம்பெற்றது 'குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி'. இதன் உருவாக்கம், குருநகரின் மறுமலர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட களம் அமைத்தது. குருநகரில் இயங்கிய அனைத்து கலை – இலக்கிய – நாடக மன்றங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், தொழில்சார் அமைப்புகள், பங்குச் சபைகள் அனைத்தும் 'குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி' யில் அங்கம் வகித்தன. இதனால் பல்நிலையில் மாற்றங்களை உருவாக்க, கட்டுப்பாட்டுக்குக்கொண்டுவர வாய்ப்பு ஏற்பட்டது. பல முன்னேற்றகரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வெற்றியும் கண்டது. இதன் முயற்சியால் குருநகருக்கென 'கலையரங்கம்' (திறந்தவெளி அரங்கு) கட்டிமுடிக்கப்பட்டது. இக் கலையரங்கத் திறப்புவிழாவிற்கான பிரசுரத்தில் **'கரத்தின் உழைப்பால் உயர்ந்த கோபுரம், கருத்துச் சிறப்பால் பிறந்த காவியம்'** என வண.பிதா நீ. மரியசேவியர் அடிகளாரால் எழுதப்பட்ட வாசகம், இளைஞர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியின் வெளிப்பாட்டை எடுத்தோதத் தவறவில்லை. இக் கலையரங்கம் பலவகையிலும் குருநகர் மக்களுக்குப் பயன்பட்டது. முன்னணியின் செயற்பாடுகளுக்கு உந்துசக்தியாக விளங்கியது. இளைஞர்களின் ஒருமித்த செயற்பாடுகள் பல நிலைகளில் வழிகாட்டல்களாக வெளிப்படலாயிற்று. இன்று அவ்வாறான நிலையைக் காணபதரிது.



குருநகர் இளைஞர் சமுதாயத்தை 'போராட்ட காலத்திற்கு முன், போராட்ட காலத்திற்கு பின்' என இரண்டாக வகுக்கலாம். அந்த இரண்டிலும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடுகள் காணப்படுகின்றது என்பது பலரது கருத்தாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. வலைகளின் அமைப்புகளும் தொழில் முறைமைகளும்

## கரைவலை மடி

கரைவலை மடியில், மடியின் அடியில் வரக்கூடிய மிகக் குறுகிய கண்களையுடைய தூறு, 6 சுற்றுகளை உடையதாக இருக்கும். இங்கு சுற்றின் அகலத்தை 50 கண்கள் எனக்கொள்ளவும். தூறில் இருந்து சற்றுப் பெரிய பெரிய கண்களைக்கொண்ட வலைகளாக ஒவ்வொரு சுத்துகளும் அதிகரித்துச் செல்லும். அனைத்து சுத்துகளும் பொருத்தப்பட்ட பின்னர் மடியின் நீளம் அதாவது, தூறில் இருந்து வாய்வலை வரை 24-26 சுத்துகளாக இருக்கும்.

தூறு மற்றும் சுத்துக்களின் நீளப்பக்க முனைகள் அனைத்தும் இணைக்கப்பட்டு வாய் அகன்ற சாக்குப் பை போன்ற அமைப்பில் மடி தோற்றம் பெற்றதன் பின்னர், தூறின் அகலம் 5 - 6 பாகங்களாகவும், வாய்வலையின் அகலம் 7 - 8 பாகங்கள் ஆகவும், மடியின் நீளம் 12 பாகங்களை உடையதாகவும் இருக்கும். வாய்வலையில் கைவலையை இணைப்பார்கள். கைவலையை ஒரு வேலியாக எடுத்துக்கொண்டால் அது 6 - 7 பாகம் நீள உடையதாகவும் 7 - 8 பாகம் உயரத்தை உடையதாகவும். இருக்கும். (1 சாண் =9 அங்குலம், 1 முளம் = 1½ அடி, 4 முளம் = 1 பாகம் (6அடி)) கைவலையின் அளிகள் பல சுத்து வலைகளைக் கொண்டவையாகும். கண்களின் அளவு வாய்வலைக்குப் பயன்படுத்தப்படும் வலையின் கண்களையொத்த அளவுள்ளவையாகவும் இருக்கும்.

நிலத்தில் விரிக்கப்பட்டுள்ள சாக்குப்பையின் வாய்ப்பக்கத்தை வாய்வலையாக நினைத்துக்கொள்வோம். நிலத்தில் படும்பகுதி மடவலை, மேலே இருக்கும் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோவலையாகும். வாய்வலையின் மடவலை விளிம்பின் மத்தியில் நூல் கட்டி அடையாளமிட்டுவிட்டு வலப்பக்கம் 50 கண்களும், இடப்பக்கம் 50 கண்களும் (100 கண்கள்) எண்ணி அவற்றிற்கும் அடையாளமிடுவார்கள். இதேபோல் மோவலை விளிம்பின் மத்தியிலும் அடையாளமிடுவார்கள். மடவலை, மோவலைகளில் அடையாளமிட்ட நூறு கண்கள் தவிர்ந்த ஏனைய கண்களுடன் (விளிம்பில்) கைவலையின் கண்களை இணைப்பார்கள். மடியின் சுத்துக்கள் பக்கவாட்டில் இணைக்கப்பட்டது. ஆனால் மடியுடன் இணைக்கப்படும் கைவலையின் சுத்துகள் பக்கவாட்டிலல்லாமல் நீளத்தை குறுக்காகத் தறித்துவரும் கண்களுடன் இணைக்கப்படுகிறது.

மடியின் மத்தியில் மடவலை மற்றும் மோவலையின் 100 கண்கள் எண்ணிவிடப்பட்டதல்லவா அதுவே வாசலாகும். வாசலிலிருந்து இரண்டு கைவலைகளும் 'V' அமைப்பில் தெரியும்.

மடி இணைக்கும் வேலை முடிந்துவிட்டது. இவ்வாறு வலையுடன் வலை இணைத்தலை **'பிதைதல்'** என்பர். அவிழ்ப்பதை **'உருவுதல்'** என்பர். இப்போது மடவலை, மோவலைகளின் மொத்த நீளம் இரண்டு கைவலைகளினதும், வாசலினதும் நீளமாகும். மடவலை, மோவலைகளின் விளிம்புகளில் சற்று மொத்த நூலினால் உருவாக்கப்பட்ட மடங்குகளைப் பிதைவார்கள். இந்த மடங்குகள் மடவலை மற்றும் மோவலையின் விளிம்புகள் சேதமுறாதவாறு பாதுகாக்கிறது. வாய்வலையின் மடவலை, மோவலைக்கு மட்டும் மடங்குகளில் கயிறு ஒன்றைக் கோர்ப்பார்கள். இக்கயிற்றை **'நுள்ளான் கயிறு'** என்பர். இந்தக் கயிறானது வாசலின் அகலம் மாற்றமுறாதவாறு இருப்பதற்கென விடப்படுவதாகும். வாசலின் அகலம் மூன்று முளமும் ஒன்றரை சாணும் ஆகும். இந்த வாசலை **'கல்லடி'** என்பார்கள்.

மடியின் மடவலை, மோவலையுடன் **'பெருக்கங்கயிறு'** (பெருங் கைக்கயிறு) இணைப்பார்கள். பெருக்கங்கயிறானது 1½ அங்குல விட்டமுடைய கம்பான் கயிறு ஆகும். 17 - 18 பாகத்திற்குமேல் நிளமுள்ளதாக இருக்கும். இக்கயிறானது இரண்டு முனைகளும் தனித்தனியே சிறிய வட்டமாக மடித்து கட்டப்பட்டிருக்கும். இந்த வளையத்தினில் கரைவலைக்குரிய மிகுதி வலைகளை மடியுடன் பொருத்துவதற்கும், அகற்றுவதற்கும் இலகுவாக இருக்கும். இந்த மடிப்பு வளையத்தை **'கொண்டை'** என அழைப்பார்கள்.

பெருக்கங்கயிற்றை மடியுடன் இணைப்பதை **'மந்து அடித்தல்'** என்பர்.ஒவ்வொரு சாண் இடைவெளிவிட்டு தனித்தனி நூல்களால் மடங்குகளையும், பெருக்கங் கயிற்றையும் இறுக்கிப் பிணைத்துக் கட்டுவதே மந்து அடித்தலாகும். பெருக்கங் கயிற்றை இரண்டாக மடித்து மத்தியில் அடையாளமிட்டுவிட்டு வாசலுக்கென விடப்பட்ட 100 கண்களில் வலம், இடமென 50 கண்கள் வருமாறுபோல் மத்தியில் மடங்கு, நுள்ளான் கயிற்றுடன் சேர்த்து மந்து அடிப்பார்கள். நுள்ளான் கயிற்றில் வாசலின் வலது புறமும், இடது புறமுமாக 1½ முழமும் ¾ சாணுமாக வருமாறு (மொத்த வாசல் நீளம் 3 முளம் 1½ சாண்) அளந்து, 100 கண்களையும் அதற்குள் உள்ளடக்கி நுள்ளான் கயிற்றையும், பெருக்கங்கயிற்றையும் சமாந்தரமாக வைத்து மந்து அடிப்பார்கள். வாசலில் கோர்க்கப்பட்டுள்ள நுள்ளான் கயிற்றை அளந்து பெருக்கங் கயிற்றுடன் மந்து அடிப்பதை நன்கு அனுபவம் வாய்ந்தவர்களே செய்வார்கள். மேற்கொண்டு இருபக்க கைவலைகள் வரை தொடராக மந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்பார்கள். மோவலைக்கும் இவ்வாறே மந்து அடிப்பார்கள். இப்போது மடியின் ஒட்டுமொத்த இணைப்பும் இரண்டு பெருக்கங்கயிற்றில் தங்கியிருக்கிறது. பெருக்கங் கயிற்றின் மடவலை, மோவலை முனைகள் மடியின் முனைகளாக அமைந்துவிட்டது. தொழில் செய்யும் வேளைகளில் மடியின் முனையிலுள்ள கொண்டையில் ஏனைய வலைகளை இணைப்பார்கள். மேற்கொண்டு இணைக்கப்படுகின்ற ஏனைய வலைகள் அனைத்தும் இன்றுவரை கயிற்றால் பின்னப்படுவதாகும். அவைகளாவன:

1. **மாரிவலை:**

கைவலையின் ஆரம்பத்தில் உள்ள கொண்டையில் பொருத்தப்படுகிறது. ஒவ்வொரு ஊண்ணும் (கண்ணின் முக்கோண நீளம்) 1 சாண் நீளமாகவும், வலையின் நீளம் 8 பாகமாகவும் (64 ஊண்) இருக்கும்.

2. **மாலக்கண்ணி**

மாரிவலையுடன் பொருத்தப்படுகிறது. ஒவ்வொரு ஊண்ணும் 1½ சாண் நீளமாகவும், வலையின் நீளம் 10 பாகம் 2 முளமாகவும் (56 ஊண்) இருக்கும்.

3. **நடுவணி**

மாலக்கண்ணியுடன் பொருத்தப்படுகிறது. ஒவ்வொரு ஊண்ணும் 1 முளம் நீளமாகவும், வலையின் நீளம் 7 பாகம் 3 முளமாகவும் (31 ஊண்) இருக்கும்.

4. **ஈலக்கண்ணி**

நடுவணியுடன் பொருத்தப்படுகிறது. ஒவ்வொரு ஊண்ணும் 2 முளம் நீளமாகவும், வலையின் நீளம் 10 பாகம் 2 முளமாகவும் (21 ஊண்) இருக்கும்.

5. **ஈரவலை**

ஈலக்கண்ணியுடன் பொருத்தப்படுகிறது. ஒவ்வொரு ஊண்ணும் 3 முளம் நீளமாகவும், வலையின் நீளம் 11 பாகம் 1 முளமாகவும் (15 உண்) இருக்கும். ஆறு ஈரவலைகள் பொருத்தப்படும்.

மடியிலிருந்து செல்லச்செல்ல ஒவ்வொரு வலையின் கண்கள் பெரிதாகிச் செல்கிறது. எவ்வளவு பெரிதான கண்களைக்கொண்டதாக இருப்பினும் வலை இழுக்கும்போது எந்தவொரு மீன்களும் தப்பிச்செல்லாதவாறு நெருக்கமாக இருக்கும். “ஆனை பூருற கண்ணானாலும் அயிர கூட பூராது” (ஆனை - யானை, அயிர - மிகச்சிறிய மீன்) என தொழிலாளர் அடிக்கடி கூறுவதுண்டு.

ஈரவலைக்குப் பின்னால் கம்பான் கயிறு இணைக்கப்படும். ஈரவலையுடன் கம்பான்கயிறு இணைக்கப்படும் முனையை **‘கொண்டலம்’** என அழைப்பர். கம்பான் கயிறானது ஒவ்வொன்றும் 25 பாகம் நீளமுள்ளதாக இருக்கும். பொதுவாக 10 முதல் 15 கயிறுகள் ஒவ்வொரு பக்கத்திற்கும் பயன்படுத்தப்படும்.


## கரைவலை தொழில்முறை

1865 ஆம் ஆண்டளவில் மிக உச்சநிலையில் இருந்துள்ள கரைவலையின் மடி மற்றும் ஏனைய வலைகள் பற்றி அறிந்துகொண்டீர்கள். கரைவலைத் தொழிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'கரைவலை வளைத்தல்'** எனவும் அழைப்பர். குறிப்பிட்ட இடத்தை, வலைகள், கம்பான் கயிறுகள்கொண்டு வளைத்து இழுப்பதனால் அவ்வாறு அழைக்கப்படுகிறது. வளைத்து இழுக்கும் குறிப்பிட்ட இடத்தை 'பாடு' என்பர். கடலில் எல்லா இடங்களும் பாடுகளல்ல. கடல் நீரோட்ட தன்மை, ஆழப்பகுதிகளின் தூரம், கடலடிக் கற்பாறைகளின் தன்மை, பிடிபடக்கூடிய மீனினங்கள் தன்மை, கரைகள், களங்களின் அமைப்பு போன்றவையைக்



கருத்தில்கொண்டு பாடுகளைத் தேர்வுசெய்துகொள்வர். இதற்கு கடல் அனுபவம் அவசியம்.

கரைவலையானது, குறிப்பிட்ட ஒரு கரையை அண்டிய ஆழங்குறைந்த கடல் பகுதியில் தொழிலாளர்கள் வரிசையாக நின்று, ஆழ்கடலில் போடப்பட்டுள்ள மடியை கரைநோக்கி இழுத்து அதற்குள் புகுந்துகொண்ட மீன்களை சேகரிப்பதாகும். அவ்வாறு மடியைக் கரைக்கு இழுப்பதற்கு தொழிலாளர் நின்று இழுக்கவிருக்கும் கடற்பகுதி அதிக ஆழமற்றதாக இருக்கவேண்டும். கடல்நீர் மார்பளவு இருந்தால் பொறுப்பாக நின்று மடியை இழுக்கமுடியாது. கடல்நீர் இடுப்பளவு இருக்குமானால் பொறுப்பாக நின்று இழுப்பதுடன், வீச்சாக இழுப்பதற்காக சரிந்து சரிந்தும் இழுக்கலாம். கரைவரை ஆழமான கடற்பகுதியாயின் மணலில் நின்றுதான் இழுக்க வேண்டும். கம்பான் கயிற்றை கரையில் நின்று இழுத்தாலும் தொடர்ந்துவரும் ஏனைய வலைகளை கரையில் நின்று இழுக்க எவரும் விரும்புவதில்லை. அவற்றை படகில் ஏற்றுவது முதல் பல சிரமங்களை எதிர்நோக்கவேண்டியிருக்கும்.

தொழில் புறப்படும்போதே மேலாப்பாச்சி மற்றும் அனுபவமுள்ளவர்களால் பாடு தீர்மானிக்கப்பட்டுவிடும். அனைத்து தொழிலாளர்களும் தோணியில ஏறியவுடன் குறித்த பாடு நோக்கி பாய் இழுத்துச் செல்வார்கள். காற்றோட்டம் குறைவாக அல்லது காற்று சாதகமற்று இருந்தால் மரக்கோல்களால் தாங்கியவாறு செல்வார்கள். பாட்டிற்குரிய கரைக்குச் சென்றவுடன் மொத்தத் தொழிலாளரில் ஒரு பகுதியினரை கரையில் இறக்கிவிட்டு, கம்பான் கயிற்றின் முனையை அவர்களிடம் கொடுத்துவிட்டு ஆழ்கடல் நோக்கி தோணியைச் செலுத்துவார்கள். மீதிப்பேர்கள் தோணியில் இருந்தவாறே கம்பான் கயிறுகளை போட்டவண்ணம் ஆழ்கடல்நோக்கி செங்குத்தாகச் செல்வார்கள். பாட்டின் தன்மை, தூரத்திற்கேற்ப சாதாரணமாக 10 முதல் 15 கம்பான் கயிறுகள் ஒவ்வொரு பக்கமும் இருக்கும். ஆனால் ம. சூசைப்பிள்ளையின் 'காகம் படகு' 40 கம்பான் கயிறுகளை ஒவ்வொரு பக்கங்களிலுமிட்டு நாள்பூராவும் இழுத்தமையும் உண்டு. அதேவேளை 4 கம்பான் கயிறுகளைப் பயன்படுத்துகிற பாடுகளுமுண்டு.

கம்பான் கயிறு முற்றிலும் இறக்கிமுடிந்ததும் கம்பான் கயிற்றின் இறுதிமுனையை ஈரவலையிலுள்ள கொண்டலியுடன் இணைத்து அதனையும் கடலில் இறக்குவார்கள். ஈரவலை முதல் தொடரவுள்ள அனைத்து வலைகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடவலையில் ஓட்டைக் கற்களை கயிற்றில் இணைத்து கட்டியிருப்பார்கள். இவ் ஓட்டைக் கற்களை **'வாகுகல்'** என அழைப்பர். இதனால் மடவலை, கடல் நிலத்தைநோக்கி தாழ்ந்து செல்லும். மோவலைக்கு மிதக்கும் சக்தி வாய்ந்த **'புணை'**யைக் கயிற்றில் இணைத்து கட்டியிருப்பார்கள். புணையானது **'தில்லை'** மரத்தில் வெட்டப்பட்ட மரத்துண்டாகும். ஒரு முளம் வரை நீளமாக இருக்கும். புணையின் இரு தலைப்புகளிலும் கயிறுகள் கட்டி மோவலையில் பொருத்துவார்கள். இதனால் இது கடலின் மேற்பகுதிநோக்கி மிதந்துகொண்டிருக்கும். இத்தன்மையானது வலை, கடலில் வேலிபோன்று காணப்படும்.

கற்கள், புணைகளைக் கட்டுவதிலும் வலைக்குவலை வேறுபாடுகள் உண்டு. அளவுத்திட்டத்தின் பிரகாரம் கட்டிவைத்திருப்பார்கள். ஆழம் அதிகமானால் இடைக் கல்லும் கட்டுவார்கள். இது சூழ்நிலை சார்ந்தது. தேவை முடிந்ததும் இடைக் கல்லுகளை அவிழ்த்துவிடுவார்கள்.

ஈரவலையைத் தொடர்ந்து ஈலக்கண்ணி, நடுவணி, மாலக்கண்ணி, மாரிவலை போன்ற வலைகளை இறக்குவார்கள். ஈரவலைமுதல் மாரிவலை வரை அனைத்தும் கயிற்றால் பிதையப்பட்டிருக்கும். வலைகளை இறக்கும்போது வலைகளில் இணைக்கப்பட்டுள்ள கல்லுகள், புணைகள் ஒன்றுடன் ஒன்று சிக்குறாதவாறு இறக்கவேண்டும். குறைந்த விஸ்தீரணமுள்ள படகில் அனைத்து வலைகளும் இழுத்துப் போட்டவாறே கிடக்கும். எனவே இறக்கும்போது இவற்றை ஒருவர் தூக்கிக்கொடுக்க மற்றவர் கலையாது ஒடுக்கிக்கொடுக்க, மேலும் இருவர் மடவலை, மோவலை சிக்குறாதவாறு பிரித்து இறக்க, ஒருவர் எழக்கூடிய தடைகளை விலக்கிக்கொடுக்க இடையூறின்றி தோணி செல்லும் வேகத்துக்கு ஈடுகொடுத்து இறக்கிக்கொண்டேயிருப்பார்கள். இதற்குப் போதிய பலமும், அனுபவமும் உள்ளவர்களாக இருக்கவேண்டும்.

கம்பான் கயிற்றை இறக்கியபடி செங்குத்தாக சென்ற படகு, வலைகளை இறக்கும்போது பாட்டு எல்லைக்குள் சற்று உள்நோக்கியதாகச் செல்லும். மாரிவலையைத் தொடர்ந்து மீன்பிடிப்பதற்கு உயிர்நாடியாகவுள்ள மடியை இறக்குவார்கள். மடியின் மடவலை, மோவலை கொண்டையுடன் மாரிவலையைப் இணைத்து, கைவலையோடு கயிற்றால் பிதைந்துகொள்வார்கள். மடியைத்தவிர ஏனைய வலைகள் எப்போதும் பிதைந்த நிலையிலேயே இருக்கும் மடியை மட்டும்தான் தொழில் செய்யும்போது பிதைந்து, தொழில் முடியும்போது உருவுவதுண்டு. மடியின் மோவலை எக்காரணம் கொண்டும் தண்ணீருக்குள் அமிழக்கூடாது என்பதற்காக மடியின் மோவலைக்கு **'மலைவேம்பு'** புணை கட்டுவார்கள். இது கணிசமான பாரத்தை தாங்கிப்பிடிக்கக்கூடியது.

மடி இறக்கப்படும் இடம் பாட்டின் மையப்பகுதியாக இருக்கும். இதுவரை கரையிலிருந்து ஆழ்கடல்நோக்கிச் சென்ற தோணி மடியை முற்றாக இறக்கியதும் மீண்டும் கரையை நோக்கித் திரும்பிச் செல்லும். முன்னர் இறக்கப்பட்டதற்கு எதிர்மாறாக மடியுடன் மறுபக்கம் பிதைந்து வலைகளை இறக்கிக்கொண்டு செல்வார்கள். இதன்படி மாரிவலை, மாலக்கண்ணி, நடுவணி, ஈலக்கண்ணி, ஈரவலை போன்றவற்றை இறக்குவார்கள். தொடர்ந்து கம்பான் கயிறுகளையும் இறக்கி, தோணியிலிருந்தவர்களையும் கரையில் இறக்கி கம்பான் கயிற்றின் மறு முனையை அவர்களிடம் கொடுத்துவிடுவார்கள். ஏற்கனவே கரையில் நிற்கும் மறுபக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்களுக்கும், தற்போது கரை இறங்கியவர்களுக்கும் இடையில் கிட்டத்தட்ட ஒரு கிலோ மீற்றர் தூரம் இருக்கும்.

தோணி ஆழ்கடல் சென்று மீளுவதற்கு காற்று சாதகமாக இருந்தால் பாயிலும், காற்று சாதகமற்றதாக இருந்தால் தாங்கியவாறுமே செல்வார்கள்.

இருபக்கத்தினரும் கரையில் இழுக்கத் தயாராவார்கள். இப்போது பாட்டுக்குரிய எல்லை, வலைகளால் வேலிபோன்று தடுக்கப்பட்டிருக்கும். இதனால் மீனினங்கள் பாட்டைவிட்டு வெளியேற வாய்ப்பில்லை. இருப்பினும் சரிந்து நிமிரக்கூடிய **'ஆரியக் கட்டா'** போன்ற மீனினங்களும், பாய்ந்து செல்லக்கூடிய **'சிறையா'**, **'கயல்மீன்'** போன்ற மீனினங்களுடன் வேறு சில மீனினங்கள் எந்தத் தடுப்பையும் பொருட்படுத்தாமல் வெளியேறிவிடும்.

கரையிலிருந்து பார்த்தால் புணை மிதப்புகள் பிறை வடிவில் தெரியக் கூடியதாக இருக்கும். மேலாப்பாச்சி அனைத்தையும் கண்காணிப்பார். மேற்கொண்டு தமது கையை அல்லது துணியை அசைத்து சைகை செய்து வலையை இழுப்பதற்கு கட்டளையிடுவார். உடனே இரு பகுதியினரும் கம்பான் கயிற்றைப் பிடித்து இழுக்கத் தொடங்குவார்கள். இவ்வாறு சைகை செய்வதை **'லாவுதல்'** என்பர். லாவுதலில் உள்ள மாறுபட்ட தன்மைகளை தொழிலாளர் இலகுவில் புரிந்துகொள்வார்கள்.

தொழிலாளர் **'அம்பா'** பாடியபடி கயிற்றை இழுத்துக்கொண்டிருப்பார்கள். 'அம்பா' என்பது மீனவர்கள் தொழில் செய்யும்போது உற்சாகத்துடன் செய்வதற்காக, அனைவரும் இணைந்துபாடும் நாட்டார் பாடலாகும். அம்பா பாடல்களும், அவை பற்றிய விளக்கங்கங்களுடனும் மு. புஸ்பராஜன் (குருநகர்) அவர்கள் 1976 இல் நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். கூட்டாக வேலைசெய்யும் தொழிலாளர்கள் ஒத்திசைந்து வேலை செய்வதற்கு அம்பா வழிவகுக்கின்றது. இதனால் இப்பாடல் மீனவர்கள் மத்தியிலே இன்றும் நிலைத்து நிற்கிறது. கரைவலை இழுக்கும்போது ஒத்திசைந்து இழுக்காவிட்டால் ஒருவர்கால் மற்றவரின் கால்களுக்குள் சிக்குண்டு விபத்துகள் ஏற்பட வாய்ப்புண்டு எவ்வாறெனில்;

தொழிலாளர் இடுப்பளவு நீரிலிருந்து கயிற்றைப் பிடித்தவாறு சிறிய இடம்விட்டு வரிசையாக கடல் எல்லைவரை நிற்பார்கள். இழுக்கத்தொடங்கியதும் பின்புறமாக கரையை நோக்கியே இழுத்தவாறு செல்வார்கள். கரையில் அதிக தூரம் செல்லமாட்டார்கள். கடல் எல்லையிலிருந்து 10-15 மீற்றர் தூரத்தை இறுதியில் நிற்பர் அடைந்ததும் அவர் தமது இடத்தைவிட்டு முன்னோக்கி நகர்ந்து (ஓடி) முதலாம் ஆளுக்கு முன்னால் கயிற்றில் பிடித்து இழுத்து வருவார். இப்படியே ஒவ்வொரு இறுதி ஆளும் முன்னால் சென்று பிடித்து இழுத்துவருவார்கள். மாறிமாறி தண்ணீரில் பாதியளவு நனைந்து மீளுவதால் களைப்பின்றி இழுக்கக்கூடியதாக இருக்கும். இந்தப் பயிற்சி காரணமாக குருநகரில் நடைபெறுகிற விளையாட்டுப் போட்டிகளில் கயிறு இழுவைப்போட்டி தவறாது நடைபெறும்.

கயிற்றை இழுக்கும்போதும் கைகளால் பிடித்து இழுப்பதில்லை. அப்படி இழுத்தால் இழுவை வீச்சாக இருக்காது. கைகள் வலிக்கத்தொடங்கிவிடும். நீண்டநேரம் இழுக்கமுடியாது. இதனால் ஒரு பாகம் நீளங்கொண்ட பல இழை கயிற்று மடிப்புகளை (ஒற்றைக் கையால் பொத்தப்பிடிக்கக்கூடிய அளவு) சேர்த்து அவற்றின் மையப்பகுதியில் இரண்டு முளத்திற்கு துணியை இறுக்கச் சுற்றியிருப்பார்கள். பின்னாளில் துணிக்குப் பதிலாக சைக்கிள் ரியூப்பில் கோர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்தார்கள். இதனை **'பழங்கயிறு'** என்பர். பழங்கயிற்றில் சீலை சுற்றிய பகுதியால் (சைக்கிள் ரியூப்) இடுப்பைச் சுற்றி, ஏனைய கயிற்றுப் பகுதியால் கம்பான் கயிற்றைச் சுற்றி மடிப்பிட்டு கைகளால் பிடித்தவாறு நாரியால் சரிந்து இழுப்பார்கள். அவ்வாறு இழுக்கும்போது எல்லோரும் அணிநடைபோன்று ஒருமித்து வலதுகாலை ஒன்றாகவும், இடதுகாலை ஒன்றாகவும் வைத்து இழுப்பார்கள். இதனால் இடுப்பில் சற்று வலி எடுத்தாலும் இலகுவாக இழுக்கக்கூடியதாக இருக்கும். இதற்கு அம்பா துணைசெய்கிறது.

தொழிலாளர்களின் ஒத்திசைவான இழுவையால் மடி மெல்ல மெல்ல கரையை நெருங்கி வரும். மடி நெருங்கி வர வர கயிறு இழுப்பவர்கள் ஒடுங்கி வந்துகொண்டேயிருப்பார்கள். இரண்டு பக்க கயிற்றுக்கும், மடிக்கும் இடைப்பட்ட பாட்டு எல்லைக்குள் விபரமறியாது மீன்கள் சுற்றிக்கொண்டேயிருக்கும். மீன்களின் நடமாட்டத்தை மூன்று நிலையாகக் கொள்ளலாம்.

முதலாவது, நீரின் அடியில் கடல் தரையோடு உரசியபடி நடமாடும். இரண்டாவது, கடலின் நடுநீரில் நடமாடும். மூன்றாவது, நடுநீரில், மேல் நீரில் நடமாடுவதுடன் நீருக்கு மேலாகத் துள்ளிப் பாய்ந்துசெல்லும். மூன்றாவது வகை நடமாட்ட மீன்கள் கரைவலையில் பிடிபடாது. நடுநீரில் நடமாடும் மீன்கள் கூட்டமாக நடமாடும்போது மீன்களின் முதுகுப்புறம் நீரில் சிவப்பு நிறமாகத் தெரியும். அதனை மீன் **'சிவப்புக்கட்டி'** நிற்கிறது என்பர். நீரின் அடியில் கடல் தரையோடு உரசியபடி நடமாடும் மீன்கள் தொகையாக நிற்கும்போது வலைகளின் நெருக்கம் காரணமாக அங்குமிங்கும் ஓடுதலால் ஏற்படும் மண் உரசல், நீர்ச்சுழிகளால் கடலின் அடியில் உள்ள மணல் மேலே எழும்புவதுண்டு இதனை **'கலக்கெறிதல்'** என்பர். சில மீன் இனங்கள் கூட்டமாக நின்றால் கடலின்மேல் ஒரு திரவப் படர்வினைக் காணலாம். கூட்டாய் நிற்கும் மீன்கள் தமக்குவேண்டிய இரைகளைப் பிடித்து கக்குவதால் ஏற்படுகிறது. இத் திரவப்படர்வினை **'பிலாவளிச்சல்'** என்பர். காற்றின் உந்தல் எதுவுமின்றி கடல்நீர் இருக்குமானால் அமைதியாக, தெளிவாக இருக்கும். இதனை **'மான்பாடு'** என்பர். மான்பாடாக இருக்கும்போது கடலின் அடிவரை கண்ணாடிபோன்று தெளிவாகத் தெரியும். நிலவு அற்ற இரவுகளில் மீன்கள் வாலை ஆட்டும்போது தண்ணீரின் அசைவுகள் மின்னொளிபோலத் தெரியும். இதனை **'வெச்சாப்பு'** அல்லது **'கவிர்'** என்பார்கள்.

தெரியக்கூடிய நிறங்களையும், மீனின் அசைவுகளையும்கொண்டு மீனின் இனத்தைக்கூடக் கண்டுபிடித்து சொல்லக்கூடிய திறமை படைத்தவர்களாக பலர் இருப்பர். கலக்கெறிந்து நின்றாலோ, சிவப்புக்கட்டி நின்றாலோ, பிலாவளிச்சலாக இருந்தாலோ, வெச்சாப்பாய் தெரிந்தாலோ மடி நெருங்கி வரும்போது கரையில் வலை இழுக்கும் தொழிலாளர்கள் ஓரளவு அவற்றைப் பார்க்கக்கூடியதாக இருக்கும். அவ்வாறு பார்க்கநேரிட்டால் மிகவும் வேகமாகவும், உணர்ச்சி பொங்கவும் இழுப்பார்கள்.

இருபக்க கம்பான் கயிற்றின் முனைகளில் இணைக்கப்பட்ட ஈரவலைகள் கரையை நெருங்கி வருகையில், பாட்டுக்குள் நிற்கின்ற மீன்களை அறிவதற்காகவும், வலைகளைப் பரிசோதனை செய்வதற்காகவும் இரு 'மேலாப்பாச்சி' கள் இருபக்கத்தாலும் ஈரவலையில் இருந்து ஒவ்வொரு வலைகளாகப் பரிசோதித்தபடி மடியை நோக்கி நீந்திப் போவார்கள். இடைக்கிடை அரவமின்றி கடல்நீருக்குள் சுழியோடு மீன்களின் தன்மை, மீன் இனங்கள், மீன்களின் அண்ணளவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கைகள் போன்றவற்றைக் கண்காணிப்பார். கணிசமான மீன்களின் நடமாட்டத்தைக் கண்டுவிட்டால் மேலேவந்து தொழிலாளருக்கு லாவுவார். அவரது லாவுதல் தொழிலாளருக்கு உற்சாகத்தைக் கொடுக்கும். மேலும் வேகமாக இழுப்பார்கள். நெடுநேரமாகியும் மேலாப்பாச்சி லாவாது இருந்தால் தொழிலாளர் களுக்குச் சோர்வு ஏற்படக்கூடும்.

மேலாப்பாச்சி மடியின் மடவலைநோக்கி சுழியோடி மடி ஒழுங்காக அதாவது மடி வலம், இடம் சம அளவாக வருகிறதா எனக் கண்காணிப்பார். சிலவேளை ஒருபக்கம் இழுபட்டு, மறுபக்கம் இழுபடாமலும் வரக்கூடும். அவ்வாறு வருமாகில் மீன்கள் மடியுக்குள் புகுவதற்குத் தடையாக இருக்கும். உடனே மேலாப்பாச்சி மேலே வந்து இழுத்து சமப்படுத்தவேண்டிய பக்கத்துக்கு லாவுவார். லாவுதலின் பல தன்மைகள் உண்டு. அவற்றை நிரந்தர தொழிலாளர்கள் நன்றாக அறிந்து வைத்திருப்பார்கள். அதனால் மேலாப்பாச்சியின் லாவுதலை தொழிலாளர் இனங்காணுவதில் சிரமமிருக்காது. மடியைச் சென்றடைந்த மேலாப்பாச்சிகள் மடி கரையை நெருங்கும்வரை மடியுடனேயே இருப்பார்கள். இடைக்கிடை மடியையும், கைவலைகளையும் பரிசோதித்து ஆகவேண்டியவற்றிற்காக ஆணையிடுவது அவர்களின் வேலையாக இருக்கும்.

மடி கரையை நெருங்குகையில் இருபக்கமும் வலைகளை இழுத்த வண்ணமிருந்த தொழிலாளர்கள் கிட்டத்தட்ட அண்மைக்கு வந்துவிடுவார்கள். இதனால் இரண்டு பக்க வலைகளும் அண்மியதாக அகண்ட வாய்க்கால்போல வந்துவிடும். மாரிவலை கரையை நெருங்குகையில், வலை இழுக்கும் முதலாம் ஆளிலிருந்து கிட்டத்தட்ட 20 யார்கள் தூரத்தில் (ஆழ் குறைந்த பகுதியாக இருக்கும்) இருபக்கத்தையும் அடைத்தாற்போல் குறுக்காக மூவர் அல்லது நால்வர் வலையைப் பிடிப்பார்கள். இந்த வலையை **'எருவலை'** என்பார்கள். இது குறுக்கே போட்ட வேலியைப்போல் இரண்டு பக்கத்தையும் அடைத்துக்கொண்டிருக்கும். இந்த எருவலையானது கரையைத்தேடி வரும் மீன்கள் மேலும் கரைக்குச் செல்லாமல் தடுக்கிறது. இதனால் தடுக்கப்பட்ட மீன்கள் மடியைநோக்கித் திரும்பிச்சென்று அதற்குள் புகுந்துகொள்ளும். திருக்கை, நெடுமுரல் போன்ற மீன்கள் மேலும் கரைக்கு வந்துவிட்டால் வலை இழுப்பவர்களுக்கு ஆபத்தாக முடியும். இவற்றின் தாக்கங்களிலிருந்து எருவலை தொழிலாளரைப் பாதுகாக்கின்றது.

தொழிலாளரின் நிறுத்தாத இழுவையால் மடி எருவலையை நெருங்கிவந்து சந்திக்கும். மேற்கொண்டு இழுக்கும் வேலை இல்லை. எருவலையும், மடியும் சந்தித்தவுடன் தொழிலாளர்கள் மடியின் மடவலையைப் பிடித்து மேலே தூக்குவார்கள். இப்போது அனைத்து மீன்களும் மடிக்குள் திணிக்கப்பட்டுவிடும். வாய்ப்பக்கத்தை உயரே தூக்கியபடி தோணியை நோக்கி இழுத்துச் செல்வார்கள். தோணி மிக அண்மைக்கு கொண்டுவரப்பட்டிருக்கும். அவ்வாறு இழுக்கும்போது பரவலாக நின்ற மீன்கள் நெருங்கி தூறை நோக்கிப்போய்விடும். மேற்கொண்டு மடியை வட்டமாக்கி அனைவரும் வட்டமாக நின்று மடியை உட்பக்கத்தால் உதறி உதறி இழுத்து நெருக்குவார்கள் நெருக்குதலால் மீண்கள் அனைத்தும் மடியின் தூறுக்குள் தேங்கிவிடும். தொடர்ந்து வட்டமாக நிற்பவர்களில் சிலர் தூறை சற்று மேலே தூக்கிப் பிடித்துக்கொள்வார்கள். பெரிய கிண்ணத்தைப்போல் தோற்றமளிக்கும். அதற்குள் மீன்கள் ஓடிக்கொண்டிருக்கும். சுற்றுவர நிற்கும் ஏனையவர்கள் பெரிய மீன்களை வால்களில் பிடித்தத் தூக்கி படலில் எறிவார்கள். விரைவாகச் செய்வார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய மீன்களை மடியுக்குள்ளே ஒடுக்கி தூக்கி படகுக்குள் கொட்டுவார்கள். இத்துடன் ஒரு பாடு முடிந்தது. வலைகள், கம்பான் கயிறுகள் அனைத்தையும் இழுத்து தோணியில் வளைத்து வளைத்து ஏற்றியபின்னர் புறப்பட்டுச்செல்வார்கள்.

இதுபோன்ற இரண்டு பாடுகள், நேரத்தைப்பொறுத்து மூன்று பாடுகளும் இழுப்பார்கள் போதிய மீன் பிடிபட்டால் ஒரு பாட்டுடனும் திரும்பிவிடுவார்கள். தூர இடமானால் இரவு தங்கித் தொழில்செய்வார்கள். இதனை **'தங்குதொழில்'** என்பர். சென்றடைகின்ற நேரத்தைப்பொறுத்து சாயந்தரம் ஒரு பாடு வளைப்பார்கள். அந்த மீன்களை கடலிலே ஒரு மடியிலிட்டு கட்டிவைப்பார்கள். இதனை **'கட்டுமடி'** என்பர். கட்டுமடியானது குடையைக் கவிழ்த்துப் (குடையின் கம்பிகள், தடியை நீக்கலாக) பிடித்ததுபோன்ற அமைப்பில் இருக்கும். மீன்களை கட்டுமடியில் விட்டு நான்கு அல்லது ஆறு உயர்ந்த கம்புகள் கடலில் பாய்ந்து (நட்டு), கட்டுமடியின் விளிம்புகளை சற்று உயர்த்தி விரித்து கட்டியிருப்பார்கள். கட்டுமடியின் பெரும்பாகம் கடல் நீருக்குள் இருக்கும். மடியிலிருந்து நேரடியாக கட்டுமடிக்கு மாற்றுவதனாலும், கட்டுமடியில் மீன் நிற்குமிடங்கள் நீருக்குள் இருப்பதனாலும் மீன்கள் அனைத்தும் உயிருடனே உலாவும். ஒருசில விதிவிலக்கு ஏதேனும் பாதிப்பால் இறப்பதுமுண்டு. அதனைக் கட்டு மடியிலிருந்து எடுத்து உடன் சமைப்பதற்கு பயன்படுத்துவார்கள். பாடுகள் யாவும் வளைத்து முடிந்த பின்னர் புறப்படும்போது கட்டுமடியிலிருக்கும் மீன்களையும் எடுத்துவருவார்கள். தங்குதொழிலுக்கு மாத்திரம் கட்டுமடி பயன்படுத்துவ தென்பதில்லை. மீனை உயிருடன் பாதுகாக்கவேண்டிய தேவை ஏற்படும்போதெல்லாம். பயன்படுத்துவார்கள். அதற்கான தயார்நிலையில் 2,3 கட்டுமடிகள் இருக்கும். கட்டுமடியில் மீன்களைக் கட்டினால் காவலுக்கு ஆட்கள் இருப்பார்கள். கரையை அண்மியதாக கட்டப்படுவதால் திருட்டுப்போகாமலும், பகலில் பறவையினங்கள் மீன்களை அபகரித்துச் செல்லாமலும் இருப்பதற்காக காவலிடப்படுகிறது. உச்ச வெய்யில் காலங்களில் கரையை அண்மிய பகுதிகளில் கடல் நீர் சுடுவதுண்டு. இக்காலங்களில் கரையை அண்மியதாகக் கட்டாமல் சற்று ஆழத்திலேயே கட்டுவார்கள். கட்டுமடி பிரயோகம் ஆரம்ப காலங்களில் இருக்கவில்லை. கட்டுமடி பயன்படுத்தப்பட்டதன் பின்னர், மடியிலிருந்து பகுதி பகுதியாக மீன்களை கட்டுமடிக்குள் எடுத்து கட்டுமடியையே தோணிக்கு இழுத்துச்சென்று மீன்களை எடுப்பார்கள்.

மீன்களை கணக்கிடும்போது ஒரு சுத்து மீன், இரண்டு சுத்து மீன் என்பார்கள். மடி பல சுத்துகளாக பொருத்தப்படுவதால் மடியின் தூறுக்குள் உள்ள மீன்கள் ஒரு சுத்துக்குள் உள்ளடக்கப்படுமானால் அதனை ஒரு சுத்து மீன் என்பர். சாதாரணமாக ஒரிரு சுத்து மீன்களே பிடிபடுவதுண்டு. இது சாதாரண உழைப்பாகும். ஒரே தடவையில் பல சுத்து மீன்களும் பிடிபடுவதுண்டு. மீன்கள் கொள்ளமுடியாமல் மடி வெடித்து கிழிவதுமுண்டு.

மடியின் கல்லுகளும், புணைகளும் தினமும் அகற்றப்படும். தொழில் முடித்து துறை திரும்பியதும் அதனை கரைக்குக்கொண்டுவந்து உலரவைத்து பழுதுபார்க்கப்பட்டே மறுநாள் தொழிலுக்குக் கொண்டுசெல்வார்கள். ஆரம்பத்தில் கிழமைதோறும் மந்துகளை கழற்றி திரும்பவும் அடிப்பதுண்டு. பின்னாளில் ஒரு மாதத்திற்கு ஒரு தடவை என மாற்றம் பெற்றுவிட்டது. **'கண்டல்பட்டை'**யை இடித்துத் தூளாக்கி அவற்றில் மடியை அவிப்பார்கள். மடி சிவப்பாகவும், தூய்மையாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். குருநகரில் கரையிலிருந்து பரவைக்கடல் நீண்டு இருப்பதனால் தோணி கட்டும் இடத்திலிருந்து பலர் சேர்ந்து தோள்களில் காவியபடி கரைக்கு மடியைக் கொண்டுவருவார்கள். புதிய வீடமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டதன் பின்னர் அந்தச் சிரமம் இருக்கவில்லை.

தொழிலுக்குச் செல்பவர்கள் தினமும் வீட்டில் சமைத்த உணவுகளையே கொண்டுசெல்வார்கள். பெரும்பாலும் சோறு ஆகத்தான் இருக்கும். வீட்டில் பெண்கள் இரவில் சோறு, கறி சமைத்து தனியாக எடுத்து வைப்பார்கள். பனை ஓலையால் இழைக்கப்பட்ட **'மூடப்பெட்டி'** யையே சோறு கொண்டுசெல்வதற்குப் பயன் படுத்துவார்கள். நன்கு இறுக்கமாகவும், பல ஓலைகளைச் சேர்த்து இழைக்கப் பட்டதுமாக பெட்டி இருக்கும். தண்ணீர் அள்ளினால் ஒழுகவே மாட்டாது. தாய்ப் பெட்டியின் நான்கு மூலைகளிலும் கயிறு பொருத்துப்பட்டிருக்கும். இக்கயிறு மூடல் பெட்டியின் நான்கு பகுதிகளையும் இணைத்திருக்கும். மூடல், கயிற்றில் வழுகக்கூடியவாறு கோர்க்கப்பட்டிருக்கும். சோற்றைத் தாய்ப்பெட்டியில் இட்டு மூடலால் மூடி கயிற்றைச் சுருக்கிக் கட்டிக்கொள்ளலாம். சிலர் மண் சட்டியைச் சூழ கயிற்றால் பின்னி அதனை ஓலைப்பெட்டியால் மூடியவாறு கொண்டுசெல்வதும் உண்டு. பின்னாளில் அலுமினிய பாத்திரங்கள் பாவனைக்கு வந்ததும் மூடப்பெட்டியும், மண்சட்டியும் மறைந்து அலுமினியப் பாத்திரமும், மூடுவதற்கு ஓலைப்பெட்டியும் பயன்படுத்தப்பட்டது.

ஒரு தோணியில் சென்று கரைவலை வளைப்பதைப் பார்த்தோம். இதே கரைவலையை இரண்டு தோணிகளிலும் சென்று வளைப்பார்கள். அதற்கு மடியுடன் இணைத்து ஒருபக்க வலைகள், கம்பான் கயிறுகள் ஒரு தோணியிலும், மறுபக்க வலைகள், கம்பான் கயிறுகள் மறு தோணியிலும் ஏற்றிவைத்திருப்பார்கள். ஒரு தோணியில் கரைவலை வளைக்கும்போது கரையிலிருந்து மடி இறக்கிய தூரத்தைவிட இரட்டிப்புக்கு மேற்பட்ட தூரத்திற்குச் செங்குத்தாகச் செல்வார்கள். ஒரு தோணியுடனான தொழிலில் கரையிலிருந்தவாறு கம்பான் கயிறு, வலைகளை போட்டுக்கொண்டுபோய், மடியை மையத்தில் இறக்கி திரும்பவும் கரையைநோக்கி இறக்கியவாறு வருவார்கள். ஆனால் இரண்டு தோணியில் தொழில் செய்வதற்கு மடியை மையத்திற்கு இறக்கி இரண்டு பக்கத்தாலும் வலைகள், கம்பான் கயிறை இறக்கியவாறு செல்வார்கள். எவ்வாறெனில்;

மடியின் கைவலைகள் இரண்டிலும் இரண்டு தோணிகளிலிருக்கும் ஏனைய வலைகளைப் பிதைந்து மடியை இறக்குவார்கள். மடியை மையமாக வைத்து இரண்டு பக்கத்தாலும் இரண்டு தோணிகளிலுமிருக்கும் ஏனைய வலைகள், கம்பான் கயிறுகளை சமமாகப் போட்டவாறு கரையைநோக்கி சற்று அகன்றவாறு செல்வார்கள். இதற்கு அதிக கம்பான் கயிறுகளை பயன்படுத்த மாட்டார்கள். ஒரு பக்கத்திற்கு 4 கம்பான் கயிறுகளையே இணைப்பார்கள். இதுவரை குறைந்த வேகத்தில் வந்த தோணிகள் பாயை உயர இழுத்து வேகமாகச் செலுத்துவார்கள். அப்போதுதான் இத்தனை வலைகளையும், மடியையும் ஒன்றுசேர இழுத்து கரைசேரமுடியும். காற்றின் சாதகமான திசைக்கேற்பதான பாடுகளைத் தெரிவுசெய்தால்தான் இரண்டு தோணிகளும் பாயின் உதவியுடன் வலைகளை இழுத்துச் செல்லமுடியும். வேகம் குறைந்த காற்றாயின் பாய் இழுத்தததுடன் கூடவே தாங்கியும் செல்வார்கள். இரண்டு தோணிகளும் கரையை அடைந்தவுடன் தொழிலாளர்கள் தோணியிலிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பான் கயிற்றை அவிழ்த்துக்கொண்டு கரைநோக்கிச் சென்று இருபக்கத்தாலும் இழுப்பார்கள். மேற்கொண்டு முன்னைய முறையிலே அனைத்தும் நடைபெறும்.

தொழிலுக்கு செல்லும்போது ஆழ்கடலை ஊடறுத்தும் செல்வது வழமை.. அந்நேரங்களில் மீன் சிவப்பெறிந்து கிடப்பதை காணக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு. மீன் சிவப்பைச் சற்றுத் தூரத்தில் கண்டால் தோணியின் பாயை இறக்கிவிட்டு, நங்கூரமிடுவார்கள். மேலாப்பாச்சி அல்லது அனுபவசாலி ஒருவர் பாய்மரத்தின்மீது ஏறுவார். பாய்மரத்தின் முனையில் இருந்தவாறு மீன் சிவப்பை அவதானிப்பார். கரைவலைக்குள் அகப்படக்கூடிய மீன் இனமா? என்பதையும், மீன்களின் தொகையையும் அவரால் ஊகிக்கமுடியும். பொதுவாக சிவப்பெறிந்து நின்றால் கணிசமான தொகையாகவே இருக்கும். ஓரிரு தோணிகளில் ஏற்றமுடியாத மீன்களாக இருக்கும். அவர் கீழே இறங்கியதும் கூடிப் பேசிவிட்டு வேறு தோணிகளை உதவிக்குக் கூப்பிடுவதற்காக வெள்ளைத் துணியை பெரியதொரு மரக்கோலின் நுணியில் கட்டி 'லாவு'வார்கள். இந்த லாவுதலை தூரத்தில் போய்க்கொண்டிருக்கும் வேறு தோணிகளில் உள்ளவர்களால் பார்க்கமுடியும். அவ்வாறு பார்த்தவர்களுக்கு, ஆபத்து அல்லது மீன் சிவப்பைக் கண்டுவிட்டதாக உணர்வதற்கு அதிக நேரமெடுக்காது. லாவுதலை கண்ணுற்ற அனைத்துத் தோணிகளும் லாவிய தோணியைத் தேடி வேகமாக ஓடிவரும்.

தேடிவந்த தோணியிலுள்ளவர்களுக்கு விபரம் அறிவிக்கப்படும். உடனே இரண்டு தோணிகளில் இருக்கக்கூடிய பெரிய மடிகள் இரண்டை எடுத்து, ஒரு மடியின் தூற்றுப் பிதைச்சலை உருவி மற்றைய மடியுடன் பிதைவார்கள். இப்போது மிக நீளமானதும், இரட்டிப்பு கொள்ளளவு உள்ளதாகவும் மடி இருக்கும். அனுபவமுள்ளவர்கள் கலந்துபேசி நீர்நிலை, மீன் சிவப்பு நகரக்கூடிய திசை போன்றவற்றை கணித்து, மீன் சிவப்பு மையத்தில் வருமாறு இழுப்பதற்குரிய வகையில் மடியை குறித்த இடத்தில் இறக்குவார்கள். மேற்கொண்டு இரண்டு பக்கத்தாலும் ஏனைய வலைகள், ஒரிரு கம்பான் கயிற்றை இறக்கியவாறு சென்று ஈற்றில் இருபக்கத்தாலும் தோணியில் பாயை ஏற்றி இழுக்கத் தொடங்குவார்கள். குறித்த மீன் சிவப்பு தங்களது கட்டுப்பாட்டு எல்லைக்கு வரும்வரை தோணிகள் வேகமாக இழுத்தவாறே செல்லும். மடியுடன் ஒருதோணி கட்டப்பட்டிருக்கும்.

குறித்த எல்லைக்குள் மீன் சிவப்பு அகப்பட்டதும், தோணிகளிருந்து ஆட்கள் கடலுக்குள் பாய்ந்து இரண்டு தோணிகளுக்கும் இடைப்பட்ட பகுதியை குறுக்காக ஊடறுத்து மறித்தவாறு நீரில் மிதந்தவாறு, நீரிலே சலசலப்பை ஏற்படுத்தவார்கள். இடைக்கிடை மரக்கோல்களாலும் நிலத்தில் குத்துவார்கள். இதனால் மீன்கள் பயந்து தாம் வந்த திசையைவிட்டு எதிர்ப்புறமாகத் திரும்பி மடியை நோக்கிச் செல்லும். பயத்துடன் திரும்பிவரும் மீன்கள் அரவமின்றி நீரிலே கிடக்கும் மடிக்குள் நுழையத்தொடங்கிவிடும். விசாலமான மடியென்பதால் மீன்கள் மடிக்குள் சிரமமின்றிப் புகுந்துவிடும். மடி கொள்ளமுடியாத மீன்கள் வேறு பாதையைத்தேடி வெளியேறுவதைத் தவிர வேறுவழியில்லை.

மேலாப்பாச்சி, நீரிலே சுழியோடி உண்மையை அறிந்து லாவுவார். ஏற்கனவே மடியை இறக்கும்போது வாசல்வலையின் மடவலைக்கு கயிறுகள் கட்டியிருப்பார்கள். அந்தக் கயிற்றில் பிடித்து வாய்வலையின் மடவலையைத் தூக்குவார்கள். மடியின் வாய்ப்பக்கம் மேலே வந்துவிடும். இப்போது மடிக்குள் புகுந்துகொண்ட மீன்கள் வெளியேறமாட்டாது. இரண்டு தோணிகளிலும் மடியைப் பிடித்து இழுத்து நெருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலில் நீந்தியவாறு நிற்பவர்கள் மீன்களை வாலில் பிடித்து தூக்கி எறிந்துகொண்டேயிருப்பார்கள். இவ்வாறான ஆழ்கடல் சிவப்புகள் பெரும்பாலும் பெரிய மீன்களாகவே இருக்கும். மடியுடன் தூக்கக்கூடிய மீன்கள் வரும்வரை எறிந்துகொண்டேயிருப்பார்கள். தோணிகளில் ஏற்றமுடியாத அளவு மீன்களும் பிடிபடுவதுண்டு. அவ்வாறான சந்தர்ப்பத்தில் மீண்டும் அவற்றை கடலில் விட்டுவிடுவார்கள். விடப்பட்ட மீன்கள் எல்லாம் உயிருடன் மீளும் என்ற சொல்வதற்கில்லை.

கட்டுமடி பாவனை வந்ததும் கட்டுமடியை விரித்து இரண்டு பக்கமும் தடியைக் கட்டி தொட்டில்போல செய்து அதன் மூலம் மடிக்குள் கிடக்கும் மீன்களை கோலி எடுத்து தோணியில் ஏற்றுவார்கள். இது மிக விரைவானது. இலகுவானது. ஆபத்துகள் குறைவானது.

## பாச்சுவலை

பாச்சுவலை தொழில் செய்பவர்களில் கிட்டத்தட்ட பாதிப்பேர்களுக்கு மேல் தொழில் உபரணங்களான பாச்சுவலை, எட்டு அடி நீளம்கொண்டதும், பாரம் குறைந்ததுமான கம்பு போன்றவற்றைச் சொந்தமாகக் கொண்டவர்களாக இருப்பர். பாச்சுவலை என்று சொல்லும்போது 40, 50 அடிகள் வரை நீளமாக இருக்கும். நீள்சதுரமான துணியை இருவர் மடித்தபடி இழுத்து, உயர்த்திப்பிடித்தால் எவ்வாறு தெரியுமோ, அவ்வாறே கிட்டத்தட்ட பாச்சுவலையின் வெளித்தோற்றம் இருக்கும். மேற்பக்க இரண்டு விளிம்புகளும் களி நூலால் செய்யப்பட்ட மொத்தக் கயிறு இணைக்கப்பட்டிருக்கும். இக் கயிற்று இணைப்பானது வலையுடன் நேரடியாக இணைத்ததாக அல்லாமல் வலையை மடங்குடன் மருக இணைத்து அம் மடங்கினில் கயிற்றைக் கோர்த்ததாக இருக்கும். மடங்கு பெரிய கண்களாக இருப்பதால் கயிற்றில் இலகுவாக போய்வரக்கூடியதாக இருக்கும். தேவைக்கேற்ற சுருக்குகளை வலையில் உண்டாக்கக்கூடியதாகவும் இருக்கும்.

இரண்டு பக்க கயிற்று முனைகளையும் அகலமாய் விரித்து இழுத்துப் பிடித்தால் பெரிய வாய்க்கால்போல் காணப்படும். வாய்க்கால் தொடராக இருக்கும். ஆனால் பாச்சுவலை இரண்டு பக்கப்பாட்டு முனைகளிலும் மேலிலிருந்து ஐந்து அடி தவிர்த்து ஏனையவை இணைக்கப்பட்டிருக்கும். கிட்டத்தட்ட சரிபாதி உயரமாக இருக்கும். இணைக்கப்படாத ஐந்து அடியிலும் சற்று மெல்லியதான கயிறு மடங்குகளுடன் சேர்த்து இணைக்கப்பட்டிருக்கும. இதனை **'வெண்நூல் கயிறு'** என்பர். வெண்நூல் கயிற்றின் இரு முனைகளும் வலையின் மேல் விளிம்பிலுள்ள மொத்தக் கயிற்றுடன் பொருத்தப்பட்டிருக்கும். இப்போது வலையை இழுத்து சற்று விரித்தால் இரண்டு பக்கங்களில் கீழ் பாதிப்பகுதி இணைந்ததாகவும், மேல் பாதிப்பகுதி 'U' போலவும் காணப்படும். 'U' போன்று காணப்படும் இந்த ஐந்து அடி நீளமுள்ள வெண்நூல் கயிற்றுப் பகுதிகள் தடியுடன் இணைப்பதற்குரிய பகுதிகளாகும்.

## பாச்சுவலை தொழில்முறை

கடலில் தொழில்செய்ய ஆரம்பிக்கும்போது வலையைத் தயார் படுத்துவார்கள். தயார்படுத்தல் படகில் இருந்தவாறே மேற்கொள்ளபபடும். பத்து நிமிடங்கள் போதுமானதாகும். வலையின் நீள பக்கங்களில் ஒருபக்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவுசெய்வர். தெரிவுசெய்தல் சூழ்நிலை சார்ந்தது. பொறுப்பாளரின் கட்டளையாக இருக்கும். ஒரு வலைக்கு இரண்டு பக்கங்கள் இருக்கும் தடி ஒன்றுதான் எனவே பொறுப்பாளரின் கட்டளைப்படி மொத்தத் தொகையினரில் பாதி பகுதியினர் வலையின் வலதுபக்கமும், மறுபாதிப் பகுதியினர் வலையின் இடதுபக்கமும் தெரிவுசெய்வர். வலையின் மேல் விளிம்புகளிலுள்ள மொத்தக் கயிறுகளை பக்கத்துக்கேற்றவாறு தடியின் மேல், கீழ் முனைகளில் கட்டுவார்கள். கட்டுவதற்கு வசதியாக தடியில் வெட்டுகள் இருக்கும். தடியுடன் பக்கவாட்டில் இணைந்திருக்கும் பகுதி வெண்நூல் பகுதியாக இருக்கும். வலையின் மறுபக்கம் மேல் விழிப்புகளிலுள்ள கயிறுகளில் தனித்தனியே சிறு வளையமாக மடித்து முடிச்சுப்போடுவார்கள். இப்போது வலையின் ஒரு பக்கம் தடியும், மறு பக்கம் வளையமும் இருக்கும். இந்த வேலைகள் முடிவுற்றதும் வலையுடன் கடலில் இறங்குவார்கள்.

மொத்தம் இருபத்தொரு வலைகளென எடுத்துக்கொண்டால் அவற்றில் பத்து வலைகளும் அதன் உரிமையாளர்களும் வலப்பக்கத்திற்கும், பத்து வலைகளும் அதன் உரிமையாளர்களும் இடப்பக்கத்திற்கும் என ஏற்கனவே பொறுப்பாளரால் கூறப்பட்டு ஒவ்வொருவரும் பக்கங்களுக்கு ஏற்ற வகையில் தடிகளைப் பொருத்தியிருப்பதால் சிரமமின்றி தமக்குரிய பகுதியைநோக்கிச் செல்வார்கள்.

வலப்பக்க, இடப்பக்க வலைகளை தொடராக இணைக்கவேண்டுமானால் நடுவிலுள்ள வலைக்கு இரண்டு பக்கங்களிலும் தடி பொருத்தப்பட்டதாக இருக்கவேண்டும். அவ் இரண்டு தடிகளையும் ஏந்திப் பிடிப்பதற்கு இரண்டு ஆட்களும் வேண்டும். அவ்வாறே நடு வலையை முற்றாக விரித்து இரண்டு தடிகளையும் தாங்கியபடி இருவர் நின்றிருக்க வலப்பக்கம் தேர்வுசெய்யப்பட்டவர்களில் முதலாம் ஆள் நடு வலையின் வலதுபக்கத் தடியில் தனது வலையின் வளையங்களை மேலும் கீழும் பொருத்தி தனது வலைத் தடியைப்பிடித்து இழுத்து விரித்துச் செல்வார். அடுத்தவர் முதலாம் ஆளின் தடியில் வளையங்களைப்பொருத்தி தடியைப்பிடித்து இழுத்து விரித்துச் செல்வார். இவ்வாறே ஏனையோரும் செல்வார்கள். தத்தமது வலைக்குரிய தடிகளைத் தாங்கியவாறு பிடித்திருப்பார்கள்.

இடப்பக்கம் தேர்வுசெய்யப்பட்டவர்களில் முதலாம் ஆள் நடு வலையின் இடது பக்கத் தடியில் தனது வலையின் வளையங்களை மேலும் கீழும் பொருத்தி தனது வலைத் தடியைப்பிடித்து இழுத்து விரித்துச் செல்வார். இவ்வாறே ஏனையோரும் செல்வார்கள். ஒவ்வொருவரும் தத்தமது வலைக்குரிய தடிகளைத் தாங்கியவாறு பிடித்திருப்பார்கள். வலையின் பின்பக்கம் (மேல்பக்கம்) கடல்நீருக்கு மேலாக 5 அடிகள் வரை உயர்ந்து வருமாறும், முன்பக்கம் (கீழ்ப்பக்கம்) கடல்நீா் மட்டத்திலும் ஒருசாண் மேலாக வருமாறும் சரிவாக ஒவ்வொருவரும் தத்தமது வலைகளைத் தாங்கிப்பிடித்திருப்பார்கள். இருபது வலைகளும் ஒன்றாக இணைக்கப்பட்டிருப்பதால் நீண்ட வாய்க்கால்போன்று காணப்படும்.

பொதுவாக பாச்சுவலைத் தொழில் செய்யும் இடம் கரையை அண்மியதாக இருக்கும். கரையிலிருந்து 100 - 1000 மீற்றர் வரை தூரமுள்ள பகுதியாக இருக்கும். ஆட்களே வலையைத் தாங்கிப் பிடிக்கின்றபடியால் ஒருவரின் மார்பளவிற்கு கீழ் தண்ணீா் இருக்கக்கூடிய ஆழமாக இருக்கும். குறிப்பிட்ட இடத்திலிருந்து வலைகளைத் தாங்கியபடி கரையை நோக்கியே நகர்த்திச் செல்வார்கள்

வலை உரிமையாளர்கள் தத்தமது வலைகளை இணைத்துக் கொண்டிருக்கும் அதேநேரம் ஏனையோர் ஓலைகள் சொருகப்பட்ட ஓலைக்கயிற்றினை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலைகளுக்கு முன்னால் குறுக்காக வருமாற்போல் போட்டவாறு இருபக்கமும் இழுத்துச் செல்வார்கள். ஓலைக்கயிறு வலைகளின் மொத்த நீளத்தைவிட மூன்று மடங்கு நீளமானதாக இருக்கும். வலைக்கு முன்னால் போடப்பட்ட கயிறு முற்றிலும் சமாந்தரமாக முடிந்ததும் நிமிர இழுப்பார்கள். இப்போது வலைகளும், கயிறும் நேராக காணப்படும். தொடர்ந்து குறித்த கரையை நோக்கி மெதுவாக நகரத்தொடங்குவார்கள். ஐந்தாறு பேர்கள்வரை கயிற்றின் இரு முனைகளையும் பிடித்து இழுத்துச் செல்வார்கள். ஏனையோர் கயிற்றின் இருபக்க முனையிலிருந்தும் 50, 100 மீற்றர்கள் தூரம் வரை தொடர்ச்சியாக நின்று தடிகளால் தண்ணீரில் அடித்தவாறு கரையை நோக்கி மெதுவாக நகருவார்கள். ஆட்களின் எண்ணிக்கையைப் பொறுத்து தூரம் நிர்ணயிக்கப்படும். வலையைப் பிடித்திருப்பவர்களும் கயிற்றின் நகர்வுக்கு ஏற்றவாறு அதனைப் பின்தொடந்து சென்றுகொண்டிருப்பார்கள். வலைகள் நேராக வானத்தைப் பார்த்தவண்ணம் நிமிர்த்தி வைத்திருக்காமல் முன்பக்கம் சற்று கடலைநோக்கி சரித்து வைத்திருப்பார்கள் இந்தச் சரிவு கடலின் ஆழத்திற்கு ஏற்றவையாக இருக்கும்.

சிறுது நேரம் கயிறு இழுக்கப்பட்ட பின்னர் நேராகக் கிடந்த கயிறு மத்தியிலிருந்து பிறைபோல் வளைவாகக் காணப்படும். வலைகளும் அவ்வாறே காணப்படும். தடி அடிக்கும் ஆட்களும் அதே கோணத்திலே காணப்படுவார்கள். மொத்தத்தில் பாரிய பிறைபோன்ற தோற்றமே உருவாகிவிடும். முழு வலைகளும் கரையை நோக்கி வரும்வரை இந்தப் பிறை வடிவம் மாறாது. கரையை அண்மிக்க அண்மிக்க தடி அடிப்பவர்களின் இடைவெளி சுருங்கிக்கொண்டுவரும். கயிறு கரையை அண்மித்ததும் கயிற்றின் இடைவெளியும் சுருங்கிக்கொண்டுவரும்.

தடி அடிப்பவர்களில் இருபக்கமும் ஆரம்பத்தில் நிற்பவர்கள் அனுபவம் வாய்ந்தவர்களாக இருப்பார்கள். மீனின் நகர்வுகளை உணர்ந்தறிந்து அவற்றை மறிப்பதற்கு ஏனையோரை வழிநடத்தக்கூடியவர்களாக இருப்பார்கள். தடிகளின் அடிகளுக்கும், ஓலைக்கயிற்றிலுள்ள ஓலைகளின் அசைவுகளுக்கும் பயந்து வெளியேறமுடியாத மீன்கள் தற்போது அமைந்துள்ள பிறைவட்ட எல்லைக்குள் அடக்கப்பட்டுவிடும். அவ்வாறு அடக்கப்பட்ட மீன்கள் கரையைநோக்கியே சென்று கொண்டிருக்கும். கரையை நெருங்கியதும் மேலும் முன்னோக்கிச் செல்ல முடியாமல் கடலைநோக்கித் திரும்பிச்செல்ல எத்தனிக்கும். இதற்குள் கயிற்றின் இருபக்க முனைகளும் கரையைத் தொட்டுவிடும். இருபக்க தலைப்பு வலைக்கும், கரைக்கும் இடையிலான ஓலைக் கயிறு உள்ள பகுதிக்கு தடி அடிப்பவர்கள் வந்தவிடுவார்கள். அவர்கள் ஓலைக்கயிற்றுக்கு மேலாக தடிகளால் அடிப்பார்கள். இதனால் கரையிலிருந்து திரும்பும் மீன்கள் தம்மைக் காப்பாற்றிக்கொள்வதற்காக தடியடிகள் விழும் இடங்களைத்தவிர்த்து வலைகள் உள்ள பகுதியைநோக்கித் திரும்பும். ஏனென்றால் வலைகள் கொண்டுவரப்படும் பகுதி எந்தவித ஆரவாரமும் இல்லாது அமைதியாக இருக்கும். வலைகள் வெண்மைநிறமாக இருப்பதால் அவற்றை மீன்களால் இனங்காணமுடியாது.

வலைகளை நோக்கித் திரும்பிச் செல்லும் மீன்கள் வலைக்கு சற்று முன்னராக இழுபட்டவண்ணமிருக்கும் ஓலைக் கயிற்றைச் சந்திக்கும். ஓலைகளின் அசைவினால் ஏற்படும் பயத்தால் அதனைக் கடப்பதற்கு உயரப் பாயும். அவ்வாறு பாய்ந்த மீன்கள் கயிற்றுக்குப் பின்னால் வந்துகொண்டிருக்கும் வலைக்குள் வீழ்ந்துவிடுகிறது. வலை சாக்குப் பையைப்போன்று இருப்பதால் அவற்றால் மீள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்வதற்கு முடிவதில்லை. ஆயினும் மிகச் சொற்ப பெரிய மீன்கள் மீளப்பாய்வதற்கு முயற்சிப்பதுமுண்டு. அவ்வாறான மீன்கள் உள்ளே சிக்கியதும் உடனே வலையுடன் சேர்த்துப் பிடித்து தலையை முறிப்பதுமுண்டு.

வலைகளைக்கொண்டு தொடர்ந்து கரை வரை செல்வார்கள். கரையை நெருங்க நெருங்க கயிறும், வலைகளும் சுருங்கிக்கொண்டே இருக்கும். கரையைத் தொட்டவர்கள் தத்தமது வலைகளை பிடிபட்ட மீன்களுடன் சேர்த்துச் சுருக்குவார்கள். தொடர்ந்து கடலில் இழுத்தவாறு படகுநோக்கிச் செல்வார்கள். படகு சற்று ஆளமான தண்ணீரில்தான் கிடக்கும்.

இத்தொழிலைச் செய்பவர்கள் தத்தமது வலைகளை தாமே தயாரித்தல், பழுதுபார்த்தல் போன்ற வேலைகளைச் செய்வதால் நூல்களைத் தாமே தயார் செய்யவேண்டியவர்களாக இருப்பார்கள். இதனால் தினமும் மாலை வேளைகளில், ஞாயிறு தினங்களில் கடற்கரையை அண்மிய பகுதிகளிலுள்ள மதகுகளில் இவர்களைக் காணலாம். வடிக்கல் மூலம் நூல் முறுக்கிக் கொண்டிருப்பார்கள். காலை முதல் பிற்பகல் வரை மட்டுமே இவர்கள் தொழில் செய்கின்றமையும், ஞாயிற்றுக்கிழமைகளில் தொழில் செய்யாமையும் இவர்களுக்கு இந்த நேரங்கள் வாய்ப்பாக அமைகின்றது. வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாட்டுச் சாணத்தை தண்ணீரில் கரைத்து அதற்குள் வலையை இட்டு அவிப்பார்கள். இதனால் வலைகள் நிறம்மாறாமல் வெண்மையாகவே காணப்படும்.

பாச்சுவலைத் தொழிலில் ஓரளவு கூட்டுத்தொழிலாளர் முறை கலந்ததாக காணப்படுகின்றது. சம்மாட்டி ஒருவராக இருப்பினும். நிரந்தர தொழிலாளர்கள் தத்தமது வலைகளுக்கு உரிமையாளர்களாக, மறைமுக பங்காளர்களாக இருக்கிறார்கள்.

## கொண்டடி மடி

மடியின் வாய்வலை வரை கரைவலை மடியின் அமைப்பைப்போல் இருக்கும். ஆனால் இது குறைந்த சுத்துகளையும், கனங் குறைந்த நூல்களால் பின்னப்பட்ட வலைகளையும் கொண்டது. அதாவது பாரங்குறைந்த மடியாக இருக்கும். கரைவலை மடிக்கு கைவலை வாசல் வலையிலிருந்து வலம், இடமாக இருக்கும். ஆனால் கொண்டடி மடிக்கு கைவலை வாசல் வலையிலிருந்து மேல் கீழாக அதாவது மடவலை, மோவலையாக இருக்கும். பொதுவாக முதலையின் பிழந்த வாய்போல இருக்கும். துள்ளிவரக்கூடிய மீன் இனங்களையும் தடுத்துப் பிடிப்பதற்கு ஏதுவாக மோவலை இவ்வாறு உயரமாக அமைந்துள்ளது.

கரைவலை போன்று கைவலை தவிர்ந்த ஏனைய இணைப்பு வலைகள் இதற்கு இல்லை. கம்பான் கயிற்றுக்குப் பதிலாக ஓலைக்கயிறு பயன்படுத்தப்படுகிறது.

## கொண்டடி தொழில்முறை

நடுத்தரமான வள்ளங்களைப் பயன்படுத்தி, 10 - 13 அடி ஆழங்களையுடைய கடற்பகுதியிலேயே கொண்டடி வலைத் தொழில் செய்யப்படுகின்றது. அதிகமான ஆட்கள் தேவையென்றில்லை. மொத்தம் ஏழு பேர் பொதுமானதாகும். அதிக முதலீடும் தேவையில்லை.

தொழில் செய்வதற்கென தேர்வுசெய்யப்பட்ட இடம் நெருங்கியதும். ஒருவர் கடலில் இறக்கப்படுவார். அவரிடம் 13 அடிக்கு மேற்பட்ட கம்பு கொடுக்கப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் ஓலைக் கயிற்றின் ஒரு முனையும் கொடுக்கப்படும். ஏனைய ஓலைக்கயிறு வள்ளத்திலிருக்கும். அடுத்த நகர்வுபற்றி வள்ளத்திலிருப்பவர்களிடமிருந்து உத்தரவு வரும்வரை கம்பைக் ஊன்றியவாறு ஓலைக்கயிற்று முனையைப் பிடித்தபடி நிற்பார். ஓலைக்கயிற்றை கடலில் விட்டவாறு வள்ளத்தை, கயிற்றின் பாதித் தூரம் வரைத் தாங்கிச் (ஊன்றி) செல்வர். குறித்த இடம் வந்ததும் மடி மற்றும் நான்கு கம்புகளுடன் இருவர் இறக்கப்படுவார்கள். தொடர்ந்தும் ஓலைக்கயிற்றை கடலில் விட்டவாறு வள்ளத்தைத் தாங்கிவாறு செல்வர். வள்ளத்திலிருக்கும் ஓலைக்கயிறு முற்றாக இறக்கப்பட்டதும். வள்ளத்திலிருப்பவர் முனையைப் பிடித்துக்கொள்வார். கையை அசைத்து கடலில் நிற்பவருக்கு உத்தரவிடுவார்.

கடலில் நிற்பவர் தடியால் ஊன்றி, ஊன்றி கயிற்று முனையை இழுத்தவாறு முன்னோக்கிச் சென்றுகொண்டிருப்பார். வள்ளமும் கயிற்றை இழுத்தவாறு முன்னோக்கிச் செல்லும். இப்போது கணிசமான கடல்பகுதியில் கயிறு இழுபட்டவண்ணம் பிறை போன்று அரை வட்டமாக இருக்கும். குறித்த இடம் வந்ததும் மடி வைத்திருப்பவர்களுக்கு சைகை செய்வார்கள். உடனே அவர்கள் மடியை விரித்து மடியின் மடவலை இரண்டையும் இழுத்து விரித்து இரண்டு கம்புகளை நடுவார்கள். இதன்போது கயிறு மேற்கொண்டு முன்னோக்கி இழுபடாதவாறு இரண்டு கம்புகளாலும் மறிக்கப்பட்டிருக்கும். ஏனைய இரண்டு கம்புகளையும் மடவலைக்கு சற்று முன்னோக்கி நட்டு மடியின் மோவலை இரண்டு பக்கத்தையும் இழுத்து விரித்துக் கட்டுவார்கள். இப்போது மடி முதலை வாயைப் பிளந்தவாறு நிற்பதுபோல் இருக்கும்.

தொடர்ந்து வள்ளம் கடலில் நிற்பவரை நோக்கியும், கடலில் நிற்பவர் வள்ளத்தை நோக்கியும் இழுத்தச் செல்வார்கள். வள்ளமும், கடலில் நிற்பவரும் சந்திக்கும் இடத்தில் தடியை நடுவார்கள். இதனை **'நடுக்கம்பு'** என்பர். இப்போது கயிறு வட்ட அமைப்பிற்கு வந்துவிடும். மேலும் ஒருவரை கம்புடன் கடலில் இறக்கிவிட்டு வள்ளம் விலகிவிடும். கடலில் நிற்கும் இருவரும் கயிற்றின் இரண்டு முனைகளையும் பிடித்தவாறு தடியைச் சுற்றி கயிறு வருமாறு இழுத்து கயிற்றைக் குறுக்குவார்கள். இவர்களது இழுவையினால் பெரிய வட்டமாக உள்ள கயிறு மெதுவாக ஒடிங்கி ஒடுங்கி நீள் வட்டமாக மாறும். கயிறு இரண்டும் சமாந்தரமாகச் சந்திக்கும்வரை இழுத்துக்கொண்டே இருப்பார்கள்.

வள்ளத்தில் இப்போது மூவர் இருப்பர். ஒருவர் கயிறு வளைக்கப்பட்டிருக்கும் எல்லைக்குள் வள்ளத்தை அங்குமிங்கும் தாங்கி நகர்த்திக்கொண்டிருக்க ஏனைய இருவரும் கம்பால் கடலின் நிலத்தில் குற்றுவார்கள். கடல் நீரில் அடிப்பார்கள். இவர்கள் இவற்றை கயிற்றின் எல்லைக்கு உள்ளேயே செய்வதால் கம்பின் குற்றலுக்கும், அடிக்கும் பயந்த மீன்கள் சிதறி ஓடும். அவ்வாறு சிதறி ஓடும் மீன்களை ஓலைக்கயிறு வழிமறிக்கும். ஓலைக் கயிற்றுக்கும், தடியின் குற்றலுக்கும் பயந்தவாறு அரவமின்றி காணப்படும் மடி இருக்கும் பகுதி நோக்கிச்செல்லும். அவ்வாறு சென்றவண்ணமிருக்கும் மீன்களை தடியடியால் நெருக்கிச்செல்ல அவை மடிக்குள் நுழைந்துவிடும். கயிறு முற்றாக ஒடுங்கியதும் மடியைத் தூக்கிக் கொள்வார்கள். பாய்ந்துசெல்லக்கூடிய மீன்களும் ஓலைக் கயிற்றைக் கடக்கும்போது மோவலையின் தடுப்பால் உள்ளே நுழைந்துவிடும்.

இதனை ஒரு பாடு என்பர். குறைந்த தொழிலாளரைக்கொண்டு மிகக் குறைந்த நேரத்தில் செய்யப்படும் சிறு தொழிலாகையால் ஒரு நாளில் பல பாடுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைப்பார்கள். மீன்களைச் சிறுகச் சிறுகச் சேர்த்துக்கொள்வார்கள். இது குறைந்த முதலீட்டில் செய்யப்படும் தொழிலாகும்.

## கூட்டு வலை

2½, 3 அங்குல நீள உண் அளவில், சணல் நூலால் பின்னப்படும் வலைகளே கூட்டு வலைக்குப் பயன்படுத்தப்படுகிறது. 8, 8½ பாகம் ஆழமுள்ள கடலில் தொழில் செய்வதற்கு ஏற்ற உயரத்தில் மேலதிக அளிகளைக் கொண்டவையாகத் தயாரிக்கப்படுகிறது. அளி மேலதிகமாக இருந்தால்தான் நீரில் அளி தொய்வாக இருக்கும். மீன்களின் உந்தலை நேரடியாகத் தடுக்காமல் உள்வாங்கித் தடுப்பதற்கு ஏற்றவையாக இருக்கும். ஒவ்வொன்றும் 15 பாகம் நீளத்தை உடைய பல வலைகள் தயாரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு வலைகளின் மடவலையில் தேவைக்கேற்ற ஓட்டைக் கற்களைக் கட்டுவார்கள். மோவலையின் விளிம்புகளில் கயிறு கோர்க்கப்பட்டிருக்கும். அக் கயிற்றையும், வலை விளிம்பையும் சேர்த்து புணையும் பெருக்கப்பட்டிருக்கும். மொத்த வலைகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதி வலைகளும் இணைத்து ஒன்றாகப் பிதையப்பட்டிருக்கும்.

மற்றும் வள்ளத்தின் நீளத்திலும், 3 பாகம் உயரத்திலும் உள்ள இரண்டு வலைகள் உருவாக்கப்படும். இந்த வலையின் கண்கள் ஏனைய வலைகளைவிட சிறியவையாக இருக்கும். இதனைத் **'தடுப்புவலை'** என் அழைப்பர். தடுப்பு வலையின் மடவலை, மோவலை விளிம்புகளில் கயிறு கோர்க்கப்பட்டிருக்கும். வலையின் இரண்டு பக்கத்திலும் 3 பாகம் நீளமுள்ள இரண்டு தடிகள் கயிற்றுடன் இணைக்கப் பட்டிருக்கும். இரண்டு பக்கத் தடிகளிலும் இழுத்துப்பிடித்தால் வலை நீள் சதுர தட்டுபோலக் காணப்படும்.

## கூட்டுவலை தொழில்முறை

கொண்டடி தொழில் செய்பவர்களில் ஒரு பகுதியினரால்தான் கூட்டுவலைத் தொழில் அறிமுகப்படுத்தப்பட்டது. தொழிலுக்குப் புறப்படும்போது ஏற்கனவே இரண்டாகப் பிரிக்கப்பட்ட வலைகளின் ஒரு பகுதியும், ஒரு தடுப்பு வலையும் ஒரு வள்ளத்தில் ஏற்றப்படும். ஏனையவை இரண்டாவது வள்ளத்தில் ஏற்றப்படும். பாயின் உதவியுடன் ஆழ்கடல் நோக்கிச் செல்வார்கள். கடலில் மீன் சிவப்பெறிந்து காணப்பட்டால் அந்த இடத்தில் வள்ளத்தை நிறுத்திவிடுவார்கள். சிவப்பெறிந்து நிற்கும் மீன் இனம் பற்றி அனுபவசாலிகளால் இனங்காணப்படும். கூட்டுவலைத் தொழிலில் சிறையா, மணலை, கயல்மீன், காடன் போன்ற பாய்ந்து செல்லக்கூடிய மீன் இனங்களையே பிடிப்பார்கள். அத்தகைய இன மீன்களாக இனங்காணப்பட்டால் இரண்டு வள்ளங்களிலும் உள்ள வலைகளின் முனைகள் இரண்டையும் ஒன்றாக பிதைவார்கள். தொடர்ந்து இரண்டு வள்ளத்திலும் உள்ள வலைகளை இரண்டு பக்கத்தாலும் இறக்கியவாறு மீன் சிவப்பைச் சுற்றி வளைப்பார்கள். இரண்டு வள்ளங்களும் ஒன்றையொன்று சந்திக்கமாட்டாது. ஒரு வள்ளம் தனது இறுதி வலையின் முனையுடன் உள்புறமும், மறு வள்ளம் தனது இறுதி வலையின் முனையுடன் வலையின் வெளிப்புறமுமாக மீன் சிவப்பு முற்றாகச் சுற்றிவளைக்கப்பட்ட நிலைக்கு வந்துவிடும். உடனே தடுப்புவலையை உயர்த்தி இரண்டு பக்கத் தடிகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளத்தின் அணியம் மற்றும் கடையாலில் கட்டுவார்கள். இப்போது பார்த்தால் வள்ளத்தின் மத்தியில் நீளமான சுவர்போல தெரியும்.

இந்த வேலைகள் முடிந்ததும் கடலில் தடியால் அடிப்பார்கள். இதனால் வெருட்சியடைந்த மீன்கள் முன்னோக்கி நகர்ந்து செல்லும். அவற்றை வலைகள் தடுக்கும். மீன்கள் செல்லும் வேகத்தில் பல மீன்கள் வலையில் சிக்கிக்கொள்ளும். ஏனையவை திரும்பி தம்மைக் காப்பாற்றிக்கொள்வதற்காக பல திசைகளாலும் பாய்ந்து செல்லும். அவ்வாறு பாய்பவைகள் வள்ளங்களைக் கடக்க எத்தனிக்கும்போது வள்ளத்தில் கட்டியுள்ள தடுப்புவலையின் தடுப்பால் அவை வள்ளத்திற்குள் விழுந்துவிடும். எல்லா மீன்களும் அகப்படுமென்றில்லை வெளியே பாய்ந்து செல்பவைகளும் உண்டு வள்ளத்தில் பாய்ந்த மீன்களுடன் கடலில் கிடக்கும் வலைகளை இரண்டு பக்கத்தாலும் இழுத்து ஏற்றுவார்கள். அவ்வாறு ஏற்றும்போது வலையில் சிக்குண்டிருக்கும் மீன்களையும் சேகரித்துக்கொள்வார்கள். இதனை ஒரு பாடு என்பர்.

பொதுவாக ஒரு பாட்டிலேயே போதுமான அளவு மீன்கள் பிடிபட்டுவிடும். சில சந்தர்ப்பங்களில் குறைவாகவும் பிடிபடுவதுண்டு. வள்ளம் ஏற்றமுடியாத மீன்களும் பிடிபடுவதுண்டு. ஒவ்வொரு வள்ளத்திலும் நான்கு தொழிலாளர்களே தொழிலுக்குச் செல்வார்கள்.

## ஒளி மீன்பிடி

ஒரு வள்ளத்தின் நீளத்தையும், 3 பாகம் உயரத்தையும் உடைய **'தடுப்புவலை'** ஒன்றே இதற்குரிய வலையாகும். மற்றும், போதிய ஒளியைத் தரக்கூடிய விளக்கு. இவைகளே இத்தொழிலின் உபகரணங்களாகும். தடுப்பு வலையானது மடவலை, மோவலை விளிம்புகளில் கயிறு கோர்க்கப்பட்டதாகவும், குறுகிய கண்களைக் கொண்டதாகவும் இருக்கும்.

## ஒளி மீன்பிடி தொழில்முறை

வள்ளத்தின் அணியப்பக்கமும், கடையால் பக்கமும் இரண்டு தடிகளை நிமிர்த்திக் கட்டுவார்கள். அந்த இரண்டு தடிகளிலும் தடுப்பு வலையைக் கட்டவேண்டும். அவ்வாறு கட்டும்போது தடுப்பு வலையில் சுருக்கு விழாதவாறு மடவலை மற்றும் மோவலை கயிறுகளை இழுத்துக் கட்டிவிடுவார்கள். இப்போது வள்ளத்தின் மத்தியில் நீளப்பக்கத்தை ஊடறுத்து வலை காணப்படும்.

காற்று அதிகமாக அல்லாமல் அமைதியாக வீசும் காலங்களில் இரவு நேரத்தில் இந்தத் தொழில் நடைபெறுகின்றது. குறித்த இடத்திற்குச் சென்றதும் ஒளியை ஏற்றுவார்கள். இந்த ஒளியைப் பெறுவதற்கு ஆரம்பத்தில் பந்தங்களைப் பயன்படுத்தினார்கள். காலப்போக்கில் **'லோமியா'** என்னும் பல நூல் இளைகளில் எரிகின்ற விளக்கையும், **'பெற்றோமக்ஸ்'** இனையும் பயன்படுத்தினார்கள். ஒளி கடலில் விழுவதற்கேதுவாக சற்று உயரத்தில் ஒளியேற்றியைக் கட்டுவார்கள்.

வள்ளத்தைத் தாங்கியவாறு மெதுவாக நகர்த்துவார்கள். வள்ளம் சென்றுகொண்டிருக்கும் பாதையில் ஒளி கடலில் விழும் அவ்வொளியைக் சந்திக்கும் மீன்கள் ஒளியேற்றியைத் தேடி (ஒளிவரும் திசை) பாயும். அவ்வாறு பாயும் மீன்களை தடுப்பவலை தடுக்க அவை வள்ளத்திற்குள் வீழ்ந்துவிடும். மீன்களின் பாச்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எல்லைக்கும் உயரமாகவே ஒளியேற்றி கட்டப்பட்டிருக்கும். இத்தொழிலில் பாச்சல் மீன்களான கயல்மீன், பாலைக்குட்டி, அகளி, மணலை, சிறையா, தவ்வல், கொய் போன்றவையே பிடிபடும். அதிக முதலிடு அற்ற தொழிலென்பதால் வருவாய் தாராளமானதாக இருக்கும். ஆனால் எல்லாக் காலங்களிலும் செய்யமுடியாது.

## பேசியன் வலை (சுருக்குமடி அல்லது, சுற்றி வளைக்கும் வலை)

ஒரே அளவுள்ள வலையினால் உருவாக்கப்படுகிறது. வலையின் மடவலையில் மீன்கள் சேகரிக்கப்படுவதனால் மோவலையைவிட பாதியிலிருந்து சற்றுக் குறுகிய கண்களை உடையதாகவும், வைரமான நூலால் பின்னப்பட்டதாகவும் இருக்கும். மோவலையில் கயிறு கோர்க்கப்பட்டிருக்கும். தனியான ஒரு கயிற்றில் மிதவைகள் இணைக்கப்படும். இக்கயிறு மோவலைக் கயிற்றுடன் இடைவெளிவிட்டு பிணைக்கப்படும். அவ்வாறே மடவலையில் கயிறு கோர்க்கப்பட்டிருக்கும். தனியான ஒரு கயிற்றில் **'பை வளையங்கள்'** எனச் சொல்லப்படும் பித்தளை வளையங்கள் கோர்க்கப்பட்டிருக்கும். இக் கயிறு மடவலைக் கயிற்றுடன் தனித்தனி வளையமாக வருமாற்போல் இடைவெளிவிட்டு பிணைக்கப்படும். வலை கடலில் கீழ்நோக்கி அமிழக்கூடிய அளவு கனம் உள்ளதாக பித்தளை வளையங்கள் இருக்கும். கனம் போதாவிடில் ஈயக் குண்டுகளையும் இணைப்பதுண்டு. மடவலைக் கயிற்றிலிருந்து தொங்கிக்கொண்டிருப்பதுபோலக் காணப்படும் வளையங்களுக்குள் **'பைக் கயிறு'** எனப்படும் உறுதியானதும், நீளமானதுமான கொர்லோன் கயிறு கோர்க்கப்பட்டிருக்கும். இக் கயிற்றை இழுத்துச் சுருக்கினால் அடிப்பாகம் (வளையங்கள்) நெருங்கி பை போன்ற அமைப்பு பெறும். இவ் வலையின் உயரம் 10 பாகததிற்கு மேற்பட்டதாக இருக்கும். கடலில் வலையை இறக்கியதும் மடவலை நீரில் அமிழ்ந்தும், மோவலை நிரில் மிதந்தும் வேலிபோன்று காணப்படும்.

## பேசியன் வலை தொழில்முறை

கூட்டுவலைத் தொழில் முறையை ஒத்ததாக இது அமைகின்றது. பேசியன் வலை 3½ தொன் இயந்திரப் படகின் அறிமுகத்துடன் இங்கு பாவனைக்கு வந்தது. ஒரேயளவுள்ள வலையினால் இது உருவாக்கப்படுகின்றது. இதன் அடிப்பாகத்தாலேயே மீன் சேகரிக்கப்படுகிறது. இதனால் அடியில் (மடவலையில்) வரக்கூடியபகுதி வலைக் கண்கள் சற்று சிறியனவாயும், உறுதியான நூல்களால் பின்னப்பட்டவையுமாக இருக்கும். ஒரு படகிலோ, இரண்டு படகிலோ இந்தத் தொழிலைச் செய்யலாம். இங்கு இரண்டு படகுகள் பயன்படுத்து முறையே அறிமுகம் செய்யப்பட்டது. இயந்திரப்படகென்பதால் குறித்த இடங்களுக்கு விரைவாகச் சென்று வரக்கூடியதாக இருக்கும். கூட்டு வலைத் தொழில் முறையைப்போல் கடலில் மீன் சிவப்பெறிந்து காணப்பட்டால் அந்த இடத்தில் படகை நிறுத்தி விடுவார்கள். ஒரு படகானால் வலையின் ஒரு பக்க முனையிலிருந்து இறக்கிய






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறும், இரண்டு படகுகளானால் ஒரு படகில் உள்ள வலையில் பாதி வலையை இரண்டாவது படகில் ஏற்றிவிட்டு நடுவலையிலிருந்து கடலில் இறக்கியவாறு மீன் சிவப்பைச் சுற்றி வளைப்பார்கள். இரண்டு படகுகளானால் அவை இரண்டும் சந்திக்கும்போது, ஒரு படகானால் வலையின் இரண்டு முனைகளும் சந்திக்கும்போது மீன்சிவப்பு முற்றாகச் சுற்றிவளைக்கப்பட்ட நிலைக்கு வந்துவிடும்.

பார்வைக்கு கோட்டை சுவரைப்போல காணப்படும் பேசியன் வலையின் உள்ளே மீன்கள் சுதந்திரமாக நடமாடிக்கொண்டிருக்கும். வலையின் முனைகள் சந்திக்கும் இடத்தில் படகில் இருந்தவாறே மடவலையில் இடப்பட்ட பைக் கயிற்றைப் பிடித்து இழுப்பார்கள். மடவலையிலுள்ள பை வளையங்கள் வலையை மெல்ல மெல்லச் சுருக்கிக்கொண்டுவரும். ஈற்றில் மடவலை முற்றாகச் சுருக்கப்பட்டு மோவலை விரிந்து பையைப்போன்று மாறிவிடும் மீன்கள் அனைத்தும் இந்த பைக்குள் அடக்கப்பட்டுவிடும். படகில் இருந்தவாறே **'மண்டாக் கம்பி'** யினால் அல்லது **'அத்தாங்கு'** இனால் மீன்களை படகிற்கு எடுத்துக்கொள்வார்கள். மண்டாக் கம்பியானது ஒரு முளம் நீளமுள்ள கம்பியின் முனை 3 அங்குல விட்டம் வருமாற்போல் கொழுக்கிபோன்ற அமைப்பில் மடிக்கப்பட்டிருக்கும். இந்தக் கம்பி தேவைக்கேற்ற நீளங்களையுடைய தடிகளில் பொருத்தப்பட்டிருக்கும். கம்பியின் கொழுக்கி முனை கூராக இருக்கும். இதன் உதவியுடன் பெரிய மீன்களின் உடலில் குத்திக் கொழுவித் தூக்குவார்கள். அத்தாங்கானது 2 அடி விட்டமுள்ள வட்டமான கம்பி அல்லது மூங்கில் தடியில் பை போன்ற வலை பொருத்தப்பட்டிருக்கும். வளையம் தேவைக்கேற்ற நீளங்களையுடைய தடிகளில் பொருத்தப் பட்டிருக்கும். (தேயிலை வடியைப் போன்றது) பை போன்ற வலை குறுகிய கண்களை உடையதாகவும் ஒரு பாகம் வரை நீளமுள்ளதாகவும் இருக்கும். இதனால் சிறிய ரக மீன்களை கோலி எடுக்கக்கூடியதாக இருக்கும்.



## றோளர் மடி (இழுவை வலை)

இரசாயன சேர்க்கையால் உற்பத்தி செய்யப்படும் **'தங்கூசி'** எனப்படும் வைரமான பிளாஸ்ரிக் தன்மைபொருந்திய நூலினால் (HDPE) றோளர் மடி தயாரிக்கப் படுகின்றது. இந்த மடி கரைவலை மடியைப்போன்ற உற்பத்திமுறை அமைந்திருந்தாலும் மடியின் அமைப்பு கரைவலை மடியைப்போலல்லாது ஒலிபெருக்கி 'கோண்' போன்ற அமைப்பிலேயே இருக்கும். கரைவலை மடியில் தூறு கணிசமான அகலமாகவும், அடிப்பகுதி இணைக்கப்பட்டதாகவும் இருக்கும் ஆனால் றோளர் மடியின் தூறு ஒடுக்கமாகவும், அடிப்பாகம் இணைக்கப்படாமல் சுருக்கிக் கட்டக்கூடிய வகையில் இருக்கும். தூறின் முனையில் குறுகிய கண்களையுடைய மடங்கு இணைக்கப்பட்டு, மடங்கினுள் சற்று மொத்தமான கயிறு விடப்பட்டிருக்கும். இந்த கயிற்றை **'வாய்க்கயிறு'** என்பார்கள். வாய்க்கயிற்றினால் தூறின் அடிப்பாகம் சுருக்கிக் கட்டப்படுகிறது. இந்த சுருக்கும் பகுதிதான் மடியினுள் சிக்குண்ட மீனினங்களை படகில் போட உதவுகிறது. தூறின் மேற்பகுதியில் வெளிப்பக்கத்தால் மடங்கு பிதைந்து அதற்குள் மடியின் விரிவிற்கேற்ற கயிறு கோர்த்திருப்பார்கள். இதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'வண்டிக்கயிறு'** என்பார்கள். இந்த வண்டிக்கயிறுதான் தூறிற்குள் உள்ள மீனினங்களை மேற்பக்கத்தால் சுருக்கிக்கொள்வதற்கு உதவுகிறது

தூறு 1½ பாகமும், தூறிலிருந்து வாசல்வலை வரை 7 பாகமுமாக வட்டவடிவமான கூம்பு முனையையும், உடலையும் கொண்டது. உடலில் பொருத்தப்படும் இரண்டு கைவலைகள் 6 பாகமும் நீளமுள்ளதாக இருக்கும். வாசல்வலை 2 முளம் இடைவெளி வைத்து பெருக்கங் கயிற்றுடன் மந்து அடிப்பார்கள். 1 அங்குலம் விட்டமுடைய கயிற்றில் ஈயக் குண்டுகளை புகுத்தி அதனை மடவலையில் பெருக்கங் கயிற்றுடன் இணைப்பார்கள். இந்தக் கயிற்றை **'குண்டுக் கயிறு'** என்பர். ஈயக் குண்டானது 2 அங்குலம் நீளமுடைய குளாய்போன்ற அமைப்பில், 250 கிராம் நிறையை உடையதாக இருக்கும். ஒரு மடிக்கு மொத்தம் 18 கிலோ நிறையுடைய குண்டுகளைப் பொருத்துவார்கள். இக்குண்டுகளை குண்டுக்கயிற்றில் நுழைத்து, பெருக்கங் கயிற்றில் 1 முளம் இடைவெளியில் குண்டுக்கயிற்றை இணைப்பார்கள். அவ்வாறு இணைக்கும் போது 1, 2 என குண்டுகள் ஒவ்வொரு வெளியிலும் வருமாற்போல் கணக்கிட்டு இணைப்பார்கள். இதனையும் மந்து அடித்தல் என்றே அழைப்பார்கள். குண்டுக் கயிற்றில் குண்டுகள் புரள்வதனாலும், கயிறு மண்ணோடு உராசுவதனாலும் இலகுவில் தேய்வு ஏற்படுவது வழமை. இதனால் வாரந்தோறும் அல்லது குண்டுக்கயிறு சேதமுறும் சந்தர்ப்பங்களில் குண்டுக் கயிற்றை மாற்றி மந்து அடிப்பார்கள். மோவலைக்கு மிதக்கக்கூடிய **'போயா'**க்களைப் கட்டுவார்கள்.

றோளர் மடியில் மூன்று வகையான மடிகள் இங்கு பயன்படுத்தப்பட்டன

1. இறால் மடி
2. மீன் மடி
3. அட்டை மடி

இவை மூன்றிற்கும் அமைப்பில் பெரிதாக வித்தியாசமில்லை. ஆனால் கண் அளவுகளிலும், நூல் இளைகளிலும் மாற்றமிருக்கிறது.


## றோளர் தொழில்முறை

றோளர் தொழில் இந்தியத் தொழிலாளர்களாலேயே செய்யப்பட்டுவந்தது. அந்நாட்களில் குருநகரில் **'வளிச்சல்'** என்று சொல்லப்படும் நைலோன் வலைத்தொழில் வெகு சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. இந்தியர்களின் றோளர் தொழிலினால் குருநகர் தொழிலாளர்களின் நைலோன் வலைகள் தினந்தினம் துண்டாடப்பட்டு சேதமுற்றதுடன், துண்டாடப்பட்ட வலைகள் நீரோட்டத்தில் அள்ளுண்டு தொலைந்தும் போகலாயிற்று. தொழில் வருவாய் இழப்புடன் வலைகளும் இழக்கப்பட்டதனால் தொடர்ச்சியாக நைலோன் வலைத் தொழிலை செய்யமுடியாத தொழிலாளர்கள் இந்திய தொழிலாளர்களுக்குப் போட்டியாக 1976 இன் இறுதியில் றோளர் தொழிலை தேர்ந்தெடுக்க லாயினர். குருநகரைச் சேர்ந்த பிலிப், டேவிற் ஆகிய இரு சம்மாட்டிகளே றோளரை ஆரம்பித்து வைத்தவர்களாவர். றோளர் தொழில் இங்கு செய்வதை ஏனைய தொழிலாளர்கள் எதிர்த்தமையி னால் இவர்கள் மன்னாரில் தங்கியிருந்து செய்து வந்தார்கள்.

நைலோன் வலையைவிட குறைந்த முதல், நிறைந்த வருமானம் றோளரினால் கிடைத்தமை இலகுவில் அனைவரையும் கவர்ந்திழுக் கலாயிற்று. இதனால் 1977


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் குருநகரில் எதிர்ப்பு கைவிடப்பட்டு பல றோளர்கள் உருவாகத் தொடங்கின. இந்தியப் படகுகளைப்போல் அதி வேகமுள்ள இயந்திரப் படகுகளைக் கொள்வனவு செய்யாமல் நைலோன் வலைத் தொழிலுக்குப் பயன்படுத்திய 3½ தொன் இயந்திரப் படகையே பயன்படுத்தினார்கள். அதிவேக இயந்திரப் படகுகள் பயன்




படுத்தலுக்கு இருந்த தடையும் இதற்கு ஒரு காரணம். இறால் இனமே றோளரில் அதிகமாக பிடிபட்டதனால் பல வியாபார நிறுவனங்கள் போட்டிபோட்டுக்கொண்டு இறால் கொள்வனவில் இறங்கின. இதனால் றோளர் தொழில் வேகமாக பெருக்கமடைந்தது.

இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்தமைக்காக காரைநகர் முகாம் இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட றோளர் மடிகள் விற்பனை செய்யப்பட்டமை, இவர்களது றோளர் தொழில் ஆரம்பத்திற்கு பேருதவியாக அமைந்தது. இதற்காக முன்னின்று உழைத்தவர் வண. F.J. ஸ்ரனிஸ்லோஸ் அடிகளாராவர். குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தின் பங்கும் கணிசமானது. கடல் நிலத்து மண்ணை றோளர் மடி உரசியவாறு வருவதனால் கடல்வளத்திற்கு பெரும் பாதிப்பு என்று ஆரம்பம் முதல் அனைவராலும் வலியுறுத்திவந்தபோதும், இந்தியத் தொழிலாளர்கள் அவற்றை அலட்சியம்செய்து றோளர் தொழிலை தொடர்ச்சியாக செய்துவந்ததனால், இங்குள்ள தொழிலாளர்களால் செய்யப்படும் றோளர் தவிர்ந்த மாற்றுத் தொழில்களுக்குப் பெரும் பாதிப்புகளே ஏற்பட்டவண்ணமிருந்தது. பாதிப்பு உள்ளது எனக் கொள்கையளவில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் செயல்வடிவம் கொடுக்கமுடியாமல் குருநகர் தொழிலாளர்கள் திண்டாடும் நிலையே இருந்துவந்தது.

றோளர் மடியைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். மடியின் கைவலைகளில் மேல், கீழாக ஒவ்வொரு பக்கத்திலும் பெருக்கங்கயிறு கைவலையைவிட 3½ பாகம் நீளமுள்ளவையாகவும், முனையில் கொண்டை உடையதாகவும் இருக்கும். கொண்டையின் உட்பக்கத்தால் நீள்சதுர இருப்பு வளையம் இணைக்கப்பட்டிருக்கும் இதனை **'கோஸ்'** என்பர். ஒவ்வொரு பக்க மடவலை, மோவலை பெருக்கங்கயிற்றுக் கொண்டையில் பலகை பொருத்தப்படும். பலகையானது சுற்றிவர முனைகளுக்கு இரும்புப் பட்டை பொருத்தப்பட்ட 4 X 2 அடிகளைக்கொண்ட நீள்சதுரமாகும். இந்தப் பலகையை **'ஓட்டர் கதவுகள்'** எனவும் அழைப்பர். பலகையின் முன் பக்க கீழ் மூலை சற்று உருட்டப்பட்டதுமான அமைப்பில் இருக்கும். பின்பக்கத்தில் மேல் கீழ் பகுதிகளில் இரண்டு 'ப' (முனை உருட்டப்பட்ட சதுர வடிவில்) பொருத்தப்பட்டிருக்கும். இந்தப் 'ப' வில்தான் பெருக்கங்கயிற்றின் கொண்டை **'செக்கர்'** இனால் இணைக்கப்படுகிறது. பலகையையும், மடியையும் இணைத்துக்கொள்வதற்கும், நீக்கிக்கொள்வதற்கும் வசதியாக செக்கர் பயன படுத்தப்படுகிறது. செக்கர் இரும்பினால் ஆனது. 'ப' வடிவில் இருக்கும். 'ப' வின் மேற்பகுதியில் இரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைகளையும் இணைத்தாற் போல் புரியுடனான ஆணி ஒட்டப்பட்டிருக்கும். இதன்மூலம் கழற்றவும், பூட்டவும் இலகுவாக இருக்கும்.



பலகையின் நான்கு முனைகளிலிருந்தும் 2 முள நீளமுள்ள சங்கிலி இணைக்கப்பட்டு, சங்கிலியின் மறு முனைகள் 3 அங்குலம் விட்டமுள்ள ஒரு வளையத்தால் இணைக்கப்பட்டிருக்கும். இதனை **'முச்சை'** என்பர். முச்சை சரியாக இருக்கவேண்டும். அன்றேல் தொழில் செய்யமுடியாமல் குழப்பிவிடும். ஒவ்வொரு பலகையும் சங்கிலியுடன் சேர்ந்து 80 இறாத்தல் இருக்கவேண்டும். நிறையில் பலகைக்குப் பலகை வேறுபாடு இருக்கக்கூடாது. இரண்டு பலகைகளிலும் தனித்தனியே 35 பாகம் நீளமுள்ள கயிறுகள் முச்சை வளையத்தில் செக்கரால் இணைக்கப்பட்டிருக்கும். இந்தக் கயிற்றை **'அடிக்கம்பாகம்'** அல்லது **'அடி கயிறு'** என அழைப்பார்கள். 9 பாகம் ஆழத்திற்கு மேலான கடற் பகுதியிலேயே றோளர் தொழில் செய்யப்படுவதால் அனைத்து வேலைகளும் படகிலிருந்தவாறே மேற்கொள்ள வேண்டும். இயந்திரப் படகை மெதுவாகச் செலுத்தியவாறு மடியை கடலில் இறக்குவார்கள். தொடர்ந்து பலகையும், கயிற்றையும் இறக்குவார்கள்.

படகின் மத்தியில் குறுக்காக ஒரு மரம் இணைக்கப்பட்டிருக்கும். இம்மரத்தை **'விலங்குமரம்'** என்பார்கள். விலங்குமரம் படகைவிட இரண்டு பக்கத்தாலும் 2 முளம் வரை நீளமாக இருக்கும். இந்த மரத்தின் வெளி முனைகளிலேயே அடி கயிற்றின் மறு முனை கட்டப்பட்டிருக்கும். கயிறு முற்றிலும் இறக்கப்பட்டதும் படகை மிக வேகமாகச் செலுத்துவார்கள். ஆனால் மடி, பலகைகளை இழுத்தவாறு படகு விரைவாகச் செல்வது இயலாத காரியம். இயந்திரம் தனது முழு சக்தியையும் பயன்டுத்தி படகைச் செலுத்துமே தவிர படகு விரைவாகச் செல்லாது. இவ்வாறு படகு இழுப்பதை **'அடித்தல்'** என்பார்கள். படகு அடிக்கும்போது கயிறு மற்றும் சங்கிலியில் பொருத்தப்பட்டுள்ள பலகை அசைந்து அசைந்து கடல் தரையைக் கிழித்தவாறு செல்லும், மடியிலுள்ள ஈயக் குண்டுகள் கடல் தரையை வளித்தவாறு வரும் இதனால் மீன், இறால் இனங்களில் சிறிய குஞ்சுகள்கூட மடிக்குள் புகுந்துவிடும். மூன்று மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக அடித்தபின்னர். இயந்திரத்தின் வேகத்தைக் குறைத்து படகை பின்னோக்கிச் செலுத்துவார்கள். அவ்வாறு பின்னோக்கி மெதுவாகச் சென்றுகொண்டிருக்கும் படகில் இரு பக்கத்தாலும் அடிகயிற்றை இழுத்து ஏற்றுவார்கள். அடுத்து பலகையை இழுத்து, படகின் கடையால் பக்கம் இதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கொழுவிவிடுவார்கள். மடி.யை இழுத்து ஏற்றுவார்கள். மடியை ஏற்றும்போது படகு பின்னோக்கிச் செல்லாது. மடியை உதறி உதறி ஏற்றுவார்கள். இதனால் மீனினங்கள் அனைத்தும் தூறுக்குள் சென்றுவிடும்.

படகின் நடுவில் ஒரு மரம் நிறுத்தப்பட்டிருக்கும். இதனை **'வீஞ்சுமரம்'** என்பார்கள். இந்த மரத்தின் நடுவில் நீட்டப்பட்ட கையைப்போன்று இருப்பு குளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தப்பட்டிருக்கும். இதனை **'வீஞ்சு'** என்பர். வீஞ்சின் ஒரு பக்க முனை மரத்துடன் இணைத்திருக்க மறுபக்க முனையில் இரும்புக் கம்பியால் சிறிய 'U' போன்ற அமைப்பில் செய்யப்பட்டு நான்கு பக்கமும் ஒட்டப்பட்டிருக்கும். வீஞ்சு 90 பாகை சரிவில் இருக்குமாறுபோல் வீஞ்சின் மேற்பக்க 'U' விலும், வீஞ்சு மரத்தின் முனையிலும் கயிற்றால் இழுத்துக் கட்டுவார்கள். மேலும் வீஞ்சின் வலம், இடம் உள்ள 'U' களில் கயிற்றைக் கட்டி படகின் விளிம்புகளில் இழுத்துக் கட்டிவிடுவார்கள். இதனால் வீஞ்சு அசைவின்றி இருக்கும். கீழ்ப்பக்கமுள்ள 'U' வில் இரட்டைச் சக்கர கப்பி கட்டப்பட்டிருக்கும். இக் கப்பியில் கயிறு கோர்க்கப்பட்டிருக்கும். கயிற்றின் முனையில் ஒற்றைச் சக்கர கப்பி கட்டப்பட்டிருக்கும்.

கடையாலில் ஒடுக்கிய மடியின் தூறை படகின் மையம் நோக்கி அதாவது வீஞ்சு உள்ள இடத்திற்கு இழுத்து வருவார்கள். தூறு வீஞ்சை நெருங்கியதும், வண்டிக் கயிற்றைப் பிடித்துத் தூக்கி மீனினங்களை அடித் துறுவரை நெருக்குவார்கள். மேற்கொண்டு இரண்டு முனைகளும் இணைக்கப்பட்ட சிறிய வட்டக் கயிற்றால் தூறைச் சுற்றி, கயிற்றின் இரண்டு பக்க முனைகளையும் (வீஞ்சிலிருந்து கயிற்றில் தொங்கியவாறு இருக்கும்) கப்பியில் கொழுவி விடுவார்கள். மேற்கொண்டு கப்பிக் கயிற்றின் மறுமுனையைப் பிடித்து இழுக்க தூறைத் தூக்கியவாறு கப்பி மேலே எழும். தூறு படகைவிட மேலே உயர்ந்ததும், தூறின் அடியில் கட்டப்பட்டுள்ள வாய்க் கயிற்றை அவிழ்த்து விடுவார்கள். தூறிற்குள் கிடந்த அனைத்தும் படகிற்குள் விழுந்துவிடும். தூறின் முனையை முன்போல சுருக்கி கட்டிவிடுவார்கள். இதனை ஒரு பாடு என்பர் இவ்வாறு மூன்று பாடுகளை அடிப்பார்கள்.

## நைலோன் வளிச்சல் வலை

21 இழை முதல் 33 இழை வரை நூல் இழைகளைக்கொண்ட 4 அங்குல கண்களைக்கொண்ட நைலோன் வலைகள் பயன்படுத்தப்படுகின்றன. மோவலைக்கு மொத்தமான நைலோன் அல்லது கொர்லோன் கயிறு கோர்க்கப்பட்டிருக்கும். இக் கயிற்றுடன் வலையை இணைப்பதற்கு 2 பாகத்திற்கு ஒரு மந்து அடிப்பார்கள். மந்துக்குள் **'குழைவு'**க்காக (சுருக்கு) 3 பாக வலையை மந்துக்குள் சுருக்கியே மந்து அடிப்பார்கள். இம் மந்துகளில் மிதப்புக்கான போயா இணைக்கப்படும். ஒரு வலையில் 16 போயா இணைக்கப்பட்டிருக்கும். மடவலையில் 5 அல்லது 6 பாகத்திற்கு ஒரு கல்லு பெருக்குவார்கள். கல்லானது சீமேந்து, பாலியாற்று மணல்கொண்டு தயாரிக்கப்படுகிறது. 5 அங்குல விட்டமுடையாதகவும், 1 அங்குல உயரமுள்ளதாகவும் நடுவில் துளையிடப்பட்டு இருக்கும். இதனை மொத்தமான நூலிலிட்டு வலையில் கட்டுவார்கள். இவ்வாறு 50 வலைகள் வரை தொழிலுக்குப் பயன்படுத்துவார்கள். ஒவ்வொரு வலையின் இணைப்பிலும் பெரிய வட்டமுள்ள போயாவை கயற்றில் கட்டி மோவலையுடன் இணைத்திருப்பார்கள். இதனை **'இடைப்போயா'** என்பர்.


## நைலோன் வளிச்சல் தொழில்முறை

இலங்கையின் தென் பகுதியில் 1950 ஆம் ஆண்டு பிற்பகுதியில் நைலோன் தொழில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் குருநகரில் 1956 பிற்பகுதியிலேயே 3½ தொன் இயந்திரப்படகின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. பெருங்கடல்சார் மீனினங்களைப் பிடிப்பதற்கான தொழில் என்பதால் வியக்கத்தகு வருவாயைக் கொடுத்ததனால் விரைவில் பலரை இந்தத் தொழிலில் நாட்டங்கொள்ளச்செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயந்தர வேளை 9, 10 பாகங்கள் ஆளமுள்ள பெருங்கடலை ஊடறுத்து நைலோன் வலையை செங்குத்தாக இறக்குவார்கள். இவ்வாறு வலைகளை இறக்குவதை **'வலை படுத்தல்'** என அழைப்பர். மடவலையிலுள்ள கல்லுகளின் பாரத்தனால் மடவலை நிலத்தைநோக்கி செல்லும், மோவலையிலுள்ள மிதப்புகளி னால் மோவலை மேல் நோக்கி உயரும் இதனால் கடலை ஊடறுத்து வேலி அடைத்தாற் போல் இருக்கும்.



வலையின் ஆரம்ப முனையில் தடியில் சிவப்பு கொடி கட்டி மிதக்கவிட்டிருப்பார்கள். இக் கொடித் தடியானது, தடியின் கீழ்ப்பக்கத்தில் பாரமாக இருப்பதற்கென கல்லு அல்லது இரும்பு கட்டியிருப்பார்கள். தடியின் நடுப்பகுதியில் சதுரமான பெரிய போயா கட்டியிருப்பார்கள். போயா தடியை நீருக்குள் அமிழ அனுமதிக்காது. பாரமான கல்லு அல்லது இரும்பு தடியை கீழ்நோக்கி இழுக்க தடி நேராக வந்துவிடும். முனையில் கொடித்தடி கட்டுவதுபோன்று வலைகளின் மத்தியிலும் ஒரு கொடித்தடி கட்டுவார்கள். இவைகள் அடையாளம் காண்பதற்கு இலகுவாக இருக்கும்.

வலைகள் யாவும் படுத்து முடிந்ததும் வலையின் இறுதி முனையில் பத்து பாக கயிற்றைக் கட்டி அதனை படகுடன் இணைத்துவிடுவார்கள். வலைகள் நீரின் ஓட்டத்திற்கு ஏற்றாற்போல் வளிந்து செல்லும். இதனாலேயே இதனை 'வளிச்சல் வலை' என அழைக்கிறார்கள். வலை நீரின் ஓட்டத்திற்கு வளியும்போது படகு காற்றுக்கு இசைவாகவே கிடந்தவாறே வளிந்து செல்லும். கடலை உலாவரும் மீன்கள், நீரோட்டத்துடன் வரும் மீன்கள் வலையில் சிக்குண்டுவிடும். கட்டா, பாரை, அறுக்குளா போன்ற மீன்கள் பிடிபடும். கட்டா பிடிபட்டால் தொகையாகவே இருக்கும்.

கடலில் விடப்பட்ட வலைகளை ஏற்றிமுடிக்க எடுக்கும்நேரம், மற்றும் நிற்குமிடத்திலிருந்து துறைக்குச் செல்ல எடுக்கும்நேரம் ஆகியவற்றைக் கணக்கிட்டு குறித்த நேரத்திற்கு வலைகளை ஏற்றத் தொடங்குவர் இதனை **'வலை கிளப்புதல்'** என்பர். வலையை ஏற்றும்போது சிக்குண்ட மீன்களை கழற்றி எடுத்துக்கொள்வர்.

## படுப்புவலை

வளிச்சல் வலையை ஒத்ததாக வலை அமைப்புகளும், உருவாக்கமும் இருக்கும். ஆனால் வளிச்சல் வலையைப்போன்று பெரிய கண்களாக இல்லாமல் மாறுபட்ட பெயர்களைக்கொண்ட ஒவ்வொரு வலைகளும் வேறுபட்ட அளவுகளைக் கொண்ட கண்களை உடையதாக இருக்கும். வளிச்சல் வலைக்குரிய கண்களைவிட சிறியவையாகவே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படுப்புவலை தொழில்முறை

வளிச்சல் வலைத் தொழில் முறையை ஒத்தவையாகவே இருக்கும். வழிச்சல் வலையைப் போலல்லாமல் நீர் முறைக்கேற்றப இரண்டு தடவைகள் வலைகளை ஏற்றுவார்கள். குறைந்தநேரம்தான் வலை கடலில் கிடக்கும். படுப்பு வலைகளாக

அறக்கொட்டியான்

சூடை வலை

போன்றவையே பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது இதே பாணியிலொத்த பலவற்றைப் பயன்படுத்துகிறார்கள்.

டிஸ்கோ வலை

முப்புரி வலை

நண்டுவலை

தங்கூசி வலை

முரல் வலை

போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றைத் தவிர நவீன உத்திகளில் மேலும் புதுப்புது தன்மையில் படுப்புவலைத் தொழில் உருவாகலாம்.

## இறால் மடி

றோளர் மடியின் அமைப்பைக் கொண்டதாக இருக்கும். இதன் உருவாக்கத்திற்கு **'கொர்லோன்'** நூலால் பின்னப்பட்ட வலைகளே பயன்படுத்தப் படுகின்றன. இறால் மடியில் **'கூனி'** என்று அழைக்கப்படும் மிகச் சிறிய இறால் அதிகமாக பிடிபடுவதால் தூறு மிகக் குறுகிய கண்களாக இருக்கும். தூறின் கண்களுக்கு இசைவான கண்களைக் கொண்டவையாக ஏனைய சுத்துகள் இருக்கும். 50 கண்களையுடைய 12 சுத்துகளைக் கொண்டதாக இருக்கும். இதற்கு கைவலை நீளமானது. ஒவ்வொரு பக்கமும் 21 பாகம் நீளத்தையுடையதாக அமைந்திருக்கும். மடவலை, மோவலைகளின் விளிம்புகளில் மடங்கு பிதைந்து அதற்குள் கயிறு கோர்க்கப்பட்டிருக்கும். மடவலை கயிற்றில் ஒவ்வொரு பாக இடைவெளிவிட்டு சிறிய கயிற்று வளையம் கோர்க்கப்பட்டிருக்கும். இதனை **'கோடான்'** என அழைப்பார்கள்.

'கோடான்' இனை உருவாக்கவேண்டுமானால், ஒரு பாகம் நீளமுள்ள இழைக் கயிற்றை நன்றாக முறுக்கி, அதனை மடித்து 5, 6 அங்குலம் விட்டமாக வருமாற்போல் வட்டமாக்கி மிகுதி கயிற்றால் மடிக்கப்பட்ட வட்டத்தை முறுக்குக் குலையால் சுற்றிச் சுற்றி எடுப்பார்கள். ஈற்றில் கயிற்றின் இரண்டு பக்க முனைகளையும் முறுக்கிய கோடானுக்குள் நுழைத்துவிடுவார்கள். வட்டமாக இருக்கும் கோடானை மடியின் மடவலைக் கயிற்றுக்குள் மடங்குடன் சேர்த்து நுழைப்பார்கள். நுழைத்த கோடானை கயிற்றைச் சுற்றி வளைப்பார்கள். தொடர்ந்து கோடானின் ஒரு முனையால் மறுமுனைக்குள் நுழைத்து இழுத்து நெருக்குவார்கள். இப்போது மடவலைக் கயிற்றை மடங்குடன் இறுக்கி இணைத்ததாகக் காணப்படும். இந்தக் கோடானில் கம்புகளைப் புகுத்தி நடுவதனால் கம்புகளின் மொத்தத்திற்கேற்ப கோடானின் விட்டத்தில் மாற்றமிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இறால் மடித் தொழில்முறை

பௌர்ணமி, அமாவாசை தினங்களில் பொழுது சாயும் நேரம் கடலிலே வடு விழத்தொடங்கும். கடலில் இரண்டு நீர்நிலைகள் உண்டு ஒன்று வடு மற்றது வெள்ளம். இந் நீர்நிலை நேரங்களில் கடலின் ஆழமான ஒடுங்கிய பகுதிகளில் நீரோட்டம் அதிகமாக காணப்படும். குருநகரைப் பொறுத்தவரை கல்முனையிலிருந்து பண்ணைப் பாலம் வரை உள்ள அகன்ற வாய்க்கால்போன்ற ஆழப்பகுதி நீரோட்டம் அதிகமுள்ள பகுதியாகும். இப்பகுதிகளில் வடுநீர் மேற்குத் திசையிலிருந்து கிழக்குத் திசை நோக்கியும், வெள்ளநீர் கிழக்கு திசையிலிருந்து மேற்கு திசைநோக்கியும் மிக வேகமாக ஓடும். இப்பகுதிகளில் நீரோட்டதை மறித்து குறுக்காக மடியைக் கட்டுவார்கள். வடு நீருக்கு மாத்திரமே மடித்தொழில செய்யப்படுகிறது.

கைவலையில் ஒருபக்க முனையிலுள்ள கோடான்களில் 12, 13 முளம் உயரமுள்ள கம்பின் அடிப்பாகத்தைப் புகுத்தி கடல் நிலத்தில் நடுவார்கள். தொடர்ந்து கைவலையிலுள்ள ஒவ்வொரு கோடானுக்குள்ளும் கம்புகளைப் புகுத்தி மடவலைக் கயிறு மண்ணுக்குள் புகக்கூடியவாறு இழுத்து நிலத்தில் நடுவார்கள். அவ்வாறு நடும்போது கைவலை 'V' அமைப்பில் வடு நீரை எதிர்கொண்டாற்போல் வருமாறு திட்டமிட்டே நடுவார்கள். முழுக் கோடானிலும் கம்புகள் நட்ட பின்னர் மோவலையை உயர்த்தி மோவலைக் கயிற்றை, கம்பின் மேல் முனையில் மடிப்பிட்டு சுற்றிவிடுவார்கள். இப்போது பார்த்தால் இரண்டு பக்கமும் கைவலை 'V' அமைப்பில் விரிந்தவாறு நிற்கும். நீரின் போக்குக்கு கைவலையின் மத்தியிலிருந்து மடி பின்னோக்கி நீண்டிருக்கும். மடியின் தூறு சுருக்கிக் கட்டப்பட்டிருக்கும். நீரோட்டத்துடன் வரக்கூடிய இறால் இனங்கள், சிறிய மீன் இனங்கள் தூறுக்குள் தங்கிவிடும். அடிக்கடி வள்ளத்தில் இருந்தவாறு தூறைத் துக்கி அவிழ்து தூறுக்குள் தேங்கி இருப்பவற்றை வள்ளத்தில் கொட்டிவிட்டு மீண்டும் தூற்றை கட்டி கடலில் விடுவார்கள். இத்தொழிலானது மூன்று மணித்தியாலங்கள் வரைதான் செய்யலாம் பின்னர் நீரின் வேகம் குறைந்து காணப்படும். மேற்கொண்டு செய்யமுடியாது.

## பொறிவலை (கூடு)

பொறிவலையின் சட்டகத்திற்கு 4 வட்டங்கள் பொறியின் வாய்வலையிலிருந்து தூறு வரை வட்டங்களின் விட்டம் குறைந்து செல்லும். வாய் வலையிலுள்ள வட்டத்தின் விட்டம் மடி பயன்படுத்தவேண்டிய தேவையைப் பொறுத்து மாறுபடும். இவ் வட்டங்களைச் சுற்றி வலை பொருத்தப்படுகிறது. அருகிலுள்ள இரு வட்டங்களுக் கிடையிலான தூரமும் அவ்வாறே தேவையைப் பொறுத்து மாறுபடும். இறால் மடியை எடுத்துநோக்கினால், அந்த மடிக்குள் குறைந்து செல்லக்கூடிய வட்டங்களை யுடைய இரும்பு வளையங்களை உட்புகுத்திப் பொருத்திப் பார்த்தால் எவ்வாறிருக்குமோ அதேபோன்றே கூடு அமைந்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கும். இப் பொறியின் மையத்தில் உட்பக்கமாக இரண்டு வளையங்களுக்கு இடையில் மேல் வலையிலிருந்து உள்நோக்கிச் செல்லுமாறு கூம்புபோன்ற அமைப்பில் மேலதிக வலை பொருத்தப்பட்டிருக்கும். இதனைக் 'கோண்' என்பர். இந்தக் கோணிற்குள் இறால், மீன் இனங்கள் புக முடியுமே தவிர வெளியே வர முடியாது. மொத்தத்தின் பிடிபட்ட மீனினத்திற்கு இடப்பட்ட சிறை என்றே சொல்லலாம்.

## பொறிவலைத் தொழில்முறை

இதனை இங்கு தனிப் பொறிவலையாகப் பயன்படுத்தவில்லை இரவில் கடலுக்குச் சென்றுவரமுடியாத கடல் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர் இந்தப் பொறி வலை இறால் மடியின் கைவலையுடன் பொருத்தி பயன்படுத்தினார்கள். பொறியின் தூறிற்குப் பின்னால் கம்பு பாய்ந்து தூறை இழுத்துக் கட்டிவிடுவார்கள். இதனால் மாற்று நீரோட்டத்திற்கும் பொறி அசையாது நிற்கும். சாய்வான நீரோட்டத்தில் புகுந்த இறால், மீன் இனங்கள் எல்லாமே தூறுக்குள் தங்கிவிடும். இடையில் ஏற்படும் மாற்று நீரோட்டத்தினால் தூறுக்குள் இருப்பவை வெளியேறுவதற்கு கோண் அனுமதிக்காது. எனவே பகலில் எவ்வேளையும் சென்று பிடிபட்டவைகளை எடுத்துக் கொள்ளலாம். பரவைக்கடல் சிறகுவலைத் தொழிலுக்கும் இதனைப் பயன்படுத்துகிறார்கள். அது அளவில் சிறிதாக இருக்கும.

## சிறகுவலை

இத் தொழில்முறை 100 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 11 முளம் வரையிலான ஆழ்கடலிலேயே மீன்களை முக்கிய இலக்காகக் கொண்டு பயன்படுத்தப்பட்டு வந்தது. காலப்போக்கில் மிகக் குறைந்த நீர்மட்டமுள்ள பரவைக் கடலிலும் இதே தன்மையையொத்த வலைகளைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள். இவை மீன்களை முக்கிய இலக்காகக் கொண்டதாகவும், மற்றும் இறாலை முக்கிய இலக்காக கொண்டதாகவும் காணப்பட்டது. தொழில் தன்மையைக் கொண்டு இதனை 'மீன் பொறி' என்றும் அழைப்பர். சிறகுவலையின் வலை அமைப்பு நான்கு வகைகளைக்கொண்டது.

**பட்டி:**

மீன்கள் தங்கி நிற்கும் பகுதியாகும். பின்னால் நீட்டப்பட்ட முக்கோணச் சதுரமாக சிறிய வாசல் வைத்து பாயப்படுகிறது. இந்த வாசலால் புகுந்த மீனினங்கள் மீண்டு வரமுடியாது.

**சிறகு:**

பட்டி வலையில் உள்ள வாசலுக்கு போதிய இடம்விட்டு பொருத்தப்பட்டு, பட்டிக்கு முன்பாக இரண்டு பக்கத்தாலும் வட்டமாக வரும் பகுதி. இதற்கும் வாசல் வைத்துப் பாயப்படும். இந்த வாசல் சற்று அகலமாக இருக்கும். பட்டிக்குள் புகாத சில மீனினங்கள் இதற்குள்ளும் தங்கி நிற்கும்.

**நிலவலை:**

சிறகினது வாசலின் மையத்திலிருந்து நீண்ட வேலிபோன்று ஆழம் குறைந்த பகுதி நோக்கி பாயப்படும் வலை. வலை பாயப்படும் இடத்தின் தேவையைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்து நிலவலை நீண்டதாகவோ, சற்றுக் குறுகியதாகவோ இருக்கும். வலை பாயப்படும் இடத்தை 'பாடு' என்பர். கடலில் குறுக்காக ஓடிவரக்கூடிய மீனினங்களை மறித்து ஆழமான பகுதி நோக்கி அதாவது பட்டி நோக்கி திருப்புவதே இதன் வேலையாகும்.

**கெட்டு:**

சிறகில் இணைத்தாற்போல் இரண்டு பக்கத்தாலும் கைகளை விரித்தமாதிரி முனை மடிக்கப்பட்ட அமைப்பில் பாயப்படுகிறது. நிலவலையின் மறிப்பால் திசை திரும்பிய மீன்கள் முன்னோக்கிச் செல்லும்போது குறித்த எல்லையை விட்டு விலகிச் செல்லாது தடுத்து சிறகுக்குள் செல்வதற்குத் துணை செய்கிறது.

**கடிப்புவலை:**

பட்டி மற்றும் சிறகுக்குள் நிற்கும் மீன்களை சேகரித்து எடுப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது. இது தனியானதொன்றாகும்.

சிறகுவலையில் மாறுபட்ட தன்மைகளைக் கொண்ட தொழில் முறைகள் காலத்துக்குக்காலம் உருவாகியிருக்கின்றபோதிலும், மேலே குறிப்பிட்டவைகள் பொதுவான தேவைக்குரிய உபகரணங்களாகும். இவற்றின் அடிப்படையில் செய்யப்படும் மாறுபட்ட தொழில் முறைகளாவன:

## ஆழ்கடல் சிறகுவலை அல்லது அகலவலை

இதுவே ஆரம்பச் சிறகுவலைத் தொழில் முறையாகும். ஆரம்பத்தில் 11 முளத்திற்கு உட்பட்ட ஆழ்கடலில் செய்யப்பட்ட இத்தொழில் தற்போது 17 முளங்கள் வரையான ஆழ்கடலில் செய்யப்படுகின்றது. உயர்ந்த காட்டுக் கம்புகளையும், வலைகளையும்கொண்டு கடலில், வீடு அமைப்பதுபோன்று வலைச் சுவராகப் பாயப்படுகின்றது. இவ் வலைச்சுவர் 15 நாட்கள் வரை கடலில் நிற்கும். தினமும் காலையில் மீன்கள் கடிப்புவலை மூலம் சேகரிக்கப்படும். 15 நாட்களின் பின்னர் பிடுங்கப்பட்டு, பழுதுகள் பார்க்கப்பட்டு, கண்டல்பட்டையிட்டு அவிக்கப்பட்டு மீண்டும் கடலில் பாயப்படும். தற்போது பெரிய கம்புகளின் தட்டுப்பாடு காரணமாக கம்புகளுக்குப் பதிலாக இரும்புப் பைப்புடன் இரும்புக் கம்பியைப் பொருத்திப் பயன்படுத்துகிறார்கள்.


இதன் தொழில் உபரணங்களை எடுத்துநோக்கினால், அனைத்து வலைகளும் உயரத்திற்கேற்றவாறு பல தட்டுகளாகப் பொருத்தப்பட்டிருக்கும். ஒவ்வொரு வலைகளுக்கும் இருக்கக்கூடிய நீள, உயரங்கள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டவையாக இருப்பினும், பயன்படுத்தப்படும் வலைகளுக்குரிய நூல்களின் இளை (கனம்), கண்களின் அளவு, பொருத்தப்படும் தட்டுகளின் அளவு போன்றவற்றைக் கணித்து பயன்படுத்தலுக்கு இலகுவான முறையில் வலையின் நீளத்தைக் கணிப்பர்.

தொழில் உபகரணங்களில் பட்டி முக்கியமானதாகும் இதற்குப் பயன்படுத்தப்படும் வலை கூடிய இழை நூல்களைக் கொண்டவையாகவும், சற்றுக் குறுகிய கண்களை உடையதாகவும், நிர்ணயிக்கப்பட்ட முளங்களுக்குரிய உயரத்துக்கேற்ற தட்டுகளைக் கொண்டவையாகவும் இருக்கும. மடவலைக்கு ஐந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களையுடைய மடங்கு பிதையப்பட்டு, அதனில் உறுதியான கயிறு கோர்க்கப்பட்டு, கயிற்றையும் மடங்கையும் கௌவிப் பிடித்ததாக கோடான் (கம்பின் அடி முனை புகக்கூடிய அளவு) கோர்க்கப் பட்டிருக்கும். கோடான் சற்று நெருக்கமாகப் போடப்பட்டிருக்கும். மோவலைக்கு 1½ கண் மடங்கு பிதையப்பட்டு கயிறு கோர்க்கப்பட்டிருக்கும். சிறகும் இவ்வாறே இருக்கும். பட்டிக்குரிய வலைகளையும், சிறகுக்குரிய வலைகளையும் பொறிக்கேற்ற அளவுத் திட்டத்தில் பனை ஈக்கில்களால் பிதைவார்கள் (பொருத்துதல்).



நிலவலை, மற்றும் கெட்டு சற்றுப் பெரிய கண்களை உடையதாகவும், பட்டி வலையைவிட உயரம் குறைந்ததாகவும் இருக்கும். பெரிய கண், குறைந்த உயரம் என்பதால் வலையின் நீளம் கூடியதாக இருக்கும். மடவலை, மோவலைகளுக்கு 1½ கண் மடங்கு பிதையப்பட்டு கயிறு கோர்க்கப்பட்டிருக்கும். மடவலையில் கோடான் கோர்க்கப்பட்டிருக்கும். கோடான் நெருக்கமற்றுப் போடப்பட்டிருக்கும். கெட்டு இரண்டும் தனித்தனி வலைகளாக இருக்கும். பொதுவாக ஒரு வலையே ஒரு பக்கக் கெட்டாக இருக்கும். நிலவலைகள் உயர ஒழுங்கில் பனை ஈக்கிலினால் பிதையப்படும். இது நேர் வலையாக நீண்டு இருக்கும். பட்டி, சிறகு, கெட்டு, நிலவலை ஆகியவற்றின் தொகுப்பை ஒரு கூட்டம் என்பர். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களை வைத்திருப்பார்.

கடலில் சுவர் போன்று வலை நிற்குமாறு நடுவதற்கு கம்புகள். அல்லது இரும்புக் கம்பிகள் வலைகளுக்குத் தேவையான அளவு உயரங்களில் இருக்கும். கம்புகளின் அடிப்பாகம் மிகக் கூர்மையாகவும், மேற்பாகம் சற்று கூர்மையாகவும் செதுக்கப்பட்டிருக்கும். வலையின் மடவலைக் கயிற்றிலுள்ள ஒவ்வொரு கோடானிலும் கம்பின் கூரான அடிப்பாகத்தைப் புகுத்தி கடல் தரையில் நடுவார்கள். கற்பாறையானால் அலவாங்கால் பாறையில் துளையிட்டு நடுவார்கள். பின்னர் மோவலையைத் தூக்கி மோவலைக் கயிற்றால் கம்பின் மேல்முனையில் வளையமிட்டு உயர்த்தி விடுவார்கள். அனைத்துக் கம்புகளிலும் இவ்வாறு செய்துவிட்டால் வலைச் சுவராக மாறிவிடும். கடல் நிலம் கற்பாறையானால் சிலவேளை பட்டி மற்றும் சிறகின் மடவலை கடல் நிலத்தோடு மருவியதாக இல்லாதிருக்கலாம். அவ்வாறாயின் மீனினங்கள் வெளியேற வாய்ப்புண்டு. இதனால் சுழியோடிச்சென்று கற்களை எடுத்து மடவலைக்கு வைத்து கடல் நிலத்துடன் மருவச் செய்வார்கள். இவ்வாறே கெட்டு, மற்றும் நிலவலைகளை உரிய கோணத்தில் பாய்வார்கள்.

இவ்வாறு பாயப்பட்ட பட்டி, சிறகுகளில் உள்ள மீன்களைச் சேகரிப்பதற்கு கடிப்புவலை பயன்படுத்தப்படுகிறது. கடிப்புவலையானது விரிந்த, விசாலமான பையைப் போன்று இருக்கும். ஏற்கனவே குறிப்பிட்டுள்ள 'பாச்சுவலை' தொழிலுக்கு உரிய வலையையொத்த அமைப்பில் கடிப்புவலை காணப்படும். பாச்சுவலையில் மடவலை, மோவலைக கயிறுகளில் குறுக்காக தடிகள் இணைத்தால் கடிப்புவலையாகவே இருக்கும். நீள, உயரங்களில் மாறுபாடு இருக்கும். கடிப்பு வலையின் இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பான் கயிற்றை அவிழ்த்துக்கொண்டு கரைநோக்கிச் சென்று இருபக்கத்தாலும் இழுப்பார்கள். மேற்கொண்டு முன்னைய முறையிலே அனைத்தும் நடைபெறும்.

தொழிலுக்கு செல்லும்போது ஆழ்கடலை ஊடறுத்தும் செல்வது வழமை.. அந்நேரங்களில் மீன் சிவப்பெறிந்து கிடப்பதை காணக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு. மீன் சிவப்பைச் சற்றுத் தூரத்தில் கண்டால் தோணியின் பாயை இறக்கிவிட்டு, நங்கூரமிடுவார்கள். மேலாப்பாச்சி அல்லது அனுபவசாலி ஒருவர் பாய்மரத்தின்மீது ஏறுவார். பாய்மரத்தின் முனையில் இருந்தவாறு மீன் சிவப்பை அவதானிப்பார். கரைவலைக்குள் அகப்படக்கூடிய மீன் இனமா? என்பதையும், மீன்களின் தொகையையும் அவரால் ஊகிக்கமுடியும். பொதுவாக சிவப்பெறிந்து நின்றால் கணிசமான தொகையாகவே இருக்கும். ஓரிரு தோணிகளில் ஏற்றமுடியாத மீன்களாக இருக்கும். அவர் கீழே இறங்கியதும் கூடிப் பேசிவிட்டு வேறு தோணிகளை உதவிக்குக் கூப்பிடுவதற்காக வெள்ளைத் துணியை பெரியதொரு மரக்கோலின் நுணியில் கட்டி 'லாவு'வார்கள். இந்த லாவுதலை தூரத்தில் போய்க்கொண்டிருக்கும் வேறு தோணிகளில் உள்ளவர்களால் பார்க்கமுடியும். அவ்வாறு பார்த்தவர்களுக்கு, ஆபத்து அல்லது மீன் சிவப்பைக் கண்டுவிட்டதாக உணர்வதற்கு அதிக நேரமெடுக்காது. லாவுதலை கண்ணுற்ற அனைத்துத் தோணிகளும் லாவிய தோணியைத் தேடி வேகமாக ஓடிவரும்.

தேடிவந்த தோணியிலுள்ளவர்களுக்கு விபரம் அறிவிக்கப்படும். உடனே இரண்டு தோணிகளில் இருக்கக்கூடிய பெரிய மடிகள் இரண்டை எடுத்து, ஒரு மடியின் தூற்றுப் பிதைச்சலை உருவி மற்றைய மடியுடன் பிதைவார்கள். இப்போது மிக நீளமானதும், இரட்டிப்பு கொள்ளளவு உள்ளதாகவும் மடி இருக்கும். அனுபவமுள்ளவர்கள் கலந்துபேசி நீர்நிலை, மீன் சிவப்பு நகரக்கூடிய திசை போன்றவற்றை கணித்து, மீன் சிவப்பு மையத்தில் வருமாறு இழுப்பதற்குரிய வகையில் மடியை குறித்த இடத்தில் இறக்குவார்கள். மேற்கொண்டு இரண்டு பக்கத்தாலும் ஏனைய வலைகள், ஓரிரு கம்பான் கயிற்றை இறக்கியவாறு சென்று ஈற்றில் இருபக்கத்தாலும் தோணியில் பாயை ஏற்றி இழுக்கத் தொடங்குவார்கள். குறித்த மீன் சிவப்பு தங்களது கட்டுப்பாட்டு எல்லைக்கு வரும்வரை தோணிகள் வேகமாக இழுத்தவாறே செல்லும். மடியுடன் ஒருதோணி கட்டப்பட்டிருக்கும்.

குறித்த எல்லைக்குள் மீன் சிவப்பு அகப்பட்டதும், தோணிகளிருந்து ஆட்கள் கடலுக்குள் பாய்ந்து இரண்டு தோணிகளுக்கும் இடைப்பட்ட பகுதியை குறுக்காக ஊடறுத்து மறித்தவாறு நீரில் மிதந்தவாறு, நீரிலே சலசலப்பை ஏற்படுத்தவார்கள். இடைக்கிடை மரக்கோல்களாலும் நிலத்தில் குத்துவார்கள். இதனால் மீன்கள் பயந்து தாம் வந்த திசையைவிட்டு எதிர்ப்புறமாகத் திரும்பி மடியை நோக்கிச் செல்லும். பயத்துடன் திரும்பிவரும் மீன்கள் அரவமின்றி நீரிலே கிடக்கும் மடிக்குள் நுழையத்தொடங்கிவிடும். விசாலமான மடியென்பதால் மீன்கள் மடிக்குள் சிரமமின்றிப் புகுந்துவிடும். மடி கொள்ளமுடியாத மீன்கள் வேறு பாதையைத்தேடி வெளியேறுவதைத் தவிர வேறுவழியில்லை.

மேலாப்பாச்சி, நீரிலே சுழியோடி உண்மையை அறிந்து லாவுவார். ஏற்கனவே மடியை இறக்கும்போது வாசல்வலையின் மடவலைக்கு கயிறுகள் கட்டியிருப்பார்கள். அந்தக் கயிற்றில் பிடித்து வாய்வலையின் மடவலையைத் தூக்குவார்கள். மடியின் வாய்ப்பக்கம் மேலே வந்துவிடும். இப்போது மடிக்குள் புகுந்துகொண்ட மீன்கள் வெளியேறமாட்டாது. இரண்டு தோணிகளிலும் மடியைப் பிடித்து இழுத்து நெருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலில் நீந்தியவாறு நிற்பவர்கள் மீன்களை வாலில் பிடித்து தூக்கி எறிந்துகொண்டேயிருப்பார்கள். இவ்வாறான ஆழ்கடல் சிவப்புகள் பெரும்பாலும் பெரிய மீன்களாகவே இருக்கும். மடியுடன் தூக்கக்கூடிய மீன்கள் வரும்வரை எறிந்துகொண்டேயிருப்பார்கள். தோணிகளில் ஏற்றமுடியாத அளவு மீன்களும் பிடிபடுவதுண்டு. அவ்வாறான சந்தர்ப்பத்தில் மீண்டும் அவற்றை கடலில் விட்டுவிடுவார்கள். விடப்பட்ட மீன்கள் எல்லாம் உயிருடன் மீளும் என்ற சொல்வதற்கில்லை.

கட்டுமடி பாவனை வந்ததும் கட்டுமடியை விரித்து இரண்டு பக்கமும் தடியைக் கட்டி தொட்டில்போல செய்து அதன் மூலம் மடிக்குள் கிடக்கும் மீன்களை கோலி எடுத்து தோணியில் ஏற்றுவார்கள். இது மிக விரைவானது. இலகுவானது. ஆபத்துகள் குறைவானது.

## பாச்சுவலை

பாச்சுவலை தொழில் செய்பவர்களில் கிட்டத்தட்ட பாதிப்பேர்களுக்கு மேல் தொழில் உபரணங்களான பாச்சுவலை, எட்டு அடி நீளம்கொண்டதும், பாரம் குறைந்ததுமான கம்பு போன்றவற்றைச் சொந்தமாகக் கொண்டவர்களாக இருப்பர். பாச்சுவலை என்று சொல்லும்போது 40, 50 அடிகள் வரை நீளமாக இருக்கும். நீள்சதுரமான துணியை இருவர் மடித்தபடி இழுத்து, உயர்த்திப்பிடித்தால் எவ்வாறு தெரியுமோ, அவ்வாறே கிட்டத்தட்ட பாச்சுவலையின் வெளித்தோற்றம் இருக்கும். மேற்பக்க இரண்டு விளிம்புகளும் களி நூலால் செய்யப்பட்ட மொத்தக் கயிறு இணைக்கப்பட்டிருக்கும். இக் கயிற்று இணைப்பானது வலையுடன் நேரடியாக இணைத்ததாக அல்லாமல் வலையை மடங்குடன் மருக இணைத்து அம் மடங்கினில் கயிற்றைக் கோர்த்ததாக இருக்கும். மடங்கு பெரிய கண்களாக இருப்பதால் கயிற்றில் இலகுவாக போய்வரக்கூடியதாக இருக்கும். தேவைக்கேற்ற சுருக்குகளை வலையில் உண்டாக்கக்கூடியதாகவும் இருக்கும்.

இரண்டு பக்க கயிற்று முனைகளையும் அகலமாய் விரித்து இழுத்துப் பிடித்தால் பெரிய வாய்க்கால்போல் காணப்படும். வாய்க்கால் தொடராக இருக்கும். ஆனால் பாச்சுவலை இரண்டு பக்கப்பாட்டு முனைகளிலும் மேலிலிருந்து ஐந்து அடி தவிர்த்து ஏனையவை இணைக்கப்பட்டிருக்கும். கிட்டத்தட்ட சரிபாதி உயரமாக இருக்கும். இணைக்கப்படாத ஐந்து அடியிலும் சற்று மெல்லியதான கயிறு மடங்குகளுடன் சேர்த்து இணைக்கப்பட்டிருக்கும. இதனை **'வெண்நூல் கயிறு'** என்பர். வெண்நூல் கயிற்றின் இரு முனைகளும் வலையின் மேல் விளிம்பிலுள்ள மொத்தக் கயிற்றுடன் பொருத்தப்பட்டிருக்கும். இப்போது வலையை இழுத்து சற்று விரித்தால் இரண்டு பக்கங்களில் கீழ் பாதிப்பகுதி இணைந்ததாகவும், மேல் பாதிப்பகுதி 'U' போலவும் காணப்படும். 'U' போன்று காணப்படும் இந்த ஐந்து அடி நீளமுள்ள வெண்நூல் கயிற்றுப் பகுதிகள் தடியுடன் இணைப்பதற்குரிய பகுதிகளாகும்.

## பாச்சுவலை தொழில்முறை

கடலில் தொழில்செய்ய ஆரம்பிக்கும்போது வலையைத் தயார் படுத்துவார்கள். தயார்படுத்தல் படகில் இருந்தவாறே மேற்கொள்ளபபடும். பத்து நிமிடங்கள் போதுமானதாகும். வலையின் நீள பக்கங்களில் ஒருபக்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவுசெய்வர். தெரிவுசெய்தல் சூழ்நிலை சார்ந்தது. பொறுப்பாளரின் கட்டளையாக இருக்கும். ஒரு வலைக்கு இரண்டு பக்கங்கள் இருக்கும் தடி ஒன்றுதான் எனவே பொறுப்பாளரின் கட்டளைப்படி மொத்தத் தொகையினரில் பாதி பகுதியினர் வலையின் வலதுபக்கமும், மறுபாதிப் பகுதியினர் வலையின் இடதுபக்கமும் தெரிவுசெய்வர். வலையின் மேல் விளிம்புகளிலுள்ள மொத்தக் கயிறுகளை பக்கத்துக்கேற்றவாறு தடியின் மேல், கீழ் முனைகளில் கட்டுவார்கள். கட்டுவதற்கு வசதியாக தடியில் வெட்டுகள் இருக்கும். தடியுடன் பக்கவாட்டில் இணைந்திருக்கும் பகுதி வெண்நூல் பகுதியாக இருக்கும். வலையின் மறுபக்கம் மேல் விழிப்புகளிலுள்ள கயிறுகளில் தனித்தனியே சிறு வளையமாக மடித்து முடிச்சுப்போடுவார்கள். இப்போது வலையின் ஒரு பக்கம் தடியும், மறு பக்கம் வளையமும் இருக்கும். இந்த வேலைகள் முடிவுற்றதும் வலையுடன் கடலில் இறங்குவார்கள்.

மொத்தம் இருபத்தொரு வலைகளென எடுத்துக்கொண்டால் அவற்றில் பத்து வலைகளும் அதன் உரிமையாளர்களும் வலப்பக்கத்திற்கும், பத்து வலைகளும் அதன் உரிமையாளர்களும் இடப்பக்கத்திற்கும் என ஏற்கனவே பொறுப்பாளரால் கூறப்பட்டு ஒவ்வொருவரும் பக்கங்களுக்கு ஏற்ற வகையில் தடிகளைப் பொருத்தியிருப்பதால் சிரமமின்றி தமக்குரிய பகுதியைநோக்கிச் செல்வார்கள்.

வலப்பக்க, இடப்பக்க வலைகளை தொடராக இணைக்கவேண்டுமானால் நடுவிலுள்ள வலைக்கு இரண்டு பக்கங்களிலும் தடி பொருத்தப்பட்டதாக இருக்கவேண்டும். அவ் இரண்டு தடிகளையும் ஏந்திப் பிடிப்பதற்கு இரண்டு ஆட்களும் வேண்டும். அவ்வாறே நடு வலையை முற்றாக விரித்து இரண்டு தடிகளையும் தாங்கியபடி இருவர் நின்றிருக்க வலப்பக்கம் தேர்வுசெய்யப்பட்டவர்களில் முதலாம் ஆள் நடு வலையின் வலதுபக்கத் தடியில் தனது வலையின் வளையங்களை மேலும் கீழும் பொருத்தி தனது வலைத் தடியைப்பிடித்து இழுத்து விரித்துச் செல்வார். அடுத்தவர் முதலாம் ஆளின் தடியில் வளையங்களைப்பொருத்தி தடியைப்பிடித்து இழுத்து விரித்துச் செல்வார். இவ்வாறே ஏனையோரும் செல்வார்கள். தத்தமது வலைக்குரிய தடிகளைத் தாங்கியவாறு பிடித்திருப்பார்கள்.

இடப்பக்கம் தேர்வுசெய்யப்பட்டவர்களில் முதலாம் ஆள் நடு வலையின் இடது பக்கத் தடியில் தனது வலையின் வளையங்களை மேலும் கீழும் பொருத்தி தனது வலைத் தடியைப்பிடித்து இழுத்து விரித்துச் செல்வார். இவ்வாறே ஏனையோரும் செல்வார்கள். ஒவ்வொருவரும் தத்தமது வலைக்குரிய தடிகளைத் தாங்கியவாறு பிடித்திருப்பார்கள். வலையின் பின்பக்கம் (மேல்பக்கம்) கடல்நீருக்கு மேலாக 5 அடிகள் வரை உயர்ந்து வருமாறும், முன்பக்கம் (கீழ்ப்பக்கம்) கடல்நீர் மட்டத்திலும் ஒருசாண் மேலாக வருமாறும் சரிவாக ஒவ்வொருவரும் தத்தமது வலைகளைத் தாங்கிப்பிடித்திருப்பார்கள். இருபது வலைகளும் ஒன்றாக இணைக்கப்பட்டிருப்பதால் நீண்ட வாய்க்கால்போன்று காணப்படும்.

பொதுவாக பாச்சுவலைத் தொழில் செய்யும் இடம் கரையை அண்மியதாக இருக்கும். கரையிலிருந்து 100 - 1000 மீற்றர் வரை தூரமுள்ள பகுதியாக இருக்கும். ஆட்களே வலையைத் தாங்கிப் பிடிக்கின்றபடியால் ஒருவரின் மார்பளவிற்கு கீழ் தண்ணீர் இருக்கக்கூடிய ஆழமாக இருக்கும். குறிப்பிட்ட இடத்திலிருந்து வலைகளைத் தாங்கியபடி கரையை நோக்கியே நகர்த்திச் செல்வார்கள்

வலை உரிமையாளர்கள் தத்தமது வலைகளை இணைத்துக் கொண்டிருக்கும் அதேநேரம் ஏனையோர் ஓலைகள் சொருகப்பட்ட ஓலைக்கயிற்றினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலைகளுக்கு முன்னால் குறுக்காக வருமாற்போல் போட்டவாறு இருபக்கமும் இழுத்துச் செல்வார்கள். ஓலைக்கயிறு வலைகளின் மொத்த நீளத்தைவிட மூன்று மடங்கு நீளமானதாக இருக்கும். வலைக்கு முன்னால் போடப்பட்ட கயிறு முற்றிலும் சமாந்தரமாக முடிந்ததும் நிமிர இழுப்பார்கள். இப்போது வலைகளும், கயிறும் நேராக காணப்படும். தொடர்ந்து குறித்த கரையை நோக்கி மெதுவாக நகரத்தொடங்குவார்கள். ஐந்தாறு பேர்கள்வரை கயிற்றின் இரு முனைகளையும் பிடித்து இழுத்துச் செல்வார்கள். ஏனையோர் கயிற்றின் இருபக்க முனையிலிருந்தும் 50, 100 மீற்றர்கள் தூரம் வரை தொடர்ச்சியாக நின்று தடிகளால் தண்ணீரில் அடித்தவாறு கரையை நோக்கி மெதுவாக நகருவார்கள். ஆட்களின் எண்ணிக்கையைப் பொறுத்து தூரம் நிர்ணயிக்கப்படும். வலையைப் பிடித்திருப்பவர்களும் கயிற்றின் நகர்வுக்கு ஏற்றவாறு அதனைப் பின்தொடர்ந்து சென்றுகொண்டிருப்பார்கள். வலைகள் நேராக வானத்தைப் பார்த்தவண்ணம் நிமிர்த்தி வைத்திருக்காமல் முன்பக்கம் சற்று கடலைநோக்கி சரித்து வைத்திருப்பார்கள் இந்தச் சரிவு கடலின் ஆழத்திற்கு ஏற்றவையாக இருக்கும்.

சிறுது நேரம் கயிறு இழுக்கப்பட்ட பின்னர் நேராகக் கிடந்த கயிறு மத்தியிலிருந்து பிறைபோல் வளைவாகக் காணப்படும். வலைகளும் அவ்வாறே காணப்படும். தடி அடிக்கும் ஆட்களும் அதே கோணத்திலே காணப்படுவார்கள். மொத்தத்தில் பாரிய பிறைபோன்ற தோற்றமே உருவாகிவிடும். முழு வலைகளும் கரையை நோக்கி வரும்வரை இந்தப் பிறை வடிவம் மாறாது. கரையை அண்மிக்க அண்மிக்க தடி அடிப்பவர்களின் இடைவெளி சுருங்கிக்கொண்டுவரும். கயிறு கரையை அண்மித்ததும் கயிற்றின் இடைவெளியும் சுருங்கிக்கொண்டுவரும்.

தடி அடிப்பவர்களில் இருபக்கமும் ஆரம்பத்தில் நிற்பவர்கள் அனுபவம் வாய்ந்தவர்களாக இருப்பார்கள். மீனின் நகர்வுகளை உணர்ந்தறிந்து அவற்றை மறிப்பதற்கு ஏனையோரை வழிநடத்தக்கூடியவர்களாக இருப்பார்கள். தடிகளின் அடிகளுக்கும், ஓலைக்கயிற்றிலுள்ள ஓலைகளின் அசைவுகளுக்கும் பயந்து வெளியேறமுடியாத மீன்கள் தற்போது அமைந்துள்ள பிறைவட்ட எல்லைக்குள் அடக்கப்பட்டுவிடும். அவ்வாறு அடக்கப்பட்ட மீன்கள் கரையைநோக்கியே சென்று கொண்டிருக்கும். கரையை நெருங்கியதும் மேலும் முன்னோக்கிச் செல்ல முடியாமல் கடலைநோக்கித் திரும்பிச்செல்ல எத்தனிக்கும். இதற்குள் கயிற்றின் இருபக்க முனைகளும் கரையைத் தொட்டுவிடும். இருபக்க தலைப்பு வலைக்கும், கரைக்கும் இடையிலான ஓலைக் கயிறு உள்ள பகுதிக்கு தடி அடிப்பவர்கள் வந்தவிடுவார்கள். அவர்கள் ஓலைக்கயிற்றுக்கு மேலாக தடிகளால் அடிப்பார்கள். இதனால் கரையிலிருந்து திரும்பும் மீன்கள் தம்மைக் காப்பாற்றிக்கொள்வதற்காக தடியடிகள் விழும் இடங்களைத்தவிர்த்து வலைகள் உள்ள பகுதியைநோக்கித் திரும்பும். ஏனென்றால் வலைகள் கொண்டுவரப்படும் பகுதி எந்தவித ஆரவாரமும் இல்லாது அமைதியாக இருக்கும். வலைகள் வெண்மைநிறமாக இருப்பதால் அவற்றை மீன்களால் இனங்காணமுடியாது.

வலைகளை நோக்கித் திரும்பிச் செல்லும் மீன்கள் வலைக்கு சற்று முன்னராக இழுபட்டவண்ணமிருக்கும் ஓலைக் கயிற்றைச் சந்திக்கும். ஓலைகளின் அசைவினால் ஏற்படும் பயத்தால் அதனைக் கடப்பதற்கு உயரப் பாயும். அவ்வாறு பாய்ந்த மீன்கள் கயிற்றுக்குப் பின்னால் வந்துகொண்டிருக்கும் வலைக்குள் வீழ்ந்துவிடுகிறது. வலை சாக்குப் பையைப்போன்று இருப்பதால் அவற்றால் மீள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்வதற்கு முடிவதில்லை. ஆயினும் மிகச் சொற்ப பெரிய மீன்கள் மீளப்பாய்வதற்கு முயற்சிப்பதுமுண்டு. அவ்வாறான மீன்கள் உள்ளே சிக்கியதும் உடனே வலையுடன் சேர்த்துப் பிடித்து தலையை முறிப்பதுமுண்டு.

வலைகளைக்கொண்டு தொடர்ந்து கரை வரை செல்வார்கள். கரையை நெருங்க நெருங்க கயிறும், வலைகளும் சுருங்கிக்கொண்டே இருக்கும். கரையைத் தொட்டவர்கள் தத்தமது வலைகளை பிடிபட்ட மீன்களுடன் சேர்த்துச் சுருக்குவார்கள். தொடர்ந்து கடலில் இழுத்தவாறு படகுநோக்கிச் செல்வார்கள். படகு சற்று ஆளமான தண்ணீரில்தான் கிடக்கும்.

இத்தொழிலைச் செய்பவர்கள் தத்தமது வலைகளை தாமே தயாரித்தல், பழுதுபார்த்தல் போன்ற வேலைகளைச் செய்வதால் நூல்களைத் தாமே தயார் செய்யவேண்டியவர்களாக இருப்பார்கள். இதனால் தினமும் மாலை வேளைகளில், ஞாயிறு தினங்களில் கடற்கரையை அண்மிய பகுதிகளிலுள்ள மதகுகளில் இவர்களைக் காணலாம். வடிக்கல் மூலம் நூல் முறுக்கிக் கொண்டிருப்பார்கள். காலை முதல் பிற்பகல் வரை மட்டுமே இவர்கள் தொழில் செய்கின்றமையும், ஞாயிற்றுக்கிழமைகளில் தொழில் செய்யாமையும் இவர்களுக்கு இந்த நேரங்கள் வாய்ப்பாக அமைகின்றது. வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாட்டுச் சாணத்தை தண்ணீரில் கரைத்து அதற்குள் வலையை இட்டு அவிப்பார்கள். இதனால் வலைகள் நிறம்மாறாமல் வெண்மையாகவே காணப்படும்.

பாச்சுவலைத் தொழிலில் ஓரளவு கூட்டுத்தொழிலாளர் முறை கலந்ததாக காணப்படுகின்றது. சம்மாட்டி ஒருவராக இருப்பினும். நிரந்தர தொழிலாளர்கள் தத்தமது வலைகளுக்கு உரிமையாளர்களாக, மறைமுக பங்காளர்களாக இருக்கிறார்கள்.

## கொண்டடி மடி

மடியின் வாய்வலை வரை கரைவலை மடியின் அமைப்பைப்போல் இருக்கும். ஆனால் இது குறைந்த சுத்துகளையும், கனங் குறைந்த நூல்களால் பின்னப்பட்ட வலைகளையும் கொண்டது. அதாவது பாரங்குறைந்த மடியாக இருக்கும். கரைவலை மடிக்கு கைவலை வாசல் வலையிலிருந்து வலம், இடமாக இருக்கும். ஆனால் கொண்டடி மடிக்கு கைவலை வாசல் வலையிலிருந்து மேல் கீழாக அதாவது மடவலை, மோவலையாக இருக்கும். பொதுவாக முதலையின் பிழந்த வாய்போல இருக்கும். துள்ளிவரக்கூடிய மீன் இனங்களையும் தடுத்துப் பிடிப்பதற்கு ஏதுவாக மோவலை இவ்வாறு உயரமாக அமைந்துள்ளது.

கரைவலை போன்று கைவலை தவிர்ந்த ஏனைய இணைப்பு வலைகள் இதற்கு இல்லை. கம்பான் கயிற்றுக்குப் பதிலாக ஓலைக்கயிறு பயன்படுத்தப்படுகிறது.

## கொண்டடி தொழில்முறை

நடுத்தரமான வள்ளங்களைப் பயன்படுத்தி, 10 - 13 அடி ஆழங்களையுடைய கடற்பகுதியிலேயே கொண்டடி வலைத் தொழில் செய்யப்படுகின்றது. அதிகமான ஆட்கள் தேவையென்றில்லை. மொத்தம் ஏழு பேர் பொதுமானதாகும். அதிக முதலீடும் தேவையில்லை.

தொழில் செய்வதற்கென தேர்வுசெய்யப்பட்ட இடம் நெருங்கியதும். ஒருவர் கடலில் இறக்கப்படுவார். அவரிடம் 13 அடிக்கு மேற்பட்ட கம்பு கொடுக்கப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் ஓலைக் கயிற்றின் ஒரு முனையும் கொடுக்கப்படும். ஏனைய ஓலைக்கயிறு வள்ளத்திலிருக்கும். அடுத்த நகர்வுபற்றி வள்ளத்திலிருப்பவர்களிடமிருந்து உத்தரவு வரும்வரை கம்பைக் ஊன்றியவாறு ஓலைக்கயிற்று முனையைப் பிடித்தபடி நிற்பார். ஓலைக்கயிற்றை கடலில் விட்டவாறு வள்ளத்தை, கயிற்றின் பாதித் தூரம் வரைத் தாங்கிச் (ஊன்றி) செல்வர். குறித்த இடம் வந்ததும் மடி மற்றும் நான்கு கம்புகளுடன் இருவர் இறக்கப்படுவார்கள். தொடர்ந்தும் ஓலைக்கயிற்றை கடலில் விட்டவாறு வள்ளத்தைத் தாங்கிவாறு செல்வர். வள்ளத்திலிருக்கும் ஓலைக்கயிறு முற்றாக இறக்கப்பட்டதும். வள்ளத்திலிருப்பவர் முனையைப் பிடித்துக்கொள்வார். கையை அசைத்து கடலில் நிற்பவருக்கு உத்தரவிடுவார்.

கடலில் நிற்பவர் தடியால் ஊன்றி, ஊன்றி கயிற்று முனையை இழுத்தவாறு முன்னோக்கிச் சென்றுகொண்டிருப்பார். வள்ளமும் கயிற்றை இழுத்தவாறு முன்னோக்கிச் செல்லும். இப்போது கணிசமான கடல்பகுதியில் கயிறு இழுபட்டவண்ணம் பிறை போன்று அரை வட்டமாக இருக்கும். குறித்த இடம் வந்ததும் மடி வைத்திருப்பவர்களுக்கு சைகை செய்வார்கள். உடனே அவர்கள் மடியை விரித்து மடியின் மடவலை இரண்டையும் இழுத்து விரித்து இரண்டு கம்புகளை நடுவார்கள். இதன்போது கயிறு மேற்கொண்டு முன்னோக்கி இழுபடாதவாறு இரண்டு கம்புகளாலும் மறிக்கப்பட்டிருக்கும். ஏனைய இரண்டு கம்புகளையும் மடவலைக்கு சற்று முன்னோக்கி நட்டு மடியின் மோவலை இரண்டு பக்கத்தையும் இழுத்து விரித்துக் கட்டுவார்கள். இப்போது மடி முதலை வாயைப் பிளந்தவாறு நிற்பதுபோல் இருக்கும்.

தொடர்ந்து வள்ளம் கடலில் நிற்பவரை நோக்கியும், கடலில் நிற்பவர் வள்ளத்தை நோக்கியும் இழுத்தச் செல்வார்கள். வள்ளமும், கடலில் நிற்பவரும் சந்திக்கும் இடத்தில் தடியை நடுவார்கள். இதனை **'நடுக்கம்பு'** என்பர். இப்போது கயிறு வட்ட அமைப்பிற்கு வந்துவிடும். மேலும் ஒருவரை கம்புடன் கடலில் இறக்கிவிட்டு வள்ளம் விலகிவிடும். கடலில் நிற்கும் இருவரும் கயிற்றின் இரண்டு முனைகளையும் பிடித்தவாறு தடியைச் சுற்றி கயிறு வருமாறு இழுத்து கயிற்றைக் குறுக்குவார்கள். இவர்களது இழுவையினால் பெரிய வட்டமாக உள்ள கயிறு மெதுவாக ஒடிங்கி ஒடுங்கி நீள் வட்டமாக மாறும். கயிறு இரண்டும் சமாந்தரமாகச் சந்திக்கும்வரை இழுத்துக்கொண்டே இருப்பார்கள்.

வள்ளத்தில் இப்போது மூவர் இருப்பர். ஒருவர் கயிறு வளைக்கப்பட்டிருக்கும் எல்லைக்குள் வள்ளத்தை அங்குமிங்கும் தாங்கி நகர்த்திக்கொண்டிருக்க ஏனைய இருவரும் கம்பால் கடலின் நிலத்தில் குற்றுவார்கள். கடல் நீரில் அடிப்பார்கள். இவர்கள் இவற்றை கயிற்றின் எல்லைக்கு உள்ளேயே செய்வதால் கம்பின் குற்றலுக்கும், அடிக்கும் பயந்த மீன்கள் சிதறி ஓடும். அவ்வாறு சிதறி ஓடும் மீன்களை ஓலைக்கயிறு வழிமறிக்கும். ஓலைக் கயிற்றுக்கும், தடியின் குற்றலுக்கும் பயந்தவாறு அரவமின்றி காணப்படும் மடி இருக்கும் பகுதி நோக்கிச்செல்லும். அவ்வாறு சென்றவண்ணமிருக்கும் மீன்களை தடியடியால் நெருக்கிச்செல்ல அவை மடிக்குள் நுழைந்துவிடும். கயிறு முற்றாக ஒடுங்கியதும் மடியைத் தூக்கிக் கொள்வார்கள். பாய்ந்துசெல்லக்கூடிய மீன்களும் ஓலைக் கயிற்றைக் கடக்கும்போது மோவலையின் தடுப்பால் உள்ளே நுழைந்துவிடும்.

இதனை ஒரு பாடு என்பர். குறைந்த தொழிலாளரைக்கொண்டு மிகக் குறைந்த நேரத்தில் செய்யப்படும் சிறு தொழிலாகையால் ஒரு நாளில் பல பாடுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைப்பார்கள். மீன்களைச் சிறுகச் சிறுகச் சேர்த்துக்கொள்வார்கள். இது குறைந்த முதலீட்டில் செய்யப்படும் தொழிலாகும்.

## கூட்டு வலை

2½, 3 அங்குல நீள உண் அளவில், சணல் நூலால் பின்னப்படும் வலைகளே கூட்டு வலைக்குப் பயன்படுத்தப்படுகிறது. 8, 8½ பாகம் ஆழமுள்ள கடலில் தொழில் செய்வதற்கு ஏற்ற உயரத்தில் மேலதிக அளிகளைக் கொண்டவையாகத் தயாரிக்கப்படுகிறது. அளி மேலதிகமாக இருந்தால்தான் நீரில் அளி தொய்வாக இருக்கும். மீன்களின் உந்தலை நேரடியாகத் தடுக்காமல் உள்வாங்கித் தடுப்பதற்கு ஏற்றவையாக இருக்கும். ஒவ்வொன்றும் 15 பாகம் நீளத்தை உடைய பல வலைகள் தயாரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு வலைகளின் மடவலையில் தேவைக்கேற்ற ஓட்டைக் கற்களைக் கட்டுவார்கள். மோவலையின் விளிம்புகளில் கயிறு கோர்க்கப்பட்டிருக்கும். அக் கயிற்றையும், வலை விளிம்பையும் சேர்த்து புணையும் பெருக்கப்பட்டிருக்கும். மொத்த வலைகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதி வலைகளும் இணைத்து ஒன்றாகப் பிதையப்பட்டிருக்கும்.

மற்றும் வள்ளத்தின் நீளத்திலும், 3 பாகம் உயரத்திலும் உள்ள இரண்டு வலைகள் உருவாக்கப்படும். இந்த வலையின் கண்கள் ஏனைய வலைகளைவிட சிறியவையாக இருக்கும். இதனைத் **'தடுப்புவலை'** என் அழைப்பர். தடுப்பு வலையின் மடவலை, மோவலை விளிம்புகளில் கயிறு கோர்க்கப்பட்டிருக்கும். வலையின் இரண்டு பக்கத்திலும் 3 பாகம் நீளமுள்ள இரண்டு தடிகள் கயிற்றுடன் இணைக்கப் பட்டிருக்கும். இரண்டு பக்கத் தடிகளிலும் இழுத்துப்பிடித்தால் வலை நீள் சதுர தட்டுபோலக் காணப்படும்.

## கூட்டுவலை தொழில்முறை

கொண்டடி தொழில் செய்பவர்களில் ஒரு பகுதியினரால்தான் கூட்டுவலைத் தொழில் அறிமுகப்படுத்தப்பட்டது. தொழிலுக்குப் புறப்படும்போது ஏற்கனவே இரண்டாகப் பிரிக்கப்பட்ட வலைகளின் ஒரு பகுதியும், ஒரு தடுப்பு வலையும் ஒரு வள்ளத்தில் ஏற்றப்படும். ஏனையவை இரண்டாவது வள்ளத்தில் ஏற்றப்படும். பாயின் உதவியுடன் ஆழ்கடல் நோக்கிச் செல்வார்கள். கடலில் மீன் சிவப்பெறிந்து காணப்பட்டால் அந்த இடத்தில் வள்ளத்தை நிறுத்திவிடுவார்கள். சிவப்பெறிந்து நிற்கும் மீன் இனம் பற்றி அனுபவசாலிகளால் இனங்காணப்படும். கூட்டுவலைத் தொழிலில் சிறையா, மணலை, கயல்மீன், காடன் போன்ற பாய்ந்து செல்லக்கூடிய மீன் இனங்களையே பிடிப்பார்கள். அத்தகைய இன மீன்களாக இனங்காணப்பட்டால் இரண்டு வள்ளங்களிலும் உள்ள வலைகளின் முனைகள் இரண்டையும் ஒன்றாக பிதைவார்கள். தொடர்ந்து இரண்டு வள்ளத்திலும் உள்ள வலைகளை இரண்டு பக்கத்தாலும் இறக்கியவாறு மீன் சிவப்பைச் சுற்றி வளைப்பார்கள். இரண்டு வள்ளங்களும் ஒன்றையொன்று சந்திக்கமாட்டாது. ஒரு வள்ளம் தனது இறுதி வலையின் முனையுடன் உள்புறமும், மறு வள்ளம் தனது இறுதி வலையின் முனையுடன் வலையின் வெளிப்புறமுமாக மீன் சிவப்பு முற்றாகச் சுற்றிவளைக்கப்பட்ட நிலைக்கு வந்துவிடும். உடனே தடுப்புவலையை உயர்த்தி இரண்டு பக்கத் தடிகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளத்தின் அணியம் மற்றும் கடையாலில் கட்டுவார்கள். இப்போது பார்த்தால் வள்ளத்தின் மத்தியில் நீளமான சுவர்போல தெரியும்.

இந்த வேலைகள் முடிந்ததும் கடலில் தடியால் அடிப்பார்கள். இதனால் வெருட்சியடைந்த மீன்கள் முன்னோக்கி நகர்ந்து செல்லும். அவற்றை வலைகள் தடுக்கும். மீன்கள் செல்லும் வேகத்தில் பல மீன்கள் வலையில் சிக்கிக்கொள்ளும். ஏனையவை திரும்பி தம்மைக் காப்பாற்றிக்கொள்வதற்காக பல திசைகளாலும் பாய்ந்து செல்லும். அவ்வாறு பாய்பவைகள் வள்ளங்களைக் கடக்க எத்தனிக்கும்போது வள்ளத்தில் கட்டியுள்ள தடுப்புவலையின் தடுப்பால் அவை வள்ளத்திற்குள் விழுந்துவிடும். எல்லா மீன்களும் அகப்படுமென்றில்லை வெளியே பாய்ந்து செல்பவைகளும் உண்டு வள்ளத்தில் பாய்ந்த மீன்களுடன் கடலில் கிடக்கும் வலைகளை இரண்டு பக்கத்தாலும் இழுத்து ஏற்றுவார்கள். அவ்வாறு ஏற்றும்போது வலையில் சிக்குண்டிருக்கும் மீன்களையும் சேகரித்துக்கொள்வார்கள். இதனை ஒரு பாடு என்பர்.

பொதுவாக ஒரு பாட்டிலேயே போதுமான அளவு மீன்கள் பிடிபட்டுவிடும். சில சந்தர்ப்பங்களில் குறைவாகவும் பிடிபடுவதுண்டு. வள்ளம் ஏற்றமுடியாத மீன்களும் பிடிபடுவதுண்டு. ஒவ்வொரு வள்ளத்திலும் நான்கு தொழிலாளர்களே தொழிலுக்குச் செல்வார்கள்.

## ஒளி மீன்பிடி

ஒரு வள்ளத்தின் நீளத்தையும், 3 பாகம் உயரத்தையும் உடைய **'தடுப்புவலை'** ஒன்றே இதற்குரிய வலையாகும். மற்றும், போதிய ஒளியைத் தரக்கூடிய விளக்கு. இவைகளே இத்தொழிலின் உபகரணங்களாகும். தடுப்பு வலையானது மடவலை, மோவலை விளிம்புகளில் கயிறு கோர்க்கப்பட்டதாகவும், குறுகிய கண்களைக் கொண்டதாகவும் இருக்கும்.

## ஒளி மீன்பிடி தொழில்முறை

வள்ளத்தின் அணியப்பக்கமும், கடையால் பக்கமும் இரண்டு தடிகளை நிமிர்த்திக் கட்டுவார்கள். அந்த இரண்டு தடிகளிலும் தடுப்பு வலையைக் கட்டவேண்டும். அவ்வாறு கட்டும்போது தடுப்பு வலையில் சுருக்கு விழாதவாறு மடவலை மற்றும் மோவலை கயிறுகளை இழுத்துக் கட்டிவிடுவார்கள். இப்போது வள்ளத்தின் மத்தியில் நீளப்பக்கத்தை ஊடறுத்து வலை காணப்படும்.

காற்று அதிகமாக அல்லாமல் அமைதியாக வீசும் காலங்களில் இரவு நேரத்தில் இந்தத் தொழில் நடைபெறுகின்றது. குறித்த இடத்திற்குச் சென்றதும் ஒளியை ஏற்றுவார்கள். இந்த ஒளியைப் பெறுவதற்கு ஆரம்பத்தில் பந்தங்களைப் பயன்படுத்தினார்கள். காலப்போக்கில் **'லோமியா'** என்னும் பல நூல் இளைகளில் எரிகின்ற விளக்கையும், **'பெற்றோமக்ஸ்'** இனையும் பயன்படுத்தினார்கள். ஒளி கடலில் விழுவதற்கேதுவாக சற்று உயரத்தில் ஒளியேற்றியைக் கட்டுவார்கள்.

வள்ளத்தைத் தாங்கியவாறு மெதுவாக நகர்த்துவார்கள். வள்ளம் சென்றுகொண்டிருக்கும் பாதையில் ஒளி கடலில் விழும் அவ்வொளியைக் சந்திக்கும் மீன்கள் ஒளியேற்றியைத் தேடி (ஓளிவரும் திசை) பாயும். அவ்வாறு பாயும் மீன்களை தடுப்பவலை தடுக்க அவை வள்ளத்திற்குள் வீழ்ந்துவிடும். மீன்களின் பாச்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எல்லைக்கும் உயரமாகவே ஒளியேற்றி கட்டப்பட்டிருக்கும். இத்தொழிலில் பாச்சல் மீன்களான கயல்மீன், பாலைக்குட்டி, அகளி, மணலை, சிறையா, தவ்வல், கொய் போன்றவையே பிடிபடும். அதிக முதலிடு அற்ற தொழிலென்பதால் வருவாய் தாராளமானதாக இருக்கும். ஆனால் எல்லாக் காலங்களிலும் செய்யமுடியாது.

## பேசியன் வலை (சுருக்குமடி அல்லது, சுற்றி வளைக்கும் வலை)

ஒரே அளவுள்ள வலையினால் உருவாக்கப்படுகிறது. வலையின் மடவலையில் மீன்கள் சேகரிக்கப்படுவதனால் மோவலையைவிட பாதியிலிருந்து சற்றுக் குறுகிய கண்களை உடையதாகவும், வைரமான நூலால் பின்னப்பட்டதாகவும் இருக்கும். மோவலையில் கயிறு கோர்க்கப்பட்டிருக்கும். தனியான ஒரு கயிற்றில் மிதவைகள் இணைக்கப்படும். இக்கயிறு மோவலைக் கயிற்றுடன் இடைவெளிவிட்டு பிணைக்கப்படும். அவ்வாறே மடவலையில் கயிறு கோர்க்கப்பட்டிருக்கும். தனியான ஒரு கயிற்றில் **'பை வளையங்கள்'** எனச் சொல்லப்படும் பித்தளை வளையங்கள் கோர்க்கப்பட்டிருக்கும். இக் கயிறு மடவலைக் கயிற்றுடன் தனித்தனி வளையமாக வருமாற்போல் இடைவெளிவிட்டு பிணைக்கப்படும். வலை கடலில் கீழ்நோக்கி அமிழக்கூடிய அளவு கனம் உள்ளதாக பித்தளை வளையங்கள் இருக்கும். கனம் போதாவிடில் ஈயக் குண்டுகளையும் இணைப்பதுண்டு. மடவலைக் கயிற்றிலிருந்து தொங்கிக்கொண்டிருப்பதுபோலக் காணப்படும் வளையங்களுக்குள் **'பைக் கயிறு'** எனப்படும் உறுதியானதும், நீளமானதுமான கொர்லோன் கயிறு கோர்க்கப்பட்டிருக்கும். இக் கயிற்றை இழுத்துச் சுருக்கினால் அடிப்பாகம் (வளையங்கள்) நெருங்கி பை போன்ற அமைப்பு பெறும். இவ் வலையின் உயரம் 10 பாகததிற்கு மேற்பட்டதாக இருக்கும். கடலில் வலையை இறக்கியதும் மடவலை நீரில் அமிழ்ந்தும், மோவலை நிரில் மிதந்தும் வேலிபோன்று காணப்படும்.

## பேசியன் வலை தொழில்முறை

கூட்டுவலைத் தொழில் முறையை ஒத்ததாக இது அமைகின்றது. பேசியன் வலை 3½ தொன் இயந்திரப் படகின் அறிமுகத்துடன் இங்கு பாவனைக்கு வந்தது. ஒரேயளவுள்ள வலையினால் இது உருவாக்கப்படுகின்றது. இதன் அடிப்பாகத்தாலேயே மீன் சேகரிக்கப்படுகிறது. இதனால் அடியில் (மடவலையில்) வரக்கூடியபகுதி வலைக் கண்கள் சற்று சிறியனவாயும், உறுதியான நூல்களால் பின்னப்பட்டவையுமாக இருக்கும். ஒரு படகிலோ, இரண்டு படகிலோ இந்தத் தொழிலைச் செய்யலாம். இங்கு இரண்டு படகுகள் பயன்படுத்து முறையே அறிமுகம் செய்யப்பட்டது. இயந்திரப்படகென்பதால் குறித்த இடங்களுக்கு விரைவாகச் சென்று வரக்கூடியதாக இருக்கும். கூட்டு வலைத் தொழில் முறையைப்போல் கடலில் மீன் சிவப்பெறிந்து காணப்பட்டால் அந்த இடத்தில் படகை நிறுத்தி விடுவார்கள். ஒரு படகானால் வலையின் ஒரு பக்க முனையிலிருந்து இறக்கிய






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறும், இரண்டு படகுகளானால் ஒரு படகில் உள்ள வலையில் பாதி வலையை இரண்டாவது படகில் ஏற்றிவிட்டு நடுவலையிலிருந்து கடலில் இறக்கியவாறு மீன் சிவப்பைச் சுற்றி வளைப்பார்கள். இரண்டு படகுகளானால் அவை இரண்டும் சந்திக்கும்போது, ஒரு படகானால் வலையின் இரண்டு முனைகளும் சந்திக்கும்போது மீன்சிவப்பு முற்றாகச் சுற்றிவளைக்கப்பட்ட நிலைக்கு வந்துவிடும்.

பார்வைக்கு கோட்டை சுவரைப்போல காணப்படும் பேசியன் வலையின் உள்ளே மீன்கள் சுதந்திரமாக நடமாடிக்கொண்டிருக்கும். வலையின் முனைகள் சந்திக்கும் இடத்தில் படகில் இருந்தவாறே மடவலையில் இடப்பட்ட பைக் கயிற்றைப் பிடித்து இழுப்பார்கள். மடவலையிலுள்ள பை வளையங்கள் வலையை மெல்ல மெல்லச் சுருக்கிக்கொண்டுவரும். ஈற்றில் மடவலை முற்றாகச் சுருக்கப்பட்டு மோவலை விரிந்து பையைப்போன்று மாறிவிடும் மீன்கள் அனைத்தும் இந்த பைக்குள் அடக்கப்பட்டுவிடும். படகில் இருந்தவாறே **'மண்டாக் கம்பி'** யினால் அல்லது **'அத்தாங்கு'** இனால் மீன்களை படகிற்கு எடுத்துக்கொள்வார்கள். மண்டாக் கம்பியானது ஒரு முளம் நீளமுள்ள கம்பியின் முனை 3 அங்குல விட்டம் வருமாற்போல் கொழுக்கிபோன்ற அமைப்பில் மடிக்கப்பட்டிருக்கும். இந்தக் கம்பி தேவைக்கேற்ற நீளங்களையுடைய தடிகளில் பொருத்தப்பட்டிருக்கும். கம்பியின் கொழுக்கி முனை கூராக இருக்கும். இதன் உதவியுடன் பெரிய மீன்களின் உடலில் குத்திக் கொழுவித் தூக்குவார்கள். அத்தாங்கானது 2 அடி விட்டமுள்ள வட்டமான கம்பி அல்லது மூங்கில் தடியில் பை



போன்ற வலை பொருத்தப்பட்டிருக்கும். வளையம் தேவைக்கேற்ற நீளங்களையுடைய தடிகளில் பொருத்தப் பட்டிருக்கும். (தேயிலை வடியைப் போன்றது) பை போன்ற வலை குறுகிய கண்களை உடையதாகவும் ஒரு பாகம் வரை நீளமுள்ளதாகவும் இருக்கும். இதனால் சிறிய ரக மீன்களை கோலி எடுக்கக்கூடியதாக இருக்கும்.

## றோளர் மடி (இழுவை வலை)

இரசாயன சேர்க்கையால் உற்பத்தி செய்யப்படும் **'தங்கூசி'** எனப்படும் வைரமான பிளாஸ்ரிக் தன்மைபொருந்திய நூலினால் (HDPE) றோளர் மடி தயாரிக்கப் படுகின்றது. இந்த மடி கரைவலை மடியைப்போன்ற உற்பத்திமுறை அமைந்திருந்தாலும் மடியின் அமைப்பு கரைவலை மடியைப்போலல்லாது ஒலிபெருக்கி 'கோண்' போன்ற அமைப்பிலேயே இருக்கும். கரைவலை மடியில் தூறு கணிசமான அகலமாகவும், அடிப்பகுதி இணைக்கப்பட்டதாகவும் இருக்கும் ஆனால் றோளர் மடியின் தூறு ஒடுக்கமாகவும், அடிப்பாகம் இணைக்கப்படாமல் சுருக்கிக் கட்டக்கூடிய வகையில் இருக்கும். தூறின் முனையில் குறுகிய கண்களையுடைய மடங்கு இணைக்கப்பட்டு, மடங்கினுள் சற்று மொத்தமான கயிறு விடப்பட்டிருக்கும். இந்த கயிற்றை **'வாய்க்கயிறு'** என்பார்கள். வாய்க்கயிற்றினால் தூறின் அடிப்பாகம் சுருக்கிக் கட்டப்படுகிறது. இந்த சுருக்கும் பகுதிதான் மடியினுள் சிக்குண்ட மீனினங்களை படகில் போட உதவுகிறது. தூறின் மேற்பகுதியில் வெளிப்பக்கத்தால் மடங்கு பிதைந்து அதற்குள் மடியின் விரிவிற்கேற்ற கயிறு கோர்த்திருப்பார்கள். இதனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'வண்டிக்கயிறு'** என்பார்கள். இந்த வண்டிக்கயிறுதான் தூறிற்குள் உள்ள மீனினங்களை மேற்பக்கத்தால் சுருக்கிக்கொள்வதற்கு உதவுகிறது

தூறு 1½ பாகமும், தூறிலிருந்து வாசல்வலை வரை 7 பாகமுமாக வட்டவடிவமான கூம்பு முனையையும், உடலையும் கொண்டது. உடலில் பொருத்தப்படும் இரண்டு கைவலைகள் 6 பாகமும் நீளமுள்ளதாக இருக்கும். வாசல்வலை 2 முளம் இடைவெளி வைத்து பெருக்கங் கயிற்றுடன் மந்து அடிப்பார்கள். 1 அங்குலம் விட்டமுடைய கயிற்றில் ஈயக் குண்டுகளை புகுத்தி அதனை மடவலையில் பெருக்கங் கயிற்றுடன் இணைப்பார்கள். இந்தக் கயிற்றை **'குண்டுக் கயிறு'** என்பர். ஈயக் குண்டானது 2 அங்குலம் நீளமுடைய குளாய்போன்ற அமைப்பில், 250 கிராம் நிறையை உடையதாக இருக்கும். ஒரு மடிக்கு மொத்தம் 18 கிலோ நிறையுடைய குண்டுகளைப் பொருத்துவார்கள். இக்குண்டுகளை குண்டுக்கயிற்றில் நுழைத்து, பெருக்கங் கயிற்றில் 1 முளம் இடைவெளியில் குண்டுக்கயிற்றை இணைப்பார்கள். அவ்வாறு இணைக்கும் போது 1, 2 என குண்டுகள் ஒவ்வொரு வெளியிலும் வருமாற்போல் கணக்கிட்டு இணைப்பார்கள். இதனையும் மந்து அடித்தல் என்றே அழைப்பார்கள். குண்டுக் கயிற்றில் குண்டுகள் புரள்வதனாலும், கயிறு மண்ணோடு உராசுவதனாலும் இலகுவில் தேய்வு ஏற்படுவது வழமை. இதனால் வாரந்தோறும் அல்லது குண்டுக்கயிறு சேதமுறும் சந்தர்ப்பங்களில் குண்டுக் கயிற்றை மாற்றி மந்து அடிப்பார்கள். மோவலைக்கு மிதக்கக்கூடிய **'போயா'**க்களைப் கட்டுவார்கள்.

றோளர் மடியில் மூன்று வகையான மடிகள் இங்கு பயன்படுத்தப்பட்டன

1. இறால் மடி
2. மீன் மடி
3. அட்டை மடி

இவை மூன்றிற்கும் அமைப்பில் பெரிதாக வித்தியாசமில்லை. ஆனால் கண் அளவுகளிலும், நூல் இளைகளிலும் மாற்றமிருக்கிறது.


## றோளர் தொழில்முறை

றோளர் தொழில் இந்தியத் தொழிலாளர்களாலேயே செய்யப்பட்டுவந்தது. அந்நாட்களில் குருநகரில் **'வளிச்சல்'** என்று சொல்லப்படும் நைலோன் வலைத்தொழில் வெகு சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. இந்தியர்களின் றோளர் தொழிலினால் குருநகர் தொழிலாளர்களின் நைலோன் வலைகள் தினந்தினம் துண்டாடப்பட்டு சேதமுற்றதுடன், துண்டாடப்பட்ட வலைகள் நீரோட்டத்தில் அள்ளுண்டு தொலைந்தும் போகலாயிற்று. தொழில் வருவாய் இழப்புடன் வலைகளும் இழக்கப்பட்டதனால் தொடர்ச்சியாக நைலோன் வலைத் தொழிலை செய்யமுடியாத தொழிலாளர்கள் இந்திய தொழிலாளர்களுக்குப் போட்டியாக 1976 இன் இறுதியில் றோளர் தொழிலை தேர்ந்தெடுக்க லாயினர். குருநகரைச் சேர்ந்த பிலிப், டேவிற் ஆகிய இரு சம்மாட்டிகளே றோளரை ஆரம்பித்து வைத்தவர்களாவர். றோளர் தொழில் இங்கு செய்வதை ஏனைய தொழிலாளர்கள் எதிர்த்தமையி னால் இவர்கள் மன்னாரில் தங்கியிருந்து செய்து வந்தார்கள்.

நைலோன் வலையைவிட குறைந்த முதல், நிறைந்த வருமானம் றோளரினால் கிடைத்தமை இலகுவில் அனைவரையும் கவர்ந்திழுக் கலாயிற்று. இதனால் 1977


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் குருநகரில் எதிர்ப்பு கைவிடப்பட்டு பல றோளர்கள் உருவாகத் தொடங்கின. இந்தியப் படகுகளைப்போல் அதி வேகமுள்ள இயந்திரப் படகுகளைக் கொள்வனவு செய்யாமல் நைலோன் வலைத் தொழிலுக்குப் பயன்படுத்திய 3½ தொன் இயந்திரப் படகையே பயன்படுத்தினார்கள். அதிவேக இயந்திரப் படகுகள் பயன் படுத்தலுக்கு இருந்த தடையும் இதற்கு ஒரு காரணம். இறால் இனமே றோளரில் அதிகமாக பிடிபட்டதனால் பல வியாபார நிறுவனங்கள் போட்டிபோட்டுக்கொண்டு இறால் கொள்வனவில் இறங்கின. இதனால் றோளர் தொழில் வேகமாக பெருக்கமடைந்தது.




இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்தமைக்காக காரைநகர் முகாம் இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட றோளர் மடிகள் விற்பனை செய்யப்பட்டமை, இவர்களது றோளர் தொழில் ஆரம்பத்திற்கு பேருதவியாக அமைந்தது. இதற்காக முன்னின்று உழைத்தவர் வண. F.J. ஸ்ரனிஸ்லோஸ் அடிகளாராவர். குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தின் பங்கும் கணிசமானது. கடல் நிலத்து மண்ணை றோளர் மடி உரசியவாறு வருவதனால் கடல்வளத்திற்கு பெரும் பாதிப்பு என்று ஆரம்பம் முதல் அனைவராலும் வலியுறுத்திவந்தபோதும், இந்தியத் தொழிலாளர்கள் அவற்றை அலட்சியம்செய்து றோளர் தொழிலை தொடர்ச்சியாக செய்துவந்ததனால், இங்குள்ள தொழிலாளர்களால் செய்யப்படும் றோளர் தவிர்ந்த மாற்றுத் தொழில்களுக்குப் பெரும் பாதிப்புகளே ஏற்பட்டவண்ணமிருந்தது. பாதிப்பு உள்ளது எனக் கொள்கையளவில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் செயல்வடிவம் கொடுக்கமுடியாமல் குருநகர் தொழிலாளர்கள் திண்டாடும் நிலையே இருந்துவந்தது.

றோளர் மடியைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். மடியின் கைவலைகளில் மேல், கீழாக ஒவ்வொரு பக்கத்திலும் பெருக்கங்கயிறு கைவலையைவிட 3½ பாகம் நீளமுள்ளவையாகவும், முனையில் கொண்டை உடையதாகவும் இருக்கும். கொண்டையின் உட்பக்கத்தால் நீள்சதுர இருப்பு வளையம் இணைக்கப்பட்டிருக்கும் இதனை **'கோஸ்'** என்பர். ஒவ்வொரு பக்க மடவலை, மோவலை பெருக்கங்கயிற்றுக் கொண்டையில் பலகை பொருத்தப்படும். பலகையானது சுற்றிவர முனைகளுக்கு இரும்புப் பட்டை பொருத்தப்பட்ட 4 X 2 அடிகளைக்கொண்ட நீள்சதுரமாகும். இந்தப் பலகையை **'ஓட்டர் கதவுகள்'** எனவும் அழைப்பர். பலகையின் முன் பக்க கீழ் மூலை சற்று உருட்டப்பட்டதுமான அமைப்பில் இருக்கும். பின்பக்கத்தில் மேல் கீழ் பகுதிகளில் இரண்டு 'ப' (முனை உருட்டப்பட்ட சதுர வடிவில்) பொருத்தப்பட்டிருக்கும். இந்தப் 'ப' வில்தான் பெருக்கங்கயிற்றின் கொண்டை **'செக்கர்'** இனால் இணைக்கப்படுகிறது. பலகையையும், மடியையும் இணைத்துக்கொள்வதற்கும், நீக்கிக்கொள்வதற்கும் வசதியாக செக்கர் பயன படுத்தப்படுகிறது. செக்கர் இரும்பினால் ஆனது. 'ப' வடிவில் இருக்கும். 'ப' வின் மேற்பகுதியில் இரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைகளையும் இணைத்தாற் போல் புரியுடனான ஆணி ஒட்டப்பட்டிருக்கும். இதன்மூலம் கழற்றவும், பூட்டவும் இலகுவாக இருக்கும்.



பலகையின் நான்கு முனைகளிலிருந்தும் 2 முள நீளமுள்ள சங்கிலி இணைக்கப்பட்டு, சங்கிலியின் மறு முனைகள் 3 அங்குலம் விட்டமுள்ள ஒரு வளையத்தால் இணைக்கப்பட்டிருக்கும். இதனை **'முச்சை'** என்பர். முச்சை சரியாக இருக்கவேண்டும். அன்றேல் தொழில் செய்யமுடியாமல் குழப்பிவிடும். ஒவ்வொரு பலகையும் சங்கிலியுடன் சேர்ந்து 80 இறாத்தல் இருக்கவேண்டும். நிறையில் பலகைக்குப் பலகை வேறுபாடு இருக்கக்கூடாது. இரண்டு பலகைகளிலும் தனித்தனியே 35 பாகம் நீளமுள்ள கயிறுகள் முச்சை வளையத்தில் செக்கரால் இணைக்கப்பட்டிருக்கும். இந்தக் கயிற்றை **'அடிக்கம்பாகம்'** அல்லது **'அடி கயிறு'** என அழைப்பார்கள். 9 பாகம் ஆழத்திற்கு மேலான கடற் பகுதியிலேயே றோளர் தொழில் செய்யப்படுவதால் அனைத்து வேலைகளும் படகிலிருந்தவாறே மேற்கொள்ள வேண்டும். இயந்திரப் படகை மெதுவாகச் செலுத்தியவாறு மடியை கடலில் இறக்குவார்கள். தொடர்ந்து பலகையும், கயிற்றையும் இறக்குவார்கள்.

படகின் மத்தியில் குறுக்காக ஒரு மரம் இணைக்கப்பட்டிருக்கும். இம்மரத்தை **'விலங்குமரம்'** என்பார்கள். விலங்குமரம் படகைவிட இரண்டு பக்கத்தாலும் 2 முளம் வரை நீளமாக இருக்கும். இந்த மரத்தின் வெளி முனைகளிலேயே அடி கயிற்றின் மறு முனை கட்டப்பட்டிருக்கும். கயிறு முற்றிலும் இறக்கப்பட்டதும் படகை மிக வேகமாகச் செலுத்துவார்கள். ஆனால் மடி, பலகைகளை இழுத்தவாறு படகு விரைவாகச் செல்வது இயலாத காரியம். இயந்திரம் தனது முழு சக்தியையும் பயன்டுத்தி படகைச் செலுத்துமே தவிர படகு விரைவாகச் செல்லாது. இவ்வாறு படகு இழுப்பதை **'அடித்தல்'** என்பார்கள். படகு அடிக்கும்போது கயிறு மற்றும் சங்கிலியில் பொருத்தப்பட்டுள்ள பலகை அசைந்து அசைந்து கடல் தரையைக் கிழித்தவாறு செல்லும், மடியிலுள்ள ஈயக் குண்டுகள் கடல் தரையை வளித்தவாறு வரும் இதனால் மீன், இறால் இனங்களில் சிறிய குஞ்சுகள்கூட மடிக்குள் புகுந்துவிடும். மூன்று மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக அடித்தபின்னர். இயந்திரத்தின் வேகத்தைக் குறைத்து படகை பின்னோக்கிச் செலுத்துவார்கள். அவ்வாறு பின்னோக்கி மெதுவாகச் சென்றுகொண்டிருக்கும் படகில் இரு பக்கத்தாலும் அடிகயிற்றை இழுத்து ஏற்றுவார்கள். அடுத்து பலகையை இழுத்து, படகின் கடையால் பக்கம் இதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கொழுவிவிடுவார்கள். மடி.யை இழுத்து ஏற்றுவார்கள். மடியை ஏற்றும்போது படகு பின்னோக்கிச் செல்லாது. மடியை உதறி உதறி ஏற்றுவார்கள். இதனால் மீனினங்கள் அனைத்தும் தூறுக்குள் சென்றுவிடும்.

படகின் நடுவில் ஒரு மரம் நிறுத்தப்பட்டிருக்கும். இதனை **'வீஞ்சுமரம்'** என்பார்கள். இந்த மரத்தின் நடுவில் நீட்டப்பட்ட கையைப்போன்று இருப்பு குளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தப்பட்டிருக்கும். இதனை **'வீஞ்சு'** என்பர். வீஞ்சின் ஒரு பக்க முனை மரத்துடன் இணைத்திருக்க மறுபக்க முனையில் இரும்புக் கம்பியால் சிறிய 'U' போன்ற அமைப்பில் செய்யப்பட்டு நான்கு பக்கமும் ஒட்டப்பட்டிருக்கும். வீஞ்சு 90 பாகை சரிவில் இருக்குமாறுபோல் வீஞ்சின் மேற்பக்க 'U' விலும், வீஞ்சு மரத்தின் முனையிலும் கயிற்றால் இழுத்துக் கட்டுவார்கள். மேலும் வீஞ்சின் வலம், இடம் உள்ள 'U' களில் கயிற்றைக் கட்டி படகின் விளிம்புகளில் இழுத்துக் கட்டிவிடுவார்கள். இதனால் வீஞ்சு அசைவின்றி இருக்கும். கீழ்ப்பக்கமுள்ள 'U' வில் இரட்டைச் சக்கர கப்பி கட்டப்பட்டிருக்கும். இக் கப்பியில் கயிறு கோர்க்கப்பட்டிருக்கும். கயிற்றின் முனையில் ஒற்றைச் சக்கர கப்பி கட்டப்பட்டிருக்கும்.

கடையாலில் ஒடுக்கிய மடியின் தூறை படகின் மையம் நோக்கி அதாவது வீஞ்சு உள்ள இடத்திற்கு இழுத்து வருவார்கள். தூறு வீஞ்சை நெருங்கியதும், வண்டிக் கயிற்றைப் பிடித்துத் தூக்கி மீனினங்களை அடித் துறுவரை நெருக்குவார்கள். மேற்கொண்டு இரண்டு முனைகளும் இணைக்கப்பட்ட சிறிய வட்டக் கயிற்றால் தூறைச் சுற்றி, கயிற்றின் இரண்டு பக்க முனைகளையும் (வீஞ்சிலிருந்து கயிற்றில் தொங்கியவாறு இருக்கும்) கப்பியில் கொழுவி விடுவார்கள். மேற்கொண்டு கப்பிக் கயிற்றின் மறுமுனையைப் பிடித்து இழுக்க தூறைத் தூக்கியவாறு கப்பி மேலே எழும். தூறு படகைவிட மேலே உயர்ந்ததும், தூறின் அடியில் கட்டப்பட்டுள்ள வாய்க் கயிற்றை அவிழ்த்து விடுவார்கள். தூறிற்குள் கிடந்த அனைத்தும் படகிற்குள் விழுந்துவிடும். தூறின் முனையை முன்போல சுருக்கி கட்டிவிடுவார்கள். இதனை ஒரு பாடு என்பர் இவ்வாறு மூன்று பாடுகளை அடிப்பார்கள்.

## நைலோன் வளிச்சல் வலை

21 இழை முதல் 33 இழை வரை நூல் இழைகளைக்கொண்ட 4 அங்குல கண்களைக்கொண்ட நைலோன் வலைகள் பயன்படுத்தப்படுகின்றன. மோவலைக்கு மொத்தமான நைலோன் அல்லது கொர்லோன் கயிறு கோர்க்கப்பட்டிருக்கும். இக் கயிற்றுடன் வலையை இணைப்பதற்கு 2 பாகத்திற்கு ஒரு மந்து அடிப்பார்கள். மந்துக்குள் **'குழைவு'**க்காக (சுருக்கு) 3 பாக வலையை மந்துக்குள் சுருக்கியே மந்து அடிப்பார்கள். இம் மந்துகளில் மிதப்புக்கான போயா இணைக்கப்படும். ஒரு வலையில் 16 போயா இணைக்கப்பட்டிருக்கும். மடவலையில் 5 அல்லது 6 பாகத்திற்கு ஒரு கல்லு பெருக்குவார்கள். கல்லானது சீமேந்து, பாலியாற்று மணல்கொண்டு தயாரிக்கப்படுகிறது. 5 அங்குல விட்டமுடையாதகவும், 1 அங்குல உயரமுள்ளதாகவும் நடுவில் துளையிடப்பட்டு இருக்கும். இதனை மொத்தமான நூலிலிட்டு வலையில் கட்டுவார்கள். இவ்வாறு 50 வலைகள் வரை தொழிலுக்குப் பயன்படுத்துவார்கள். ஒவ்வொரு வலையின் இணைப்பிலும் பெரிய வட்டமுள்ள போயாவை கயற்றில் கட்டி மோவலையுடன் இணைத்திருப்பார்கள். இதனை **'இடைப்போயா'** என்பர்.


## நைலோன் வளிச்சல் தொழில்முறை

இலங்கையின் தென் பகுதியில் 1950 ஆம் ஆண்டு பிற்பகுதியில் நைலோன் தொழில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் குருநகரில் 1956 பிற்பகுதியிலேயே 3½ தொன் இயந்திரப்படகின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. பெருங்கடல்சார் மீனினங்களைப் பிடிப்பதற்கான தொழில் என்பதால் வியக்கத்தகு வருவாயைக் கொடுத்ததனால் விரைவில் பலரை இந்தத் தொழிலில் நாட்டங்கொள்ளச்செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயந்தர வேளை 9, 10 பாகங்கள் ஆளமுள்ள பெருங்கடலை ஊடறுத்து நைலோன் வலையை செங்குத்தாக இறக்குவார்கள். இவ்வாறு வலைகளை இறக்குவதை **'வலை படுத்தல்'** என அழைப்பர். மடவலையிலுள்ள கல்லுகளின் பாரத்தனால் மடவலை நிலத்தைநோக்கி செல்லும், மோவலையிலுள்ள மிதப்புகளி னால் மோவலை மேல் நோக்கி உயரும் இதனால் கடலை ஊடறுத்து வேலி அடைத்தாற் போல் இருக்கும்.



வலையின் ஆரம்ப முனையில் தடியில் சிவப்பு கொடி கட்டி மிதக்கவிட்டிருப்பார்கள். இக் கொடித் தடியானது, தடியின் கீழ்ப்பக்கத்தில் பாரமாக இருப்பதற்கென கல்லு அல்லது இரும்பு கட்டியிருப்பார்கள். தடியின் நடுப்பகுதியில் சதுரமான பெரிய போயா கட்டியிருப்பார்கள். போயா தடியை நீருக்குள் அமிழ அனுமதிக்காது. பாரமான கல்லு அல்லது இரும்பு தடியை கீழ்நோக்கி இழுக்க தடி நேராக வந்துவிடும். முனையில் கொடித்தடி கட்டுவதுபோன்று வலைகளின் மத்தியிலும் ஒரு கொடித்தடி கட்டுவார்கள். இவைகள் அடையாளம் காண்பதற்கு இலகுவாக இருக்கும்.

வலைகள் யாவும் படுத்து முடிந்ததும் வலையின் இறுதி முனையில் பத்து பாக கயிற்றைக் கட்டி அதனை படகுடன் இணைத்துவிடுவார்கள். வலைகள் நீரின் ஓட்டத்திற்கு ஏற்றாற்போல் வளிந்து செல்லும். இதனாலேயே இதனை 'வளிச்சல் வலை' என அழைக்கிறார்கள். வலை நீரின் ஓட்டத்திற்கு வளியும்போது படகு காற்றுக்கு இசைவாகவே கிடந்தவாறே வளிந்து செல்லும். கடலை உலாவரும் மீன்கள், நீரோட்டத்துடன் வரும் மீன்கள் வலையில் சிக்குண்டுவிடும். கட்டா, பாரை, அறுக்குளா போன்ற மீன்கள் பிடிபடும். கட்டா பிடிபட்டால் தொகையாகவே இருக்கும்.

கடலில் விடப்பட்ட வலைகளை ஏற்றிமுடிக்க எடுக்கும்நேரம், மற்றும் நிற்குமிடத்திலிருந்து துறைக்குச் செல்ல எடுக்கும்நேரம் ஆகியவற்றைக் கணக்கிட்டு குறித்த நேரத்திற்கு வலைகளை ஏற்றத் தொடங்குவர் இதனை **'வலை கிளப்புதல்'** என்பர். வலையை ஏற்றும்போது சிக்குண்ட மீன்களை கழற்றி எடுத்துக்கொள்வர்.

## படுப்புவலை

வளிச்சல் வலையை ஒத்ததாக வலை அமைப்புகளும், உருவாக்கமும் இருக்கும். ஆனால் வளிச்சல் வலையைப்போன்று பெரிய கண்களாக இல்லாமல் மாறுபட்ட பெயர்களைக்கொண்ட ஒவ்வொரு வலைகளும் வேறுபட்ட அளவுகளைக் கொண்ட கண்களை உடையதாக இருக்கும். வளிச்சல் வலைக்குரிய கண்களைவிட சிறியவையாகவே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படுப்புவலை தொழில்முறை

வளிச்சல் வலைத் தொழில் முறையை ஒத்தவையாகவே இருக்கும். வழிச்சல் வலையைப் போலல்லாமல் நீர் முறைக்கேற்றப இரண்டு தடவைகள் வலைகளை ஏற்றுவார்கள். குறைந்தநேரம்தான் வலை கடலில் கிடக்கும். படுப்பு வலைகளாக

அறக்கொட்டியான்

சூடை வலை

போன்றவையே பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது இதே பாணியிலொத்த பலவற்றைப் பயன்படுத்துகிறார்கள்.

டிஸ்கோ வலை

முப்புரி வலை

நண்டுவலை

தங்கூசி வலை

முரல் வலை

போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றைத் தவிர நவீன உத்திகளில் மேலும் புதுப்புது தன்மையில் படுப்புவலைத் தொழில் உருவாகலாம்.

## இறால் மடி

றோளர் மடியின் அமைப்பைக் கொண்டதாக இருக்கும். இதன் உருவாக்கத்திற்கு **'கொர்லோன்'** நூலால் பின்னப்பட்ட வலைகளே பயன்படுத்தப் படுகின்றன. இறால் மடியில் **'கூனி'** என்று அழைக்கப்படும் மிகச் சிறிய இறால் அதிகமாக பிடிபடுவதால் தூறு மிகக் குறுகிய கண்களாக இருக்கும். தூறின் கண்களுக்கு இசைவான கண்களைக் கொண்டவையாக ஏனைய சுத்துகள் இருக்கும். 50 கண்களையுடைய 12 சுத்துகளைக் கொண்டதாக இருக்கும். இதற்கு கைவலை நீளமானது. ஒவ்வொரு பக்கமும் 21 பாகம் நீளத்தையுடையதாக அமைந்திருக்கும். மடவலை, மோவலைகளின் விளிம்புகளில் மடங்கு பிதைந்து அதற்குள் கயிறு கோர்க்கப்பட்டிருக்கும். மடவலை கயிற்றில் ஒவ்வொரு பாக இடைவெளிவிட்டு சிறிய கயிற்று வளையம் கோர்க்கப்பட்டிருக்கும். இதனை **'கோடான்'** என அழைப்பார்கள்.

'கோடான்' இனை உருவாக்கவேண்டுமானால், ஒரு பாகம் நீளமுள்ள இழைக் கயிற்றை நன்றாக முறுக்கி, அதனை மடித்து 5, 6 அங்குலம் விட்டமாக வருமாற்போல் வட்டமாக்கி மிகுதி கயிற்றால் மடிக்கப்பட்ட வட்டத்தை முறுக்குக் குலையால் சுற்றிச் சுற்றி எடுப்பார்கள். ஈற்றில் கயிற்றின் இரண்டு பக்க முனைகளையும் முறுக்கிய கோடானுக்குள் நுழைத்துவிடுவார்கள். வட்டமாக இருக்கும் கோடானை மடியின் மடவலைக் கயிற்றுக்குள் மடங்குடன் சேர்த்து நுழைப்பார்கள். நுழைத்த கோடானை கயிற்றைச் சுற்றி வளைப்பார்கள். தொடர்ந்து கோடானின் ஒரு முனையால் மறுமுனைக்குள் நுழைத்து இழுத்து நெருக்குவார்கள். இப்போது மடவலைக் கயிற்றை மடங்குடன் இறுக்கி இணைத்ததாகக் காணப்படும். இந்தக் கோடானில் கம்புகளைப் புகுத்தி நடுவதனால் கம்புகளின் மொத்தத்திற்கேற்ப கோடானின் விட்டத்தில் மாற்றமிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இறால் மடித் தொழில்முறை

பௌர்ணமி, அமாவாசை தினங்களில் பொழுது சாயும் நேரம் கடலிலே வடு விழத்தொடங்கும். கடலில் இரண்டு நீர்நிலைகள் உண்டு ஒன்று வடு மற்றது வெள்ளம். இந் நீர்நிலை நேரங்களில் கடலின் ஆழமான ஒடுங்கிய பகுதிகளில் நீரோட்டம் அதிகமாக காணப்படும். குருநகரைப் பொறுத்தவரை கல்முனையிலிருந்து பண்ணைப் பாலம் வரை உள்ள அகன்ற வாய்க்கால்போன்ற ஆழப்பகுதி நீரோட்டம் அதிகமுள்ள பகுதியாகும். இப்பகுதிகளில் வடுநீர் மேற்குத் திசையிலிருந்து கிழக்குத் திசை நோக்கியும், வெள்ளநீர் கிழக்கு திசையிலிருந்து மேற்கு திசைநோக்கியும் மிக வேகமாக ஓடும். இப்பகுதிகளில் நீரோட்டதை மறித்து குறுக்காக மடியைக் கட்டுவார்கள். வடு நீருக்கு மாத்திரமே மடித்தொழில செய்யப்படுகிறது.

கைவலையில் ஒருபக்க முனையிலுள்ள கோடான்களில் 12, 13 முளம் உயரமுள்ள கம்பின் அடிப்பாகத்தைப் புகுத்தி கடல் நிலத்தில் நடுவார்கள். தொடர்ந்து கைவலையிலுள்ள ஒவ்வொரு கோடானுக்குள்ளும் கம்புகளைப் புகுத்தி மடவலைக் கயிறு மண்ணுக்குள் புகக்கூடியவாறு இழுத்து நிலத்தில் நடுவார்கள். அவ்வாறு நடும்போது கைவலை 'V' அமைப்பில் வடு நீரை எதிர்கொண்டாற்போல் வருமாறு திட்டமிட்டே நடுவார்கள். முழுக் கோடானிலும் கம்புகள் நட்ட பின்னர் மோவலையை உயர்த்தி மோவலைக் கயிற்றை, கம்பின் மேல் முனையில் மடிப்பிட்டு சுற்றிவிடுவார்கள். இப்போது பார்த்தால் இரண்டு பக்கமும் கைவலை 'V' அமைப்பில் விரிந்தவாறு நிற்கும். நீரின் போக்குக்கு கைவலையின் மத்தியிலிருந்து மடி பின்னோக்கி நீண்டிருக்கும். மடியின் தூறு சுருக்கிக் கட்டப்பட்டிருக்கும். நீரோட்டத்துடன் வரக்கூடிய இறால் இனங்கள், சிறிய மீன் இனங்கள் தூறுக்குள் தங்கிவிடும். அடிக்கடி வள்ளத்தில் இருந்தவாறு தூறைத் துக்கி அவிழ்து தூறுக்குள் தேங்கி இருப்பவற்றை வள்ளத்தில் கொட்டிவிட்டு மீண்டும் தூற்றை கட்டி கடலில் விடுவார்கள். இத்தொழிலானது மூன்று மணித்தியாலங்கள் வரைதான் செய்யலாம் பின்னர் நீரின் வேகம் குறைந்து காணப்படும். மேற்கொண்டு செய்யமுடியாது.

## பொறிவலை (கூடு)

பொறிவலையின் சட்டகத்திற்கு 4 வட்டங்கள் பொறியின் வாய்வலையிலிருந்து தூறு வரை வட்டங்களின் விட்டம் குறைந்து செல்லும். வாய் வலையிலுள்ள வட்டத்தின் விட்டம் மடி பயன்படுத்தவேண்டிய தேவையைப் பொறுத்து மாறுபடும். இவ் வட்டங்களைச் சுற்றி வலை பொருத்தப்படுகிறது. அருகிலுள்ள இரு வட்டங்களுக் கிடையிலான தூரமும் அவ்வாறே தேவையைப் பொறுத்து மாறுபடும். இறால் மடியை எடுத்துநோக்கினால், அந்த மடிக்குள் குறைந்து செல்லக்கூடிய வட்டங்களை யுடைய இரும்பு வளையங்களை உட்புகுத்திப் பொருத்திப் பார்த்தால் எவ்வாறிருக்குமோ அதேபோன்றே கூடு அமைந்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கும். இப் பொறியின் மையத்தில் உட்பக்கமாக இரண்டு வளையங்களுக்கு இடையில் மேல் வலையிலிருந்து உள்நோக்கிச் செல்லுமாறு கூம்புபோன்ற அமைப்பில் மேலதிக வலை பொருத்தப்பட்டிருக்கும். இதனைக் 'கோண்' என்பர். இந்தக் கோணிற்குள் இறால், மீன் இனங்கள் புக முடியுமே தவிர வெளியே வர முடியாது. மொத்தத்தின் பிடிபட்ட மீனினத்திற்கு இடப்பட்ட சிறை என்றே சொல்லலாம்.

## பொறிவலைத் தொழில்முறை

இதனை இங்கு தனிப் பொறிவலையாகப் பயன்படுத்தவில்லை இரவில் கடலுக்குச் சென்றுவரமுடியாத கடல் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர் இந்தப் பொறி வலை இறால் மடியின் கைவலையுடன் பொருத்தி பயன்படுத்தினார்கள். பொறியின் தூறிற்குப் பின்னால் கம்பு பாய்ந்து தூறை இழுத்துக் கட்டிவிடுவார்கள். இதனால் மாற்று நீரோட்டத்திற்கும் பொறி அசையாது நிற்கும். சாய்வான நீரோட்டத்தில் புகுந்த இறால், மீன் இனங்கள் எல்லாமே தூறுக்குள் தங்கிவிடும். இடையில் ஏற்படும் மாற்று நீரோட்டத்தினால் தூறுக்குள் இருப்பவை வெளியேறுவதற்கு கோண் அனுமதிக்காது. எனவே பகலில் எவ்வேளையும் சென்று பிடிபட்டவைகளை எடுத்துக் கொள்ளலாம். பரவைக்கடல் சிறகுவலைத் தொழிலுக்கும் இதனைப் பயன்படுத்துகிறார்கள். அது அளவில் சிறிதாக இருக்கும.

## சிறகுவலை

இத் தொழில்முறை 100 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 11 முளம் வரையிலான ஆழ்கடலிலேயே மீன்களை முக்கிய இலக்காகக் கொண்டு பயன்படுத்தப்பட்டு வந்தது. காலப்போக்கில் மிகக் குறைந்த நீர்மட்டமுள்ள பரவைக் கடலிலும் இதே தன்மையையொத்த வலைகளைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள். இவை மீன்களை முக்கிய இலக்காகக் கொண்டதாகவும், மற்றும் இறாலை முக்கிய இலக்காக கொண்டதாகவும் காணப்பட்டது. தொழில் தன்மையைக் கொண்டு இதனை 'மீன் பொறி' என்றும் அழைப்பர். சிறகுவலையின் வலை அமைப்பு நான்கு வகைகளைக்கொண்டது.

**பட்டி:**

மீன்கள் தங்கி நிற்கும் பகுதியாகும். பின்னால் நீட்டப்பட்ட முக்கோணச் சதுரமாக சிறிய வாசல் வைத்து பாயப்படுகிறது. இந்த வாசலால் புகுந்த மீனினங்கள் மீண்டு வரமுடியாது.

**சிறகு:**

பட்டி வலையில் உள்ள வாசலுக்கு போதிய இடம்விட்டு பொருத்தப்பட்டு, பட்டிக்கு முன்பாக இரண்டு பக்கத்தாலும் வட்டமாக வரும் பகுதி. இதற்கும் வாசல் வைத்துப் பாயப்படும். இந்த வாசல் சற்று அகலமாக இருக்கும். பட்டிக்குள் புகாத சில மீனினங்கள் இதற்குள்ளும் தங்கி நிற்கும்.

**நிலவலை:**

சிறகினது வாசலின் மையத்திலிருந்து நீண்ட வேலிபோன்று ஆழம் குறைந்த பகுதி நோக்கி பாயப்படும் வலை. வலை பாயப்படும் இடத்தின் தேவையைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்து நிலவலை நீண்டதாகவோ, சற்றுக் குறுகியதாகவோ இருக்கும். வலை பாயப்படும் இடத்தை 'பாடு' என்பர். கடலில் குறுக்காக ஓடிவரக்கூடிய மீனினங்களை மறித்து ஆழமான பகுதி நோக்கி அதாவது பட்டி நோக்கி திருப்புவதே இதன் வேலையாகும்.

**கெட்டு:**

சிறகில் இணைத்தாற்போல் இரண்டு பக்கத்தாலும் கைகளை விரித்தமாதிரி முனை மடிக்கப்பட்ட அமைப்பில் பாயப்படுகிறது. நிலவலையின் மறிப்பால் திசை திரும்பிய மீன்கள் முன்னோக்கிச் செல்லும்போது குறித்த எல்லையை விட்டு விலகிச் செல்லாது தடுத்து சிறகுக்குள் செல்வதற்குத் துணை செய்கிறது.

**கடிப்புவலை:**

பட்டி மற்றும் சிறகுக்குள் நிற்கும் மீன்களை சேகரித்து எடுப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது. இது தனியானதொன்றாகும்.

சிறகுவலையில் மாறுபட்ட தன்மைகளைக் கொண்ட தொழில் முறைகள் காலத்துக்குக்காலம் உருவாகியிருக்கின்றபோதிலும், மேலே குறிப்பிட்டவைகள் பொதுவான தேவைக்குரிய உபகரணங்களாகும். இவற்றின் அடிப்படையில் செய்யப்படும் மாறுபட்ட தொழில் முறைகளாவன:

## ஆழ்கடல் சிறகுவலை அல்லது அகலவலை

இதுவே ஆரம்பச் சிறகுவலைத் தொழில் முறையாகும். ஆரம்பத்தில் 11 முளத்திற்கு உட்பட்ட ஆழ்கடலில் செய்யப்பட்ட இத்தொழில் தற்போது 17 முளங்கள் வரையான ஆழ்கடலில் செய்யப்படுகின்றது. உயர்ந்த காட்டுக் கம்புகளையும், வலைகளையும்கொண்டு கடலில், வீடு அமைப்பதுபோன்று வலைச் சுவராகப் பாயப்படுகின்றது. இவ் வலைச்சுவர் 15 நாட்கள் வரை கடலில் நிற்கும். தினமும் காலையில் மீன்கள் கடிப்புவலை மூலம் சேகரிக்கப்படும். 15 நாட்களின் பின்னர் பிடுங்கப்பட்டு, பழுதுகள் பார்க்கப்பட்டு, கண்டல்பட்டையிட்டு அவிக்கப்பட்டு மீண்டும் கடலில் பாயப்படும். தற்போது பெரிய கம்புகளின் தட்டுப்பாடு காரணமாக கம்புகளுக்குப் பதிலாக இரும்புப் பைப்புடன் இரும்புக் கம்பியைப் பொருத்திப் பயன்படுத்துகிறார்கள்.


இதன் தொழில் உபரணங்களை எடுத்துநோக்கினால், அனைத்து வலைகளும் உயரத்திற்கேற்றவாறு பல தட்டுகளாகப் பொருத்தப்பட்டிருக்கும். ஒவ்வொரு வலைகளுக்கும் இருக்கக்கூடிய நீள, உயரங்கள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டவையாக இருப்பினும், பயன்படுத்தப்படும் வலைகளுக்குரிய நூல்களின் இளை (கனம்), கண்களின் அளவு, பொருத்தப்படும் தட்டுகளின் அளவு போன்றவற்றைக் கணித்து பயன்படுத்தலுக்கு இலகுவான முறையில் வலையின் நீளத்தைக் கணிப்பர்.

தொழில் உபகரணங்களில் பட்டி முக்கியமானதாகும் இதற்குப் பயன்படுத்தப்படும் வலை கூடிய இழை நூல்களைக் கொண்டவையாகவும், சற்றுக் குறுகிய கண்களை உடையதாகவும், நிர்ணயிக்கப்பட்ட முளங்களுக்குரிய உயரத்துக்கேற்ற தட்டுகளைக் கொண்டவையாகவும் இருக்கும. மடவலைக்கு ஐந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களையுடைய மடங்கு பிதையப்பட்டு, அதனில் உறுதியான கயிறு கோர்க்கப்பட்டு, கயிற்றையும் மடங்கையும் கௌவிப் பிடித்ததாக கோடான் (கம்பின் அடி முனை புகக்கூடிய அளவு) கோர்க்கப் பட்டிருக்கும். கோடான் சற்று நெருக்கமாகப் போடப்பட்டிருக்கும். மோவலைக்கு 1½ கண் மடங்கு பிதையப்பட்டு கயிறு கோர்க்கப்பட்டிருக்கும். சிறகும் இவ்வாறே இருக்கும். பட்டிக்குரிய வலைகளையும், சிறகுக்குரிய வலைகளையும் பொறிக்கேற்ற அளவுத் திட்டத்தில் பனை ஈக்கில்களால் பிதைவார்கள் (பொருத்துதல்).



நிலவலை, மற்றும் கெட்டு சற்றுப் பெரிய கண்களை உடையதாகவும், பட்டி வலையைவிட உயரம் குறைந்ததாகவும் இருக்கும். பெரிய கண், குறைந்த உயரம் என்பதால் வலையின் நீளம் கூடியதாக இருக்கும். மடவலை, மோவலைகளுக்கு 1½ கண் மடங்கு பிதையப்பட்டு கயிறு கோர்க்கப்பட்டிருக்கும். மடவலையில் கோடான் கோர்க்கப்பட்டிருக்கும். கோடான் நெருக்கமற்றுப் போடப்பட்டிருக்கும். கெட்டு இரண்டும் தனித்தனி வலைகளாக இருக்கும். பொதுவாக ஒரு வலையே ஒரு பக்கக் கெட்டாக இருக்கும். நிலவலைகள் உயர ஒழுங்கில் பனை ஈக்கிலினால் பிதையப்படும். இது நேர் வலையாக நீண்டு இருக்கும். பட்டி, சிறகு, கெட்டு, நிலவலை ஆகியவற்றின் தொகுப்பை ஒரு கூட்டம் என்பர். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களை வைத்திருப்பார்.

கடலில் சுவர் போன்று வலை நிற்குமாறு நடுவதற்கு கம்புகள். அல்லது இரும்புக் கம்பிகள் வலைகளுக்குத் தேவையான அளவு உயரங்களில் இருக்கும். கம்புகளின் அடிப்பாகம் மிகக் கூர்மையாகவும், மேற்பாகம் சற்று கூர்மையாகவும் செதுக்கப்பட்டிருக்கும். வலையின் மடவலைக் கயிற்றிலுள்ள ஒவ்வொரு கோடானிலும் கம்பின் கூரான அடிப்பாகத்தைப் புகுத்தி கடல் தரையில் நடுவார்கள். கற்பாறையானால் அலவாங்கால் பாறையில் துளையிட்டு நடுவார்கள். பின்னர் மோவலையைத் தூக்கி மோவலைக் கயிற்றால் கம்பின் மேல்முனையில் வளையமிட்டு உயர்த்தி விடுவார்கள். அனைத்துக் கம்புகளிலும் இவ்வாறு செய்துவிட்டால் வலைச் சுவராக மாறிவிடும். கடல் நிலம் கற்பாறையானால் சிலவேளை பட்டி மற்றும் சிறகின் மடவலை கடல் நிலத்தோடு மருவியதாக இல்லாதிருக்கலாம். அவ்வாறாயின் மீனினங்கள் வெளியேற வாய்ப்புண்டு. இதனால் சுழியோடிச்சென்று கற்களை எடுத்து மடவலைக்கு வைத்து கடல் நிலத்துடன் மருவச் செய்வார்கள். இவ்வாறே கெட்டு, மற்றும் நிலவலைகளை உரிய கோணத்தில் பாய்வார்கள்.

இவ்வாறு பாயப்பட்ட பட்டி, சிறகுகளில் உள்ள மீன்களைச் சேகரிப்பதற்கு கடிப்புவலை பயன்படுத்தப்படுகிறது. கடிப்புவலையானது விரிந்த, விசாலமான பையைப் போன்று இருக்கும். ஏற்கனவே குறிப்பிட்டுள்ள 'பாச்சுவலை' தொழிலுக்கு உரிய வலையையொத்த அமைப்பில் கடிப்புவலை காணப்படும். பாச்சுவலையில் மடவலை, மோவலைக கயிறுகளில் குறுக்காக தடிகள் இணைத்தால் கடிப்புவலையாகவே இருக்கும். நீள, உயரங்களில் மாறுபாடு இருக்கும். கடிப்பு வலையின் இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைகளிலும் இரண்டு கம்புகள் வலையுடன் மருவியதாக இருக்கும். இவை தாய்க்கம்பாகும். இடையில் மூன்று கம்புகளுமாக மொத்தம் ஐந்து கம்புகளாக இருக்கும். கம்புகளை பட்டி, மற்றும் சிறகினில் செங்குத்தாக நிறுத்தி வலையின் ஓரமாக இழுத்து, கடிப்புவலையை விரிப்பர். தாய்க்கம்பு வலையை மருவியதாகவும், அடிப்பாகம் நிலத்தை மருவியதாகவும் வருமாறு இருபக்கத்தாலும் தாய்கம்பை பிடித்து தள்ளுவார்கள். கடல் ஆழம் என்பதால் வலை பாயப்பட்டுள்ள கம்புகள், கடிப்புவலையின் கம்பு ஆகியவற்றின் துணையுடன் நீரின் மேற்பரப்பில் மிதந்தவாறு தள்ளிக்கொண்டு வலையின் மறு பக்கத்துடன் அணைத்து, கம்புகளைச் சுருக்குவார்கள். இப்போது மீனினங்கள் கடிப்பு வலைத் தூறுக்குள் புகுந்துவிடும். மேற்கொண்டு வள்ளத்தில் ஏற்றி தூறுக்குள் இருக்கக்கூடிய மீன்களை வள்ளத்திற்குள் எடுப்பார்கள். இதனை ஒரு பாடு என்பர். ஒரு பாட்டுடன் பட்டிக்குள் நிற்கும் மீன்கள் அனைத்தும் சேகரிக்கப்பட்டுவிடுமென்பதல்ல தேவையைப்பொறுத்து மூன்று பாடுகள் வரை இழுப்பார்கள்.

## கட்டைச் சிறகுவலை

இதனை 5½ முள சிறகுவலை என்பர். மணற்பாங்கான பரவைக் கடலில், பெரும்பாலும் இறால் பிடிப்பதற்காகவே பாயப்படுகிறது. பட்டி, சிறகுக்குரிய வலையின் கண் சிறிய இறால்கூட புகமுடியாதவாறு சிறிதாக இருக்கும். நிலவலை, கெட்டு ஆகியவை பட்டிவலையின் கண் அளவைவிட சற்றுப் பெரிதாக இருக்கும். தோளுக்கு கீழ்ப்பட்ட தண்ணீரில் பாய்வதால் சிரமமின்றி கடல் தரையில் நின்றவாறே பாயலாம். மடவலைக் கயிறும், மடங்கும் மண்ணுக்குள் புகுந்தவாறே இருக்கும்.

நிலவலை ஆழ்கடல் சிறகுவலையவிட பல மடங்கு அதிகமானதாக இருக்கும். இதனால் இதனை வேலிவலை என்றும் அழைப்பர். சில பாடுகளில் நிலவலையின் மறுபக்க முனையில் பட்டி, சிறகு. கெட்டு என்பன பாய்வார்கள். இதனைத் 'தொடுவை' என்பர். இதன்போது இரண்டு கூட்டம் வலைகள் இணைக்கப்படுகின்றது. 23 நாட்கள் வரை கடலில் நிற்கும். தினமும் காலையில் இறால்கள் கடிப்புவலை மூலம் சேகரிக்கப்படும். 23 நாட்களின் பின்னர் பிடுங்கப்பட்டு, பழுதுகள் பார்க்கப்பட்டு, கண்டல்பட்டையிட்டு அவிக்கப்பட்டு மீண்டும் கடலில் பாயப்படும். அந்த 23 நாட்களும் ஒரே இடத்தில் பாயப்பட்டிருக்குமென்று சொல்லமுடியாது. வருவாயைப் பெருக்கும் நோக்கில் ஓரிடத்திலிருந்து பிடுங்கி வெவ்வேறு இடங்களில் பாயப்படுவதுமுண்டு.



தற்போது சிறகுவலையில் பொறிவலை (கூடு) இணைத்துப் பயன்படுத்துகிறார்கள். புத்தளம் பரவைக்கடலில் பயன்படுத்தப்படும் முறையே இந்த முறையாகும். இதற்கு பட்டி இருக்காது. சிறகின் இரண்டு பக்கத்தினதும் பக்கவாட்டில் இரண்டு பொறிவலைகளைப் பிதைந்துவிடுவார்கள். சிறகுக்குள் வரும் இறால், மீன் இனங்கள் கூடுக்குள் புகுந்துவிடும். காலையில் அவற்றை சேகரிப்பார்கள். இதற்கு அதிக நிலவலை பாயப்படுவதில்லை. மிகக் குறைந்த நிலவலையே பயன்படுத்தப்படுகிறது. 'சிறகுவலையைப் போல் அதிக நிலவலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ந்தால் இறால் குறைவாக கிடைக்கிறது' என்று தொழிலாளர்கள் கூறுகிறார்கள். குறைந்த முதல் என்பதால் ஒருவர் பல கூட்டங்களுக்குச் சொந்தக்காரராக இருப்பர்.

## களங்கட்டி அல்லது பிதைப்பு வலை

பரவைக்கடலில் மிகவும் நீர்குறைந்த பகுதியை 'களம்' என்பர். சிறகுவலையை ஒத்த அமைப்பு, தொழில்முறை ஆகியவற்றைக் கொண்டிருப்பினும், களத்தில் செய்யப்படுவதால் 'களங்கட்டி' என்றும், சிகுவலையைப்போல் மடவலைக்கு கோடான் போடாமல் தனி மடங்குடன் மடவலையை மண்ணுக்குள் புதைப்பதனால் 'பிதைப்பு வலை' (புதைப்பு வலை திரிவுபட்டு) என்றும் அழைக்கப்படுகின்றது.

சிறகுவலை தொழில் செய்யும் ஆழத்தை விட, ஆழங்குறைந்த களங்களில் பட்டி, சிறகு, கெட்டு, நிலவலை யாவற்றையும் பயன்படுத்தி சிறகுவலையின் வடிவமைப்பில் மடவலை மண்ணுக்குள் புதைக்கப்படுகின்றது. பெரும்பாலும் இறால் பிடிப்பதற்காகவே பிதைக்கப்படுகிறது.

கூரிய அலவாங்கின் கூர்ப்பக்க முனையிலிருந்து ஒரு சாண் மேலாக வைரமான கயிற்றைக் கட்டுவர். அலவாங்கின் கூர்ப்பக்கம் கடல் நிலத்து மண்ணுக்குள் புகுந்திருக்குமாறு ஊன்றுவார்கள். அலவாங்கின் மறு முனையை ஒருவர் நிலம்நோக்கி அழுத்திப்பிடிக்க, மற்றவர் கயிற்றின் மறுபக்கத்தால் தனது இடுப்பைச் சுற்றி வளைத்துப்பிடித்தவாறு இழுப்பார். (வயல் உழுதல்போல்) ஒருவரின் அழுத்தலிலும், மற்றவரின் இழுவையிலும் அலவாங்கு மண்ணைக் கிழித்தவாறு செல்லும். அவ்வாறு கிழிக்கப்பட்ட நிலத்தில் மடவலையைச் செருகி (புதைத்து) வெளியேறிய மண்ணால் மூடிவிடுவார்கள். மேற்கொண்டு புதைத்த வலைக்குப் பின்பக்கத்தால் கம்புகளை நட்டு சிறகுவலையைப்போன்று மோவலையை தடியில் சுற்றுவார்கள். இதன் மோவலைக்கு மடங்கு கிடையாது. கயிறு வலையுடன் நேரடியாகப் பொருத்தப் பட்டிருக்கும். ஏனைய முறைகளெல்லாம் சிறகுவலையை ஒத்தது.

## வளைச்சுப் பிதைப்பு களங்கட்டி

களங்கட்டியின் அமைப்பு, தன்மையில் வலைகளும், பிதைப்பு முறையும் ஒன்றாகவே இருக்கும். ஆனால் தொழில் முறை மாறுபட்டது. மீனினை இலக்காகக்கொண்டு செய்யப்படுகின்றது. குறித்த எல்லைக்குள் வருகின்ற மீன்கள் அனைத்தும் பிடிபட்டுவிடும். கடலில் வெள்ளம், வடு என இரண்டு நீர்நிலைகள் இருக்கின்றதல்லவா? சில களங்களில் வெள்ளத்தின்போது நீர் நிறைந்து நிற்கும். வடுவின்போது அவை முற்றாக வற்றிவிடும். இத்தகைய களங்களைத் தேர்வுசெய்தே வளைச்சுப் பிதைப்பு களங்கட்டித் தொழில் நடைபெறுகிறது.

சுத்தமான வடுவின்போது நீர் நிற்கக்கூடிய களப் பகுதியைத் தேர்ந்தெடுத்து அவ்விடத்தில் பட்டி, சிறகு போன்றவற்றை புதைத்து, கம்புகளை நட்டு மோவலையை உயர்த்தி விடுவார்கள். இதற்கு கெட்டு பாய்வதில்லை. கெட்டுக்குப் பதிலாக அவ்வலையைக்கொண்டு சிறகு போன்ற அமைப்பில் வளைத்துப் புதைப்பார்கள். இதனைப் **'பிள்ளைப் பெருங்குடா'** என அழைப்பர். இதற்குள்ளும் மீன்கள் தங்கி நிற்கும். முற்றாக வற்றியுள்ள அகண்ட களத்தின் இரண்டு பக்கங்களிலும் ஓரமாக அதாவது களத்தை வட்டமாக சுற்றி வருமாறு பிள்ளைப் பெருங்குடாவிலிருந்து தொடங்கி நிலவலையைப் புதைப்பார்கள். மடவலையைப் புதைப்பதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோவலையையும் நிலத்திலிட்டு கடல் மண்ணால் மூடிவிடுவார்கள். அப்போதுதான் மீனினங்கள் வலையை இனங்காணாதிருக்கும். இப்போது முற்றாக சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் களம் இருக்கும். கரையை அண்டிய களங்களாயின் இரண்டு பக்க நிலவலை முனைகளும் கரைவரை புதைக்கப்பட்டிருக்கும்.

வெள்ளம் முற்றாக வரும்வரை காத்திருந்து, மண்ணில் மறைக்கப்பட்டு சுற்றிவளைக்கப்பட்டிருந்த நிலவலைக்குப் பக்கத்தில் கம்புகளை நட்டு மோவலையை உயர்த்தி சுற்றிவிடுவார்கள். இப்போது களம் சுற்றிவளைக்கப்பட்ட வலை வேலியாக இருக்கும். வெள்ளம் வற்றி நீர்மட்டம் குறைய, குறைய மீனினங்கள் நீர் நிற்கக்கூடிய பகுதியான பட்டியைத் தேடிச் செல்லும். குறித்த எல்லைக்குள் அடக்கப்பட்ட மீனினங்கள் அனைத்தும் வெளியேற முடியாது முடக்கப்பட்டுவிடுவதால் அவை பட்டியைத் தேடிச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை. மீன்கள் பட்டியைத் தேடிச் செல்வதற்குள் நீர் முற்றாக வற்றிவிட்டால் அவை நிலவலை ஓரங்களில் இருக்கக்கூடிய மிகக்குறைந்த நீரில் துடித்தவாறு கிடக்கும். மீன்கள் சேகரிக்கும்போது இவையும் சேகரிக்கப்படும்.

ஒரு களத்தில் ஒருதடவை மட்டும் தான் தொழில் செய்யப்படும். மேற்கொண்டு வலையைப் பிடுங்கி வேறு களம்நோக்கிச் செல்வர்.

## கணவாய்ப் பொறி

2001 ஆண்டிற்கு பின்னர் அறிமுகப்படுத்தப்பட்டது. பொலியஸ்ரரால் பின்னப்பட்ட பையில் (உரப்பை) மணலை நிறைத்து இறுக்கமாகக் கட்டப்படும். பின்னர் இந்த பையைச் சுற்றி (மூடி) நாவல், பாலை. வேம்பு போன்ற மரங்களின் கிளைகளை இலையுடன் சேர்த்துக் கட்டப்படும். மண்மூடையாகத் தெரியாது, இலைகளாகத்தான் தெரியும். இந்த மூடையில் கயிற்றைக் கட்டி அக்கயிற்றின் மறுமுனையில் பெரியதொரு போயா கட்டப்படும். இவற்றைக் கடலில் இறக்கியவுடன் மணலின் பாரத்தில் இலைகள் அமிழ, போயாவின் மிதப்பால் நிலத்திடை அமிழாது இடை நீரில் குழைகள் நின்றுவிடும். அப்படியே கிடக்கவிடப்படும்.

ஓரிரு நாட்களில் இலைக் கூட்டத்தில் கணவாய்கள் மொய்க்கத் தொடங்கிவிடும். அவை தமக்கு பாதுகாப்பான இடமாகக் கருதி முட்டையிடுவதற்கும், தங்கிநிற்பதற்கும் கூட்டமாகச் சேர்ந்துவிடும். அவ்வாறு கூட்டமாக நிற்கும் கணவாய்களை, கணவாய்க்கென பயன்படுத்தப்படும் விசேட தூண்டிலைப்போட்டு பிடிப்பார்கள். இந்தத் தொழில் பல தொழில்களுக்கு பெரும் இடையூறென்ற முறைப்பாடு முன்வைக்கப்படுகின்றது.

ஆரம்ப காலங்களில் பாரிய மரங்களை வெட்டி கடலில் போட்டு கணவாய் பிடிப்பதுண்டு. இம்முறை குருநகர் மக்களால் பயன்படுத்தப்படவில்லை.

## வீச்சுவலை

ஆழம் குறைந்த நீரில் சிறு மீன்கள், வெள்ளை இறால் போன்றவற்றைப் பிடிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது. இதனை தொழிலாக செய்யவில்லையாயினும் வெள்ளை இறால் பிடிபடக்கூடிய காலங்களான மாசி முதல் சித்திரை வரை நல்ல வருவாயைக் கொடுத்தது. இப்போது முடமாகிவிட்டது.

கூம்பு வடிவான வலையாக இருக்கும். கையில் காவிச்சென்று மீன் நடமாட்டம், மற்றும் வெள்ளை இறால் கலக்கு போன்றவற்றை அவதானித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைநோக்கி வீசப்படும். வலையானது வட்டமாக விரிந்து குறித்த பகுதியில் வட்டமாக அமிழ்ந்துவிடும். வட்ட வடிவான வலையின் கரைகளில் ஈயங்கள் இணைக்கப்பட்டிருக்கும். இந்த ஈயங்களே வீசும்போது விரிந்து கொள்வதற்கும், நீரில் இலகுவாக அமிழ்வதற்கும் துணைசெய்கிறது. வட்ட வடிவான வலையின் மையத்தில் நூல் பொருத்தப்பட்டிருக்கும். வலை வீசப்பட்ட பின்னர் அந்த நூலைப் பிடித்து மெல்ல மெல்ல இழுக்கப்படும். அப்போது வலை அமைதியாக ஒடுங்கியவாறு மேலே வந்துகொண்டேயிருக்கும். ஈயக்குண்டுகள் அனைத்தும் குவிந்து ஒன்றுசேரும்வரை இழுக்கவேண்டும். இப்போது வீச்சுவலையின் வட்டத்திற்குள் அடைபட்டிருந்த மீன்கள் வலைக்குள் சிக்கிவிடும். மேற்கொண்டு அவற்றை அப்புறப்படுத்தலாம். மிகக் குறைந்தநேரத் தொழிலாகும்.

வீச்சுவலைத் தொழிலாளி தமது நாரியில் **'பறி'** கட்டியிருப்பார். பறியானது பனை ஓலையாலும், பனை ஈக்கிலும்கொண்டு பின்னப்படுகிறது. அடிப்பாகம் அகன்று நீளமாகவும், நீமான இருபக்கங்களும் வட்டமாகவும் (ஓட்டத்திற்குப் பயன்படுத்தும் மைதானங்களின் தடங்கள்போல) இருக்கும். மேலே உயர உயர குறைந்து செல்லும். வாய்ப்பகுதி வட்டமாகவும், விளிம்பு கனமாகவும் இருக்கும். வலையிலிருந்து அகற்றப்படும் மீனினங்களை உடனுக்குடனேயே பறியில் போடப்படும். பறியின் பாதி தண்ணீருக்குள் அமிழ்ந்திருப்பதால் மீன்கள் பெரும்பாலும் உயிருடனே காணப்படும். மாலை நேரங்களில் வீச்சுவலை மூலம் பிடிக்கப்படும் மீன்களுக்கு கிராக்கி அதிகம்.

## இழுவை இறால் வலை

ஏற்கனவே கடிப்புவலைக்குக் குறிப்பிட்ட அமைப்பிலேயே இழுவை இறால் வலை காணப்படும். கடிப்பு வலையைப்போன்று வலையின் இரண்டு பக்கங்களிற்கும் தாய்க்கம்புகளும் உள்ளே துணைக் கம்புகளும் இருக்கும். ஆனால் 'அளி' அதிகமாக இருக்கும். வலையின் கண்கள் மிகக் குறுகியதாகவும், மிகவும் மெல்லிய நூலினால் பின்னப்பட்டவையாகவும் இருக்கும்.

இருவர் இத்தொழிலைச் செய்வர். இந்த இறால் வலையும், இரண்டு பெரிய பறிகளுமே இத் தொழிலின் மூலதனமாகும். நீர்நிலை, நேரங்களைக் கணக்கிட்டு தொழிலைச் செய்ய ஆரம்பிப்பர். இரவில், ஓரளவு கடல்நீர் இடுப்பளவு இருக்கும் பரவைக் கடலிலேயே இத்தொழில் செய்யப்படுகின்றது. கடல் நீரின் மேல்மட்டத்திற்கு பறியின் வாய் இருக்குமாறு மிதப்பிட்டு இருவரும் ஒவ்வொரு பறியை தத்தமது விலாவில் கட்டிக்கொள்வார்கள். தொடர்ந்து இறால் வலையை விரித்து கடல் நிலத்தில் மடவலைக் கயிறு மருவி வருமாற்போல், இருபக்க தாய்க் கம்புகளிலும் பிடித்தவாறு பின்புறமாக இழுத்துச் செல்வார்கள். நிலத்தோரங்களில் நிற்கும் இறால்கள் வலைக்குள் புகுந்துவிடும். அதிகமான அளிகளை உடையதாகையால் அளிக்குள்ளேயே இறால்கள் சென்றுவிடும். வெளியேறமாட்டாது.

சிறிது தூரம் சென்றதும் இருபக்கத்தாலும் வானத்தைநோக்கியவாறு வலையை நிமிர்த்தி உயர்த்துவார்கள். வலையிலுள்ள ஏனைய துணைக் கம்புகளை சுருக்கி வலையைச் சுருக்குவார்கள். இப்போது வலைக்குள் புகுந்த இறால்கள் அனைத்தும் அப்படியே உள்ளடக்கப்பட்டுவிடும். மேற்கொண்டு கடலில் நின்றவாறே இரு பக்கத்தாலும் அளிகளை உதறி, சுருக்கி, ஒடுக்கி பறிக்குள் கொட்டிவிடுவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை ஒரு பாடு என்பர் இப்படி பல பாடுகளை விடுவார்கள். சிலர் நீர்நிலைகளைப் பார்த்து தொழில் செய்வர். சிலர் இரவு முழுவதும் இழுப்பதுமுண்டு.

## இழுவை இறால் மடி

1985 இற்குப் பின்னரே இத்தொழில் அறிமுகமாகியது. இழுவை இறால் வலையை ஒத்த செயற்பாடாகவே காணப்படுகின்றது. இறால் வலையைப்போன்று கம்புகள் இருக்கமாட்டாது. றோளர் தொழிலுக்குரிய மடியின் அமைப்பில் இறால் மடி காணப்படும். மெல்லிய நூலில, மிகக் குறுகிய கண்களில் மடி பின்னப்பட்டிருக்கும். கைவலை 6 பாகம் உள்ளதாகவும், மடவலைக்கு சங்கிலி வைத்து மந்து அடிக்கப்பட்டிருக்கும். மோவலைக்கு மிதப்புகளுக்கு போயா கட்டப்பட்டிருக்கும். மோவலையின் நடுவில் பெரிய போயா கட்டப்பட்டிருக்கும்.

கைவலையின் இருபக்கங்களிலுமுள்ள மடவலை, மோவலைகளிலிருந்து 4 பாகம் நீளமுள்ள கயிறுகள் இணைக்கப்பட்டிருக்கும். அந்தக் கயிறுகளை இருபக்கத்தாலும் இருவர் தத்தமது நாரியில் கட்டி இழுபர். மடி என்பதால் இறால் வெளியேறாது உள்ளேயே சிறைப்பட்டுவிடுகிறது. இறால் வலையைப் போன்று சிறிது தூரத்திற்கே ஒரு பாடு இழுப்பர். ஆனால் இறால் வலையைவிட இழுப்பதற்கு இலகுவானது. சங்கிலி மடவலையில் பொருத்தப்பட்டிருப்பதனால் கடல் தரையை கிளறி மிகச் சிறிய உயிரினங்களையும் சேகரித்துக்கொள்ளும். றோளரைப் போன்று இதனாலும் கடல் வளங்களுக்கு பாதிப்பு உண்டு எனப் பலர் குறைபட்டுக்கொண்ட நிகழ்வுகளும் உண்டு. பாடு முடிந்ததும் இறால் வலையைப்போல் கடலில் நின்றவாறே இரு பக்கத்தாலும் அளிகளை உதறி, சுருக்குவார்கள். இறால், மீன் இனங்கள் அடித்தூறுக்குள் சென்றுவிடும். அடித்தூறின் சுருக்குக் கயிற்றை அவிழ்க்க அவை பறிக்குள் விழுந்துவிடும.

## கைத்தூண்டில்

சிறிய வள்ளங்களைப் பயன்படுத்தி இருவரினால் செய்யப்படும் தொழிலாகும். பெரிய முதலீடு இன்றி இத்தொழில் செய்யப்படுவதால் நல்ல வருவாயைக் கொடுத்தது. ஆரம்பத்தில் பொழுதுபோக்காகச் செய்யப்பட்டுவந்த இத்தொழில் வருவாயைத் தரக்கூடிய தொழிலாக மாற்றம்பெற்றது. பலர் இதனை தமது குடும்பத் தொழிலாகவே செய்துவந்தனர். தூண்டில், அதற்குரிய தங்கூசி, சிறிய வள்ளம் போன்றவையே இத்தொழிலின் மூலதனமாகும்.

நீர்நிலைகளுக்கேற்ப முன்னிரவு, பின்னிரவு போன்ற நேரங்களில் இத்தொழில் செய்யப்படுகிறது. மீனைப் பிடிப்பதற்கு தூண்டிலில் இரை குற்றவேண்டும். பெரும்பாலும் மண்புளுவே பயன்படுத்தப்படுகின்றது. கடற்கரை ஓரங்களில் மண்லை வெட்டினால் மண்புளுக்கள் காணப்படும். அவற்றை பொறுக்கி ஒரு பாத்திரத்திலிட்டு கூடவே மண்கள் இட்டு தொழிலுக்குக் கொண்டுசெல்வார்கள். கடலில் குறித்த இடம் சென்றதும் தூண்டிலில் மண்புளுவைக் குற்றி கடலில் வீசியெறிவார்கள். மீன்கள் மண்புழுவைக் கௌவிக்கொள்ள தூண்டில் மீனின் வாயில் சிக்கிவிடும். உடனே இழுத்து வள்ளத்தில் மீனைப் போட்டுவிடுவார்கள். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட தூண்டில்களை எறிவார். சில சந்தர்ப்பங்களில் உடனடியாக மீன் கிடைக்கும். சில சந்தர்ப்பங்களில் காவலிருக்கவும் வேண்டியிருக்கும். மண்புழு எடுக்கமுடியாத சந்தர்ப்பங்களில் சிறிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறால், துண்டாடப்பட்ட கணவாய் போன்றவற்றை இரையாகப் போடுவார்கள். கடலில் நீண்டதூரம் செல்லாமல் கரைக்கு அண்மிய ஆழமான நீர்நிலைகளைக்கொண்ட பகுதிகளிலே தொழில் செய்யப்படுகின்றது.

## தூண்டில் வலை

இதனை **'படுப்புத்தூண்டில்'** என்றே அழைக்கவேண்டும். 3½ தொன் இயந்திரப் படகில், 75 இழைகளைக்கொண்ட, 50 பாகம் நீளமுடைய 50 கட்டு கொர்லோன் கயிறுகளும், 2500 தூண்டில்களும் பயன்படுத்தப்பட்டு 4,5 தொழிலாளர்கள் தொழில் செய்கின்றமையினால் இதனை 'தூண்டில்வலை'யென அழைக்கின்றார்கள். கடலில் நீண்டதூரம் சென்று இரவு, பகல் ஆகிய இரண்டு வேளைகளிலும் தொழில் செய்வார்கள்.

பிரதான கயிறாக 75 இழைகளைக்கொண்ட கொர்லோன் கயிறு இருக்கும். இதைவிட 9 அல்லது 12 இழைகளைகொண்ட 4 அடி நீளமுள்ள கொர்லோன் நூல் துண்டுகளை மேலும் முறுக்காக்கி அதனை நான்கு வளையமாகச் செய்து அதில் தூண்டிலின் தண்டுப் பகுதியை இணைத்து **'நிறைப்பு'** இட்டு ('முளைத்தும்புக் குழச்சி' என்னும் பெயர்கொண்ட கயிற்றுக் கட்டு) நன்றாக இறுக்குவார்கள். இணைத்தபின் நான்கு வளையாமாக உள்ளவற்றை ஒன்றாக முறுக்குவார்கள். இது **'கிளைக்கயிறு'** ஆகும். இதனை **'அரிப்பு'** என அழைப்பர். இந்த அரிப்பை பிரதான கயிற்றில் நிறைப்பு இட்டு இணைப்பார்கள். அவ்வாறு இணைக்கும்போது பிரதான கயிற்றில் ஒவ்வொரு அரிப்புகளுக்கு இடையிலும் இரண்டு பாக இடைவெளிகள் இருக்கும். ஒரு கயிற்றில் 50 அரிப்புகள் இணைக்கப்பட்டிருக்கும்.

தூண்டில் வலைக்கு தேவையான இரையாக கணவாய், மற்றும் உயிருள்ள **'கீளி'** மீன்கள் பயன்படுத்தப்படுகிறது. கீளி மீன் 3,4 அங்குலம் நீளத்தைக்கொண்ட சிறிய மீனாகும். இதனைத் தினமும உயிருடன் பிடித்துக்கொள்வார்கள். அவ்வாறு பிடிப்பதற்கு மூங்கில் பிரம்புகள், மூங்கில் நார்கள்கொண்டு தயாரிக்கப்பட்ட சிறிய கூடுகள் பயன்படுத்தப்படுகின்றது. கூடு ஆனது 1½ அடி விட்டத்தைக்கொண்ட வட்டமாக இருக்கும். ஒரு பக்கம் தட்டையாக இருக்கும் அதில் குடத்தின் வாயைப்போன்ற வாசல் அமைந்திருக்கும். வாசலால் உள் நுழையும் மீன்கள் வெளியேறமுடியாதவாறு தடுக்கக்கூடிய தன்மையில் வாசலின் உட்புறம் அமைந்திருக்கும். இத்தகைய கூட்டுக்குள் சிறிய **'கடுக்கான் நண்டு'** களை நொருக்கிப் போடுவார்கள். கூடு நீரில் அமிழ்வதற்கு பாரமும் கட்டியிருப்பார்கள்.

கடுக்கான் நண்டை ஏனைய தொழில்களில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். அதனை எவரும் விற்பனை செய்வதில்லை. கடலிலே வீசிவிடுவார்கள். இலகுவில் சாகக்கூடியதல்ல. கூடுக்குள் கிடக்கும் நொருங்கிய நண்டை உண்பதற்காக கீளி மீன்கள் கூடுக்குள் நுழைந்து மீளமுடியாது மாட்டிக்கொள்ளும். வேறு இடங்களில் இத்தகைய கூடுகளை பலர் தொழிலாகவே ஆழமான கடற்பரப்பில் செய்கிறார்கள். அத்தகைய கூடுகள் இதன் இரண்டு மடங்கு பெரிதாக இருக்கும். கீளி மீன்களை மட்டும் இலக்காகக்கொண்ட கூடுகள் ஆழமான பகுதிகளின் கரைககளில் 3 – 6 அடி ஆழமுள்ள கடல் நீரில் போடப்படுகிறது. கூடு போடப்பட்டு 30 நிமிடங்களுக்குள் கூடுகளை மீள எடுத்து கீளி மீன்களை உயிருடன் பிடித்துக்கொள்வார்கள். அவ்வாறு பிடிக்கப்பட்ட மீன்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனுக்குடனேயே மூங்கில் பிரம்புகள், மூங்கில் நார்கள்கொண்டு தயாரிக்கப்பட்ட பெரிய பறியில் விட்டுவிடுவார்கள். இந்தப் பறியானது 3 அடி நீளத்தையும், 2 அடி அகலத்தையும்கொண்ட நீள்வட்டமாக அடிப்பாகமும, 4 அடி உயரமும் இருக்கும் உறுதியானதாகவும், வாய்ப்பக்கம் ஒடுங்கி ஒரு அடி விட்டமாக இருக்கும். இதனால் பார்வைக்கு கூம்பு போன்று காணப்படும். கடல் நீரின் மேல்மட்டத்திற்கு பறியின் வாய் இருக்குமாறு தண்ணீரிலிட்டு படகில் இணைத்துக் கட்டியிருப்பார்கள். இதனால் மீன்கள் உயிருடனேயே இருக்கும்.

மேலே குறிப்பிட்டவாறு பிரதான கயிற்றில் இணைக்கப்பட்டிருக்கும் அரிப்பின் தூண்டில்கள் யாவும் தூண்டில் மட்டையில் வரிசையாகக் குற்றி வைக்கப்பட்டிருக்கும். பிரதான கயிறு வளையங்களாக நீண்டு காணப்படும். இது பயன்படுத்தலுக்கு சிரமில்லாமலும், தேவையற்ற இடையூறுகளைத் தடுக்கக்கூடியவாறும் இருக்கும். மீன் பிடித்து கரைக்கு வந்ததும் தூண்டில் மட்டையுடன் உள்ள பிரதான கயிற்றை கடல் நீரில் நன்றாகக் கழுவி கரையில் உலரவைப்பார்கள். உலரவைப்பதற்கென இரண்டு தடிகள் நட்டு ஒரு தடி குறுக்காகக் கட்டப்பட்டிருக்கும். அத்தடியில் தூண்டில் மட்டையைக் கொழுவி உலரவிடுவார்கள்.

இந்தத் தொழிலைச் செய்வதற்கு மிகவும் அவதானமும், தொழில்நுட்ப அறிவும் தேவை. இயந்திரத்தின் வேகத்தால் பாய்ந்துசெல்லும் படகின் வேகத்திற்கு ஈடுகொடுத்து ஒவ்வொரு தூண்டிலிலும் இரையாக உயிருள்ள கீளி மீனைக் குற்றி கடலில் வீசும்போது எவ்வளவு இடையூறுகளைச் சந்திக்கவேண்டும். ஒருவரின் உடற்பகுதிகளில் தூண்டில் பட்டால் சதையைப் பிய்த்துக்கொண்டு செல்லும் அல்லது கடலிற்குள் இழுத்துச் செல்லும். படகில் ஏதாவதொரு இடத்தில் கொழுவினால் பிரதான கயிறு அறும். அல்லது படகு திரும்பிவிடும். பிரதான கயிறு படகின் புறப்பளருக்குள் சிக்குண்டு துண்டாடப்பட்டும்விடும் இத்தகைய இடைஞ்சல்களை சுமந்தவாறே தொழிலைச் செய்யவேண்டும்.

தொழிலுக்குச் செல்லும் 4 தொழிலாளர்களில் ஒருவர் படகைச் செலுத்துவார். இரண்டாமவர் தூண்டில் மட்டையிலிருந்து தூண்டில்களைக் கழற்றிக் கொடுப்பார். மூன்றாமவர் துண்டிலில் கீளி மீனை குற்றி கடலில் வீசுவார். உயிருள்ள மீனை குற்றும்போது மீனின் வயிற்றுக்கும், வாலுக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே குற்றவேண்டும். நாலாமவர் படகின் கடையாலில் நின்றவாறு பிரதான கயிறை நேராக்கியவாறும் இடைக்கிடை போடவேண்டிய மிதவைகளை கயிற்றில் இணைத்து கடலில் இட்டவாறும் இருப்பார். ஐந்தாமவர் பாரங் கட்டப்பட்டிருக்கும் மிதவைக் கயிற்றுகளை சிக்குறாதவாறு அவிழ்த்து அதனை வழங்கிக்கொண்டிருப்பார். இவர்கள் அனைவரது நிதானங்களையும் மீறி இடையூறுகள் ஏற்படுவதுண்டு அவ்வாறான சந்தர்ப்பங்களில் இயந்திரத்தின் வேகம் குறைக்கப்பட்டு சீர்செய்யப்பட்டு மீண்டும் தொடரப்படும்.

அனைத்துக் கயிறுகளும் விடப்பட்ட ஒரு மணித்தியால ஓய்வின் பின்னர், கடலில் விடப்பட்ட கயிறுகளை இழுத்து எடுக்கத் தொடங்குவர். அவ்வாறு இழுக்கும்போது படகின் அணியத்தில் கயிற்றை இழுப்பவரும், தூண்டிலில் பிடிபட்ட மீன்களை கழற்றுவரும் நிற்க, ஏனைய இருவரும் பின் பகுதியில் நின்றவாறு மீன் பிடிபடாத தூண்டிலில் உள்ள இரையை கழற்றுதல், தூண்டில்களை மட்டையில் அடுக்குதல், மிதவைகளை ஏற்றுதல் போன்றவற்றைச் செய்துகொண்டிருப்பார்கள். ஒருவர் படகைச் செலுத்துவார். படகைச் செலுத்துபவர். காற்று, நீரோட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றின் தாக்கத்துக்குள்ளும் பிரதான கயிற்றில் வரக்கூடிய மீன்களை இலகுவாக படகினுள் எடுப்பதற்கும், பிரதான கயிற்றின் பிடியிலிருந்து பெரிய மீன்கள் விலகிச் செல்லாமலிருப்பதற்கும், பிரதான கயிறு படகின் புறொப்ளருக்குள் சிக்கிடாமலும் இருப்பதற்கும் ஏற்ற வகையில் அவதானமாக படகைச் செலுத்துவார். பெரிய மீன்களை 'மண்டா'வின் உதவியுடன் படகினில் ஏற்றுவர்.

தூண்டிலில் பிடிபடும் மீனுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. உரிய நேரத்திற்குச் சந்தைக்குக் கொண்டுவருவதால் கூடிய விலைக்கு விற்கலாம் என்பதால் நேரத்தில் கூடிய கவனம் செலுத்துவர். போதிய வருவாய் கிடைக்கக்கூடிய இத்தொழிலில் கைதேர்ந்த வல்லுனர்கள் குருநகரில் பலர் இருந்துள்ளார்கள். ஆனால் இளைய தலைமுறையினர் இந்தத் தொழிலில் நாட்டம்கொண்டதாகத் தெரியவில்லை. தற்போது மிகக் குறைந்த தொழிலாளர்களே இத்தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. தொழிலாற்றுகையில் எதிர்கொள்ளும் அபாயங்கள்

## டைனமெற் வைத்து மீன் பிடித்தல்

டைனமெற் வைத்து மீன் பிடித்தல் அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட ஒன்றாகும். கடற்றொழிலாளர்களும் எதிர்ப்புகளைத் தெரிவிக்கிறார்கள். இவ்வாறு தடை செய்வதற்கும், எதிர்ப்புத் தெரிவிப்பதற்கும் பல காரணங்கள் உண்டு.

- அபாயகரமானது.
- கடலடிப் பாறைகள் சேதமுறுகின்றன.
- நீர்வாழ் உயிரினங்கள் தேவையற்றவிதத்தில் அழிக்கப்படுகிறது.
- கடற் தாவரங்கள் அழிவுறுகின்றன.
- மீன் தேங்கி நிற்கும் பகுதிகள் சிதைக்கப் படுகின்றது.

போன்றவற்றைக் குறிப்பிடலாம். நீரின் உள்ளே டைனமெற் வெடித்தலால் இறந்த மீன்கள் நீரின்மேல் மிதக்க அவற்றை இலகுவாக எடுத்துக்கொள்வார்கள். ஏனைய மயக்கமடைந்த மீன்கள் கடலின் அடிவரை அமிழ்ந்துவிடும். அல்லது நீரோட்டத்தில் அள்ளுண்டு செல்லப்படும். இவற்றை அத்தாங்கைக்கொண்டு நீரில் சுழியோடி தேடிச் சேர்ப்பதுண்டு. இருப்பினும் கடலின் ஆழம், நீரேட்டத்துடன் சென்ற மீன்கள் கிடக்கக்கூடிய தூரம், தண்டனையிலிருந்து (பிடிபட்டால்) தப்புதல் போன்றவற்றால் இவற்றில் அனைத்தும் சேகரிக்கப்படுவதில்லை. சேகரிக்கப்பட்டவை, டைனமெற்றால் அழிக்கப்பட்ட நீர்வாழுயிரினங்கள், தாவரங்களினதும் மிகச் சிறிய அளவாகவே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைனமெற் சிலவற்றை சேர்த்து இணைத்தும், கெப், திரி, தீக்குச்சிகளை இணைத்தும் வைத்திருப்பார்கள். இயந்திரப் படகில் செல்லும்போது மீன் சிவப்பைக் கண்டதும் டைனமெற்றில் கெப்பைப் புகுத்திக் கொழுத்தி எறிவார்கள். மீன் சிவப்பைக்கொண்டு மீனினங்களை இனங்காண்பார்கள். அவ்வாறு இனங்காணப்பட்ட மீனினங்களின் தன்மையைப்பொறுத்து எறிவதற்கு திரியை நீளமாகவும், கட்டையாகவும் இருக்குமாறு தயாரித்து வைத்திருப்பார்கள்.

டைனமெற்றை கொழுத்தி எறியும்போது அவசரத்தில், ஆவேசத்தில் படகினுள் விழுந்து வெடித்துச் சிதறுவதுமுண்டு. எறியத் தாமதித்ததால் மேலே வெடித்து கைகள், கண்களை இழந்தவர்களும் உண்டு. இவ்வாறு கைகள், கண்களை இழந்தவர்களில் சிலர் இப்போதும் இருக்கிறார்கள். படகின் அருகாமையில் வெடிக்கும்போது படகு உயரத்தில் எழுந்து விழுவதால் படகினுள் விழுந்து காயமடைந்தவர்களும் உண்டு. சிலவேளை ஒருவர் மீனினங்களைப் பரிசோதிப்பதற்காக கடலில் சுழியோடிப் பார்த்துவிட்டு நீரின் மேற்பரப்பில் பின்புறத்தால் மிதந்தவாறு டைனமெற்றை எறியும்படி சைகை செய்வார். அவ்வாறு எறிந்து வெடிக்கும்போது கடலில் மிதப்பவர் நீருடன் மேலே எழுந்து வீழ்வார். இதனால் உடலில் பாதிப்புகளும் ஏற்படுவதுண்டு. சில கவலையீனங்களால் மரணங்களும் நிகழ்ந்ததுண்டு. மொத்தத்தில் மிக ஆபத்தான தொழிலேயாகும்.

## கடற்றொழிலாளர்களை அச்சுறுத்துபவை

கடலில் தொழில் செய்பவர்கள் தாம் தொழிலுக்குச் சென்று மீள்வதற்கு இடையில் எதிர்பார்த்த, எதிர்பார்க்காத பலதரப்பட்ட அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகிறார்கள். அவைகளாவன:

- காற்று – மழை – சூறாவளி போன்ற இயற்கையின் அச்சுறுத்தல்கள்.
- மனித இன பயங்கரவாதத்தால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள்.
- பயணம் செய்யும் படகு, அதனுடன் இணைந்த உபகரணங்களுக்கு நடுக்கடலில் ஏற்படக்கூடிய பாதிப்பால் உண்டாகும் அச்சுறுத்தல்கள்.
- கடல்வாழ் உயிரினங்களால் ஏற்பக்கூடிய அச்சுறுத்தல்கள்.

இவற்றில் முன்னைய மூன்றும் எதிர்பார்க்காமல் ஏற்படக்கூடியது. ஆனால், கடல்வாழ் உயிரினங்களால் எழக்கூடிய அச்சுறுத்தல்கள் எதிர்பார்க்கக்கூடியது. ஆனால் தவிர்க்கமுடியாதது. தொழில் செய்யும் வேளைகளில் கடல் நீரில், கடல் நிலத்திலிருந்தே அச்சுறுத்தல் விடப்படுகிறது. இதனால் இவை தவிர்க்க முடியாவையாகின்றன. அவ்வாறான உயிரினங்களும், அவற்றின் அச்சுறுத்தல்களும் பின்வருமாறு இருக்கும்:

### திருக்கை

இது மீனினத்தைச் சேர்ந்தது. உணவுக்குப் பயன்படுத்தப்படுகிறது. வட்டமான அமைப்பைக்கொண்டது. உயரம் குறைவானது. திருக்கை இனங்கள் தம்மைக் காப்பாற்றிக்கொள்வதற்காக மண்ணுக்குள் புகுந்து கொள்பவை. மண்ணுக்குள் மறைந்திருக்கும் திருக்கையை அறியாத தொழிலாளர், அதன்மேல் காலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பதுண்டு. தனக்கு ஆபத்து ஏற்படுகிறது என்பதை உணரும் திருக்கை, தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக தனது நீண்ட வாலைச் சுழற்றும். உடனே வாலில் இருக்கின்ற முள் தொழிலாளரின் காலில் குத்தி மீண்டுவிடும். இதன் முள்ளு அரம் போன்றும், வழுவழுப்பானதாகவும் இருக்கும். இதனால் முள் சதையில் புகுவது இலகுவானது வெளியேறும்போது சதையைக் கிழித்தவாறே வெளியேறும். முள்ளை வழுவழுப்பாக வைத்திருக்கும் 'செழும்பு' போன்ற அழுக்குகள் முள்ளுடன் வெளியேறாது குற்றிய காயத்துக்குள்ளேயே தங்கிவிடும். இது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். சிலவேளை குற்றிய முள் காலைவிட்டு வெளியேறாமல் முறிந்து தங்கிவிடுவதுமுண்டு. திருக்கைகளில் பல இனங்கள் உண்டு மிகச் சிறிய இனங்கள் தாக்குவது அதிகம். திருக்கை வகைகளில் 'செந்திருக்கை' மிகவும் ஆபத்தானது.

## நெடுமுரல்

இது மீனினத்தைச் சேர்ந்தது. உணவுக்குப் பயன்படுத்தப்படுகிறது. நீண்ட உருண்டையான அமைப்பைக் கொண்டது. ஒரு பாகம் வரை நீளமாக வளரக்கூடியது. நெடுமுரலின் சொண்டு பனங்கிழங்கைப் போன்று நீளமாகவும், கூராகவும் இருப்பதுடன், வைரமானதாகவும் இருக்கும். சொண்டின் வெளிப்பக்கம் வழுவழுப்பானதாக இருக்கும், உட்பக்கம் மேல், கீழ் சொண்டுகள் நிறைய பற்களாக (வாள்போன்று) இருக்கும். இப் பற்களுக்குள் மனித உடலுறுப்புகள் சிக்குறுமானால் இலகுவாக கழற்ற முடியாது சதையைப் பிய்த்தே வெளியேற்றமுடியும். விசைப் படகைப்போன்று மிக வேகமாகச் செல்லக்கூடியது. வருகிற வேகத்தில் ஆட்களைத் தாக்குமானால் அதன் கூரிய சொண்டு உடலில் புகுந்துவிடும். இதனால் காயத்தின் ஆழம் அதிகமானதாக இருக்கும். வயிற்றுப் பகுதியில் ஏற்பட்ட தாக்கத்தால் சிலர் இறந்ததுமுண்டு.

## கெளிறு

இது மீனினத்தைச் சேர்ந்தது. உணவுக்குப் பயன்படுத்தப்படுகிறது. மூன்று அடிகள் வரை நீளமாக வளரக்கூடியது. கெளிறின் கழுத்துப்பகுதியில் மேற்பக்கம் மற்றும் வலம், இடப் பக்கங்களில் நீளமான முட்கள் இருக்கின்றன. இது நீரில் ஓடித்திரியும்போது இதன் முள்ளு சதையுடன் சேர்ந்தாற்போல் மடிந்திருக்கும். வலையில் சிக்குண்டால் முள்ளு நிமிர்ந்துவிடும். இதன் பின்னரே இதனால் தொழிலாளருக்கு ஆபத்து ஏற்படுகின்றது. இந்த முள்ளு திருக்கை முள்ளின் அமைப்பைக் கொண்டது. ஆனால் திருக்கையைப்போன்று தானாகக் குத்தாது. தொழிலாளர் முள்ளில் தீண்டும்போதான் குத்தும். அவதானம் இருந்தால் இதன் தாக்கத்தைத் தவிர்த்துக்கொள்ளலாம். கெளிறு வகையில் 'சுங்கான் கெளிறு' மிகச் சிறியது. இதன் முள்ளு குத்துவதால் பெரும் பாதிப்பு இல்லையாயினும், கடுப்பாக இருக்கும். இறாலின் தலையில் இருக்கும் கொழுப்பு கடுப்பைக் குறைக்கும் என்று சொல்வார்கள்.

### சுறா

ஆழ்கடலில், ஆழமுள்ள பகுதிகளில் வாழும் மீனினத்தைச் சேர்ந்தது. பலராலும் விரும்பி உணவுக்குப் பயன்படுத்தப்படுகிறது. பாலூட்டும் இனம். ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடவையில் பல குட்டிகளை ஈனும். இதனில் பலவகை இனங்கள் உண்டு. ஒரு அடி நீளமுள்ள சுறாக்களிலிருந்து 12 அடிக்கும் மேற்பட்ட நீளமான சுறாக்கள் வரையில் காணக்கூடியதாக இருக்கும்.

சுறாவின் சதையைவிட அதனுடைய செட்டைக்கு மதிப்பும், விலையும் அதிகம். கடலில் அரசன்போல் எங்கும் வேகமாக உலாவரக்கூடியது. மனிதனின் காலிலுள்ள கீழ்ப்பாதத்தின் வெண்மை நிறம் அதன் கண்களுக்கு இலகுவாக அடையாளம்காட்டிவிடும். கணிசமான தூரத்திலிருந்து அடையாளம்கண்டு விரைவாக வந்து மனிதனைத் தாக்கக்கூடியது. அதனுடைய அகன்ற வாயால் மனித உடலைக் கடித்துக்குதறும். இரத்தத்தின் சுவை அதனை திரும்பத்திரும்பக் கடிக்கச் செய்யும். மனிதனை மட்டுமல்ல மீனினத்தையும் அவ்வாறுதான் கடிக்கும். ஆனால் இறந்த உடலங்களைக் கடிக்கமாட்டாது. கடற்கோள் நிகழ்ந்தபோது இறந்த மனித உடல்களை சாப்பிட்டதாக பரப்பப்பட்ட வதந்திகள் உண்மைக்குப் புறம்பானவை.

## தூம்பி

இது மீனினத்தைச் சேர்ந்தது. உணவுக்குப் பயன்படுத்தப்படுவது அரிது. இதன் உடலெல்லாம் கூரிய, நீண்ட முட்களாக இருக்கும். கடலில் ஓடும்போது முட்கள் உடலோடு சேர்ந்தாற்போல் இருப்பினும், வாட்டாளை, அறுகு போன்ற கடற்தாவரங்களிற்குள் பதுங்கி இருக்கும்போது முள்ளு சிலிர்த்துக் காணப்படும். அவ்வேளை அதனை தீண்டிவிட்டால் முட்கள் குத்திவிடும். முள்ளு குத்தினால் தாங்கமுடியாத கடுப்பாக இருக்கும். குத்திய பகுதி வீங்கிக் காணப்படும். ஆயினும் திருக்கை முள்ளைப்போல் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதல்ல.

## ஆஞ்சாளை

கடற் பாம்பு இனத்தைச் சேர்ந்தது. முதுகுப் பகுதி கறுப்பாகவும், அடிப்பகுதி வெள்ளையுடன் கரும் புள்ளிகளைக் கொண்டதாகவும் இருக்கும். வால்பகுதி உயர்ந்து, மெலிந்ததாகவும், ஒடுங்கியும் செல்லும். பாம்பின் வாயை ஒத்ததாக இருக்கும். இது நிரில் விரைவாகச் செல்லக்கூடியது. இரைதேடி கடல் நிலத்திலுள்ள **'அறுகு'** களில் தங்கி நிற்கும் நீரில் நிற்கும் ஒருவரைக் கொத்தினால், இரத்தத்தைக் காணக்காணக் அதே சுற்றாடலில் கொத்தும். கடல் நீரில் நனையும்போது சதை மிருதுவாகி விடுவதால் இதனது கடி பெரிய காயத்தை உண்டாக்கும். ஆனால் விஷம் இல்லை இதனால் உயிராபத்து இல்லை. கவனிப்பாரற்றநிலை காரணமாக இரத்தப் பெருக்கு அதிகமானால் ஆபத்தை உண்டாக்கலாம்.

## வாளைகடியன்

கடற் பாம்பு இனத்தைச் சேர்ந்தது. கிட்டத்தட்ட சாரைப் பாம்பின் நிறத்தையும், அமைப்பையும் ஒத்தது. தரையிலே வாழும் பாம்பு இனங்களைப்போல் இதுவும் விஷத்தைக் கொண்டது. இது கொத்தினால் எவரும் தப்பமுடியாது. நீரின் மேற்பகுதியில் இது திரிவதனால் வலையிலுள்ள மோவலைக் கயிற்றில் கயிற்றோடு கயிறாக இணைந்து கிடக்கும். அதனால் வலைகளை படகில் ஏற்றும்போது அவதானமாக இருப்பார்கள். பாலைதீவு – மன்னாருக்கு இடைப்பட்ட கடற்பகுதியில் இது அதிகமாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆர்க்கு

கடலில் வளரும் கடினமான ஒரு தாவரம். கடல் நிலத்தில் மண்ணுக்குள் கீழ்நோக்கி கூராக (கூம்பு போன்று) வளர்ந்திருக்கும். ஒரு முளம் வரை நீளமானதாக இருக்கும். நில மட்டத்தில் அரைவட்ட அமைப்பில் வாய்போன்று அமைந்திக்கும். வாயின் இரண்டு முனைகளும் கத்தியைப் போன்று கூரானதாக இருக்கும். தனது உணவுக்கு ஏற்றவைகளின் வரவுக்காக நாள் பூராவும் வாயைத் திறப்பதும், மூடுவதுமாக இருக்கும். வாய் திறந்திருக்கும்போது ஆட்களின் நடமாட்டம் உணரப்பட்டால் வாயை மூடிக்கொள்ளும். மூடிய வாயின்மேல் கால்கள் உரச அல்லது மிதிபடுமானால் அது உடனேயே வெட்டிவிடும். தண்ணீருக்குள் கால்கள் மிருதுவாக இருப்பதால் வெட்டின் ஆழம் அதிகமாக இருக்கும். அத்துடன் மிதிக்கும் அளவைக்கொண்டும் காயம் வேறுபடும்.

எவ்வளவு ஆழமான வெட்டானாலும் மருதோண்டி இலையும், சுண்ணாம்பும் சேர்த்து அரைத்த கலவையே மருந்தாக பயன்படுத்தப்படுகின்றது. அடிக்கடி தண்ணீரால் காயத்தை நனைக்கவேண்டும். இந்த ஆர்க்கு குறிப்பிட்ட காலத்தில் இறந்துவிடக்கூடியது. அது இறந்தபின்னர் அதன் முனைகள் கூர்மையை இழந்துவிடும். அதனைப் பிடுங்கி எடுக்கலாம். அவ்வாறு பிடிங்கி எடுக்கப்பட்டவைகளை வெய்யிலில் நன்றாக காயவைத்துப் பார்த்தால் பல படைகளைக் கொண்டதாகக் காணப்படும். இதனில் மினுமினுப்புத் தன்மை உண்டு. கூத்துகளுக்கான முகப்பூச்சிற்கு மினுமினுப்பிற்காக இதனைப் பொடியாக்கி பூசுவார்கள். மருந்துக் கடைகளில் விற்பனைக்கிருக்கின்றது. ஏதேனும் மருந்துத் தேவைக்கும் பயன்படுத்தப்படலாம்.

## கடற்சொறி

வெண்மையான பளபளக்கும் வர்ணத்தில், சட்டி போன்ற அமைப்பில் மொத்தமானதாகக் காணப்படும். சுட்டியின் அளவிலிருந்து ஒரு சாண் விட்டமுள்ள சட்டியின் அளவு வரை வளரக்கூடியது. இதன் உற்பத்தி பற்றிய தெளிவான விபரங்கள் இல்லை. கடலில் மிதந்தவாறு செல்லும். நிலத்தில் மண்டியிட்டுக் கிடந்துதான் மேலே கிளம்புகிறது. இது ஒரு உயிரினம். இதன் மேற்பகுதி மிருதுவாகவும், பல குறுக்கு நார்களையும், ஈரலிப்பான மினுக்கத்தையுங் கொண்டதாகவும் உள்ளது. சொறியின் உடல் நித்தமும் சுருங்கி – விரிந்தவாறு உயிர்த்துடிப்புடன் காணப்படும். காற்று, நீரோட்டத்திற்கு எதிராகச் செல்லக்கூடியதன்று அவற்றின் திசைக்கே மிதந்து செல்லும். காற்றின் வேகத்தால் கரை ஒதுங்கிய சொறி கரையில் இறந்துவிட்டால் துர்நாற்றம் வீசும். சில மாதங்களில் மண்டைதீவு முனைப் பகுதியில் இவைகள் ஒதுங்கி இறந்ததனால் எழும் துர்நாற்றத்தை உணரக்கூடியதாக இருக்கும்.

சொறியின் உடல் தொழிலாளரைத் தீண்டியதும் அந்த இடம் சுணைக்கத் (அரிக்க) தொடங்கும். கடிப்பாக இருக்கும் தீண்டிய உடலின் பகுதி சிவப்பு நிறமாகவும், தடிப்பாகவும் மாறிவிடும். தொடர்ச்சியாக கடித்தவாறே இருப்பதனால் சொறியத் தூண்டும். அவ்வாறு சொறியும்போது காயத்தை ஏற்படுத்தலாம். இதற்கு மருந்தாக தேங்காய் எண்ணெயையே தடவிவிடுவார்கள்.

கடற்சொறிகளில் அப்பச்சொறி, காக்காசொறி, தடக்கை, குளோவை போன்ற பலவகை இனங்கள் காணப்படுகின்றன. 'பாசி முளைச்சான்' எனும் ஒருவகைத் தாவரம் உண்டு. இந்தத் தாவரமும் சொறியைப்போன்று விளைவுகளை ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நச்சுநீர்

இதுவரை எந்தவொரு வைத்திய நிபுணர்களாலும் தெளிவுபடுத்த முடியாததும், இனங்காண முடியாததுமாக 'நச்சுநீர்' இருக்கின்றது. 'சுணைநீர்' எனவும் அழைப்பர். இந்தப் பெயர் எப்படி வழக்கில் வந்தது என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை. கண்ணுக்குத் புலப்படக்கூடிய பொருளாகவோ, கடல் நீரில் நிற மாற்றத்தையோ காணமுடியாது. அது ஒரு நீரா? திரவமா? பிராணியா? தாவரமா? எதுவென்று இதுவரை எவரும் கண்டறியவில்லை. ஆயினும் கடல் நீரோடு நீராகக் கலந்திருக்கக்கூடியது என்ற ஊகத்தின் அடிப்படையில்தான் இப்பெயர் வழக்கிலிருந்திருக்கவேண்டும்.

பண்ணைப் பாலம் முதல் கேரதீவு வரையுள்ள ஆழம் குறைந்த பகுதிகளில் இந்த நச்சுநீர் கண்டறியப்பட்டுள்ளது. கார்த்திகை முதல் மாசி வரையுள்ள மழை காலத்தில், பரவைக்கடலில் **'வாட்டாளை'** செறிந்து நிற்கும் இடங்களில், காலாகாலமாக நச்சுநீர் தொழிலாளருக்கு பாதிப்பை ஏற்படுத்தியதுண்டு. வாட்டாளை என்பது கடற் தாவரம். நிலத்திலிருந்து நீர்மட்டம் வரை 'லீஸ்ற்' இன் தண்டுக்கு மேற்பட்ட இலையைப்போன்று, அதே நிறத்தில் வளர்ந்திருக்கும். அதன் இரண்டுபக்க விழிம்புகளும் கூரானவை. அவை தொழிலாளரின் கால்களை ஆழமாக அல்லாமல் கீறிக் கிழிப்பதுண்டு. இக் கடற் தாவரம் பரவலாக எல்லா இடமும் வளர்ந்திருந்தாலும் சில இடங்களில் மிகவும் செறிவாக வளர்ந்திருக்கிறது.

கடல் நீருக்குள் அமிழ்கின்ற உடற் பகுதிகளில் நச்சுநீர் தாக்கும். அது தாக்கும்போது "நெருப்புச் சுட்டதுபோல் இருக்கும்" எனத் தொழிலாளர்கள் கூறுவார்கள். அது தாக்கிய இடத்தைப் பார்த்தால் நெருப்பு சுட்டதுபோன்று சிறிது கறுப்பாக காணப்படும். காயமாக இருக்காது. அந்த இடம் அளத்தலாக (எரிவாக) இருக்கும. நச்சு நீர் தாக்கிய சிறிது நேரத்தில் அதன் தாக்கம் உடலில் பரவிவிடும். அதனால் உடல் ரோமங்கள் சிலித்து நிற்கும். வியர்வைத் துவாரங்களில் ஊசியால குற்றுவது போன்ற வேதனை இருக்கும். கண்களாலும், மூக்கினாலும் தொடர்ச்சியாக நீர் வெளியேறும், தும்மல் தொடரும், உமிழ்நீர் அதிகமாக சுரக்கும், இதயப்பகுதி அதாவது நெஞ்சு, குத்திக்குத்தி இழுப்பதுபோல வலிப்பாக இருக்கும். இது தாக்கிய அளவைப்பொறுத்து உடலின் வேதனை – பாதிப்பு அதிகமாக இருக்கும். சிலர் நெஞ்சை அடைப்பதாகக் கூறித் துடிப்பார்கள். வேதனை தாங்கமுடியாது தவிப்பார்கள். உணவு அருந்தினால் வேதனை இரட்டிப்பாகும் என்பதால் நீராகாரம் மட்டுமே அருந்துவார்கள். சிறுநீர், மலம் கழிப்பது கடினமாக இருக்கும். நச்சுநீரால் தாக்கப்பட்டு வேதனையில் துடித்த பலரை நான் கண்டிருக்கிறேன்.

இதற்கு மருந்தாக பேதிக்கு கொடுப்பதையையே வைத்தியர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். 1960 களில் ஓடைக்கரை வீதியிலிருந்த ஆயுள்வேத வைத்தியர் திரு ஆனந்தம் அவர்கள், நச்சுநீர் வைத்தியத்தில் சிறந்து விளங்கினார். இவர் மூலிகைகளைக் கொண்டு பேதி மருந்து தயாரித்து உருண்டையாக்கி பாதிக்கப்பட்டவரின் வாயில் போடுவதையே வழமையாகக் கொண்டிருந்தார். தாக்கத்தின் அளவை துல்லியமாய் கணக்கிட்டு, மருந்து உருண்டையின் அளவை தீர்மானித்துக் கொடுப்பார். இவர் வழியையே பல வைத்தியர்கள் பின்பற்றலாயினர். பாதிப்பின் அளவைப்பொறுத்து குணமாக ஒருவாரமும் செல்லும். பலசாலிகளாக இருந்த பலரை பலமிழக்கச் செய்ததுடன், ஆயுள் நோயாளிகளாக்கிய சாதனையும் நச்சுநீரைச் சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருநகரில் வழக்கிலிருந்த தொழில்சார்ந்த பழமொழிகளில் சில

மாறுபட்ட பல கடற்றொழில்கள் செய்யப்பட்டதனால் ஒவ்வொரு தொழிலுக்கும் அவைசார்ந்த பழமொழிகள் வழக்கிலிருந்தது. பழமொழிகளின் கூட்டால் அமைந்த 'அம்பா'க்களும் உண்டு. தற்போதைய நிலையில் பல தொழில்கள் அருகிவிட்டதால், முறைப்படி தொழில்கள் செய்யப்படாமல் சுருக்கப்பட்டதால் பழமொழிகள் பாவனையிலிருந்து விலகிக்கொண்டுவிட்டது. இதனால் அவற்றை எவரிடமும் கேட்டு அறிந்துகொள்ள முடியாதிருக்கின்றது. இருப்பினும் அறிந்தவற்றைத் தருகிறேன்.

- தன் தொழில் விட்டவன் சாதியில் கெட்டவன்
- கடற்தொழில் வாய்ப்பான் பிழைப்பான்
- கருங்கண்ணி பட்டால் கரையான் கடைக்கண்ணாலும் பாரான்
- உள்ளதை விற்று உல்லனை வாங்கு
- மாளிகை விற்று மதனத்தை வாங்கு (மக்களை விற்று.. எனவும் சொல்வர்)
- சீலையை விற்று சீலாவை வாங்கு
- ஆடிக் கொய்யைத் தேடிக்கொள் (... தேடிப்போ எனவும் சொல்வர்)
- இறாலைப் போட்டு சுறாவைப் பிடி
- கருவாடு விற்ற பணம் மணக்குமா?
- காற்றைக் கண்டால் (கடலில்) படகை அகலக் கட்டு
- கருவாடு கரைந்தாலும் ஆணத்துக்குள்ளே
- கட்டாக் கருவாடு சுட்டாலும் மாறாது (... மணக்காது என்றும் சொல்வர்)
- ஆள் இளக்காரம் கண்டால் தோணி மிதந்தலைபாயும்
- ஆனை பூருற கண்ணானாலும் அயரைகூட பூராது
- கச்சை நனைந்த பிறகுதான் கரையானுக்குப் புத்தி வரும்
- சின்ன மீனைப் போட்டு பெரிய மீனைப் பிடி
- பாடு வாச்சா பறையனும் பாடுவான்
- அற நனைஞ்ச பின் கூதலென்ன குளிரென்ன
- பறி பீத்தல் என்றாலும் வாய்க்கட்டு நன்றாக இருக்கவேண்டும்.
- கச்சானுக்கு (கச்சான் காற்று) மழை மச்சான்

## அம்பா பாடல்கள்

கூட்டாக வேலைசெய்யும்போது ஒத்திசைந்து செய்வதற்காகவும், உற்சாகத்தை ஏற்படுத்துவதற்காகவும், வேலைப்பளுவின் கடினத்தை மறப்பதற்காகவும் கடற்றொழிலாளர்களால் பாடப்படும் பாடல்களே 'அம்பா' பாடல்களாகும். இப்பாடல்கள் இலக்கண வரப்பிற்குள் அடக்கப்படாமல் நாட்டார் பாடல்களாக அமைகின்றன. காதால் கேட்ட, கண்ணால் பார்த்த விடயங்கள், எதிர்பார்ப்புகள் போன்றவை சூழ்நிலையின் தேவைக்கேற்ப பாடலாக உருமாறின. அப் பாடல்களில் நகைச்சுவை, வசை, காதல், பக்தி போன்ற பல சுவைகள் கலந்திருக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் பாடல்கள் வரை பாடப்பட்டுள்ளதாக அறியக்கூடியதாக இருப்பினும், அவற்றில் இன்று வரை நிலைத்து நிற்பது மிகக் குறைவானதே. ஆரம்பத் தொழில்கள் மனித சக்தியைப் பிழிந்தே செய்யப்பட்டவை. அதனால் அனைவரும் ஒத்திசைவதற்கும், களைப்பைப் போக்குவதற்கும் ஒன்றுபட்ட குரலில் ஒத்துப்பாடவேண்டிய தேவை இருந்தது. அந்தத் தேவையால் பல்தொழில்களின் தன்மையால் பல்லாயிரம் பாடல்கள் பிறந்திருப்பதில் ஆச்சரியமில்லை. ஒரு சொல்லு ஒவ்வொரு பாடல் வரிகளிலும் திரும்பத்திரும்ப வரும் பாடல்கள் அதிகமாக வழக்கிலிருக்கின்றன. இவ்வாறான பாடல்கள் புதியவர்களும் இணைந்துபாட இலகுவாக்குகின்றது.

பாயின் உதவியுடனும், மரக்கோலால் தாங்குவதினாலும் செலுத்தப்பட்ட படகுகள் இயந்திர மயமாக மாற்றம் பெற்றதும் தொழிலாளருக்கு இருந்த கடினம் மறையத்தொடங்கியது. அவ்வாறு மறையும்போது அம்பா பாடல்களின் தேவையும் மெல்லமெல்லக் குறையத்தொடங்கின. தொழில்முறைகளிலும் உருவான பல மாற்றங்களால் அம்பாவைப் பயன்படுத்தும் அவசியம் இல்லாமல் செய்துவிட்டது. அம்பாவைப் பாடி கடினவேலையையும் இலகுவாக்கிய முதியவர்கள் மறைவின் பின்னர் அவை புதுப்பிக்கப்படாமல் போனமை அம்பாவின் அழிவுக்கே வித்திட்டது.

அம்பா பாடல்களின் அழிவை உணர்ந்து 1976 இல், திரு மு. புஸ்பராஜன் அவர்களால் தொகுக்கப்பட்ட 'அம்பா' பாடல்கள், விளக்கங்கள் அடங்கிய சிறு நூல் அரிய பொக்கிஷமாகும். அதில் குறைவான பாடல்களே உள்ளடக்கப் பட்டிருப்பமை பாடல்களின் அழிவையும், சேகரிப்பில் ஏற்பட்ட கடினத்தை எடுத்துக்காட்டத் தவறவில்லை. அந்நூலிலுள்ள சில பாடல்களை உதாரணத்திற்காகத் தருகிறேன்.

1. ஏத்தேத்து லைலா கரவலையை
ஏசுநாதர் லைலா படிதருவார்
பாத்துத்தான் லைலா வளையுமண்ணே
பாலைதீவு லைலா பாடாகத்தானே...

2. படியளப்பார் லைலா என்றுவந்தோம்
பாலைதீவு லைலா கரையையண்டி
அடியழித்து லைலா வந்தேனய்யா
ஆதரிப்பீர் லைலா எங்களையும்...

3. சண்டாளன் அல்லில்லா கரவலைக்கு
சாகவோ அல்லில்லா இங்குவந்தேன்
மாபாவி அல்லில்லா கரவலைக்கு
மாளவோ அல்லில்லா இங்குவந்தேன்
பெற்றாளே அல்லில்லா பாவியென்னை
விட்டாளே அல்லில்லா கரவலைக்கு...

4. போனவருசமண்ணே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொரி கெழுறு பட்டவலை
இந்த வருச மண்ணே
இளம்பாரை பட்டவலை...

5. பூட்டடா பருமலுப் பாயை
பொற் சிரசிலே பொறுக்க
நாட்டடா பாய்மரத்தை
நாலு பண்ணில பொறுக்க...

6. புதுமைமாதா கோவிலுக்கு
புள்ளைகள்போற போக்கைப்பார்
புளியடியில் நின்டுபார்
பொண்டுகள்படும் பாட்டைப்பார்.
கண்ணடிக்கிற அடிக்யைப்பார்
கால்நடக்கிற நடையைப்பார்...

7. தாயறிவாள் பிள்ளைகுணம்
தயவறிந்து பால்கொடுப்பாள்
பாலும்கொடாள் அண்ணன்தேவி
பழிகள்செய்வாள் சண்டாளி...

8. ஏலம்மா ஏலேதண்டு கையெங்கே ஞானசவுந்தரி
ஓவலம்மா ஏலேதண்டு கையெங்கே ஞானசவுந்தரி
வருகுதடா கப்பலொன்று கையெங்கே ஞானசவுந்தரி
வாழக்காய் பாரமேந்தி கையெங்கே ஞானசவுந்தரி
ஐயோமச்சான் கையைவிடு கையெங்கே ஞானசவுந்தரி
ஆச்சிகண்டா அடிக்கப்போறா கையெங்கே ஞானசவுந்தரி...

9. ஓவலைக்கு செல்லவேண்டும்
ஒருருகல்சோறு உண்ணவேண்டும்
உண்ணாத மாமியாரே
உனக்களிப்பேன் மோதிரங்கள்
மோதிரங்கள் இட்டகையோ
மொளிகள்புண்ணாய் நோகுதடி
நோகுதடி சந்துக்குள்ளே
நோக்காடெல்லாம் பொந்துக்குள்ளே
பொந்துக்குள்ளே பூந்தளலி
பூனைகண்டா இனிவிடுமா
இனிஎன்ன முலைகுடடி
இருக்கிறது எனக்கிடடி...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. குருநகர்கொண்ட ஆலயங்களும், அவற்றின் வரலாறும்

## புனித யாகப்பர்

செபதேயு - சலோமை தம்பதிகளின் மகனே புனித யாகப்பர் ஆவார். இவரது இயற்பெயர் யாக்கோப்பு. யோவானின் உடன் பிறந்தவர். யேசுவின் தாயான மரியாவின் சகோதரியே சலோமை எனச் சிலர் கூறுவதுண்டு. அவ்வாறாயின் யாக்கோப்பும், யோவானும் யேசுவின் ஒன்றுவிட்ட சகோதரர்களாவர். யூதேயாக் கடலில் இவர்கள் இருவரும் செபதேயுவுடன் மீன்பிடித்துக் கொண்டிருக்கையில் அங்கு வருகைதந்த யேசு "என் பின்னே வாருங்கள். உங்களை மீன் பிடிப்பவர்களாகவல்ல மனிதர்களைப் பிடிப்பவர்களாக்குவேன்." என அழைத்தார். ஒரு அற்புதமும் காணாமலே வலைகளையும், பெற்றோரையும் விட்டுவிட்டு இருவரும் யேசுவைப் பின்தொடர்ந்தனர்.

யேசுவின் அன்புக்குரிய சீடர்களாக இருந்த இவர்களை யேசு **இடியின் மக்கள்** என்றே அழைத்தார். அவ்வாறு அழைத்ததற்கு
"போதகரே, நாங்கள் கேட்பதை நீர் எங்களுக்குச் செய்ய வேண்டும். நீர் அரியணையில் இருக்கும்போது, எங்களுள் ஒருவர் உமது வலப்புறம் இன்னொருவர் இடப்புறமும் அமர்ந்து கொள்ள எங்களுக்கு அருளும்" என்று கேட்டமை.

எருசலேமை நோக்கிப் பயணமான இயேசுவை, சமாரியர் தங்களின் ஊர் வழியாகப் போகவிடாது தடுத்தார்கள். "ஆண்டவரே வானத்திலிருந்து தீ வந்து இவர்களை அழிக்குமாறு செய்யவீர்" என்று கேட்டமை போன்ற காரணங்களாக இருக்கலாம். யேசுவின் மிகச் சிறப்பான நிகழ்ச்சிகளில் இவர்கள் இருவரும் பங்கெடுத்துள்ளனர். அவைகளாவன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢ சீமோனின் மாமியார் காய்ச்சலால் துன்புற்ற வேளையில் யேசு அவரைத் தொட்டுக் குணமளித்தபோது.
- ➢ யாயிர் என்பவரின் இறந்த மகளுக்கு யேசு உயிர் கொடுத்தபோது,
- ➢ தபோர் மலையில் யேசு மறுரூபம் (உருமாற்றம்) ஆனபோது.
- ➢ யேசு ஜெஸ்தமனி தோட்டத்தில் இரத்த வியர்வை வியர்த்தபோது.

இவ்விதமாக யேசுவின் வாழ்வில் பின்னிப் பிணைந்த சீடர்கள், யேசு இறந்த பின்னர் தூயஆவியைப் பெற்றுக்கொண்டனர். தூயஆவியால் வீறுகொண்ட சீடர்கள் வேத போதனையை உலகின் பல திசைகளிலும் போதிக்கத் தீர்மானம் எடுத்தனர். அதனடிப்படையில் புனித யாகப்பர் ஸ்பானியா (Spain) தேசம் சென்று யேசுவின் போதனைகளைப் போதித்து தமக்கென ஒன்பது சீடர்களைத் தெரிந்துகொண்டார். இவரின் போதனையால் கணக்கற்றோர் யேசுவின் திருமறையில் சேர்ந்துகொண்டனர். இறைமகன் யேசுவின் அருளைக்கொண்டு பல இடங்களிலும் பல அற்புதங்களைச் செய்தார். இவற்றால் யூதர்கள் கோபமடைந்தனர்.

எபேஸ் பட்டணத்தில் தேவதாய் யாகப்பருக்குக் காட்சி கொடுத்தார். அவரின் அருள் வரத்தைப் பெற்றதோடு, தாம் யெருசலேமில் மரணிக்கவிருப்பதை முன்னறிவித்தலாகப் பெற்றார். அப்போது அவர் "தமது மரணவேளையில் தமதருகே நின்று ஆறுதலளிக்குமாறு" கோரியதை தேவதாய் ஏற்றுக்கொண்டார்.

பல வழிகளிலும் கோபமுற்றிருந்த யூதர் 'எரிமோச' னென்னும் மாயவித்கைக்காரனை ஏவிவிட, அவன் அவனது சீடனான 'பிலேத்து' என்பவனை ஏவிவிட்டான். ஏவப்பட்ட சீடன் மனந்திரும்பி புனிதரை நாடுவதும், மாயவித்தைக்காரன் பிசாசை ஏவிவிடுவதும், புனிதர் பிசாசுகளை வளைத்து அதே பிசாசுகளைக் கொண்டு மாயவித்தைக்காரனை கட்டுவிப்பதும், மாயவித்தைப் புத்தகங்களை கடலிலே வீசச்செய்வதும், பசாசினால் கட்டப்பட்ட மாய வித்தைக்காரனை அவிழ்த்துவிட்டு யேசுவை நோக்கி மனந்திரும்பச் செய்வதும் ஒரு தனிக் கதையாகும்.

மாயவித்தைக்காரனைக்கொண்டு புனிதரை அடக்கமுனைந்த யூதர் அதில் தோல்வி கண்டதும் ஏரோதரசனின் பேரனான **'1ஆம் அகிறிப்பா'** என்னும் அரசனை நாடினார்கள். இவன் யூதர்களைத் திருப்திப்படுத்தி தனது ஆட்சியை நிலைநிறுத்தும் குறிக்கோளைக் கொண்டவன். புனித யாகப்பரை தண்டிப்பதற்கு இவனது குறிக்கோள் யூதர்களுக்கு பேருதவியாக இருந்தது. யூதர்களைத் தன்வசப்படுத்துவதற்காக புனித யாகப்பருக்கு மரணத் தீர்வையிட்டான். சதித்திட்டத்தின் மூலம் கொலைசெய்யப்பட்ட புனித யாகப்பர் அப்போஸ்தலர்களில் முதல் வேதசாட்சியாவர். இவரது மரணத்துடன் தேவதாயின் கூற்று உறுதியாகியது. இவரது மரணவேளையில் தேவதாய் ஆறுதலுக்காக காட்சிகொடுத்தார். புனிதர் இறந்த பின்னர் அவரது புனித உடல் சிறு படகில் துடுப்பும் கூறப்பாயும் (படகைச் செலுத்துவதற்குப் பயன்படுபவை) இல்லாமல் ஸ்பானியா தேசத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'கொம்பஸ்தில்லா'** என்ற பட்டணத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பெண்திறைக்காய் வருத்திவந்த துலுக்கர் படைகளிடமிருந்து ஸ்பானிய மன்னன் றெம்மிலைக் காப்பாற்ற வெண்புரவிமீது வந்து நாட்டை மீட்டுக்கொடுத்த வரலாறு இன்றும் பலராலும் நினைவுகூரப்படுகின்றது.

## குருநகரில் யாகப்பர் ஆலயம்

குருநகர் புனித யாகப்பர் ஆலயம் அமைக்கப்பட்ட காலம் பற்றிய குறிப்புகளை அறியமுடியாவிட்டாலும், தற்போதைய ஆலயத்தின் நடுவே கல்வெட்டு காணப்படுகின்றது. அக் கல்வெட்டில் **வணபிதா யோசவ் றொபெய்றோ** அவர்களின் பூதவுடல் 01.11.1793 இல் அடக்கம் செய்யப்பட்டதும், இவ்வடிகளாருக்கு 1894 ஆம் ஆண்டுவரை அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்கான துக்கப்பூசை ஒப்புக்கொடுக்கப் பட்டதற்கான ஆதாரங்களும் காணப்படுகின்றது. ஒல்லாந்தரின் சமயக் கெடுபிடிகள் குறைந்த காலகட்டத்தில் யாகப்பர் ஆலயம் தோற்றம்பெற்றிருக்கவேண்டும். அதேவேளை 1624 இல் கோட்டையிலிருந்த புதுமைமாதா கோவிலில் ஞானத்தீட்சை பெற்றமை, 1687 இல் அருளாளர் யோசவ்வாஸ் குருநகருக்கு வருகைதந்தமை பற்றிய குறிப்புகளை அறியக்கூடியதாக இருக்கின்றது.

கட்டளைக்குரவர் **அதி வணபிதா எல்.சி.எச். மொறுஆ** ஓ. எம். ஐ. அடிகளாரால் 25.07.1861 இல் தற்போதைய ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இவ் அடிக்கல் நாட்டப்பட்டபோது ஆலயச் சுற்றாடலில் 39 குடும்பங்களே வசித்துவந்தன. இவரது நேரடிக் கண்காணிப்பில் குருநகர் பங்கைச் சேர்ந்த சிற்பாசிரியரும் மேஸ்திரியுமான **சந்தியோ** அவர்களின் மேற்பார்வையில் மக்களின் பேராதரவுடன் ஆலயம் கட்டும்வேலை ஆரம்பிக்கப்பட்டது. 1876 ஆம் ஆண்டில் ஆலயத்தின் தூபிமாடம் கட்டிமுடிக்கப்பட்டது. இவ்வாலயத்திற்குத் தேவையான தூண்களுக்குரிய பாலைமரங்கள் முல்லைத்தீவுக் காட்டில் அற்புதமாக வழிகாட்டப்பட்டு சேகரிக்கப்பட்டு எடுத்துவரப்பட்டது. காலியில் இருந்து கொண்டுவரப்பட்ட கருங்கற்களினால் ஆலயப் படிகள் அமைக்கப்பட்டது. 1883 இல் ஏற்பட்ட புயலினால் கூரை சேதமடைய அதற்குப் பதிலாக பாலைச் சட்டங்களைக்கொண்டு கூரை அமைத்து ஓடுகள் போடப்பட்டது. 1898 இல் ஆலயத்தைச் சுற்றியுள்ள படிகள் முருகைக் கற்களால் அமைக்கப்பட்டது. இவ்வாண்டிலேயே பெரியதொரு மணி வாங்கப்பட்டது. பங்குத்தந்தை **அருள் திரு ஜே. புறோகான்** அவர்களின் விடா முயற்சியாலும், **மேஸ்திரி ஏ. கபிரியேற்பிள்ளை** அவர்களின் ஊக்கமான மேற்பார்வை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாலும், மக்கள் கொடுத்த ஆதரவினாலும் 07.10.1934 இல் முகப்பின் முக்கியபாகம் கட்டிமுடிக்கப்பட்டது. தொடர்ந்து பங்குத் தந்தைகளாக இருந்த அருள்திரு ஈ. பொமிக்கோ அடிகள், அருள்திரு பெனற் கொன்ஸ்ரன்ரைன் அடிகள், அருள்திரு எம்.ஈ. பயஸ் அடிகள், அருள்திரு சந்தியாப் பிள்ளை மற்றும் மேஸ்திரி லியோ ஆகியோரின் அயராத முயற்சியால் காலத் துக்குக்காலம் புனரமைப்புச் செய்யப்பட்டு 1982 இல் புதுப்பொலிவுடன் முழுமை பெற்றது.

13.11.1993 இல் யாகப்பர் ஆலயம் குண்டுவீச்சால் தகர்க்கப்பட்டது. இதில் ஒன்பது பேர் கொல்லப்பட்டார்கள். சிதைக்கப்பட்ட ஆலயம் 2002 இல் புனரமைப்புச் செய்யப்பட்டு புதப்பொலிவு பெற்று குன்றா அழகுடன் தலைநிமிர்ந்து நிற்கிறது. ஆலயத் தகர்ப்பின் 10வது ஆண்டு நிறைவையொட்டி அருள்கலாநிதி அ.பி. ஜெயசேகரம் அடிகளாரால் 13.11.2003 இல் பதிக்கப்பட்ட நினைவுக் கல்லில் “இறந்தவர்களுக்கு வணக்கம், இருப்பவர்களுக்கு எச்சரிக்கை” என எழுதப்பட்டுள்ளது.

எமது மூதாதையர் காலத்தில் கொள்ளைநோய் குருநகரைப் பிடித்தபோது புனிதரின் சொரூபம் பவனியாக ஊரைச்சுற்றிவர நோயாளிகள் அற்புதமாக குணமடைந்தார்கள் எனவும், கொள்ளைநோய் காலங்களில் கடற்கரையோரமாக குதிரைக் காலடிச்சத்தம் கேட்டுக்கொண்டிருக்கும் என்றும், ஒருதடவை புனித யாகப்பரின் கையிலிருந்த வாள் கொட்டடி பகுதியிலுள்ள தென்னைமரத்தில் தொங்கியிருப்பதாக குருவானவரின் கனவில் தோன்றி சொல்ல அவரால் எடுத்துவரப் பட்டதாக நான் சிறுவனாய் இருந்தபோது பாட்டி கூறியது ஞாபகத்திலிருக்கிறது.

## புதுமை அன்னை

1560 ஆம் ஆண்டு போர்த்துக்கேய படையணிகளுடன் கொச்சி மேற்றாணியார் ஜோர்ஜ் தெமுடோ ஆண்டகை, யேசு சபை மூப்பு சுவாமி, பல பிரான்ஸிஸ்கன் சபை குருமார்களும் வந்திருந்தனர். இவர்களினால் கத்தோலிக்க சமயம் யாழ்ப்பாணத்தில் பரப்பப்பட, அனேகர் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டனர்.

08.05.1614 அன்று வண. பெறே பேதுரு டீ பெத்தங்கோர் (கண்ணாடிச் சுவாமியார்) என்னும் பிரான்ஸிஸ்கன் சபைக் குருவானவரால் யாழ். கோட்டைக்குள் (நாற்சதுரமான போர்த்துக்கேய கோட்டை) வெற்றிமாதா ஆலயத்திற்கு அத்திபாரம் இடப்பட்டது. இக்காலத்திலேயே கொச்சியில் இருந்துவந்த வண. பிரான்ஸிஸ்கோ அந்தோனியோ என்னும் போர்த்துக்கேய குருவானவர் தம்முடன் கொண்டுவந்த மரக்குற்றியை வெற்றிமாதா சுரூபம் வெட்டுவதற்கென, அந்நாளில் பிரபல்யமாயிருந்த நாவாய்த்துறை (நாவாந்துறை) அன்னக்குட்டி மேஸ்திரியிடம் ஒப்படைத்தார். அன்னக்குட்டியின் வீட்டில் சுரூப வேலையும் ஆரம்பமாயிற்று.

ஒருநாள் மேஸ்திரியைத் தேடி அவர் நண்பன் வந்தார். மேஸ்திரியார் தனது இருக்கையை அவரிடம் கொடுத்து உட்காரச்செய்து அரைகுறை வேலையாயிருந்த மாதா சுரூப மரக்குற்றியில் தான் அமர்ந்தார். என்ன அதிசயம், அக்கணமே அவர் தூக்கியெறியப்பட்டார். தன் நண்பனின் முன் நடைபெற்ற இச்சம்பவத்தை நினைத்து வெட்கமுற்ற அவர் தன்னைச் சமாளித்துக்கொண்டு மீண்டும் அக் குற்றியில் உட்கார்ந்தபோது முன்னரைவிட அதிக வேகமாகத் தூக்கியெறியப்பட்டார். அன்னக்குட்டி போட்ட அவலக் குரலினால் அயலவர் அங்கு குழுமிவிட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பயத்தினால் தொடர்ந்து சுரூப வேலை செய்யவிரும்பாத அன்னக்குட்டி அதனை குருவானவரிடம் ஒப்படைக்க விரும்பினார். குருவானவர் மறுத்துவிட்டார்.

அன்னக்குட்டியின் மகள் அஞ்சியா வெற்றிலை சப்பியவாறு சுரூப வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தாள். வெற்றிலைச் சக்கையை முற்றம்நோக்கி துப்பியபோது துப்பலின் துளி சுரூபத்தின் முகத்தில் விழலாயிற்று. தன் சேலையால் எச்சில் துளியை துடைப்பதற்கென நெருங்கினாள். என்ன ஆச்சரியம் அஞ்சியா எதிர்பாராத விதமாகத் தூக்கியெறியப்பட்டாள். சுயநினைவிழந்து கிடந்த அஞ்சியா சிகிச்சையின் பின்னரே குணமானாள்.

அன்னக்குட்டி வீட்டில் நடைபெற்ற இரண்டு புதுமைகளையும் கேள்வியுற்ற மக்கள் சுரூபத்தைப் பார்வையிட்டு வேண்டுதல் செய்ததுடன் வெட்டுண்ட சிராய்களைச் சேகரித்தும் செல்லாயினர். சிராய்களை அவித்துக் குடித்த பலர் கடும் நோய்களிலிருந்து காப்பாற்றப்பட்ட கதைகள் பலவுமுண்டு.

இங்கு நடைபெற்ற புதுமைகளைக் கேள்வியுற்ற திருச்சபை அதிகாரிகள் உண்மை நிலையை அறிந்து உறுதிப்படுத்தும் பொருட்டு ஒரு குழுவினரை நியமனம்செய்து அனுப்பி வைத்தார்கள். அவர்கள் பார்வையிட்டு விசாரித்தறிந்து 'மறுப்பதற்கரிய உண்மை' என்பதை உறுதிசெய்தார்கள். இம் முடிவை அறிந்த குருக்கள் 24.06.1614 அன்று மாதா சுரூபத்தை அன்னக்குட்டியின் வீட்டிலிருந்து எடுத்துக்கொண்டு வெகு ஆடம்பரமாக நல்லூர் இராசவீதியால் சுற்றுப்பிரகாரமாக கொண்டுவரலாயினர். இதனைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒருவன் "மற்றவரிலும் பார்க்கக் கூடிய அறிவும், நாகரீகமும் உடையவர்களென பெருமை பாராட்டிக்கொள்ளும் போத்துக்கேயர் அன்னக்குட்டியின் வீட்டிலிருந்து மரக்குற்றி ஒன்றைக்கொண்டு வருவதற்கு இத்தனை ஆடம்பர உடைகளும், கொண்டாட்டங்களும் செய்வது விபரீதமல்லவா?" என ஏளனம் செய்யலானான். திடீரென வெடிச் சத்தத்தோடு அவன் வயிற்றில் குண்டு பாய்ந்தது. அக்கணமே இறந்துபோனான்.

வெடிச்சத்தத்தாலும், மரண சம்பவத்தினாலும் சுற்றுப்பிரகாரம் எதிர்பார்த்த வாறு ஆடம்பரமாக முடியாமல் அமைதியாக, பரராசசேகரன் மன்னன் அன்பளிப்புசெய்த காணியில் அமைந்திருந்த வெற்றிமாதா குருமடத்தை சென்றடைந்தது. அம்மடத்திலிருந்த சிற்றாலயத்தில் திருச்சுரூபம் ஸ்தாபிக்கப்பட்டது. கோட்டைக்குள் கட்டப்பட்ட வெற்றிமாதா ஆலயம் முற்றாக முடிவுறாத நிலையில் பலிபீடத்தையும் கூரையையும் அமைத்து 28.10.1614 அன்று மடாலயத்திலிருந்த வெற்றிமாதா சுரூபத்தை ஆலயத்திற்கு கொண்டுவந்து ஸ்தாபித்துவிட்டனர். தொடர்ந்து பல புதுமைகளும், அருட் சம்பவங்களும் நிகழ்ந்து கொண்டிருந்ததால் வெற்றிமாதா ஆலயம் 'புதுமைமாதா ஆலயம்' என்றும், அந்த ஆலயத்தை உள்ளடக்கிக் கட்டப் பட்டிருந்த நாற்சதுரக் கோட்டை 'புதுமைமாதா கோட்டை' என்றும் பெயர்படலாயிற்று. 1621 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பட்டினம் நல்லூருக்குப் பதிலாக வட இலங்கைக்குத் தலைப்பட்டணமாகிவிட, அவ்விராச்சியம் முழுவதும் புதுமைமாதாவின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைக்கலத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு 'புதுமைமாதாவே புதிய யாழ்ப்பாண இராச்சியப் பரிபாலினி' எனப் பிரகடனமும் செய்யப்பட்டது.

யாழ்ப்பாண இராச்சியத்திற்கு முதற் தேசாதிபதியாக நியமனம் பெற்ற பிலிப் டீ ஒலிவேயிறா என்னும் தளபதியின் அயராத முயற்சியினால் புதுமைமாதா ஆலயத் திருப்பணி முற்றுப்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் முன்னொருபோதும் நடந்திராத வகையில் 20.02.1627 இல் கடும் புயலும், கடற் கொந்தழிப்பும், பெரு வெள்ளமும் ஏற்படலாயிற்று. மரக்கலங்கள் வெள்ளத்தோடு அள்ளுண்டு நகருக்குள் புகுந்துகொண்டன. யாழ்ப்பாண தேசாதிபதி ஒலிவேயிறாவின் வேண்டுகோளின்பேரில் மக்கள் புதுமைமாதா கோவிலில் தஞ்சம் புகுந்து வேண்டுதல் செய்தார்கள். கட்டுப்பாடற்று பெருகிய வெள்ளம் கோட்டைக்குள் புகுந்தபோதும் ஆலயத்திற்குள் பிரவேசிக்கவுமில்லை. ஆலயக் கட்டுக்கோப்புக்கு சேதம் விளைவிக்கவுமில்லை.

16.03.1658 இல் ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தின்மீது படையெடுத்து முற்றுகையிட்டனர். படையணிகள் புதுமைமாதா ஆலயத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்னர் குருமார் புதுமைமாதாவின் சுரூபத்தை எடுத்து மறைத்துவைத்துவிட்டனர். 21.06.1658 இல் ஒல்லாந்தரால் யாழ்ப்பாணம் முற்றாகக் கைப்பற்றப்பட்ட பின்னர் யேசுசபைக் குருவானவர்கள் பலர் கொலைசெய்யப்பட்டார்கள். வயதில் முதிர்ந்த குருவானவர்களையும், சரணடைந்த போர்த்துக்கேயரையும் பத்தேவியாவுக்கு நாடுகடத்தினர். அவ்வாறு சென்றவர்கள் தம்முடன் இரகசியமாக மாதா சுரூபத்தையும் கொண்டுசென்றனர். பின்னர் கோவைக்கு கொண்டுசெல்லப்பட்டு அந்நகரிலுள்ள புனித பிரான்சிஸ்கு அசிசியார் ஆலயத்திலும், பின்னர் புனித சம்பேதுருவார் ஆலயத்திலும் மாதா சுரூபம் ஸ்தாபிக்கபபட்டது. கூடவே ஆறு புதுமைகள் அடங்கிய படங்கள் வரையப்பட்டுள்ளன. அதில் புதுமைமாதா பவனிவந்த சம்பவம், அன்னக்குட்டியின் வீட்டில் இடம்பெற்ற சம்பவங்களுடன் மேலும் பக்தர்கள் அனைவரும் அன்னையின் பாதத்தைத் தொட்டு வணங்க, ஒரு போர்த்துக்கேயன் இறுமாப்புடன் அன்னையின் தலையைத் தொட்டபோது மூக்கால், வாயால் இரத்தம் வழிய மயங்கிவிழுந்தமை. மற்றும் கிறிஸ்மஸ் தினத்தன்று மாலை சங்கீதவேளை திடீரென அன்னையின் சுரூபம் ஒளிமயமாகத் துலங்கி பிரகாசித்தமை போன்ற சம்பவங்களும் அடங்கியிருக்கின்றன. கோவையிலுள்ள அன்னையின் அருட்சுரூபத்தையும், படங்களையும் பார்க்கக்கூடிய பாக்கியத்தை முதலில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளாரும், பின்னர் குருநகர் குருவானவர்களான யோ. ஜெயசீலன் அடிகளாரும் மற்றும் அ. கி. வேதநாயகம் அடிகளாரும் பெற்றிருந்தமை பெரும் பாக்கியமே.

## குருநகரில் புதுமை அன்னை ஆலயம்

போத்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்க சமயத்தைத் தழுவிக் கொண்டவர்களில் 'கடைஞர்' குல மக்கள், ஒல்லாந்தர் காலத்திலும் போத்துக்கேய கோட்டையின் (தற்போதைய டச்சுக் கோட்டை உள்ள இடம்) வட, வடமேற்கு திசைகளில் வாழ்ந்து வந்துள்ளார்கள். கோட்டைக்குள் கட்டப்பட்ட 'வெற்றிமாதா ஆலயம்' ஒல்லாந்தரால் பாழாக்கப்பட்ட பின்னர் இம் மக்கள் மரச்செறிவும், காடாகவுமிருந்த கரையோரப் பகுதியில் தற்காலிகமான சிற்றாலயத்தை அமைத்து அந்தரங்கமாய் பூசித்து வந்திருக்கிறார்கள். இந்தச் சிற்றாலயத்தைப்பற்றி தகவல் அறிந்த ஒல்லாந்த படைகள் அதனை அழிப்பதற்கு மூன்று தடவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைந்ததாகவும், அம்மூன்று தடவைகளும் ஆலயத்தை நெருங்கும்போது கண் பார்வையிழந்து திரும்பிச் சென்றதாகவும் பாரம்பரியக் கதைகள் உண்டு.



கோட்டைக்குள் இருந்த புதுமைமாதா ஆலயம் ஒல்லாந்தர் காலத்தில் அழிவுற்றவிடத்தும், அவ் ஆலயத்தை நினைவூட்டிக் கொண்டிருப்பது கோவையில் உள்ள புதுமைமாதா சுரூபமேயாகும். சுரூபத்திற்கு அன்று அணிவித்த உடையும், சுரூபத்தை மறைத்துக் கொண்டுசெல்லப் பயன்படுத்திய பெட்டியும்கூட கோவையில் பாதுகாப்பாக இருக்கிறது. மேலும் டச்சு கோட்டைக்குள் தெற்குப்பக்கமாக (முன்னர் சிறைக்கைதிகள் தென்னந்தும்பு அடிக்கும் பகுதி) உடைந்த நிலையிலிருந்த விற்கட்டும், ஒல்லாந்தரால் கட்டப்பட்ட சிலுவை வடிவிலான கோவிலின் வெளிப்பகுதியில் காணப்பட்ட 'யாபனப்பட்டத்தின' எனப் போர்த்துக்கேயரால் வரையப்பட்ட கோவில் மணியும் அடையாளச் சின்னங்களாகும். இவற்றை நானும் பார்வையிட்டிருக்கிறேன்

ஒல்லாந்தர் காலம் 1658 - 1795 ஆகும். பிற்பட்ட காலத்தில் ஒல்லாந்தரால் கடைப்பிடிக்கப்பட்ட சமய நெருக்கிடை அகலத்தொடங்கியதும் அவர்களின் ஒத்துழைப்புடன் சிற்றாலயம் இருந்த அதே இடத்தில் தற்போது தலைநிமிர்ந்து நிற்கும் புதுமைமாதா (காணிக்கைமாதா) ஆலயம் கட்டி முடிக்கப்பட்டமை வரலாற்று உண்மை. இது பழைய புதுமைமாதா ஆலய ஞாபகத்தை நிலைபெறச் செய்கின்றது. 'கொஞ்சேஞ்சி மாதா ஆலயம்' 1789 இல் அத்திவாரம் இடப்பட்டதாக அறியப்படுவதால் அதற்கு முன்னரே புதுமைமாதா ஆலயம் கட்டி முடிக்கப்பட்டிருக்கவேண்டும். மரத்தூண்களுடன் கட்டப்பட்டுள்ள கட்டிட அமைப்பும், கட்டிடத் தன்மைகளும் இதனை உறுதிப்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. தேவைக்கேற்ற முன்னெடுப்புகள் காலத்துக்குக்காலம் செய்யப் பட்டதால் ஆலயத்தின் முகப்பில் 28.08.1887 எனத் திகதி காணப்படுகிறது. தற்போது இவ்வாலயம் இடிக்கப்பட்டு புதிதாக கட்டப்படுகின்றது.

ஆலயத்தின் மத்தியில் சுவர் ஓரமாக அமைக்கப்பட்டுள்ள 'பிரசங்கக்கூடு' அற்புதமான கலைத் தன்மையுடன் அமைக்கப்பட்டள்ளது. (ஒலிபெருக்கி பாவனைக்கு வருவதற்கு முன்னர் ஆலயங்களில் நிறுவப்பட்டுள்ள இப் பிரசங்கக் கூடுகளிலேயே குருவானவர் பிரசங்கம் சொல்லுவார்.) சீமேந்து அல்லாத வேறு கலவைகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள அக்கூண்டு பார்வைக்கு மரத்தால் செதுக்கப்பட்டதாகவே தோன்றும். அதில் செதுக்கப்பட்டிருந்த சுருவங்களம், சித்திர வேலைப்பாடுகளும் தன் தொன்மையை எடுத்தியம்பிக்கொண்டிருந்தன. 1962 களில் ஏற்பட்ட வத்திக்கான் சங்க மறுமலர்ச்சி மாற்றங்களினால் கூண்டில் செதுக்கப்பட்டிருந்த சுருபங்கள் அனைத்தும் தோண்டியெடுக்கப்பட்டு அதன் தொன்மையில் பாதியை இழந்து நிற்கின்றது. ஆயினும் அது பாதுகாக்கப்படவேண்டியதொன்றாகும். தற்போதைய கோவில் புனரமைப்பில் இந்தக்கூடு அழிக்கப்படாமல் பாதுகாப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

ஆலயத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள மணிக்கூண்டுக் கோபுரம் (ஆண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபகத்திலில்லை) நடு இராத்திரியில் முற்றாக உடைந்து விழுந்தது. அவ்வாறு விழுந்தபோது ஏற்பட்ட பெரும் சத்தத்தை என்னால் கேட்கக்கூடியதாக இருந்தது. (கோவிலுக்கு அண்மையில் வீடு) அவ்வாறில்லாமல் பகல்வேளையில் உடைந்து விழுந்திருந்தால் அதற்குள் சிக்குண்டு எத்தனையோ மக்கள் பலியாகி இருப்பார்கள். இதுவும் ''அன்னை எமக்கு செய்த புதுமை''யென பலர் கூறுவதுண்டு.

## கார்மேல் அன்னை



இயற்கை வனப்புக்கொண்ட அழகியதொரு மலைப்பிரதேசம் **'கார்மேல்'** ஆகும். கார்மேல் மலையின் அழகு பற்றிய வர்ணனையை வேதநூல்களிலே காணக்கூடியதாக இருக்கின்றது. பொய்த் தெய்வங்களுக்குப் பலி செலுத்திய போலித் தீர்க்கதரிசிகளோடு போட்டிபோட்டு இஸ்ரேலியரின் உண்மைத் தெய்வத்தை நிருபித்த 'எலியாசு' இறைவாக்கினர் இம்மலையில்தான் தங்கினார்.

மலையடிவாரத்திலும், மரங்களின் கீழும், ஆற்றோரங்களிலும் ரிஷிகள், ஞானிகள் தெய்வதரிசனம் பெறுவது வழக்கம். அவ்வாறே 12 ஆம் நூற்றாண்டில் துறவிகள் பலர் கார்மேல் மலையில் குடியிருந்து இறையருள் பெற்றனர். இம் மலையில் எழுந்த முதல் ஆலயம் கார்மேல் அன்னைக்கே அர்ப்பணிக்கப்பட்டது. அவரது பாதுகாவலில் துறவியர் வாழ்வு செழிப்புற்றது. கார்மேல் மலையில் குடியிருந்த கார்மேல் துறவற சபையினரின் தலைவர் 'சீமோன் ஸ்தோத்' என்பவருக்கு 16.07.1251 இல் கார்மேல்மாதா காட்சியருளி உத்தரியத்தைக் காண்பித்தார்.

> **"உத்தரியத்தை அணியும் பக்தர்கள் விண்ணகக் கொடைகளை நிறைவாகப் பெறுவர். தமது பாதுகாப்பில் வைத்துக் காக்கப்படுவர்"**

என உறுதியளித்தார். இதனால் உத்தரியமாதா எனவும் அழைக்கப்பட்டார். அன்பு, ஆதரவு, கிருபை என்பவற்றின் அடையாளமாய் உத்தரியத்தை அளித்து, அதனை ஊழியர்களுக்கான விசேட விருதாக அறிவித்த கார்மேல் அன்னை, உத்தரியத்தின் மூலமாக ஆச்சரியப்படத்தக்க அனேக அற்புதங்களைச் செய்து மக்கள் வாழ வழிகாட்டினார். அன்னையின் வழிகாட்டலில் சேவைகள் செய்வதற்கென கார்மேல் துறவறசபை, பொதுநிலையினர், குடும்பங்கள் இணைந்த சபைகள் பல உலகெலாம் இயங்குகின்றன.

## குருநகரில் கார்மேல் அன்னை ஆலயம்

குருநகர் கார்மேல்மாதா சபை கத்தோலிக்க சமய தொண்டிற்காக, வண. ஹென்றி யூலன் ஆண்டகையின் அனுமதியுடன் 'உத்தரியமாதா கூட்டம்' எனும் பெயரில் 1906 இல் உருவாக்கப்பட்டது ஆண்டுதோறும் ஊழியர்களுக்கு உத்தரியத்தை அணிவித்தல் ஒரு சிறப்பான சடங்காக குருநகர் கார்மேல் ஆலயத்தில் செய்யப்பட்டு வந்தது. ஆனால் காலப்போக்கில் இடையூறுகளினால் தொடரமுடியாமல் தடைப்பட்டுப்போய்விட்டது. இன்று பலர் உத்தரியத்தை மறந்துவிட்டார்கள். உத்தரியமானது அதனை அணியும் ஒருவரது முதுகிலும், மார்பிலும் அன்னையின் திருவுருவமும் இருக்கும் வண்ணம் இரண்டு மெல்லிய துணியால் (றிபண்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைக்கப்பட்டு கழுத்தில் போடக்கூடியதாக அமைந்திருக்கும்.

'சவிரியப்பா' என்பரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியுடன் பக்கத்துக் காணியும் கொள்வனவு செய்யப்பட்டு கார்மேல் சிற்றாலயமும், அதனோடு இணைந்தாற்போல் கூட்டத்தினருக்கென பெரியதொரு மண்டபமும் கட்டப்பட்டது. 'அதிமேற்றாணியார் டொன்டன்வில்' அவர்களால் 1913 இல் அத்திவாரமிடப்பட்டு இடையூறின்றி மிக விரைவாகக் கட்டிமுடிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது. இதுவே குருநகரிலிருந்த ஒரேயொரு மண்டபமாகும். காலப் போக்கில்



உத்தரியமாதா கூட்டம், **'கார்மேல்மாதா சபை'** யாக மாற்றம் பெற்றது. இச் சபையின் கீழ் கலையை வளர்ப்பதற்கென கார்மேல் மாமரி சபா, கீதா வாக்கிய சபா போன்ற குழுக்கள் இயங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம் மண்டபத்தில் 'சவிரியப்பா பாடசாலை' எனும் பெயரில் பாடசாலை நடத்தப்பட்டது. மேலும் தும்பு, கைப்பணி பயிற்சி நிலையம், ஊனமுற்றோர் சிறுகைத்தொழில், வாராந்த வைத்தியசாலை, தையல்நிலையம், நூல்நிலையம், மாலைநேர – ஞாயிறு வகுப்புகள் போன்றவையும் காலத்துக்குக்காலம் நடத்தப்பட்டு வந்துள்ளது. மேலும் இம் மண்டபத்தில் ஆரம்பகாலம் முதல் கலைவளர்ச்சிக்காக கூத்துகள், நாடகங்கள் பல மேடையேற்றப்பட்டுள்ளன.

மண்டபத்துடன் இணைந்து சிற்றாலயமாக இருந்த குருநகர் கார்மேல்மாதா ஆலயம் இளைஞர், முதியோரின் கடின உழைப்பால் 1970 முதல் சிறுகச்சிறுகப் புனரமைப்புச் செய்யப்பட்டு 10.07.1983 இல் முடிக்கப்பட்டு அதிவணக்கத்திற்குரிய தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் அபிஷேகம் செய்யப்பட்டது. கொண்டடி, பாச்சுவலை ஆகிய குழுமங்களைச் சேர்ந்தவர்களால் பாரமரிக்கப்படும் இவ் ஆலயம் ஆசனக்கோவிலின் மறைக் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது.

## சென் பேதுரு சிற்றாலயம்

சம்பேதுருவார் (சென் பேதுரு) கோவில் பகுதி முன்னைய கடற்கரை ஓரப் பகுதியாகும். சிற்றாலயத்தை அண்மியதாக முன்புறமாக பழமையான கடற்கரை வீதி அமைந்திருந்தது.

'பாச்சுவலை' தொழில் செய்பவர்கள் காலை விடிந்த பிறகுதான் தொழிலுக்குச் செல்வது வழமை. அந்த அதிகாலை நேரத்தில் மழை மற்றும் ஏனைய காரணிகளுக்குத் தங்கியிருப்பதற்கு ஒரு கொட்டில்



தேவைப்பட்டது. அவ்வாறு எவருக்கும் சொந்தமில்லாத வெற்றுக் காணியில் போடப்பட்ட கொட்டிலில் நம்பிக்கை, மற்றும் பயம் காரணமாக பேதுருவார் சுருபத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து வழிபட்டார்கள். அவ்வாறு வழிபட்ட கொட்டில்தான் சம்பேதுருவார் சிற்றாலயம். இந்த சிற்றாலயத்திற்கான கொட்டில் அமைக்கப்பட்ட காலம் சரியாகத் தெரியாதுவிட்டாலும் பல முதியவர்களிடம் விசாரித்தபோது 1900 இற்கு முற்பட்டது எனக் குறிப்பிடுகிறார்கள். 1914 ஆண்டளவில் கடல் மேவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது இந்தக் கொட்டில் மிகப் பழையான நிலையில் இருந்திருக்கின்றது என நினைவுகூருகிறார்கள். 1950 இற்குப் பின்னர் சிற்றாலயத்திற்கான சுவர்கள் சீமேந்து கற்களால் சிறுகச் சிறுகக் கட்டப்பட்டு தற்போது கற்களாலமைந்த சிற்றாலயமாக உரிய இடத்திற்கேற்ற அளவில் அமைந்திருக்கின்றது.

ஆண்டுதோறும் ஆவணி மாதம் 1 ஆம் திகதி திருவிழா நடைபெறுகின்றது. திருவிழா பூசை நிறைவில் அனைவருக்கும் விருந்து வழங்கும் வழக்கம் நீண்டகாலங்களாகவே இருந்துவருகின்றது.

## சிறுத்தீவு லூர்துமாதா சிற்றாலயம்

குருநகரிலிருந்து முக்கால் மைல் தூரத்தில் சிறுத்தீவு இருக்கின்றது. குருநகர் இறங்குதுறையிலிருந்து கணக்கிட்டால் பாதி தூரமோகவே இருக்கும். இதன் சுற்றளவும் முக்கால் மைல் ஆகும். கடற்கரையோரம் கண்ணா மரப் பற்றைகளும், சம்பு புல்லுகளும் நிறைந்த தீவாக இது உள்ளது. பார்வைக்கு அழகாகக் காணப்படும். இவ் அழகிய சிறுத்தீவின் மத்தியில் சிறு குன்றில் லூர்துமாதா சிற்றாலயம் அமைந்துள்ளது. ஆலயத்தின் சுற்றாடலில் உள்ள ஒருசில மரங்களே உயர்ந்த மரங்களாக இருக்கின்றது. குருநகரில் கட்டிட ஒப்பந்த வேலைகள் செய்துவந்த சிங்கராயர் என்பவரது தலைமையில் சில நண்பர்கள் இணைந்து **'மடு சூட்டிங் கிளப்'** (M.S.Clup) இனை உருவாக்கியிருந்தார்கள். இவர்கள் மடுக்கோவிலுக்குச் செல்லும்போது வேட்டைக்குச் செல்வதைப் பொழுதுபோக்காகக் கொண்டிருந்தார்கள். இக் கழகத்தினர்தான் இந்த லூர்துமாதா குகையையும், அருகாமையில் தங்குமடத்தையும் 1944 களில் கட்டிமுடித்தார்கள். பெரும் ஆலயமாக இல்லாமல் பிரான்ஸ் நாட்டிலுள்ள லூர்து நகரில், தேவஅன்னை காட்சிகொடுத்த குகையின் அமைப்பில், அக் காட்சியைத் சித்தரிக்கும் வகையில் சிறிதாக, கலைத்துவத்துடன் அமைத்திருந்தார்கள். அந்தக் குகையினுள்ளேதான் பலிபீடம் அமைந்துள்ளது. திருவிழா நாளில் அப்பீடத்தில்தான் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். வெள்ளை அடிப்பதற்கு மற்றும் சுண்ணாம்புத் தேவைக்கென 'கடற் சிப்பி' சுடும் தொழிலை கடற்கரை ஓரங்களில் செய்வார்கள். மூலப்பொருளான சிப்பிகளை இலகுவாக தீவின் சுற்றாடலில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆண்டுதோறும் மாசி மாதம் 11 ஆம் திகதிக்குப் பின்னர் வருகின்ற ஞாயிற்றுக்கிழமை திருநாள் திருப்பலி நடைபெறுகின்றது. இவ் ஆலையத்தை எம். எஸ். கழக அங்கத்தவர்களே பராமரித்தும், திருநாளையொட்டி செய்யவேண்டிய முன்னேற்பாடுகளை செய்தும் வந்துள்ளார்கள். 1947 இல் இக் கழகத்தைச் சார்ந்தோரால் புனிதவளன் விளையாட்டுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. எம். எஸ். கிளப்பைத் தொடர்ந்து பராமரிப்பு வேலைகளை புனிதவளன் விளையாட்டுக் கழக அங்கத்தவர்கள் செய்துவந்தார்கள்.

திருநாள் பூசை சாயந்தரமே நடைபெறகின்றது. திருநாள் திருப்பலி காண குருநகரிலிருந்து சிறு சிறு வள்ளங்களில் பெருந்தொகையானோர் பயணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வார்கள். தமக்கு இனிமையான பயணமாக இருப்பதாக பலரும் கருத்து வெளியிட்டுள்ளார்கள். திருப்பலி முடிந்து கடற்கரைக்கு வள்ளம் ஏற வருபவர்களுக்கு வி. மனவற்பிள்ளை என்பவரால் இலவசமாக தேனீர் வழங்கப்படும். அந்த சூழ்நிலையில் வழங்கப்படும் தேனீர் தேவாமிர்தமாக இருக்கும். அனைவரும் மிக விரும்பி அருந்திவிட்டு வள்ளங்களிலேறி வீடு திரும்புவார்கள்.

1965 இற்குப் பின்னர் பல சிற்றாலயங்கள் குருநகரில் முளைத்துள்ளன. அவற்றில் திருநாளைக் கொண்டாடுவது, 2ம் குறுக்குத்தெருவில் கடற்கரையில் அமைந்துள்ள **'அன்னை வேளாங்கண்ணி'** சிற்றாலயமேயாகும்.

தொடர்மாடிக்கு அண்மையிலும் சிற்றாலயம் அமைக்கப்பட்டு திருவிழா நடைபெற்றதாயினும், நாட்டிலேற்பட்ட போராட்ட சூழ்நிலையில் முற்றாக சேதமுற்றது. அதன் புனரமைப்பிற்கான வேலைகளில் சம்பந்தப்பட்டவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். தற்போது றோமான் கத்தோலிக்கம் அல்லாத கிறிஸ்தவ அமைப்புகளின் வழிபாட்டுத்தலங்களும் பல இயங்குகின்றன. றோமான் கத்தோலிக்கத்திலும் ஆலயங்கள் அல்லாத வழிபாட்டு இல்லங்கள் இயங்குகின்றன. அவைகள் றோமான் கத்தோலிக்ம் அல்லாத வேறு சபைகள் கடைப்பிடித்த வழிபாட்டு முறைகளையே பின்பற்றுகின்றன.

## இறைபணியாளர்கள்

கத்தோலிக்க சமயம் பரப்பப்பட்டதுமுதல் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த வெள்ளை இனத்தவர்களே குருக்களாகவும், கன்னியாஸ்திரிகளாகவும் இறைபணி ஆற்றினார்கள். இவர்களது பணியை சுதேசிகளே ஆற்றவேண்டுமென்ற கொள்கை முன்னிலைபெறத் தொடங்கியபோது ஆர்வமுள்ள பலர் இணைந்து கற்கத் தொடங்கினார்கள். இவர்கள் இறைபணி ஆற்றத்தொடங்க படிப்படியாக வெள்ளை இனத்தவர்கள் வெளியேறத் தொடங்கினார்கள். இக்காலகட்டம் முதல் குருநகரில் பல குருக்களும் திருநிலைப்படுத்தப்பட்டும், பல சகோதரிகள் அற்பணிப்பாக ஒப்படைத்துமுள்ளார்கள். அவர்களின் பெயர், இறைபணிக்கு அர்பணித்த திகதி போன்றவற்றை இங்கே தருகிறேன்.

## திருநிலைப்படுத்தப்பட்ட குருக்கள்

| | |
|---|---|
| அருள் திரு. அந்தோனிமுத்து ஞானப்பிரகாசம் | 27.12.1932 |
| அருள் திரு. ஏபிரகாம் யோக்கிம் அன்ரனைனஸ் M.A. PHD | 27.12.1932 |
| அருள் திரு. லூயி யோசேப் | 06.08.1941 |
| அருள் திரு. பிரான்சீஸ் ஜேக்கப் ஸ்ரனிஸ்லோஸ் M.A. | 15.01.1945 |
| அருள் திரு. அமிர்தநாதர் கில்லேறியன் வேதநாயகம் கட்டிட கலைஞர் | 10.08.1957 |
| அருள் திரு. யோண். பிரான்சீஸ் | |
| அருள் திரு. யோசேப் எமில் ஜெயசீலன் M.A. | 21.12.1963 |
| அருள் திரு. அல்பன் இராஜசிங்கம் | 24.07.1974 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| அருள் திரு. நீக்கிலாஸ் பயஸ் இருதயதாஸ் | 10.04.1975 |
| அருள் திரு. மரியநாயகம் அமிர்தகுமார் | 28.07.1983 |
| அருள் திரு. சேவியர் பேனாட் றெக்னோ | 04.08.1984 |
| அருள் திரு. பிறஞ்சி யூஜின் | 1989 |
| அருள் திரு. மரியாம்பிள்ளை யேசுரெட்டினம் | 1991 |
| அருள் திரு. கிறகரி கில்லறி | 28.06.1992 |
| அருள் திரு. சேவியர் ஜேம்ஸ் | 26.06.1997 |
| அருள் திரு. ஸ்ரனி அன்ரனி | 1998 |
| அருள் திரு. எம். ரி. சறத்ஜீவன் | 14.05.2003 |
| அருள் திரு. தார்சீசியஸ் நிரூபன் நிஷானந் | 23.04.2005 |

## அர்ப்பணிப்பு செய்த சகோதரிகள்

| | |
|---|---|
| அருள் செல்வி. லொயோலா கபிரியேல்பிள்ளை | 18.12.1935 |
| அருள் செல்வி. சென்யோன்ஸ் நீக்கிலாஸ் | 1935 |
| அருள் செல்வி லில்லிஓசா | 08.06.1949 |
| அருள் செல்வி. விக்ரோறியா மருசலீன் | 18.12.1954 |
| அருள் செல்வி. மேரி பிறிஸ்கா சவிரிமுத்து | 18.11.1955 |
| அருள் செல்வி. பெலிசியா அருளானந்தம் | 18.12.1956 |
| அருள் செல்வி. ஹெட்விச் அமிர்தநாதர் கில்லேறியன் | 10.08.1957 |
| அருள் செல்வி மேரி லூயிஸ் அந்தோனிப்பிள்ளை | 18.12.1963 |
| அருள் செல்வி. பெலிசியானா அந்தோனிமுத்து | 08.06.1964 |
| அருள் செல்வி. மேரி சேவியர் | 31.01.1975 |
| அருள் செல்வி. மேரி இலேன் பாக்கியநாதர் | 26.01.1981 |
| அருள் செல்வி. ஜெயா நீக்கிலாஸ் பயஸ் | 13.09.1984 |
| அருள் செல்வி. கெனற் சேவியர் | 02.02.1985 |
| அருள் செல்வி. ஜெறால்டின் மைக்கல் | 1987 |
| அருள் செல்வி சவிரிப்பிள்ளை றெஜினோல்ட் | 1990 |
| அருள் செல்வி. மேரி மக்டலின் ஜோசவ் | 19.11.1997 |
| அருள் செல்வி. லோறற்ரா வின்சலோஸ் | 20.04.2002 |
| அருள் செல்வி மேரி செபஸ்ரி | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. விளையாட்டு

சீறிப்பாயும் கடல் அலைகளுக்கு மத்தியிலும் எதிர்நீச்சல் அடிப்பவர்கள் குருநகர் மக்கள். அத்தகைய மக்கள் காலத்துக்காலம் சிறப்பாக விளையாட்டுத் துறையில் குறிப்பாக உதைபந்தாட்டத்தில் பிரகாசித்து வந்துள்ளமை வரலாற்று உண்மை. உதைபந்தாட்ட வீரர்களாக மட்டுமல்ல உதைப்பந்தாட்ட ஆர்வலர்களாகவும் காணப்படுகிறார்கள். இவர்களது எல்லைகடந்த ஆர்வம், கட்டுப்படுத்த முடியாத உணர்ச்சிகள், எதிலும் வெற்றியடை வேண்டுமென்ற உத்வேகம், தோல்வியைச் சகிக்கமுடியாத தன்மை போன்றவைகளால் உதைபந்தாட்டப் போட்டிகளில் சண்டைகள் பல இடம்பெறுவதை மறுப்பதற்கில்லை. உலக அரங்கில் இத்தகைய சண்டைகள் புதுமையல்லவாயினும் குருநகரில் சற்று அதிகமாகவே காணப்படுவதை உணரக்கூடியதாக இருக்கின்றது. இதனைக் கட்டுப்படுத்த கழகத் தலைமைகள் முன்வருவது காலத்தின் அவசியமாகும்.

குருநகரின் உதைபந்தாட்ட வளர்ச்சிப்படிகளில் பல கழகங்கள் தோற்றம் பெற்றிருந்திருக்கின்றன. உதைபந்தாட்டத்தின்மீது இருந்த ஆர்வம், போட்டிகள் போன்றவற்றால் பல கழகங்கள் தோன்றின அவற்றில் சில பிரகாசித்தன. சில உறங்குநிலையிலும், சில மறைந்தும் போய்விட்டன. அவ்வாறான விளையாட்டுக் கழகங்களாவன:

## ஜக்கபைற்ஸ் விளையாட்டுக் கழகம்

சூழ்நிலை சார்ந்த குழுமங்களாக விளையாடி வந்தவர்கள் பெயரிடப்பட்ட கழகமாக அமையவேண்டிய அவசியத்தை உணர்ந்தார்கள். சிதறிக்கிடந்த குழுமங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமைகளை வெளிப்படுத்தியவர்களை இணைத்து குருநகரில் உருவான விளையாட்டுக் கழகமாக ஜக்கபைற்ஸ் விளங்குகியது. இக் கழகத்தின் ஆரம்ப காலம் தெரியாவிட்டாலும் 1935 களில் உருவாகியிருக்கவேண்டும் என அறியக்கூடியதாக இருக்கின்றது. அப்போதைய தேவை உதைபந்தாட்டம் என்பதால் உதைபந்தாட்டத்தை மட்டுமே இலக்காகக்கொண்டு இக்கழகம் உருவாக்கப்பட்டது. ஆயினும் இவர்களில் பலர் கரப்பந்தாட்டத்தில் திறமைபடைத்தவர்களாக பின்னாளில் திகழ்ந்திருக்கிறார்கள்.

'யாழ் உதைபந்தாட்ட சங்கம்' (ஆரம்பப் பெயர்) நடத்திய போட்டிகளில் ஏழு தடவைகள் ஜக்கப்பற்ஸ் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. இக்கழகம் உதைப்பந்தாட்டத்தில் நிகழ்த்திய சாதனைகளை வயதில் முதிர்த பலர் நினைவுகூரத் தவறவில்லை. பல சாதனைகளால் புகழ்பெற்றிருந்ததுடன் பலரது கவனத்தையும் ஈர்ந்துகொண்டது. ஆயினும் வீரர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் இதன் வளர்ச்சியில் உண்டான சரிவு பலராலும் விரும்பத்தக்கதாக இருக்கவில்லை. காலப்போக்கில் மறைந்தும்விட்டது.

இக் கழகத்தில் ஆரம்பம்முதல் விளையாடியவர் திரு. ச. சிறில் அவர்களாவார். இவர் தற்போதும் எம்மிடையே வாழ்ந்துகொண்டிருபதில் பெருமையடைகிறோம். பலரை உதைப்பந்தாட்டத் துறைக்குள் புகுத்திய சிறந்த பயிற்றுவிப்பாளரான இவர், அகில இலங்கைத் தேர்வுக்குழுவில் விளையாடியதுடன் 'சிலிப் சொட்' இல் பேர்பெற்று விளங்கினார். கொழும்பு மேயர் கௌரவ சுகதாசா அவர்களால் பாராட்டப்பட்டவர். உலகக் கிண்ண உதைப்பந்தாட்ட விளையாட்டு வீரர்களுக்கென யாழ்ப்பாணம், அனுராதபுரம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட தேர்வுகளில் தேர்வுசெய்யப்பட்டிருந்தும் சிலரது சதியால் உலக உதைபந்தாட்ட கிண்ண போட்டியில் கலந்துகொள்ள முடியாமல் போனமை மிகவும் வேதனையான நிகழ்வு.

## சுவாஸ் விளையாட்டுக் கழகம்

ஜக்கபைற்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வீரர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக உதைபந்தாட்டத்தை மட்டுமே இலக்காகக்கொண்டு உருவான இரண்டாவது கழகம் இதுவாகும். இக் கழகத்தின் விளையாட்டு வீரர்களில் ஜக்கபைற்ஸில் விளையாடிய வீரர்கள் பலர் விளையாடியபோதும் ஜக்கபைற்ஸைப்போல் பிரகாசிக்க முடியவில்லை. இரண்டு தடவைகள் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

## யூனியன் ராஜா விளையாட்டுக் கழகம்

ஜக்கபைற்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வீரர்களிடையே ஏற்பட்ட பிளவின் காரணமாக சுவாஸ் உருவாக, ஜக்கபைற்ஸ் விளையாட்டுக்கழகம் செயலற்றுப் போகலாயிற்று. ஜக்கபைற்ஸின் மறுசாரார் உதைப்பந்தாட்டத்தை மட்டுமே இலக்காகக்கொண்டு புதிய கழகமாக யூனியன் ராஜா விளையாட்டுக் கழகத்தை உருவாக்கினார்கள். ஆரம்பத்தில் மிளிர்ந்த இக்கழகம் இரண்டு தடவைகள் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. பின்னர் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காணமுடிவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனிதவளன் விளையாட்டுக் கழகம்

பல எதிர்பார்ப்புகளுடனும், திட்டங்களுடனும் உதைபந்தாட்டத்தை மட்டுமல்லாது கரப்பந்தாட்டம், மல்யுத்தம் போன்றவற்றையும் தம்முடன் இணைத்துக்கொண்டு 1947 இல் புனிதவளன் விளையாட்டுக் கழகம் உருவானது. முன்னைய கழகங்களின் வீரர்கள் உள்வாங்கப்படாமல் புதியவர்களே இணைந்து கொண்டார்கள். இதற்கு முன்னோடியாக மறைந்த வைத்திய கலாநிதி பிலிப்ஸ், ஆசிரியர் எஸ். கைடிபொன்கலன் போன்றவர்கள் இயங்கியுள்ளார்கள். அவர்கள் எதிர்பார்த்ததைப்போல் விளையாட்டுகளில் பல வெற்றிகளைப்பெற்றபோதும் பிரகாசிக்க முடியவில்லை. அரச உத்தியோகங்கள் காரணமான முன்னணி வீரர்களின் பிரிவு புனிதவளனின் வளர்ச்சிக்குத தடையாக அமைந்தது. இவர்கள் வேறுபல செயற்திட்டங்களைச் செயற்படுத்தியிருந்போதும் தற்போது உறங்குநிலையிலேயே உள்ளனர்.

இக் கழகத்தில் ஆரம்பம்முதல் விளையாடியவர் திரு. S.N.J. அன்ரனிப்பிள்ளை அவர்களாவார். இவர் தற்போதும் பிரான்சில் வசிக்கிறார். சிறந்த பயிற்சியாளரான இவர், 1961 இல் அகில இலங்கை இளைஞர் அணி சார்பாக பாங்கொக் சென்று விளையாடியுள்ளார். 1970 வரை தேசிய அணியுடன் பல நாடுகளுக்குச் சென்று விளையாடியுள்ளார். 1961 இல் யாழ். குழுவுடன் இந்தியா சென்று விளையாடியுள்ளார். 1965 முதல் கொழும்பு சண்றைஸ் வி. கழகத்தின் அணித்தலைவராக விளையாடியதுடன், கொழும்பு உதைப்பந்தாட்ட லீக்குக்கு 3 வருடங்கள் அணித்தலைவராக இருந்து இந்தியா சென்று விளையாடியுள்ளார். பலரும் அறிந்த திறமையான உதைபந்தாட்ட வீரன் இவராவர். "எல்லோரும் பந்து விளையாடுவார்கள். இவர் பந்தை விளையாடுவார்" என இவர்பற்றி பெருமையாய் பலர் பேசுவதுண்டு.

## குருநகர் யுனைட்டட் விளையாட்டுக் கழகம்

சுவாஸ், யூனியன் ராஜா போன்றவற்றின் மந்தநிலை புத்திஜீவிகளைச் சிந்திக்கத் தூண்டியது. அவர்களின் முயற்சியால் சுவாஸ், யூனியன் ராஜா போன்றவற்றில் விளையாடிய வீரர்களின் இணைப்பாக குருநகர் யுனைட்டட் உருவாக்கப்பட்டது. இதற்காக முன்னின்றுழைத்தவர் மறைந்த ஆசிரியர் சிக்மறிங்கம் ஆகும். இக்கழகமும் உதைபந்தாட்டத்தை மட்டுமே இலக்காகக்கொண்டு உருவாக்கப்பட்டது. குருநகர் யுனைட்டட்டின் உதயம் சுவாஸ், யூனியன் ராஜா விளையாட்டுக் கழகங்களை மூடவைத்தது. இரண்டினதும் இணைப்பினால் பல திறமையான வீரர்கள் அடங்கிய குழுவாக குருநகர் யுனைட்டட் பரிமாணம் பெற்றது. புனிதவளன் விளையாட்டுக் கழகத்தில் விளையாடிய வீரர்களும் உள்வாங்கப் பட்டார்கள். ஆயினும் புனிதவளன் கலைக்கப்படவில்லை. குருநகர் யுனைட்டட் உருவாக்கப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியாக எட்டு வருடங்கள், 'யாழ் உதைப்பந்தாட்ட லீக்' நடத்திய போட்டிகளில் சம்பியனாகத் திகழ்ந்தது. இது ஒரு சாதனையாகப் பேசப்பட்டது.

யாழ் உதைப்பந்தாட்டத் தெரிவுக் குழுவில் குருநகர் யுனைட்டட்டைச் சேர்ந்த எட்டு வீரர்கள் அங்கம் வகித்துள்ளார்கள். 'வைமன் சென்ரர்' விளையாட்டுக் கழகத்திற்கு 21 கோல்களைப்போட்டு சாதனையை நிகழ்த்தியுள்ளது. இதுபோன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல சாதனைகள் நிகழ்த்தியபோதும், பலராலும் பேசப்பட்டபோதும் புதியவர்களாக இளைஞர்களை உள்வாங்கி அவர்களை விளையாட்டில் இணைத்துக்கொள்ளத் தவறியமை, இதன் வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்தவர்கள், ஊக்கம் கொடுத்துக்கொண்டிருந்தவர்கள் தொழில் வாய்ப்பின் நிமித்தம் இடம்மாறிச் சென்றமை குருநகர் யுனைட்டட்டின் தொடர் வளர்ச்சிக்கு தடையாக மாறியது. இதனால் இளைஞர்கள் வெவ்வேறு கழகங்களை உருவாக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இக் கழகத்தில் ஆரம்பம்முதல் விளையாடியவர்கள்:

**ச. கனியூட்,** இவர் தண்டனை உதைக்காக அடித்த பந்தை எந்தவொரு கோல் காப்பாளரும் தடுத்ததில்லை. ஒரு தடவை தடுக்கமுனைந்த காப்பாளரின் வலதுகை மூட்டு விலகியது. ஆனால் பந்து தடுக்கப்படவில்லை. அவ்வளவு உறுதியான, வேகமான உதையை இவர்போன்று எவரேனும் உதைந்ததில்லை. இவரது இறப்பு பலருக்கு இழப்பு.

**சி. கிட்லர்,** இவர் இலங்கை உதைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய சுற்றுப்போட்டியில், இலங்கையின் பிரபல்ய விளையாட்டுக்கழகமான 'ரெட்ணம்ஸ்' இனை எதிர்த்து விளையாடியபோது பந்து காப்பாளர் அடித்த பந்தை, மத்தியில் நின்றவாறே தடுத்தடித்து கோல் பெற்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார். யாழ். தெரிவுக் குழுவில் சில ஆண்டுகள் விளையாடியுள்ளார்.

**ச. யேசுதாசன்,** இவர் அகில இலங்கை இளைஞர் அணியில் விளையாடியவர், உதைபந்தாட்டத்தில் மட்டுமல்லாது கூடைப்பந்தாட்டம், ஹாக்கி, மல்யுத்தம், மெய்வல்லுனர் போன்றவற்றில் சிறந்து விளங்கியதுடன், சாதனைகளையும் பதித்துள்ளார். அகில இலங்கை பாடசாலை தெரிவுக் குழுவில் ஹாக்கி விளையாடியவர். தற்போது லண்டனில் வசிக்கிறார்.

## குருநகர் இளைஞர் விளையாட்டுக் கழகம்

அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட புதிய திட்டத்திற்கும், ஊக்குவிற்புக்கும் அமைய இளைஞர்களை மட்டுமே இணைத்து யுத் கிளப் உருவாக்கப்பட்டது. தனியே உதைபந்தாட்டத்தை மட்டுமல்லாமல், கரப்பந்தாட்டம், மெய்வல்லுனர் போன்ற விளையாட்டுக்களிலும், கலை, இலக்கிய, நாடகத்துறைகளிலும் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.. 'B' தரத்தில் விளையாடி குறுகிய காலத்தில் பல அபார வெற்றிகளையும் பெற்ற இக் கழகம் நீண்ட ஆயுளைக் கொண்டிருக்கவில்லை. வேலைவாய்ப்பு காரணமான இளைஞர்களின் வெளியேற்றம். தொடர் வளர்ச்சிக்கான போதிய நிதிகளைக் கொண்டிராமை போன்றவற்றால் உறங்கு நிலைக்குத் தள்ளப்பட்ட யுத் கவுன்சில் தற்போது புனரமைக்கப்பட்டு இயங்க ஆரம்பித்துள்ளமையை அறியக்கூடியதாக இருக்கின்றது.

## குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம்

இதுவரை இயங்கிய கழகங்கள் குருநகர் சனசமூக நிலையத்தை பின்புலமாகக்கொண்டு இயங்கவில்லை. இதன்காரணமாக குருநகர் சனசமூக நிலையத்தை பின்புலமாகக்கொண்டதாக 'குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம்' உருவாக்கப்பட்டது. இதன் உருவாக்கத்திற்கு முன்னின்று உழைத்தவர்களில் ஒருவர் ஆசிரியர் அ. யோண் அவர்களாகும். ஆரம்பத்தில் பல திறமையான விளையாட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரர்களை உள்வாங்கிக்கொண்டபோதும் விளையாட்டில் குறிப்பிடும்படியாக பிரகாசிக்கவில்லை. மந்தநிலையே காணப்பட்டது.

தம்முடன் இணைந்து விளையாடுவதற்காக சென் பற்றிக்ஸ் கல்லூரியின் உதைபந்தாட்டக் குழுவில் விளையாடிய குருநகர் மற்றும் குருநகரல்லாத வீரர்கள் சிலரை பாடும்மீன் விளையாட்டுக் கழகம் உள்வாங்கிக்கொண்டது. அன்றுமுதல் அக் கழகத்திற்கு புதுவேகம் பிறந்தது. பொற்காலமாகவும் அமைந்தது. பல தொடர் வெற்றிகளை ஈட்டிக்கொண்டேயிருந்தது. பலராலும் பேசப்படும் நிலையை எட்டியது. ஆயினும் அதன் உருவாக்கத்தின் இலக்கு திசைமாறிவிட்டது என்றே சொல்லவேண்டும். 'குருநகரைச் சேர்ந்தவர்களின் கழகம்' என்ற நிலை தடம்புரண்டுவிட்டதாக பலரும் அவ்வப்போது விசனம் தெரிவித்திருந்தார்கள். ஏனைய கழகங்களைவிட முன்னணியில் திகழவேண்டும் என்பதால் வெற்றி ஒன்றையே இலக்காகக்கொண்டு விளையாட்டில் திறமையுள்ள எவரேனும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இதனால் தங்களது எண்ணத்தை ஈடேற்றியும் கொண்டார்கள் என்பது சந்தேகமற்ற உண்மை. இக்காலகட்டத்தில் தம்மை பெரிதும் வளர்த்துக்கொண்ட பாடும்மீன் விளையாட்டுக் கழகம், 1990 களின் பின்னர் தமது ஆரம்ப இலக்கை அடைந்தார்கள். 1990 இன் பின்னர் தொடர்ந்து குருநகர் விளையாட்டு வீரர்களே பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

மிகக் குறுகிய காலத்தில் பலராலும் புகழப்படும் நிலைக்கு உயர்ந்த பாடும்மீன் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளில் 70% மான போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளமையை, கொழும்பு CAB சுற்றுப்போட்டியில் பங்குபற்றி இறுதியாட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டமையை எவரும் பாராட்டாமல் இருக்கமுடியாது. A, B, C என மூன்று தரங்களிலான வீரர்களைக் கொண்டியங்கும் இக் கழகம் மூன்று இறுதியாட்டங்களுக்கு Aயும், Bயும் தேர்வுசெய்யப்பட்டு விளையாடியமை இதன் திறமைக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போட்டிகளில் பல தடவைகள் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டபோதும், பார்வையாளர்களின் ஆவேசத்தால் எழுந்த மோதல்களில் பல சந்தர்ப்பங்களை தவறவிட்டமை கவலையுடன் நோக்கவேண்டியவை. பொதுவாக பார்வையாளர்களின் மோதல்களில் எப்பகுதியினர் காரணம் என அறுதியிட்டுக் கூறமுடியாத நிலையிலும் பாடுமீன் விளையாட்டுக்கழகத்தை, அதன் வீரர்களை சிலகாலம் தடைசெய்யப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளமை வேதனையானது. ஏன் தடைசெய்தார்களென்பது சம்பந்தப்பட்ட நடத்துனர்களுக்குத்தான் வெளிச்சம்.

யாழ். சனசமூக நிலையங்களுக்கூடாக நடத்தப்பட்ட AGA சுற்றுப்போட்டியில் குருநகர் சனசமூக நிலையத்தின் சார்பாக பாடும்மீன் விளையாட்டுக் கழக வீரர்கள் விளையாடி தொடர்ச்சியாக ஆறு வருடங்கள் சம்பியனாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளார்கள். எல்லே மற்றும், கூடைப்பந்தாட்ட போட்டிகளிலும் பங்குபற்றி சம்பியனாகத் தேர்வுசெய்யப்பட்டுள்ளார்கள்.

இக் கழகத்தில் விளையாடிய விளையாட்டு வீரர்களை எடுத்துநோக்கின், 65 விளையாட்டு கழகங்கள் பங்குபற்றிய 'ஈழநாதம்' போட்டியில் சிறந்த வீரனாக பாடும்மீன் விளையாட்டுக்கழக வீரன் திரு. டார்வின் தேர்வுசெய்யப்பட்டார். யாழ் உதைப்பந்தாட்ட லீக் நடத்திய போட்டிகளில் 2001 இலிருந்து தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் சிறந்த வீரனாக பாடும்மீன் விளையாட்டுக்கழக வீரன் திரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுஜீவன் தேர்வுசெய்யப்பட்டார்.

இக் கழகத்தில் விளையாடியவர்களில் யே. றொக்கட்சன், செ. ஜயந்தன், த. பேசியா, ப. கமிலேஸ் ஆகியோர் அகில இலங்கை இளைஞர் அணியில் விளையாடியவர்களாவர். யே. றொக்கட்சன், செ. ஜயந்தன், த. பேசியா ஆகியோர் இளைஞர் அணியின் சார்பாக பாங்கொக் சென்று விளையாடியுள்ளார்கள்.

## யுத் காமல் விளையாட்டுக் கழகம்

யுத் கிளப்பின் வளர்ச்சி குன்றிப்போன காலகட்டத்தில் சில திரு றஞ்சித் போன்ற இளைஞர்களின் முயற்சியினால் 'யுத் காமல்' விளையாட்டுக்கழகம் உருவாக்கப்பட்டது. உதைபந்தாட்டத்தில் குறிப்பிடத்தக்க சாதனைகள் எதனையும் செய்யவில்லை. மந்தமான வளர்ச்சியாகவே காணப்பட்டது. அதேவேளை பெண்களுக்கான வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டங்களில் சம்பியனாக திகழ்ந்துள்ளார்கள். உதைப்பந்தாட்டத்தில் மட்டுமன்றி மென்பந்தாட்டத்திலும் பங்குபற்றியுள்ளார்கள். இப்போது இதன் செயற்பாடுகள் உறங்குநிலையிலேயே காணப்படுகின்றது.

இதுவரை குறிப்பிட்ட கழகங்கள் யாவும் யாழ். உதைபந்தாட்ட லீக்கில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களாகும். பதிவுசெய்யப்படாமல் பத்துக்கும் மேற்பட்ட கழகங்கள் இயங்குகின்றன. இக் கழகங்கள் உள்ளூரில் நடைபெறுகின்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள், மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள், கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் மட்டுமே பங்குபற்றி வருகின்றன.

குருநகரில் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தைத் தவிர புதிதாக எந்தவொரு கழகமும் யாழ். உதைப்பந்தாட்ட லீக்கில் பதிவுசெய்து போட்டியாக வரக்கூடாது, குருநகருக்குரிய விளையாட்டுக் கழகம் என்றால் அது பாடும்மீன் விளையாட்டுக் கழகம்தான் என்ற சிலரது தூரநோக்கற்ற எண்ணமும் இவ்வாறு உள்ளூரில் விளையாட்டுக் கழகங்கள் முடங்கிடக் காரணமாக அமைந்தன.

## திறமைபெற்ற வீரர்கள்

உதைபந்தாட்டம், மென்பந்தாட்டம், மெய்வல்லுனர் போன்றவற்றில் திறமைபெற்று சாதனை படைத்த பலரை இம்மண் பெற்றிருக்கிறது. உதைபந்தாட்டப் போட்டிக்காக வெளிநாடு சென்றவர்கள், மெய்வல்லுனர் போட்டிக்காக வெளிநாடு சென்றவர்கள். உள்ளூரிலே அதிசயிக்கத்தக்க சாதனை படைத்தவர்கள், இன்றும் பலராலும் பேசப்படுகிறவர்கள் வாழ்ந்தபோதும் அவர்கள் பற்றிய முழுமையான தரவுகளைப் பெறுவது பெரும் சிரமாக இருக்கின்றது. இதனால் பல உண்மைகள் புதைக்கப்பட்டுவிடும், அனைவரையும் வெளிக்கொண்டுவரமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிடும் என அஞ்சுகிறேன். இவ் அச்சம் காரணமாக இவ் வெளியீட்டில் இத்தகையவர்களை வெளியிடுவதை ஒத்திவைத்திருக்கிறேன். ஆயினும் கழகங்களுடன் இணைந்து விளையாடிய சிலரது, கிடைத்த தரவுகளை அக்கழுங்களுடன் தெரியப்படுத்தியிருக்கிறேன். பிரான்ஸில் இயங்கும் குருநகர் சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம் தனது வெளியீடான 'அலை ஓசை' சஞ்சிகையில் 'மண்ணின் மைந்தர்கள்' ஆக இத்தகைய வீரர்களில் ஒருசிலரை வெளிக்கொண்டு வந்தமை பாராட்டப்படவேண்டியதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. கலை

கலையின் நிலைகள் பல. அதனால் கலை குறிப்பிட்ட ஒரு செயற்பாட்டிற்குள் அடக்கப்படவோ, கட்டுப்படவோ மாட்டாது. குருநகரின் மூலை முடுக்குகளி லெல்லாம் வயது ஏற்றத்தாழ்வுகள் எதுவுமின்றி சிறுவர் முதல் முதியவர்கள் வரை கலையை சிறப்பாக வளர்த்திருக்கிறார்கள். இதற்காக கலைமீது ஆர்வம்கொண்ட அநேகர் தமது வாழ்நாளில் பெரும்பகுதியையும், பெரும்பொருளையும் செலவளித்திருக்கிறார்கள்.

குருநகரில் 1825 முதல் கூத்துக்கள் எழுதப்பட்டு அவை அளிக்கை செய்யப்பட்டு நாட்டுக்கூத்துக் கலை வளர்த்திருக்கிறது. அதன் தொடராக பல நிலைகளிலும் கலை வறட்சியின்றி வளர்ந்தமையை காணக்கூடியதாக இருக்கின்றது. குருநரில் மிளிர்ந்த கலை இலக்கியம் பற்றி முழுமையான தரவுகளாக இல்லையாயினும் எனது 'குருநகர் கலைமாட்சி' நூலில் வெளிவந்த சில தகவல் தொகுப்புகளைத் தருகிறேன்:

- ➢ எழுதப்பட்ட கூத்துகள் : 36
- ➢ அளிக்கைசெய்த அண்ணாவிமார் : 16
- ➢ சிறந்த கூத்து பாடகர்கள் : 26
- ➢ நாடக எழுத்தாளர்கள் : 17
- ➢ இயங்கிய நாடக மன்றங்கள் : 20
- ➢ வெளியிடப்பட்ட சஞ்சிகைகள் : 12
- ➢ வெளியிடப்பட்ட தொகுப்பு இதழ்கள் : 02
- ➢ வெளியிடப்பட்ட தொகுப்பு மலர்கள் : 11
- ➢ வெளியிடப்பட்ட நூல்கள் : 57


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'குருநகர் கலைமாட்சி'யில் நாட்டுக்கூத்து சம்பந்தப்பட்டவர்களை வெளிக்கொண்டுவந்தமைபோல் இங்கே நாடக நடிகர்களை வெளிக்கொண்டு வருகின்றேன். இந்தத் துறையிலும் முன்னோர்களின் சிறப்புகள் மூழ்கடிக்கப் பட்டவையாகவே இருக்கின்றன. நான் நாடகத்துறையில் ஈடுபாடு கொண்டியங்கிய காலத்துக்கு முந்தியோர்களைப் பற்றிய தரவுகளை என்னால் சேகரிக்க முடியவில்லை. முடிந்தவரை சிறப்புடன் மிளிர்ந்த நடிகர்கள் பற்றி சேகரித்தவற்றை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

நான், நாடக எழுத்துரு – இயக்கம் – சிறுகதை – கவிதைகள் எழுவதிலேயே ஆர்வத்துடன் ஈடுபட்டுவந்தேன். அதனால் நடிப்புத்துறையில் குறைந்த ஈடுபாட்டையே கொண்டிருந்தேன். ஆயினும் என்னுடைய ஈடுபாடு பற்றிய தகவல்கள் என்னுடைய காலத்தோடு மற்றவர்களை ஒப்பீடு செய்யப் பயன்படலாம் என்பதால், அவற்றை இங்கே தருவது தவறில்லை எனக் கருதி நடிப்புத்துறையோடு சம்பந்தப்பட்டவற்றை இங்கே தருகின்றேன்.

1949 இல் பிறந்தவன். 1960 ஆம் ஆண்டில் சில நண்பர்களோடு சேர்ந்து வீட்டு முற்றத்தில், சொற்ப பார்வையாளரின் மத்தியில், அரிக்கன் லாந்தர் வெளிச்சத்தில், பாடநூலில் வந்த நாடகத்தை நடித்ததுமுதல் என் கலைவாழ்வு தொடங்குகின்றது. 1963 இல் 'வீரபாண்டியன் கட்டப்பொம்மன்' நாடகத்தில் 'ஜக்கம்மா'வாக நடித்தேன். 1966 ஆம் ஆண்டு சேக்ஸ்பியரின் 'ஹம்லெட' கதைக்கு உரையாடல் எழுதி அதனை இயக்கியதுடன், 'ஹம்லெட்' பாத்திரத்தில் நடித்திருக்கிறேன். 1967 இல் 'தர்மம் தலை காக்கும்' (மூலக்கதை ஆசிரியரின் பெயர் ஞாபகத்திலில்லை) என்னும் கதைக்கு உரையாடல் எழுதி இயக்கி, அதில் முக்கிய பாத்திரத்தில் நடித்துள்ளேன்.

இக் காலகட்டங்களில்தான் **'கலையார்வன்'** எனும் புனைபெயரை பயன்படுத்தத் தொடங்கினேன். 1968 இல், குருநகர் இளைஞர் கலைக்கழகத்தின் ஊடாக 'காகித ஓடம்' என்னும் சமூக சீர்திருத்த நாடகத்தை எழுதி மேடையேற்றியது முதல் அக் கழகத்தின் ஊடாக 20 நாடகங்கள்வரை மேடையேற்றச் சந்தர்ப்பம் கிடைத்தது.

நாடகங்கள் மேடையேற்றப்படும் தினமன்று நடிக்கவேண்டிய நடிகர்கள் தத்தமது இடையூறு காரணமாக வரத் தவறுகின்றமை புதுமையான ஒன்றல்ல. இதனை நாடக ஈடுபாட்டாளர் பலர் அனுபவ வாயிலாக உணர்ந்திருப்பார்கள். அவ்வாறான சமயங்களில் வரத்தவறிய பாத்திரத்தை ஏற்று நடிக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் எனக்கு ஏற்பட்டதுண்டு. நாடகத்தின் எழுத்துரு எழுதுகின்றமை, நாடகத்தின் அனைத்து பயிற்சிச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை போன்றவற்றால் பாத்திரங்களுக்குரிய வசனங்கள் பாடமாக இருப்பது அதிசயமாக நோக்கவேண்டிய தொன்றல்ல. வரத்தவறிய நடிகர்களின் பாத்திரங்களை உடனுக்குடனே ஏற்று நடிப்பதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது..

1972 இல் நாடகப் போட்டியில் 'றோசாமலர்' எனும் நாடகத்தில் இரட்டை வேடப் பாத்திரத்தில் நடித்தேன். அந் நாடகம் 2 வது பரிசைப் பெற்றது.

திருமறைக் கலாமன்றத்தில் இணைந்து 1971 - 1983 ஆம் ஆண்டுவரை அதனால் மேடையேற்றப்பட்ட சில நாடகங்களில் சிறிய பாத்திரங்களில் நடித்திருக்கிறேன். 'பலிக்களம்' நாடகம் நீர்கொழும்பில் இரண்டு நாட்கள் மேடை யேற்றப்பட்டபோது அந் நாடகத்தின் நடிகர்கள் வெற்றிடத்தை நிரப்புதலுக்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று பாத்திரங்களில் நடித்தமை மறக்கமுடியாத நிகழ்வாகும். 'பலிக்களம்' வீடியோ திரைப்படத்திலும் பங்களித்துள்ளேன்.

## நாடக நடிகர்கள்

"அலையாளும் குருநகர், கலையாளும் இடமாய், கலையின் வளர்ப்பகமாய் திகழ்ந்தது அன்று. இன்று அனாதரவான நிலையில், பிறரறிந்திடா வகையில் காணப்படுவதை உணரக்கூடியதாக இருக்கின்றது. இது போர்க்காலச் சூழலின் வக்கீரத்தில் நிகழ்ந்ததா? அல்லது, கலைவாழ்வின் முன்னோடித்தனத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டதா?"

குருநகர் கலைமாட்சி நூலில் நான் எழுப்பிய வினா இது (பக். 51). எனது கேள்வியின் நியாயத்தை வெளிப்படுத்த 'கலைச்சுடர் க. சொர்ணலிங்கம்' அவர்கள் 06.08.1972 கலைக்கதிர் நாடகமன்ற 5வது ஆண்டு பூர்த்திவிழா மலருக்கு எழுதிய குறிப்பை இங்கே தருகின்றேன்.

"இப்பொழுது கலைமீது ஆர்வம்கொண்ட அநேக இளைஞர்கள் எம் நாட்டில் பல இடங்களிலும் இருக்கிறார்கள். அவைகளில் ஒன்றாக குருநகர் சிறந்து விளங்குகிறது. இதற்குச் சான்றாக அச்சிறு ஊரில் தற்சமயம் பன்னிரு நாடக மன்றங்களை ஸ்தாபித்து சிறந்த நாடகங்களை இயற்றி நடித்து வருவதை அறிகிறோம்."

கலைச்சுடர் க. சொர்ணலிங்கத்தின் குறிப்பு நாடக, நடிப்புத்துறையில் குருநகர் இருந்த சிறப்பிற்கு சான்று பகர்கின்றது. இதனடிப்படையில் இங்கே நடிகர்களை வெளிக்கொண்டுவர விழைகின்றேன். நடிகர் என்று குறிப்பிடும்போது ஒரு நாடகத்தில் நடித்தவரும் நடிகர்தான். நான் இங்கே அவ்வாறானவர்களை தவிர்த்து நடிப்புத்துறையில் சிறப்பாகப் பேசப்பட்டவர்களையே குறிப்பிடுகிறேன். இதனிலும் முழுமை பேணப்பட்டதாக என்னால் கூறமுடியாது. பலரது தகவல்களைப் பெறமுடியாது இருக்கின்றது. குறிப்பாக இறந்தவர்கள் பலரது தகவல்களைப் பெறமுடியவில்லை. வாழ்பவர்களிடையேயும் பலரை இனங்காண முடியவில்லை. நாட்டில் ஏற்பட்ட அசாதரண சூழ்நிலையால் எழுந்த இடப்பெயர்வுகள், புலம்பெயர்வுகள் போன்றவற்றால் நடிகர்கள் சிதறுண்டமை, சிறப்புகள் மறக்கப்பட்டமை, நாடக மேடையேற்றங்களில் நீண்ட இடைவெளி காணபட்டமை, எனது புலம்பெயாவு வாழ்க்கை பேன்றவற்றால் முழுமையான வெளிப்படுகளை வெளிக்கொண்டுவர முடியவில்லை. நடிப்புத்துறையைச் சார்ந்தவர்கள் இதனை ஏற்றுக்கொள்வீர்களென நம்புகின்றேன்.

சிலரது பிறந்த ஆண்டு அறியமுடியாமையால் வெளிக்கொண்டுவரப்பட்டுள்ள பெயர்களை மூப்பின் அடிப்படையில் நிரல்படுத்தப்படுத்த முடியவில்லை. எனவே ஊகிப்பின் பொறுப்பை வாசகர்களிடமே விட்டுவிடுகிறேன்.

## சூசைப்பிள்ளை விக்ரர்

இறப்பு : 1995

நான் சிறுவனாக இருந்போதே இவர் நடிப்பில் உயர்ந்து நின்றார். பழகுவதற்கு மிகவும் சாதுவான இவர், 'ஏழையின் கண்ணீர்' நாடகத்தில் நடித்ததன் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையுலகில் காலடி பதித்தார். 20 இற்கு மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ளார். எந்தப் பாத்திரமானாலும் அந்தப் பாத்திரமாகவே மாறி பார்வையாளரை தன்பக்கம் ஈர்ப்பதில் வெற்றிகண்டுள்ளார். 'இரத்தக்கண்ணீர்' நாடகத்தில், இந்திய திரைப்பட நடிகர் நடிகவேள் எம். ஆர். ராதாவே மேடையில் தோன்றியதாக உணரவைத்த பெருமை இவரைச் சாரும். 'மனிதன் மாறிவிட்டான்' நாடகத்தில் தந்தை இறந்தமையை முன்னிட்டு 'பிள்ளைமனம் கலங்குதென்றால்...' என்னும் சினிமாப்பாடல் திரையில் ஒலிக்கப்பட்டது. அப்பாடலுக்கு இவரது நடிப்பு பார்வையாளரின் கண்களில் நீரை வரவளைக்கத் தவறவில்லை. அப்பாடற் காட்சியை இன்றும் பலர் நினைவுகூருவர்.

## சலமோன் ஜேம்ஸ்

பிறப்பு : 1934

சூசைப்பிள்ளை விக்ரர் அவர்களின் காலத்தில் அவருடன் சேர்ந்து நடித்த நடிகராவார். இவரது சிறந்த நடிப்பால் 'அக்ரர்' என்ற அழைப்புப்பெயர் இவரது இயற்பெயருடன் நிரந்தரமாகவே இணைந்துவிட்டது. இதனால் 'அக்ரர் ஜேம்ஸ்' என்றே அழைக்கப்பட்டார். 'ஏழையின் கண்ணீர்' நாடகத்தில் நடித்ததன்மூலம் கலையுலகில் பிரவேசித்த இவர், 20 நாடகங்களுக்கு மேல் நடித்துள்ளார். 'காவியம் பிறந்தது' நாடகத்தில புலவர் பாத்திரம் ஏற்று நடித்து 'சிறந்த நடிகரு'க்கான பரிசிலைப் பெற்றார். எந்த நாடகமானாலும் பிரதான பாத்திரத்தையே ஏற்று நடித்துள்ளார். எப்போதும் மென்மையான போக்கையும், தன்மையையும் கொண்டிருந்த இவர், நடிப்பின்மீது அதிக ஆர்வமும், மதிப்பும் கொண்டிருந்தார். தன்னைப் பலரும் பாராட்டுகிறார்களே என்பதையிட்டு சிறிதேனும் பெருமை கொள்ளாதவர். சிறு வயதினர்கூட நடிப்பில் சுட்டிக்காட்டும் குறைகளை முகங்கோணாமல் ஏற்றுக்கொண்டு நிவர்த்திசெய்பவர். தான் ஏற்று நடிக்கும் பாத்திரம் சிறப்புடன் அமைவதற்கு ஏற்றவகையில் சம்பந்தப்பட்டவர்களிடம் குழந்தையைப்போல் அடிக்கடி கேட்டு தன்னைத் திருத்திக்கொள்ளத் தயங்காதவர்.

பெண்கள் நாடகங்களில் நடிக்கத்தொடங்கிய காலத்தில் முதன்முதல் பெண்ணுடன் நடித்த நடிகர் என்ற பெருமையைப் பெற்றவர். யாழ். மாநகரசபை மண்டபத்தில மேடையேற்றிய 'மனிதன் மாறிவிட்டான்', 'எங்கே நிம்மதி' போன்ற நாடகங்களில் இவரது நடிப்பு பெரும் பாராட்டைப்பெற்றது. இவரது நடிப்பின் திறமைக்காக, இயக்குநர் நீ. மரியசேவியர் அடிகளாரால் திருமறைக் கலாமன்றத்தால் தயாரிக்கப்பட்ட 'பலிக்களம்' வீடியோ திரைப்படத்திற்குத் தேர்வுசெய்யப்பட்டு அதில் சிறப்பாக நடித்தார். படப்பிடிப்பு முடிந்து, இசை, குரல்களை இணைக்கும் வேலை 'கலையகத்'தில் ஆரம்பமானது.

'பலிக்களம்' திரைப்படத்தில் யேம்ஸ் நடித்த பாத்திரம், 'பலிக்களம்' நாடகத்தில் பிறிதொருவர் நடித்த பாத்திரமாகும். இதையிட்டு யாரோ வெளிக்கொண்டு வந்த தவறான கருத்தால் அன்று கலையகத்திற்கு இவர் சமூகமளிக்கவில்லை. அவரது மென்மைப்போக்கில் எழுந்த இயல்பான பயத்தால் குரல் கொடுக்க சம்மதிக்கவுமில்லை. சமூகமளிக்கவுமில்லை. பிறிதொருவரினால் குரல் கொடுக்கப்பட்டது. அன்று தொடங்கிய பயத்தின் வெளிப்பாடு காலப்போக்கில், நாட்டுப் பிரச்சினையின் சூழலினால் விரிவடைந்து இன்று ஆயுள் நோயாளியாக பீதியுடனே காணப்படுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘கலாபூஷணம்’ கிறகொரி பிலிப் பேர்மினஸ்

பிறப்பு : 1939

புனித சம்பத்தரிசியார் கல்லூரியில் கல்விகற்றபோது 1956ல் ‘ஒரு புகையிரத நிலையம்’ என்னும் நாடகத்தில் நடித்ததன் மூலம் தனது கலை வாழ்வில் காலடிவைத்தார். 1957, 1959 இல் கல்லூரியின் பிரமாண்டமான தயாரிப்பான இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்துள்ளார்.

தொடர்ந்து ஐந்து நாடகங்களில் நடித்துள்ள இவர், அருட்தந்தை நீ. மரியசேவியர் அடிகளாரின் திருமறைக் கலாமன்றத்தில் இணைந்து கொண்டார். ‘அன்ரனியோ’ என்னும் இத்தாலியப் படத்திற்கு, அதன் முக்கிய கதாபாத்தரத்திற்கு குரல் கொடுத்துள்ளார். தொடர்ச்சியாக திருமறைக் கலாமன்றத்தால் மேடையேற்றப்பட்ட நாட்டுக்கூத்து, இசை நாடகம், நவீன நாடகம், இலக்கிய நாடகம், வரலாற்று நாடகம், யதார்த்த நாடகம், மௌன நாடகம், தெருக்கூத்து, சிறுவர் நாடகம், வட்டக்களரி முதலியவற்றிலும் பங்கு கொண்டுள்ளார்.

1973 இல் திருமறைக் கலாமன்றத்தின் முதலாவது கலைப்பயணத்துடன் இந்தியா சென்று அங்கு திருச்சி தேவர் அரங்கில், களங்கத்தையும் பலிக்களத்தையும் இணைத்த நாடகத்தில் நடித்துள்ளார்.

23.01.1978 இல் நாடக அரங்க கல்லூரியில் திரு தார்சீசியஸ், குழந்தை ம. சண்முகலிங்கம் ஆகியோரிடம் முறையான களப்பயிற்சி, நாடகப்பயிற்சிகளைப் பெற்றதுடன் பல நாடகங்களை நடித்து பல அனுபவங்களைப் பெற்றுள்ளார்.

சிறைச்சாலை உத்தியோகத்தரான இவர், சிறைக் கைதிகளைக்கொண்டே இரண்டு நாடகங்களை இயக்கி மேடையேற்றியுள்ளார். 1995 இன் மாபெரும் இடப்பெயர்வை மையமாகக்கொண்டு, திருமறைக் கலாமன்றத்தால் மேடையேற்றப்பட்ட ‘சாகாத மனிதம்’ நாடகத்தினை நடித்து, நெறிப்படுத்தி பாராட்டைப் பெற்றார்.

திருமறைக் கலாமன்றத்தின் கலைப்பயணமான 1997 இல் ‘வடலிக்கூத்தர்’ பயணத்தில் ஜேர்மனி, பிரான்ஸ், ஹொலன்ட் ஆகிய நாடுகளுக்கும், 1998 இல் ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், ஹொலன்ட், லண்டன், இத்தாலி ஆகிய நாடுகளுக்கும் கலைப்பயணம் சென்று நாடகங்களில் நடித்ததுடன் பிரான்சின் சிறந்த நாடக நெறியாளர் ‘பீற்றர் புறூக்’, மற்றும் அவர் குழுவினருடன் மேலதிக பயிற்சிகளையும் பெற்றுள்ளார்.

04.01.1998 அன்று பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் இலங்கை தேசிய சமாதான குழுவினரால் சமாதான முயற்சிக்காக எடுக்கப்பட்ட நிகழ்வில் திருமறைக் கலாமன்றத்தின் சார்பாக ‘சக்தி’ என்னும் நாடகத்திலும், விகாரமகாதேவி பூங்காவில் எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நாடகத்திலும் நடித்துள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் ரூபவாகினி தொலைக்காட்சி சேவையிலும் நாடகங்கள், நாட்டுக்கூத்துக்களில் நடித்துள்ளார்.

03.12.2000 இல் திருமறைக் கலாமன்றத்தால் ‘அரங்க வாரிதி’ என்ற பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். 18.11.2002 இல் இந்து சமய கலாசார அலுவலுகள் திணைக்களத்தினால் ‘கலைஞானகேசரி’ பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். 20.09.2002 இல் யாழ். கலாசாரப் பேரவையால் ‘யாழ் ரத்னா’ என்ற பட்டம் வழங்கப்பட்டது. இவர் நாடகத்துறையால் சமூகத்திற்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி, 04.02.2004 இல் கலாச்சார அலுவல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களத்தினால் 2003 இற்கான 'கலாபூஷணம்' எனும் அதி உயர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

திரு அசோக்கா ஹந்தகமவின் நெறியாள்கையில் 'இவ்வழியால் வாருங்கள்' என்ற வீடியோ திரைப்படத்திலும், திருமறைக் கலாமன்றத்தால் தயாரிக்கப்பட்ட 'பலிக்களம்' வீடியோ திரைப்படத்திலும், திரு தர்மசிறி பத்திராஜாவின் திரைப்படத்திலும் நடித்துள்ளார். கலாபூஷணம் விருது பெற்றமைக்காக பிரான்ஸ் சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம், பாடும்மீன் விளையாட்டுக் கழகம், திருமறைக் கலாமன்றம் ஆகியவற்றால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

## திரு. மரியநாயகம் சாம் பிரதீபன்

பிறப்பு : 1974

1985 இல் பாடசாலையில் 'பாரதியார்' என்னும் நாடகத்தில் நடித்ததன்மூலம் தனது கலை வாழ்வில் காலடிவைத்தார். திருமறைக் கலாமன்றத்தில் இணைந்ததன் பின்னர் அங்கே அரங்கப் பயிற்சிகள், நாடகப் பயிற்சிகளையும், பெற்றதுடன் திருமறைக் கலாமன்றம் மேடையேற்றிய பல நாடகங்கள், நாடடுக்கூத்துகளில் பங்கேற்று நடித்துமுள்ளார். மெற்றாஸ்மயிலின் 'ஆனையை அடக்கிய அரியாத்தை' எனும் நாடகத்தில் நடித்துள்ளார். மேலும் லண்டன், மஞ்செஸ்ரர் பல்கலைக்கழக விரிவுரையாளரான ஜேம்ஸ் தொம்சன் என்பவரிடம் பிரயோக அரங்கு பயிற்சியையும் சிங்கள, ஆங்கில நாடக இயக்குநர் ஜெறோம ட சில்வாவிடம் நடிப்பு பற்றிய பயிற்சியையும், கொழும்பு ஜேர்மன் கலாசார பயிற்சி நிலையத்தில் கிறிஸ்ரல் கொவ்மன், கிறிஸ்ரியன் ஆகியோரிடம் பிரதியாக்கம், நெறியாள்கை, சிறுவர் அரங்கு, அரங்க விளையாட்டுகள், பிரயோக அரங்கு போன்றவை அடங்கிய அரங்க நுட்பவியலாளர் (Theatre Seintist) பயிற்சியையும் பெற்றுத் திகழ்ந்துள்ளார்.

திருமறைக் கலாமன்றத்தின் கலைப் பயணமான 1997 இல் 'வடலிக்கூத்தர்' பயணத்தில் ஜேர்மனி, பிரான்ஸ், ஹொலன்ட் ஆகிய நாடுகளுக்கும் சென்று நாடகங்களில் நடித்துள்ளார். 1998 இல் 'வடலிக்கூத்தர்' பயணத்தில் ஜேர்மனி, பிரான்ஸ், ஹொலன்ட், இத்தாலி ஆகிய நாடுகளுக்கும் சென்று நாடகங்களில் நடித்துள்ளார். இந்தப் பயணத்தில் மேடையேற்றப்பட்ட 'சோழன்மகன்' நாட்டுக்கூத்து இவரால் எழுதப்பட்டதாகும். பிரான்ஸ் 'ஆதவன் அரங்கி'ல் உலக நாட்டுக் கலைஞர்கள் இணைந்த குழுவில் அவர்களுக்கு நாட்டுக்கூத்து தொடர்பான பயிற்சிகளை அளித்ததுடன் அவர்களிடமிருந்து மேலதிக நடிப்புப் பயிற்சிகளையும் பெற்றார். 2000 இல் 'ஒளியே வருக' எனும் அவுஸ்ரேலிய கலைப்பயணத்தில் அங்கு மெல்போன், சிட்னி நகரிலுள்ள தமிழர்களுக்கு நாடகப் பயிற்சிப்பட்டறை நடத்தியதுடன், 'ஒளியே வருக' எனும் கூத்திலும், 'எங்கட பிள்ளைகள்' நாடகத்திலும் முக்கிய பாத்திமேற்று நடித்துள்ளார். 'தியேட்டர் ஓபேரா'வைப் பார்க்கக்கிடைத்தது பெரும் கொடையென நினைவுகூருகிறார்.

2001 இல் சுவிஸில் நடைபெற்ற 'திருமறைக் கலாமன்ற சர்வதேச தமிழ்விழா' வில் யாழ் பிரதிநிதியாக கலந்துகொண்டு 'புயலான பூவே' என்னும் நாடகத்தை இயக்கியுள்ளார். யாழ். வந்த கனடா திருமறைக் கலாமன்ற கலைஞர்களுக்கு 'கண்ணுக்குத் தெரியாத சுவர்' வார்த்தைகளற்ற நாடகத்தை இயக்கியுள்ளார். 2004 இல் 'புது யுகம் நோக்கி' என்னும் தமிழரல்லாத வெளி நாட்டவருக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைப்பயணத்தில் ஜேர்மனி, பிரான்ஸ், ஹொலண்ட், லண்டன், ஒஸ்ரியா, செக்கோசெலவாக்கியா, பெல்ஜியம், கனடா நாடுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பயணத்தில் இவரும் இணைந்கொண்டு 'அசோகா' (வார்த்தைகளற்ற நாடகம்), 'ஒளியே வருக' நாட்டுக்கூத்து ஆகியவற்றில் நடித்துள்ளார்.

இலங்கை மற்றும் வெளிநாட்டு விற்பனர்களிடம் நடிப்பு, அரங்கு, நாடகப் பயிற்சிகளை முறையாகப்பெற்று தன்னை வளர்த்துக்கொண்ட இவர் "கலை, மனிதம் என்ற அடிப்படைத் தத்துவத்தை உரியமுறையில் நடைமுறைப்படுத்தும். மாற்றம் காணவேண்டிய சமுதாயத்திற்கு உந்துசக்தியாக இருக்கும்." எனக்கூறுகிறார்.

## செபமாலை கிறிஸ்தலோஸ்

பிறப்பு : 1946

1966 இல் 'சோக்ரடீஸ்' நாடகத்தில் நடித்ததன்மூலம் கலையுலகில் காலடி பதித்தார். 1983 ஆம் ஆண்டு வெளிநாடு சென்றார். அதுவரை பத்துக்கு மேற்பட்ட நாடகங்களை நடித்துள்ளார். 'உயர்ந்த உள்ளம்' நாடகத்தில் இளைப்பாறிய இராணுவத் தளபதியாக நடித்தமை இவருக்கு உயர்ந்த இடத்தைக்கொடுத்தது. தற்போது கனடாவில் வசிக்கும் இவர் அங்கு மேடையேற்றிய 'இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி'யில் இரண்டு தடவைகள் பிலாத்துவாக நடித்துள்ளார். உலகத் தமிழர் இயக்கத்தின் 'இறுதி உரை' என்னும் நாடகத்தில் பண்டாரவன்னியனாக நடித்துள்ளார். இதே இயக்கத்தின் சார்பில், குருநகர் யோகி (மரியாம்பிள்ளை) அவர்களால் எழுதப்பட்டு, குருநகர் இளம்பரிதி நாடக மன்றத்தால் மேடையேற்றப்பட்ட 'பூலோகம் போன யமன்' என்னும் நகைச்சுவை நாடகத்தை நெறிப்படுத்தி நடித்துள்ளார்.

இவர் தனது மனதிற்பட்டதை பின்வருமாறு கூறுகிறார். "கனடா வாழ் நிலையில் கூறுவதானால், தாயகத்தில் இருக்கும் கலைஞர்களுக்கு கனடா வாழ் கலைஞர்களைப்போன்று வசதிகள் இல்லாவிட்டாலும், தாயகத்தின் கலைத்துறை நடிப்பு, இயக்கம் போன்றவற்றில் உன்னத நிலையிலேயே உள்ளது"

## கிறகொரி அல்போன்ஸ்

பிறப்பு : 1946

1966 இல் சர்ச்சைக்குரிய நாடகம் எனப் பெயரெடுத்த 'ஊனக்கண்' நாடகத்தில் நடித்ததன்மூலம் கலையுலகில் காலடி பதித்தார். இவர் அங்கம் வகித்த குருநகர் இளம்பரிதி நாடகமன்றம், கலைக்கதிர் நாடகமன்றம், இளைஞர் கலைக்கழகம் போன்ற மன்றங்களால் மேடையேற்றப்பட்ட இருபதுக்கும் மேற்பட்ட நாடகங்களிலும் நடித்துள்ளார். பிரபல நாடக ஆசிரியரும், நெறியாளருமான K.P.M. ராசு அவர்களின் 'நீரூற்று' (10 தடவைகள் தங்கப்பதக்கம் பெற்றது), 'நெருப்பு' நாடகங்களிலும், இளைஞர் கலைக்கழகத்தால் மேடையேற்றப்பட்ட 'அணை கடந்த வெள்ளம்' என்னும் நாடகத்தில் நடித்ததன் மூலம் பலரது பாராட்டுகளைப் பெற்றார்.

திருமறைக் கலாமன்றத்தால் மேடையேற்றப்பட்டதும், பல மேடை யேற்றங்களைக் கண்டதுமான 'பலிக்களம்' நாடகத்தில் இவர் ஏற்று நடித்த 'யூதாஸ்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரத்தை எவருமே மறக்கமுடியாது. யூதாஸ் இப்படித்தான் இருந்திருப்பான் என்பதை மக்களுக்கு உணர்த்திய பெருமை இவரையே சாரும். இந் நாடகம் வீடியோ திரைப்படமாகத் தயாரிக்கப்பட்டபோதும் அதே பாத்திரத்தில் நடித்திருக்கிறார். திருமறைக் கலாமன்றத்தின் 1வது கலைப்பயணத்திலும் பங்குகொண்டு இந்தியா சென்று நடித்துள்ளார்.

1990 இல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் காரணமாக தனது வலது கையை இழந்த இவர் மறக்கமுடியாதவை என சிலவற்றைக் குறிப்பிடுகிறார்.

1. முல்லைத்தீவில் பலிக்களம் மேடையேற்றப்பட்டபோது, யேசுவை முத்தமிட்டுக் காட்டிக்கொடுக்கும் காட்சி. அவ்வேளை பார்வையாளர் பக்கமிருந்து 'நான் இனி பாவம் செய்யமாட்டேன். யேசுவைக் காட்டிக்கொடுக்காதே' என்று குரல்கள் கேட்டமை.

2. சுகாதார வாரத்தையொட்டி யா. மா. சபையால் நடத்தப்பட்ட குடும்பக் கட்டுப்பாடு பொருள்பற்றிய நாடகத்தில் நடித்து முதல் பரிசு பெற்றமை.

3. 1974 இல் 4வது தமிழாராட்சி மாநாட்டு விழாவில், வீரசிங்கம் மண்டபத்தில் 'கதையும் காவியமும்' என்னும் நாடகத்தில் துச்சாதனனாக நடித்துவிட்டு வெளியே வந்தபோது பொலிசாரால் நடத்தப்பட்ட தாக்குதலில் 10 பேர் உயிரிழந்தமை.

4. 1971 ஏப்பிரலில் யாழ். முற்றவெளியில் திருமறைக் கலாமன்றத்தால் மேடையேற்றப்பட்ட 'அன்பில் மலர்ந்த அமரகாவியம்' முடிவுறும் தறுவாயில் கேட்ட துப்பாக்கி வேட்டுச்சத்தம், அதைத் தொடர்ந்து நடந்த நிகழ்வுகள் போன்றவைகளாகும்.

## கிறிஸ்ரோப்பர் யேசுராசா (உடையார்)

பிறப்பு : 1942

சிறுவயதிலிருந்தே நாடகங்களில் ஈடுபாட்டைக்கொண்ட இவர், 1964 ஆம் ஆண்டு 'சிதைந்த வாழ்வு' நாடகத்தின் மூலம் கலைவாழ்வில் காலடி எடுத்து வைத்தார். நடிப்பதில் மிகவும் ஆர்வம்கொண்ட இவர், 67 நாடகங்கள் வரை நடித்துள்ளார். இது பெரும் சாதனை என்றே சொல்லவேண்டும். எந்தப் பாத்திரமானாலும் மனங்கோணாமல் ஏற்று, பாத்திரத்தை உணர்ந்து அதற்குரிய இயல்பான நடிப்பை வெளிப்படுத்தக்கூடிய ஆற்றலைக்கொண்டவர். 'கிளிசறின்' இல்லாமலே உணர்வு மேலீட்டால் தன் கண்களிலும், பார்வையாளர் கண்களிலும் கண்ணீரை வரவழைக்கக் கூடிய திறமையைக்கொண்டவர். குணசித்திரப் பாத்திரத்தில் தனக்கு நிகர் எவருமில்லையெனத் திகழ்ந்தவர்.

'கண் திறந்தது' நாடகத்தில் ஐந்து நிமிடம் மட்டுமே மேடையில் தோன்றி நடித்து 'சிறந்த நடிகரு'க்கான பரிசிலைப் பெற்றார். மேலும் 'யேசுநாதர் பேசினார்' நாடகத்தில் தரகராகவும், 'குறிஞ்சிமலர்' நாடகத்தில் கொடைவள்ளலாகவும் தோன்றி சிறந்த நடிகருக்கான பரிசில்களைப் பெற்றார். நவரச நடிகர் போட்டியில் 10 நிமிடங்களுக்குள் நவரசத்தை வெளிப்படுத்தி முதற்பரிசை பெற்றார். கலையரசு சொர்ணலிங்கம், வைரமுத்து போன்றவர்களால் பாராட்டும் பெற்றவர்.

தன்னைப் பெருமிதப்படுத்தாமல் எப்போதும் சாதுவாகவே காணப்படும் இவர் நடிப்பிலே புலியாக இருப்பது பாராட்டப்படவேண்டியதே. வயது ஏற்றத்தாழ்வின்றி சொல்வதை ஏற்றுச் செயல்படக்கூடிய தன்மை இவரின் உயர்வுக்குக் காரணம் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறகரி கிறிஸ்தோப்பர்

பிறப்பு : 1949

1967 இல் குருநகர் சென் ஜேம்ஸ் மகா வித்தியாலய வளவில் 'குருநகர் நெய்தல் வளர்பிறை மன்றத்'தால் மேடையேற்றப்பட்ட 'இதயக்குமுறல்' என்னும் நாடகத்தில் பிரதான பாத்திரம் ஏற்று வந்த, உயரமான நடிகரைப் பார்த்தேன். தனது அற்புதமான நடிப்பால் நாடகத்தைச் சிறப்பித்து நின்றார். அவர்தான் கிறிஸ்தோப்பர். அன்றுதான் அவரை நான் நடிகனாகப் பார்த்தேன். அன்று கலையுலகில் காலடி எடுத்துவைத்த இவர், தொடந்து 11 நாட்டுக்கூத்துகள், 12 நாடகங்கள்வரை நடித்து தமது நடிப்புத் திறமையை வெளிக்காட்டியுள்ளார். நடிப்பதில் மிகவும் ஆர்வமுள்ளவராக இப்போதும் காணப்படுகிறார். 'யாழ். பாரம்பரிய மேம்பாட்டுக் கழகத்'தினால் 'மரபுக் கலைச்சுடர்' எனும் பட்டம் வழங்கி கீரிடம் அணிந்து கௌரவிக்கப்பட்டமை இவரது கலைச்சேவைக்கு மெருகூட்டுகின்றது.

## தம்பித்துரை யேசுராசா

பிறப்பு : 1948

1960 ஆண்டு வீட்டு முற்றத்தில், சொற்ப பார்வையாளரின் மத்தியில், அரிக்கன் லாந்தரின் வெளிச்சத்தில் பாடநூலில் வந்த நாடகத்தை என்னுடன் சேர்ந்து நடித்தவர்களில் இவரும் ஒருவர். அன்றுமுதல் இவர் கலைவாழ்வில் கால் பதித்தார். அதே ஆண்டில் (12 வயது) பல நாட்டுக்கூத்து அண்ணாவிகளுடன் இணைந்து 'சுழியார்' நாட்டுக்கூத்தில் பாடியுள்ளார். என்னால் எழுதப்பட்ட நாடகங்கள் பலவற்றில் இவர் தனது நடிப்பாற்றலை வெளிக்காட்டியுள்ளார். 11 நாட்டுக்கூத்துகள், 20 இற்கு மேற்பட்ட நாடகங்கள், இசை நாடகங்களில் நடித்துள்ள இவர், நடிகர்திலகம் சிவாஜி கணேசனின் நடிப்புப் பாணியையும், கோணங்களின் தன்மையையும் பின்பற்றுகிறவராகவே காணப்பட்டார். எந்தப் பாத்திரமானாலும் ஏற்று நடிக்கத் தயங்காதவர். குணசித்திர பாத்திரத்திலேயே தம்மை அடையாளப்படுத்தியுள்ளார்.

## பஸ்கால் பொன்னுத்துரை

இறப்பு : 1991

வெளித்தோற்றத்திற்கும், இயல்பான வாழ்க்கைக்கும் தன்னை நகைச்சுவை யாளனாக வெளிப்படுத்தி நின்ற இவர் சிறந்த குணசித்திர நடிகராவார். பெரும்பாலும் தகப்பன், வேலைக்காரன் பாத்திரங்களை விரும்பி ஏற்று நடிப்பவர். சோகமான பாத்திரங்களின் தன் உணர்வுகளை இயல்பாக வெளிப்படுத்துவதில் அபார திறமை படைத்தவர். அதில் வெற்றியும் கண்டார். இயல்பாகவே நகைச்சுவையாகப் பேசக்கூடிய ஆற்றலையுடைய இவர், நகைச்சுவை பாத்திரங்களிலும் தாமாகவே நகைச்சுவையை வெளிப்படுத்தி பாராட்டைப் பெற்றிருக்கிறார். 20 நாடகங்கள் வரை நடித்திருக்கும் இவர் பிரதான பாத்திரங்களில் நடிக்கவில்லை. இவரது நாடகங்கள் சிலவற்றைப் பார்த்திருக்கிறேன். 'மனிதன் மாறிவிட்டான்', 'எங்கே நிம்மதி' நாடகங்களில் பாராட்டுக்களைப் பெற்றார். இவரது கலைவாழ்வின் ஆரம்பத்தை அறியமுடியவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பித்துரை பிலிப்பு

பிறப்பு : 1943

நாடகத்துறையில் பெரும் ஈடுபாடுகொண்ட இவர், தனது 14 வது வயதில் மறைந்த கவிஞர், நாடக எழுத்தாளர் மிக்கேல்பிள்ளை அவர்களின் 'அருளப்பர்' நாடகத்தின் மூலம் கலைவாழ்வில் காலடி எடுத்து வைத்தார். மிருதங்க வித்துவான் ரி. பாக்கியநாதனின் 'கள்ளோ காவியமோ' நாடகத்தில் பிரதான பாத்திரம் ஏற்று நடித்து பலரது பாராட்டைப் பெற்றார். 'குமணன்' நாடகத்தில் குமணனாக நடித்தபோது இவரது நடிப்பாற்றல் புகழ்பூத்த கலைஞர்களால் அடையாளம் காணப்பட்டது. இவரது கம்பீரமான தோற்றமும், சிறந்த குரல்வளமும், எந்தப் பாத்திரமானாலும் பாத்திரமாகவே மாறி பார்வையாளரைப் பிரமிக்கவைக்கும் தன்மையும் இவரிடமுள்ள சிறப்பம்சங்களாகும். 15 நாடகங்களுக்கு மேல் நடித்த இவர் ஒவ்வொரு நாடகத்திலும் பார்வையாளர் மனங்களில் நிறைந்து நின்றார்.

4வது அனைத்துலக தமிழாராச்சி மகாநாட்டில் குருநகரிலிருந்து மேடை யேற்றப்பட்ட 'வீரமாநகர்' நாடகத்தில் சிறப்பாக நடித்தமைக்காக 'செல்வி பிறிந்தா பெக்' அவர்கள் பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவித்தமை சிறப்பிற்குரியது. 60–70 களில் 25 தடவைக்குமேல் மேடையேற்றப்பட்ட 'கண் திறந்தது' நாடகத்தில் தகப்பன் பாத்திரம் ஏற்று நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. திருமறைக் கலாமன்றத்தின் வெற்றிப் படைப்புகள் பலவற்றில் இவர் முத்திரை பதித்துள்ளமையை தற்போதுள்ள பலர் அறிந்திருக்கமாட்டார்கள். 'வா மகனே வா' சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். நாடக நெறியாள்கை, அரங்க ஒப்பனை, நாட்டுக்கூத்து போன்றவற்றிலும் சிறந்து விளங்கினார். இவரது கலைச்சேவையைப் பாராட்டி யாழ் பிரதேச கலாசார சபை 2002 ஆம் ஆண்டில் இவரைக் கௌரவித்தமை சிறப்பிற்குரியது.

## 'கலைஞானகேசரி' வி. ஜே. கொன்ஸ்ரன்ரைன் (குருநகர் துரை)

பிறப்பு : 1942

1950 ஆம் ஆண்டு ஆங்கில நாடகத்தில் மாலுமியாக நடித்ததன்மூலம் நடிப்புலகில் காலடி பதித்தார். 'காசில்டா' நாடகத்தில் இளவரசியாகப் பெண்வேடம் ஏற்று நடித்து பாராட்டைப்பெற்ற இவர். நடிப்புத்துறையுடன், நாடக எழுத்தாளராகவும், இயக்குநராகவும் திகழ்ந்துள்ளார். 11 நாடகங்களை எழுதியுள்ளார். இதனால் தமது நாடகங்களில் இவரால் பல புதுமைகளைப் புகுத்தி அளிக்கை செய்யக்கூடியதாக இருந்தது. 15 நாடகங்கள் வரை நடித்து, 50 நாடகங்கள் வரை நெறிப்படுத்தியுள்ளார். நானும் இவருடன் இணைந்து பல நாடகங்களில் பங்காற்றியிருக்கிறேன். திருமறைக் கலாமன்றம் மேடையேற்றிய நாடகங்கள் பலவற்றில் நடித்துள்ளார். இவரது கலைச்சேவையைப் பாராட்டி, 18.11.2002 இல் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 'கலைஞானகேசரி' பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

1973 இல் திருமறைக் கலாமன்றத்தின் முதலாவது கலைப்பயணத்துடன் இந்தியா சென்று அங்கு திருச்சி தேவர் அரங்கில், களங்கத்தையும் பலிக்களத்தையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்த நாடகத்தில் 'பிலாத்து' வாக நடித்ததுடன், ஆடை, ஒளியமைப்பு, உதவி நெறியாள்கை போன்றவற்றிலும் ஈடுபட்டிருந்தார். ஷேக்ஸ்பியரின் ஆங்கில நாடகங்கள் சிலவற்றையும் நெறியாள்கை செய்துள்ளார்.

ஒளி அமைப்பில் நிபுணத்துவம் பெற்றதுடன், அதன் நுட்பங்களை, கிடைப்பவற்றைக்கொண்டு செயற்படுத்தக்கூடிய ஆற்றலைப் பெற்றவர். அரங்கியல் சம்பந்தமான பல கட்டுரைகளை இவர் எழுதியுள்ளார். இலங்கையிலுள்ள தலைசிறந்த நாடக அரங்குகள் அனைத்திலும் ஒளியமைப்பு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சிறந்ததொரு ஒப்பனையாளராகவும் திகழ்ந்தார். இவர் தமது மணிவிழாவை முன்னிட்டு 13.03.2002 இல் வெளியிட்ட கையேட்டில் குறிப்பிட்டுள்ள குறிப்பை இங்கே தருவது பயனுள்ளதாக இருக்கும் என கருதுகின்றேன்.

*"இதுவரை ஐநூறிற்கு (500) மேற்பட்ட ஆற்றுகைகளில் சம்பந்தப்பட்டுள்ளேன். எழுத்துருவாக்கம், நடிப்பு, அரங்க அமைப்பு, ஒலி - ஒளி வடிவமைப்பும் இயக்கமும், ஒப்பனை, ஆடை வடிவமைப்பு, அரங்க நிர்வாகம், முகாமைத்துவம், நெறியாள்கை ஆகிய துறைகளில் பங்களித்ததோடு, காலாகாலமாக தொழில் ரீதியாக பேணப்பட்டுவந்த ஒப்பனை, ஆடையமைப்பு, அரங்க அமைப்பு போன்ற தொழில் நுணுக்கங்களை இளைய தலைமுறையினருக்குக் கற்றுக்கொடுத்துப் பலரை உருவாக்கம் செய்துள்ளேன்."*

நாடகத்துறையில் இரண்டறக்கலந்த திருமறைக் கலாமன்றத்தின் பொதுச் செயலாளராகவும், கத்தோலிக்க தேசிய கலாசார குழுவில் ஆலோசகராகவும், மேய்ப்புப்பணி மாநாட்டு கலாசார பேரவை, யாழ். பிரதேச கலாசார பேரவை ஆகியவற்றில் செயலாளராகவும் பணியாற்றிய இவர் தற்போது யாழ். பிரதேச கலாசார பேரவையின் உப தலைவராக இருப்பது பெருமைக்குரியது.

## தம்பித்துரை கிறகரி (கட்டப்பொம்மன்)

இறப்பு : 1984

நாடகங்களில் வில்லன் பாத்திரங்கள் ஏற்று நடித்து பெயர் பெற்றவர். தோற்றப் பொலிவும், நடையும், குரல்வளமும் இவரை வில்லனாகவே உணரவைக்கும். 'வீரபாண்டிய கட்டப்பொம்மன்' நாடகத்தில் கட்டப்பொம்மனாக சிறப்பாக நடித்ததன் மூலம் 'கடடப்பொம்மன்' என்ற அழைப்புப்பெயர் இவரது இயற்பெயருடன் நிரந்தரமாகவே இணைந்துவிட்டது.

10 இற்கு மேற்படட நாடகங்களில் நடித்துள்ள இவர், கட்டப்பொம்மன் தவிர்ந்த ஏனைய நாடகங்களில் வில்லன் பாத்திரத்திலேயே நடித்துள்ளார். அவற்றால் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். கம்பீரமாக வசனங்களைப் பேசி நடிப்பதில் திறமைவாய்ந்தவர்.

## S. N. J. மரியாம்பிள்ளை

பிறப்பு : 1947

சிறந்த நாடக, சிறுகதை, கவிதை, எழுத்தாளராக அறிமுகமானவர் இவர். தான் சார்ந்த 'குருநகர் இளம்பரிதி நாடகமன்ற'த்தின் தவிர்க்கமுடியாத தேவையின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமித்தம் நடிகனாக மாறினார். இக் கழகத்தின் முதல் மேடையேற்றமான 'ஊனக்கண்' நாடகத்தில் நடித்ததன் மூலம். நடிப்புலகில் கால் பதித்தார். 10 இற்கும் மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ள இவர், பெரும்பாலும் தகப்பன் பாத்திரத்தையே ஏற்று நடித்துள்ளார். 'வாழ்க்கை அழைக்கிறது' நாடகத்தில் கடற்றொழிலாளியான தந்தை பாத்திரத்தில் இவரது நடிப்பு பலராலும் வியந்து பாராட்டப்பட்டது. அந்நாடகத்தில் யதார்த்தமாக நடித்தமைக்காக, 'கலாகீர்த்தி' விருதினைப் பெற்ற திரு அ. யேசுராசா அவர்கள் பாராட்டி பத்திரிகையில் வெளிவந்த செய்தியை பெருமையுடன் நினைவுகூருகிறார்.

## தமியான் அன்ரனி வர்ணகுலசூரி (சூரி)

பிறப்பு : 1953

குருநகர் திருப்பாலத்துவ சபையால் 1962 இல் மேடையேற்றப்பட்ட 'தந்தை எங்கே?' நாடகத்தில் நடித்ததன்மூலம் நடிப்புலகில் காலடி எடுத்து வைத்தார். மென்மையான பேச்சை கடைப்பிடிக்கும் இவர் தற்போது பிரான்சில் வசித்துவருகிறார். குருநகர் இளைஞர் கலைக்கழகத்தால் 1968 இல் மேடையேற்றப்பட்ட 'காகித ஓடம்' என்னும் சமூக சீர்திருத்த நாடகத்தில் நடித்தபோது தம்மை ஒரு பண்பட்ட நடிகராக வெளிகாட்டி, பார்வையாளரை அதிசயிக்கச்செய்தார். பிரான்ஸ் திருமறைக் கலாமன்றத்தினால் வெளியிடப்படும் 'முற்றம்' சஞ்சிகையில் இவர் தமது நாடக அனுபவங்களை தொடராக எழுதி வருகிறார் அதில் 'காகித ஓடம்' மேடையேற்றம் பற்றி குறிப்பிடும்போது "'காகித ஓடம்' நாடகத்தில்மூலம் எமக்கு மக்களிடமிருந்து கிடைத்த வரவேற்பு எம் மத்தியில் ஒருவிதமான புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது." எனக் குறிப்பிட்டுள்ளார்.

காகித ஓடத்தைத் தொடர்ந்து, குருநகர் இளைஞர் கலைக்கழகத்தால் மேடையேற்றப்பட்ட 20 இற்கு மேற்பட்ட நாடகங்களிலும் நடித்துள்ளார். 1971 ஆம் ஆண்டு இளைஞர் கலைக்கழகத்தால் நாடகப் போட்டிக்காக மேடையேற்றப்பட்ட 'கண்ணீர்' நாடகத்தில் சப்பாணியாக நடித்து பார்வையாளர்களை கண்கலங்கச் செய்தவர் இவர். அந்நாடகத்தில் சிறந்த நடிகருக்கான பரிசும் கிடைத்தது. 'படைவெட்டு' நாட்டுக்கூத்தில் தம்மை நாட்டுக்கூத்து கலைஞனாக வெளிக்காட்டிய இவர், நான்கு கூத்துகளை பாடியுள்ளார். திருமறைக் கலாமன்றத்தில் இணைந்ததன் பின்னர், அதனால் மேடையேற்றப்பட்ட பல நாடகங்களில் நடித்துள்ளார். குருநகர் நடன நல்லிசைக் கலாமன்ற நிர்வாகிகளில் ஒருவராகவும், திருமறைக் கலாமன்றத்தின் கவின் கலைகள் பயிலகத்தின் முதலாவது அதிபராகவும் இவர் பணியாற்றியமை சிறப்பிற்குரியது. பிரான்சில் மேடையேற்றப்படும் திருமறைக் கலாமன்ற நாடகங்களை நெறிப்படுத்துவதுடன், நடித்தும் வருகிறார்.

திருமறைக் கலாமன்றம் தயாரித்த முதலாவது வீடியோதிரைப்படத்திலும், குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி தயாரித்த 'யூதகுமாரன்' வீடியோ திரைப்படத்திலும் நடித்துள்ளார். தவிர, இலங்கை தொலைக்காட்சி சேவையான 'ரூபவாகினி'யில், திருமறைக் கலாமன்றத்தின் 'களங்கம்' நாடகத்திலும் நடித்துள்ளார்.

திருமறைக் கலாமன்றத்தினால் முதலாவதாக வெளியிடப்பட்ட சஞ்சிகைகளான 'திருமகனே தாலேலோ', 'வாகைச்சுடர்' ஆகியவற்றின் பொறுப்பாசிரியர் களில் ஒருவராகச் சிறப்புப்பணியாற்றியுள்ளார். மேலும், குருநகர் புனித யாகப்பர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களை ஒளிப்பேழையில் கொண்டுவருவதற்கு முன்னின்று உழைத்தவரும் இவரே.

### அன்ரனி செபஸ்ரியன் (மன்னன்)

இறப்பு :

நாடக எழுத்தாளரான இவர் 'துளிவிஷம்' என்னும் நாடகத்தின் மூலம், 1952 இல் கலையுலகில் கால் பதித்தார். எப்போதும் மென்மையான பாத்திரங்களையே ஏற்று நடித்துள்ளார். நாடகத்தில் இவரை புலவராகப் பார்த்திருக்கிறேன். ஒப்பனை மட்டுமல்ல உடல் தோற்றம், உரையாடல் அனைத்துமே புலவராகவே காணப்பட்டது. 'புலவரெல்லாம் இப்படித்தான் இருப்பார்கள்' என்பதை பார்வையாளர்களுக்கு சொல்லிவைத்த பெருமை இவரைச் சாரும். 15 நாடகங்கள் வரை நடித்துள்ளார். 'துளிவிஷம்' நாடகத்தில் நடித்ததன்மூலம் 'மன்னன்' என அழைக்கப்பட்டார். நீலன் என்னும் புனைபெயரில் 13 நாடகங்களை எழுதியள்ளார்.

### நீக்கிலாஸ் கிறிஸ்தோத்திரம்

இறப்பு :

சிறந்த நாட்டுக்கூத்து பாடகராகவும், ஆர்மோனியம் வாசிப்பதில் வல்லவராகவும் விளங்கிய இவர், பல நாடகங்களை இயக்கியதுடன் தமது நடிப்பாற்றல்களை பல மேடைகளில் வெளிக்காட்டியுள்ளார். மென்மையான பாத்திரங்களையே ஏற்று நடித்து பலரது பாராட்டுக்களை பெற்றுள்ளார். இவர் 15 நாடகங்கள்வரை நடித்துள்ளமையை அறியக்கூடியதாக இருக்கிறது.

### மாட்டினஸ்

இறப்பு :

பெண்கள் நாடகங்களில் நடிக்கத்தொடங்காத காலகட்டத்தில் பெண் வேடமேற்று நடிப்பதற்கு முன்வந்து பல நாடகங்களில் நடித்து பெயர்பெற்றவர். சூ.விக்ரர் அவர்கள் நடித்த காலத்தில் பெண் நடிகரின் தேவையைப் பூர்த்திசெய்தவர் இவர்தான். சுயமாகவே சந்தர்ப்பத்திற்கேற்றவாறும், மக்கள் ரசிக்கத்தக்க முறையிலும், நாடகத்திற்கமைவாகவும் உரையாடல்களை வழங்கும் திறன் படைத்தவர். அறுபதுகளில் மேடையேற்றப்பட்ட பல நாடகங்களில் நகைச்சுவைப் பாத்திரங்களை ஏற்று சிறப்புற நடித்துள்ளார். 20 நாடகங்களுக்கு மேல் நடித்த இவரின் நடிப்பாற்றலை பரவலாக அனேகரிடம் அறியக்கூடியதாக இருப்பினும், சிறப்பான தரவுகளை பெறமுடியாதிருந்தமை வேதனையானது.

### பி. பி. மரியதாஸ் (ஜான்சன்)

இறப்பு :

1968 இல் முதன்முதலாக, குருநகர் யுத் கிளப்பினால் மேடையேற்றப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டி நாடகத்தில் பெண் பாத்திரம் ஏற்று நடித்தது முதல் நடிப்புலகில் கால்பதித்தார். தனது நடிப்பாற்றலை நடை, உடை, வசன உச்சரிப்பு மூலம் சிறப்பாக வெளிக்காட்டியவர். தொடர்ந்து பல நாடக மன்றங்களின் பெண்பாத்திரத் தேவையை நிறைவுசெய்தார். 25 நாடகங்கள் வரை பெண் பாத்திரம் ஏற்று நடித்துள்ளார். பெண் பாத்திரம் ஏற்று நடிப்பவர்கள் பற்றிய விபரங்களை எவரேனும் பெரிதாக நினைவிற்கொண்டதாக அறியமுடியவில்லை.

## வின்சன் றஞ்சித்

பிறப்பு : 1953

எனது எழுத்துருவில், 1970 ஆம் ஆண்டு குருநகர் இளைஞர் கலைக் கழகத்தால் மேடையேற்றப்பட்ட 'கலையின் பரிசு' நாடகத்தில் போர்வீரனாக நடித்ததன்மூலம் கலையுலகில் காலடி பதித்தார். தொடராக பல நாடகங்களில் சிறிய வேடங்களை ஏற்று நடித்த இவர் தற்போது இத்தாலியில் வசித்துவருகின்றார். ஈழத்து மண்ணின் அவலங்களை நாடகங்களாக எழுதி இத்தாலியில் மேடையேற்றி வெற்றிகண்டவர். தாமே இயக்கி, தாமும் நடித்த பல நாடகங்கள் இத்தாலிவாழ் தமிழர்களால் பேசப்பட்டன. இதிலொரு சிறப்பு இவரது நாடகங்களில் நடித்த நடிகர்கள் அனைவரும் குருநகரைச் சார்ந்தவர்களாகவே இருந்தார்கள்.

## முத்துராசா யேசுராசா (புஷ்பராஜன்)

பிறப்பு : 1947

கலை - இலக்கியவாதியான இவர் சிறந்த கதையாசிரியராகவும் விளங்கினார். தற்போது லண்டனில் வசித்துவரும் இவர், குருநகர் இளம்பரிதி நாடகமன்றத்தால் மேடையேற்றப்பட்ட 'சாணக்கிய சபதம்' நாடகத்தில் சாணக்கியனாக வேடமேற்று நடித்து பலரின் பாராட்டுகளைப்பெற்றார். தொடர்ந்து பல நாடகங்களில் நடித்திருந்தாலும், முக்கிய வேடமேற்று நடித்ததில்லை. அவ்வப்போது, பெண் பாத்திரம் உட்பட சிறுசிறு பாத்திரங்களில் தோன்றி நடிகராக தம்மை நிலைநிறுத்திக் கொண்டார்.

லண்டனில் ஒளிபரப்பாகும் 'தீபம்' தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட 'கடலோரத்தில் ஒரு கல்வாரி' நிகழ்ச்சியின் பின்னணியாக இவர் இருந்துள்ளார்.

## மரியதாஸ் ஹேறாபட் கட்சன்

பிறப்பு : 1982

தனது ஒன்பதாவது வயதில் யாழ். சம்பத்தரிசியார் கல்லூரியில் மேடையேற்றப்பட்ட 'நல்ல சமாரியன்' நாடகத்தில் நடித்ததுமுதல் கலையுலகில் ஈடுபாட்டுடன் நுழைகின்றார். இதுவரை 20 நாடகங்களுக்கு மேல் நடித்த இவர், 'பண்டாரவன்னியன்' நாட்டுக்கூத்தில் சிறந்த நடிகருக்கான பரிசிலைப் பெற்றார். 'மன்னிப்பு' நாட்டுக்கூத்தில் நடித்ததன்மூலம் பலராலும் பேசப்படும் நிலையை எட்டினார். 'அகதிகள் புனர்வாழ்வு கழகத்'தால் 150 தடவைகளுக்குமேல் மேடையேற்றப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நெஞ்சுறுத்தும் கானல்' என்னும் நாடகத்தில் பிரதான பாத்திரம் ஏற்று நடித்துள்ளார். அகதிகள் புனர்வாழ்வு கழகத்தில் மேலும் 5 நாடகங்கள் வரை நடித்துள்ளார். இவர் பிரதான பாத்திரங்களிலேயே நடித்துவருவது குறிப்பிடத்தக்கது.

நடிகர்களைக் குறிப்பிடும்போது குருநகர் சமூகத்தைச் சாராதிருப்பினும், **'சுபா அருள்ராஜ்'** இனை மறந்துவிட முடியாது. முன்னரெல்லாம் பெண்கள் நாடகத்தில் நடிப்பதில்லை. ஆண்களே பெண் பாத்திரங்களை ஏற்று நடித்தார்கள். அக் காலகட்டத்தில் குருநகரில் இயங்கிய பல நாடக மன்றங்களின் பெண் பாத்திரத் தேவையை நிறைவேற்றிய பெருமை அருள்ராஜினையே சாரும். வேடமணிந்தால் அசல் பெண்ணாகவே காட்சியளிக்கும் அருள்ராஜ் தனது நடிப்பாற்றலால் மாறுபட்ட பல பெண் பாத்திரங்களில் நடித்துப் பாராட்டுக்களைப் பெற்றிருந்தார். அவரது சிவந்த மேனியும், மெலிதான உடலும் ஒப்பனையின் பின்னர் அவரை அசல் பெண்ணாகவே மாற்றிவிடுகிறது. குருநகரில் பெண் பாத்திரத்தை பிரதான பாத்திரமாகக்கொண்ட நாடகங்கள் இவருக்காகவே எழுதப்பட்டன. 'இடிந்தகோவில்', 'கண்திறந்தது' போன்ற நாடகங்களில் பாராட்டைப் பெற்றவர்.

**'அ. மரியதாஸ்'** என்பவரும் பெண்பாத்திரங்களில் நடிப்பவர். இளைஞர் கலைக்கழகத்தால் மேடையேற்றப்பட்ட பல நாடகங்களில் பெண் வேடமணிந்து நடித்துள்ளார். இவரும் ஒப்பனையின் பின்னர் அசல் பெண்ணாகவே காட்சியளிப்பதற்கு இவரது உடலமைப்பே காரணமாகும். மேடையில் காதற் பாடல்களைக்கொண்ட (சினிமாப்பாடல்) காட்சிகளுக்கு நடனமாடுவதில் சிறந்து விளங்கினார். 'அணைகடந்த வெள்ளம்' நாடகத்தில் மாறுபட்ட மூன்று தன்மைகளை தனது நடிப்பாற்றலால் வெளிப்படுத்துவதில் வெற்றிகண்டார்.

## ஒப்பனை

### ஜீ. பி. துரைராஜா

இறப்பு : 1980

இவர் சிறந்ததொரு ஓவியர். நாடகப் பாத்திரங்களுக்கு ஒப்பனை செய்வதில் விற்பன்னர். ஒரு நடிகனை நாடகத்தின் பாத்திரமாகவே மாற்றியமைப்பதில் திறமை படைத்தவர். நான் நாடகத்துறையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த காலகட்டத்தில் வாழ்ந்தவரென்பதால் அவருடன் அதிகமாகப் பழகக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. அமைதியான மனிதர். ஒப்பனைத் தொழில் நுட்பங்களை மற்றவர்களுக்குச் சொல்லிக்கொடுத்து பயிற்றுவிப்பதற்குத் தயங்குபவரல்லர். ஒப்பனையில் ஏற்படும் செலவினத்தைக் குறைப்பதற்கான வழியையும், ஒப்பனைக்கான அரிதாரம் கலவையாக்கும் முறையையும், இலகுவான ஒப்பனை நுணுக்கங்களையும் எனக்குச் சொல்லித்தந்து ஊக்குவித்தமையை என்னால் மறக்கமுடியாது. இதனால் என்னைப்போல பலர் தாமாகவே ஒப்பனை செய்யக்கூடிய ஆற்றலைப் பெற்றுள்ளமையை மறுப்பதற்கில்லை. இவரது மகன் தனராஜ் வரைந்த ஓவியத்தின் திறமைக்காக வெளிநாட்டுக்கு அழைக்கப்பட்டவர் என்பது சிறப்பிற்குரியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனவல் றொபேட் சூசைநாதன் (றூபட்)

இறப்பு : 1987

பாடசாலையில் கல்விகற்கும் காலத்திலேயே ஒப்பனை செய்வதில் ஆர்வமுள்ளவராக விளங்கினார். சக நண்பர்களுக்கு சிகை அலங்காரம் செய்வதை, அரிதாரம் பூசுவதை விளையாட்டாகச் செய்துவந்தார். தனக்குத்தானே பல வேடங்களில் ஒப்பனை செய்து அதனை படம்பிடித்து வீட்டில் வைப்பது இவரது பொழுதுபோக்குகளிலொன்று. இதிகாச பாத்திரங்கள், ஆண்கள் ஏற்கும் பெண் பாத்திங்கள், இயல்புநிலைப் பாத்திரங்களுக்கு தனது ஒப்பனைத் திறனால் மெருகூட்டி பெருமைபெற்றவர். பாராட்டுக்களையும் பெற்றவர்.

1960 இல் குருநகர் சனசமூகநிலையம் நடத்திய விளையாட்டுப்போட்டியில், 10 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்ட வினோத உடைப்போட்டிக்கு பிரபல ஹொலிவூட் நடிகர் அன்ரனிகுயின் அவர்கள் நடித்த கூனல் பாத்திரம் போன்று ஒருவரை ஒப்பனை செய்து பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றதோடு, முதற் பரிசுக்கு தேர்வுசெய்யப்பட்டது.

ஒப்பனைக் கலையில் பல நுட்பங்களைப் புகுத்தி திறமையாக செயற்பட்டமையால், சினிமாஸ் கம்பெனி விஜயா ஸ்ரூடியோவில் சிங்களத் திரைப்படங்களுக்கு ஒப்பனையாளராக தேர்வுசெய்யப்பட்டுப் பணியாற்றினார். அதே ஸ்ரூடியோவில் 'எடிட்டர்' ஆகவும் கடமையாற்றினார்.

விஜயா ஸ்ரூடியோவில் கடமையாற்றியதாலோ என்னவோ, புகைப் படப்பிடிப்பில் பல புதுமைகளையும், கோணங்களையும் புகுத்தினார். இவரது திறமையான படப்பிடிப்பு கோணங்கள் பல பிரதான வீதியிலிருந்த லீலா ஸ்ரூடியோவில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

## இலக்கியம்

ஜுலை 2003 இல் வெளியிடப்பட்ட எனது 'குருநகர் கலைமாட்சி' நூலில், வெளிக்கொண்டு வரப்பட்ட கலை – இலக்கிய வெளியீடுகள், இயங்கிய மன்றங்கள், எழுத்தாளர்கள், நாட்டுக்கூத்து அண்ணாவிமார்கள் போன்றவற்றிலிருந்து குருநகரின் இலக்கியச் செழிப்பை ஓரளவேனும் அறியக்கூடியதாக இருந்திருக்கும் என நம்புகின்றேன்.

இதற்கு சிகரம் வைத்தாற்போல் திரு. அ. யேசுராசா அவர்கள் கலை – இலக்கியத்துறையில் சிறப்பாக பங்களித்தமையைப் பாராட்டி மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் 2005 இற்கான **'கலா கீர்த்தி'** விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டிருந்தார். குருநகரில் இத்தகைய அதிஉயர் விருது கிடைத்த முதலாமவர் என்பதற்காக எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இத்தகைய உயர்ந்த விருது கிடைப்பதே அரிதானது. ஆயினும் அவர் அதனை நிராகரித்துள்ளார். நிராகரிப்பை வெளிப்படுத்த அவர் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியைத் தருகிறேன்.

"...'இரண்டாந்தரப் பிரஜை' என்ற உணர்வுடனேயே இந்தநாட்டில் வாழ தொடர்ந்து நிர்ப்பந்திக்கப்பட்டுவரும் தமிழ் மக்களில் ஒருவன் என்ற வகையில், கசப்பான இந்த யதார்த்தநிலைமீது கவனத்தைக் குவியச்செய்யும்பொருட்டு, 'கலா கீர்த்தி' விருதினைப் பெற்றுக்கொள்வதில் எனது விருப்பமின்மையைத் தெரிவிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி செயலகம்

THE PRESIDENTIAL SECRETARIAT

October 31, 2005.

Dear Sir

**National Honours - 2005**

I have the honour to inform you that Her Excellency the President has been pleased to confer on you the National Honour of **Kala Keerthi** ............... in recognition of the services rendered by you to the nation in the field of activity you have been engaged in.

A ceremony for the conferment of National Honours will be held at the **Bandaranaike Memorial International Conference Hall (BMICH) on 14th November, 2005 at [illegible] p.m.**

I shall thank you to keep this date free and make yourself available on this occasion. A formal invitation and 03 admission and seating cards for yourself and your guests (two) with a car label will be sent to you shortly. Please inform me by return the names of your two guests and the numbers of their National Identity Cards. These details could be faxed to [illegible]

Kindly acknowledge receipt of this letter.

Yours faithfully,

W J S Karunaratne
**Secretary to the President**

இனங்களுக்கிடையில் சமத்துவமற்ற நிலைமை – பல தளங்களில் – இருந்து வருவதுதான், இன்று இலங்கையில் நாமெல்லோரும் எதிர்கொள்ளும் அவலமான – நெருக்கடிகளின் அடிப்படை என்பது எல்லோராலும் உணரப்படவேண்டும்; அந்த நிலைமையை மாற்றுவதற்குரிய நேர்மையான – வெளிப்படையான செயற்பாடுகளே இக்காலகட்டத்தில் இன்றியமையாதனவாய் உள்ளன. இனப்பாரபட்ச நடவடிக்கைகள் – நிலைமைகள் பற்றிய விரிவான விளக்கங்களைத் தவிர்க்கிறேன்; எனினும், தங்களின் விருது பற்றிய அறிவிப்புக் கடிதங்கூட எனது தாய்மொழியான தமிழில் அமைந்திருக்கவில்லை என்பதைக் கவலையுடன் அறியத்தருகிறேன்...."

## வெளியீடுகள்

ஜுலை 2003 இல் வெளியிடப்பட்ட எனது 'குருநகர் கலைமாட்சி' நூலில் 51 நூல்கள், 11 சஞ்சிகைகள், 10 தொகுப்பு மலர்கள், 2 தொகுப்பு இதழ்கள் ஆகியவை வெளியிடப்பட்ட விபரங்களைத் தந்துள்ளேன். அந்நூல் வெளியிடப்பட்ட பின்னர் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் அதன் தொடராக இங்கே தருகின்றேன்.

### நூல்கள்

51. Modern Fourier- Trans form Infrared Spectroscopy - (U.S.A)
    2001 அ.அ.கிறிஸ்ரி (இணையாசிரியர்)
52. NIR Spectroscopy in Food Science and Technology - (U.S.A)
    2005 அ.அ.கிறிஸ்ரி (இணையாசிரியர்)
53. களம் தந்த களங்கம் — 2003 — கு. இராயப்பு
54. குருநகர் கலைமாட்சி — 2003 — கு. இராயப்பு
55. பதிவுகள் — 2003 — அ. யேசுராசா
56. சரம் — 2004 — ஆர். ஏ. நாயகி
57. மீண்டும் வரும் நாட்கள் (லண்டன்) — 2004 — மு. புஷ்பராஜன்
58. அந்தக் கரையில் (பிரான்ஸ்) — 2005 — எமிலியான் ஜோய்
59. புயலுக்குப்பின் (நாவல்) (பிரான்ஸ்) — 2005 — மா. கி. கிறிஸ்ரியன்
60. நெஞ்சுறுத்தும் கனல் — 2005 — ஜெ. டானியல்
61. அரியை மாற்றிய நரியாத்தா — 2005 — எஸ். எஸ். தங்கராசா

### சஞ்சிகைகள்

12. பெயர் : **தெரிதல்** (இருமாத இதழ்) 2003 முதல்
    ஆசிரியர் : அ. யேசுராசா
    வெளியீடு: 'தெரிதல்' வட்டம், குருநகர், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பெயர் : **திரு இருதயம்** 2005
ஆசிரியர் : சி. தார்சீசியஸ்
வெளியீடு: திரு இருதயசபை, புனித யாகப்பர் ஆலயம்.

## இசை

'குருநகர் கலைமாட்சி' நூலில் பிரல்பல்யமாக விளங்கிய இசைக் கலைஞர்களில் சிலரைக் குறிப்பிட்டிருக்கிறேன். தனித்துவமான திறமைகளுடன் பல இசைக் கலைஞர்கள் அவ்வப்போது தோன்றி மறைந்தபோதும், நாட்டுக்கூத்து பாடுவதில் பலர் சிறப்புற்று விளங்கியபோதும் குருநகரைப் பொறுத்தவரை குருநகருக்கென, இசைக்குழுவாக இணைந்து எவரும் இயங்கியதில்லை. நாட்டுக்கூத்து என்னும்போது 'ஆர்மோனியம்' வாசிப்பதற்கு நீ. கிறிஸ்தோத்திரம், மேளம் அடிப்பதற்கு சவிரியான், இராசையா (பச்சத்தண்ணி இராசையா) என அழைக்கப்பட்டு அவர்களின் சேவையைப் பெற்றார்களேயன்றி குருநகருக்கென இசையாளர்களை இணைத்து அதனை ஒரு குழுவாகப்பேண எவரும் முன்வரவில்லை. இசையில் திறமையுடன் விளங்கிய பலர் பல்வேறு இசைக்குழுக்களுடன் இணைந்து செயற்பட்டார்கள், பலராலும் பேசப்பட்டார்களே தவிர தமக்கென ஒன்றை உருவாக்கவில்லை. இந்நிலையில் 1979 ஆம் ஆண்டு குருநகர் கலையரங்கில் நடைபெற்ற, குருநகர் இளைஞர் கலைக்கழகத்தின் ஆண்டுவிழா நிகழ்வில் 'குருநகர் இசைக் கலைஞர்கள், பாடகர்கள்' மட்டும் பங்குபற்றிய இசைநிகழ்ச்சி நடத்தப்பட்டமை ஒரு முக்கிய நிகழ்வாகும்.

மோர்ச்சங், மென்ரிலின், கொன்னக்கோல், தபேலா போன்ற இசைக் கருவிகளில் மிகுந்த ஆற்றல் பெற்றிருந்த (குருவின்றி) திரு எஸ். என். ஜேம்ஸ் அவர்கள், திரு. செ. செல்வம் அவர்களின் வாய்ப்பாட்டிற்கு தனியொருவராய் இசையமைத்த நிகழ்ச்சி குருநகர் கலையரங்கில் நடைபெற்றது. இதற்கான களம் குருநகர் இளம்பரிதி நாடகமன்றத்தால் வழங்கப்பட்டது.

குருநகருக்கென இசைக்குழுவினர் இல்லையே என்ற ஆதங்கம் ஆடி 2005 இல் ஆரம்பித்து வைக்கப்பட்ட **'சென் ஜேம்ஸ் இசைக்குழு'**வின் தோற்றத்துடன் நிறைவுபெறுகின்றது. இசைத்துறையில், நவீன தொழில்நுட்ப யுகத்தில் ஈடுபாடுகொண்ட பல இளைஞர்கள் இணைந்து உருவாக்கிய இந்த இசைக்குழு குறுகிய காலத்தில் பல வெற்றிப் பயணங்களை மேற்கொண்டுள்ளது. இவர்களது இசை நிகழ்ச்சிகளைக் காணத் திரளும் மக்கள்கூட்டம் இவர்களது இசை வழங்கலின் சாதுரியத்தை எடுத்தோதத் தவறவில்லை.

மிகக் குறுகிய காலத்தில் குருநகர் மக்கள் அனைவர் மனங்களிலும் தம்மை தக்கவைத்துக் கொண்டமை இவர்கள் திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். நவீன தொழில்நுட்ப யுகத்தில் இணைந்திடும் வகையில் தம்மை தயார்படுத்திக் கொண்டமை இதன் வளர்ச்சிக்கு கட்டியம்கூறி நிற்கிறது. தமது எதிர்காலத் தேவையை உணர்ந்து, தமக்கென 'ஒலிப்பதிவு கலையகம்' ஒன்றையும் உருவாக்கி வரலாற்று சாதனை செய்துள்ளார்கள். என் எதிர்பார்ப்பின் வேகத்திற்கு ஈடுகொடுத்தாற்போல் பல சாதனைகளைச் செய்தமைகண்டு என் மனம் மகிழ்கின்றது. அதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு நன்றிகளைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இவர்களது முழுமையான தயாரிப்பில் 'இறுவட்டு' வெளிவரவிருக்கின்றமை பாராட்டுக்குரியது. தற்போது உள்ளூரில் சிறப்புப்பெற்றுவரும் இவ் இசைக்குழுவினர் வெவ்வேறு இடங்களிலும் இசை நிகழ்ச்சிகளை நடத்தி பாராட்டுக்களைப் பெறுவார்கள், அனைவரையும் கவர்ந்திழுப்பார்கள் என்ற நம்பிக்கையை அவர்களின் இணைந்த செயற்பாடுகள் எடுத்துக்காட்டத் தவறவில்லை.

ஜுலை 2003 இல் வெளியிடப்பட்ட எனது 'குருநகர் கலைமாட்சி' நூலில், 3 ஒலிநாடா, இறுவட்டு ஆகியவை வெளியிடப்பட்ட விபரங்களைத் தந்துள்ளேன். அதன் தொடராக...

## இறுவட்டு

| | | |
|---|---|---|
| 4. குருதிநாதம் | அண்ணாவி அ. மனோகரன் | 2004 |
| 5. குழந்தைப் பாடல்கள் | திருமதி ஜெயந்தி ஜீவா | 2005 |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 17. சிற்பம் – ஓவியம்

சிற்பமும் ஓவியமும் வெவ்வேறாக இருந்தாலும், அநேகரிடம் இரண்டு திறமைகளும் இணைந்தே காணப்படுகின்றது. இவர்களிலும் முழுமையைப்பேண முடியவில்லை. இவை ஏனைய துறைகளைப் போலன்று. ஒரு அறையில் தனித்தே செய்யப்படுவதால் மற்றவர்கள் பலர் அறியாமலே இருந்துவிடுகிறார்கள். இதனால் பலரது திறமைகள் வெளிவராமலே உறைந்துவிட்டது. கிடைத்தவற்றை வெளிக்கொண்டுவருகிறேன்.

**யக்கோ** (சந்தியோகு மேஸ்திரி)
இறப்பு :

இவர் நான் அறியாத காலத்தில் வாழ்ந்த திறமைமிக்க சிற்பாசாரியாரும், மேஸ்திரியுமாவர். இவரது இயற்பெயர் 'யக்கோ' ஆனால் 'சந்தியோகு' (யக்கோவின் இணைபெயர்) என்னும் பெயரிலேயே பிரபல்யமானார். இவர் சிறந்த நாட்டுக்கூத்து எழுத்தாளருமாவார். 1856 களில் 7 நாட்டுக்கூத்துகளை எழுதியுள்ளார்.

இவரது கட்டிடக்கலையின் சிறப்பிற்கு கட்டியம்கூறி நிற்பது, 1876 ஆம் ஆண்டு, குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் முருகக் கற்களால் கட்டிமுடிக்கப்பட்ட மாபெரும் 'தூபிமாடமே'யாகும். உள்நாட்டு, வெளிநாட்டு கட்டடக் கலை நிபுணர்களை ஆச்சரியத்தில் மூழ்கவைத்து, 1993 இல் 'சுப்பர்சோனிக்' குண்டுத் தாக்குதலுக்கும் முகங்கொடுத்து இன்றும் தலைநிமிர்ந்து நிற்கின்றது. மேலும் இவரது திறமைக்கு எடுத்துக்காட்டாக, யோண் எச். மாட்டின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் 'யாழ்ப்பாணத்தைப் பற்றிய குறிப்புகள்' நூலில் குறிப்பிட்டுள்ளதை இங்கே தருகிறேன்.

*"யாழ்ப்பாணத்திலே சித்திரங்கள் வரைவதில் திறமை வாய்ந்து ஐரோப்பியர்களாலும் பாராட்டப்பட்டவருள் மேஸ்திரி சந்தியோகு ஒருவராவர். இவர் குருநகர் வாசியும், சந்தியோகு அப்போஸ்தலர் பங்கைச் சேர்ந்தவருமாவர். இவரால் நிர்மாணிக்கப்பட்ட சந்தியோகுமையோர் ஆலயத்தின் தூபி வியப்புக்குரியது."*

இவர் பல சுருவங்களையும் செதுக்கியுள்ளார். முழுமையான விபரங்களை அறியமுடியாவிட்டாலும் யாழ். கொஞ்செஞ்சி மாதா பேராலயத்தின் (ஆசனக்கோவில்) பீடத்தின் பின்னாலுள்ள சிலுவையில் அறையுண்ட யேசுவின் சுருபம், உயிர்த்த ஆண்டவர் சுருபம், புனித யாகப்பர் ஆலயத்தின் பீடத்திலுள்ள சிலுவையில் அறையுண்ட யேசுவின் சுருபம் போன்றவை சந்தியோகுவின் முத்திரைகளாக இன்றும் காட்சிதருகின்றன.

## யக்கோ அவுறான் லியோ

இறப்பு : 1987

இவர் யக்கோ (சந்தியோகு) வின் பேரனாவார். சந்தியோகுவுக்கு எந்தவகையிலும் சளைத்தவரல்ல என்பதை மேஸ்திரி லியோ, தன் வாழ்நாளில் நிரூபித்துள்ளார். தனது 14 வது வயதில் சிற்ப வேலைகளைத் தொடர்ந்த இவர் பலரும் வியப்புறும்வண்ணமும், பாராட்டும்வண்ணமும் அற்புதமான சுருபங்களை வடித்துள்ளார். 1950 இல் புத்தளம், தலைவில்லு 'சந்தானமாதா' ஆலயத்தில் சிலுவைப்பாதை சிற்பங்களை (யேசுவின் இறுதிப் பாடுகளைச் சித்தரிக்கும் 14 ஸ்தலங்கள்) அற்புதமாக வடித்துள்ளார். இலங்கையில் முதல்முதல் இத்தகைய சிற்பங்கள் வடிக்கப்பட்டது எனப் பலராலும் கூறப்படுகிறது.

மரத்தில் செதுக்கப்பட்ட அருட்சிநிறை கல்லறைச் சுருபங்கள் தாளையடி, பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம், குருநகர் புனித யாகப்பர் ஆலயம் (1947) ஆகிய மூன்று இடங்களில் வைக்கப்பட்டுள்ளது. கல்லறை ஆண்டவர் சுருபமானது, யேசு சிலுவையில் அறையப்பட்ட நிலையில் யேசுவுக்கு ஏற்பட்ட உடல் வேதனை குறித்தும், மரணித்த காட்சி குறித்தும் தெளிவுபடுத்துதலுக்காய் பாரிய சிலுவை மரத்தில் அறைந்து இறக்க பயன்படுத்தப்படுகின்றது. அதற்கு ஏற்றாற்போல் கைகள் விரித்து மடிப்பதற்கும் தலை நிமிர்ந்து கவிழ்வதற்கும் ஏற்றவாறு மனிதனின் சாதாரண உருவஅளவில் செதுக்கப்படுகிறது. அந்தச் சுருவத்தை பார்ப்பவர்களுக்கு கருணை பிறக்காமலிருக்க முடியாது. வருடாவருடம் பாஸ்கு காலத்தில் புனித யாகப்பர் ஆலயத்தில் காண்பிக்கப்படும் 8ஆம் பிரசங்க வாசிப்பு நிகழ்வில் இவர் வடித்த கல்லறை ஆண்டவர் சுருபமே இன்றுவரை பயன்படுத்தப்படுகின்றது.

இவரது கைவண்ணத்தில் மடு தேவாலயத்திலுள்ள வரவேற்பு மாதா சுருபம் உட்பட அதன் சுற்றாடலிலுள்ள சுருபங்கள். கஞத்துறை, மகோனா மடம், மட்டக்கிளப்பு தேத்தாதீவு புனித யூதா ததேயு ஆலயத்திலுள்ள சிலுவைப்பாதைச் சிற்பங்கள், யூதா ததேயு சுருவம் போன்றவை இவரது சிறப்பை எடுத்தோதிக் கொண்டிருக்கின்றன. இவரது கைவண்ணத்தில் இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களில் பல சுருபங்கள் தத்ரூபமாய் அமைக்கப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

மேலும் இவரது திறமைக்கு வலுவூட்டி நிற்பது 1974 ஆம் ஆண்டு கட்டப்பட்ட குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் முகப்பிலுள்ள இரண்டு தூபிமாடங்களாகும். நவீன தொழில்நுட்ப யுகத்தில் சாரம் போட்டு – இரும்புக் கம்பிகள், சீமேந்து, கல், மண் கலவைகொண்டு நிரவி எதனையும் இலகுவில் சாதிக்கும் நேரத்தில், சீமேந்து, கல், மண் கலவையில் கல் அரிந்து அதனை அடுக்கி (சந்தியோகு மேஸ்திரி செய்ததைப்போல்) தூபிமாடத்தை உறுதியாக நிர்மாணித்துள்ளார். இதனை நிர்மாணிக்கும்போது நானும் பார்க்ககூடியதாக இருந்தது. எனக்கேற்பட்ட வியப்பை சொல்லில் வடிப்பதற்கில்லை.

## பிலிப் மாணிக்கத்தம்பி

இறப்பு : 1970

கற்பனைச் சித்திரங்கள், சமய விளக்கச் சித்திரங்கள், உயிர் ஓவியங்களை வரைவதில் சிறந்து விளங்கியவர் மாணிக்கத்தம்பி. இவரது தகப்பனாரும் சிறந்த ஓவியர். 'மேஸ்திரி' என அழைக்கப்பட்டார். தகப்பன் ஓவியராக இருந்தமையால் சிறு வயதிலிருந்தே ஓவியங்களை வரையும் ஆற்றலைப் பெற்றிருந்தார். இவரது திறமை காரணமாக இவரும் 'மேஸ்திரி' என அழைக்கப்பட்டார். இலங்கையின் பல பாகங்களிலும் இவர் தமது கைவண்ணத்தை பதித்துள்ளார். யாழ். பிரதான வீதியில் அமைந்திருந்த அங்கிலிக்கன் தேவாலயத்தின் பின்புறத்தில் கண்ணாடியில் வரையப்பட்டிருந்த கிறிஸ்து அரசரின் ஓவியம் பலராலும் பாராட்டப்பட்டு வியப்புடன் நோக்கப்பட்டது. மடுவில் உள்ள சிற்றாலயத்தில் வரையப்பட்டிருந்த ஓவியங்கள் இவராலேயே வரையப்பட்டதாகும்.

புகைப்படக் கலை அறிமுகமான ஆரம்பத்திலேயே யாழ்ப்பாணத்தில் புகைப்படக் கலையை ஆரம்பித்துவைத்ததுடன், அதற்காக ஈடுபாட்டுடன் உழைத்து பிரபல்யமானார். பிரதான வீதியில் 'லில்லி ஸ்ரூடியோ'வை நடத்திவந்தார். இவரால் பயிற்றப்பட்ட படப்பிடிப்பாளர்களில் 'ஞானம்ஸ் ஸ்ரூடியோ' உரிமையாளரும் ஒருவராவர். இவரது பணியை இவரது மகன் நீக்கிலாஸ் 'செல்லம்ஸ் ஸ்ரூடியோ' மூலம் தொடர்ந்தார்.

## தோமஸ் மனவல்தம்பி

இறப்பு : 1960

மரக்குற்றியிலும் மற்றும் சீமேந்து, பிளாஸ்ரர் ஒவ் பரிஸ் போன்றவற்றைக் கொண்டும் பலவகைப்பட்ட சிலைகள், சுருவங்கள் செதுக்குவதில் கைதேர்ந்தவர். இவரால் செதுக்கப்பட்ட பலநூறு சுருபங்கள், சிலைகள் இலங்கையின் பலபாகங்களிலுமுள்ள ஆலயங்களிலும், பொது இடங்களிலும் இன்னமும் உயிரோட்டத்துடன் காணப்படுகின்றன. குறிப்பாக குருநகர் புதுமைமாதா ஆலயத்தில் உள்ள சுருபங்கள், நாவாந்துறை சென் மேரிஸ் ஆலயத்தின் மத்தியில் உள்ள மரத்தினால் செய்யப்பட்ட சிலுவையில் அறையுண்ட யேசுநாதரின் சுருபம். மாட்டின் செமினறிக்கு மத்தியில் உள்ள மடுமாதா சுருபம், மூலையில் அமைந்திருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரலோக மாதா சுருபங்கள் இவர் திறமைக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. இவரால் மரத்தில் செதுக்கப்பட்ட அருட்சிநிறை கல்லறைச் சுருபம் முல்லைத்தீவு ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இவரது பணியை பிள்ளைகள் தொடரவில்லை. ஆனால் ஆசிரியர் கிறிஸ்ரி, ஆசிரியர் விக்ரர் ஆகியோர் சிறந்த ஓவியர்களாக இருந்திருக்கிறார்கள்.

## வரப்பிரகாசம் அலெக்ஸ்சாண்டர்

இறப்பு 1998,

சீமேந்து, பிளாஸ்ரர் ஒவ் பரிஸ் போன்றவற்றைக்கொண்டு உயிரோட்டமுள்ள சிலைகளை, சுருபங்களை செதுக்குவதில் வல்லவர். இவர் சுருபம் செய்யும் அழகை நான் பலதடவை பார்த்து மகிழ்ந்திருக்கிறேன். சித்திரங்களும் வரையக்கூடியவர். ஆனால் சுருப வேலைகளிலேயே சிறந்து விளங்கினார். இவர் வடித்த, புதுமைமாதா கோவில் மூலையில் இருக்கும் மாதா சுருபம், கடற்கரை வீதியிலுள்ள அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் சிலை போன்றவற்றை இன்றும் காணலாம். யாழ்ப்பாணம், மன்னார் போன்ற இடங்களிலுள்ள ஆலயங்களில் இவரால் செதுக்கப்பட்ட பல சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன.

## வரப்பிரகாசம் கிளமென்ற் (புஸ்பநாயகம்)

பிறப்பு : 31.03.1926

தனது வாழ்வின் பிற்பகுதியிலேயே சிற்பத்துறையில் நாட்டங்கொண்டு ஈடுபட்டார். ஆயினும் 100 இற்கும் மேற்பட்ட சிற்பங்களை வடித்துள்ளார். பல ஆலயங்களில் பீடத்தில் வைக்கப்பட்டிருக்கும் 'சிலுவையில் அறையுண்ட யேசு'வின் சுருபம் இவரால் வடிக்கப்பட்டதாகும். செம்பியன்பற்று, தாளையடி, மாரிசங்கூடலலில் உள்ள ஆலயங்களில் இவரால் செதுக்கப்பட்ட சுருவங்களை காணலாம். குருநகர் யாகப்பர் ஆலயத்தில் நிறுவப்பட்டுள்ள வியாகுல மாதாவின் சுருபம் இவரது திறமைக்குச் சான்றாக விளங்குகின்றது.

## ஆசீர்வாதம் கிறிஸ்ரியன் (கிறிஸ்ரி)

பிறப்பு : 03.11.1933

தனது இருபதாவது வயதில் சிற்பங்கள் செதுக்கும் துறையில் ஈடுபடத் தொடங்கினார். இத்துறையில் சிறுகச்சிறுக முன்னேற்றமடைந்த இவர் 700 இற்கும் மேற்பட்ட, சிறியதும் – பெரியதுமான சிற்பங்களைச் செய்துள்ளார். 1974 இல் நடைபெற்ற தமிழாராச்சி மாநாட்டின்போது அதன் நினைவாக குருநகரில் திறந்து வைக்கப்பட்ட ஒரேயொரு சிலை 'சுவாமி ஞானப்பிரகாசர்'இன் சிலையாகும். இதனை நிர்மாணித்தவர் இவரேயாவார். குருநகர் அண்ணா எம்.ஜி.ஆர். மன்றத்தினரால் குருநகரில் நிறுவப்பட்டுள்ள அண்ணாத்துரை மற்றும் எம்.ஜி.ஆர். இன் பாரிய சிலைகள் இவராலேயே உருவாக்கப்பட்டன.

குருநகர் புனித யாகப்பர் ஆலயம், குருநகர் கார்மேல் மாதா ஆலயம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். அடைக்கலமாதா ஆலயம், நாவாந்துறை புனித நீக்கிலாஸ் ஆலயம், ஆனைக்கோட்டை அடைக்கலமாதா ஆலயம் மற்றும், யாழ்ப்பாணம், நெடுந்தீவு, ஏழாலை, தாளையடி, புதுக்குடியிருப்பு போன்ற இடங்களிலுள்ள ஆலயங்களில் இவரால் நிர்மாணிக்கப்பட்ட பல சுருவங்களைக் காணலாம்.

தற்போது இவரால் 'சமாதானத்தின் சிலை' அற்புதமாக வடிக்கப்பட்டுள்ளது. அச்சிலையானது தமிழ்த்தாய், சமாதானத்தின் சின்னமான புறாவை இருகரங்களாலும் உயர ஏந்தியவாறு காணப்படுகின்றது.

## பெனடிற் சைமன் கிளைவ்

பிறப்பு : 05.04.1940

இவர் மேஸ்திரி யக்கோ அவுறான் லியோ அவர்களின் பெறாமகனாவார். தனது பெரிய தந்தைக்கு ஒத்துழைப்பு வழங்கியதன்மூலம் பெற்ற பட்டறிவைக் கொண்டு தாமும் சிற்ப வேலைகளைச் செய்யத்தொடங்கினார். லியோவின் வழியைப் பின்பற்றி சில்லாலையிலுள்ள ஆலயத்திற்கு மணிக்கூண்டிற்கான தூபிமாடத்தை கற்களால் கட்டி முடித்தார். மடு றோட், குஞ்சிக்குளம் போன்ற இடங்களில் இவரது கைவண்ணத்தைக் காணலாம்.

யாகப்பர் ஆலயத்தின் பிரதான தூபிமாடத்திற்கு வலம், இடமாக நிறுவப்பட்டிருக்கும் சிலைகள் (குண்டுத் தாக்குதலில் சேதமடைந்ததன் பின்னர்) இவரால் நிறுவப்பட்டவைகளாகும். யாழ். அடைக்கலமாதா ஆலயத்தின் சுற்றாடலில் அமைந்துள்ள சிலுவைப்பாதை சிற்பங்களும் இவரால் நிறுவப்பட்டவைகளாகும். தற்போதும் சிற்ப வேவைலைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்பட்டுவருகிறார்.

## கிளமென்ற் மரியசீலன் (ரவி)

பிறப்பு : 06.01.1956

தனது 18வது வயதிலிருந்தே சிற்பங்கள் செய்வதிலும், சித்திரங்கள் வரைவதிலும் ஈடுபட்டு வருகிறார். தந்தையாரான வ. கிளமென்ருடன் இணைந்து பல சுருவங்களை வடித்துள்ளார். கொஞ்செஞ்சி மாதா ஆலயத்திலுள்ள புனித வின்சென் டி போல், லூசியா வினது உருவங்கள் இவரால் செய்யப்பட்டதாகும். யாழ். பொது நூலகத்து முன்றலில் நிறுவப்பட்டிருக்கும் வண. லோங் அடிகளாரின் சிலை இவராலேயே வடிக்கப்பட்டதாகும். இவரது திறமைக்கு இது சான்றாக விளங்குகின்றது. நெடுந்தீவில் நிறுவப்பட்டிருக்கும் ஞானப்பிரகாசரின் சிலையும் இவரது கைவண்ணமே.

## அமிர்தநாதர் யேசுதாசன்

பிறப்பு : 1939

சிறு வயதிலிருந்தே தச்சு வேலையில் ஆர்வமாய ஈடுபட்ட இவர் 1970 இல் 'அருள்ஸ்' என்ற மரவேலையுடன் சம்பந்தப்பட்ட கைவினை வேலைகளை உள்ளடக்கியதான ஒரு தொழிற்சாலையை நிறுவி 1995 வரை திறம்பட நடத்திவந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க ஆலயங்களில் ஆராதனைக்குரிய பீடங்கள், தேர், இரதங்கள், சுரூப கூடுகள் போன்றவற்றை வடிவமைப்பதில் இவர் கைதேர்ந்தவர். இவரது சிறப்பான வேலைகளை, யாழ். மாவட்டம், மன்னர் மாவட்டம், கொழும்பு, மலைநாடு போன்ற இடங்களில் இன்றும் காணலாம்.

முக்கியமாக குருநகர் புதுமைமாதா ஆலய சித்திரத்தேர், குருநகர் கார்மேல்மாதா ஆலயம், புனித யாகப்பர் ஆலயம், நாவாந்துறை பரலோகமாதா ஆலயம் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் இரதங்கள் இவரால் வடிவமைக்கப் பட்டவைகளாகும். யாழ். மாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க ஆலயங்களில் இவரது கைவண்ணம் காணப்படாத ஆலயங்களே இல்லை எனலாம். மடு தேவாலயத்தில் மடுமாதாவை சுற்றுபிரகாரமாகக் கொண்டுவரப்படும் இரதத்தில் வைக்கப்பட்டிருக்கும் 6 குத்துவிளக்ககள் இவரால் மரத்தில் செய்யப்பட்டதாகும். இதற்கு தங்க நிறம் பூசப்பட்டிருப்பதால் மரத்தால் செய்யப்பட்டதென்பதை உணர முடிவதில்லை. யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரமத்திலுள்ள பீடம் இவரால் வடிவமைக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. மண்ணின் நினைவுகள்

நான் புலம்பெயர்ந்து வாழ்ந்த காலங்களில் குருநகர் மக்கள் சந்தித்த அவலங்கள் பல. அவைகளெல்லாம் எழுத்தில் வடிக்கமுடியாதவைகள். 1994 இல் விடுமுறையில் சொந்த மண்ணிற்கு வந்தபோது பகிர்ந்துகொண்ட அனுபவங்களை வெளிக்கொண்டுவரவேண்டுமென்ற துடிப்பில் நிறைவுபெற்றவை சில. அவற்றையும் மண்சார்ந்த கவிதைகள் சிலவற்றையும் இந்நூலின் இணைப்பாகத் தருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவலத்தின் இராகங்கள்

கடல் வெளிப் பரப்பில்
துப்பாக்கிகள்
தொடர் இராகம் இசைத்துக்கொண்டிருந்தது.
உறக்க மின்மையால்
அடிவானம் போல்
சிவந்திருந்த கண்கள்
எரிவை ஊட்டிடத் தவறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிக்கும் உள்ளத்துடன்
மக்களோடு மக்களாய்
கடற்கரையை வெறித்துப் பார்த்தபடி நிற்கிறேன்.
கதிரவன் விழித்தெழுகிறான்.

மீன் பிடிக்கச் சென்ற
ஓடங்கள் வந்தன
சில ஓடங்களில்
மீன்பிடி பொருட்களுடன்
சடலங்களும் கிடந்தன
வானம் இடிந்தது போல் கூக்குரல்

இரத்தத்தில் மூழ்கி வந்தவர்கள்
சிலரது சேதியை மட்டும் சொன்னார்கள்.
கடலலையின் ஓசையையும் மீறி
கரையெங்கும் அழுகுரல்

அடையாளம் கண்டவர்கள்
கனக்கும் இதயங்களுடன்
பிணங்களைத் தூக்கிச் சென்றார்கள்.
கடைசியிலும் முகத்தைக்
காண முடியாதவர்கள்
கதறிய வண்ணம்
கலைந்து கொண்டிருந்தார்கள்.

அழுகுரல் சத்தம் இரவுபோல்
தொடர் இராகமாய்க் கேட்டுக்கொண்டிருந்தது.
உலகத்தின் காதுகளுக்கு
அவலத்தின் இராகங்கள்
கேட்குமா?

*(ஆனி 1994 இல் குருநகரில் நிகழ்ந்த சம்பவங்கள் நினைவாக)*
**'அவலத்தின் இராகங்கள்'** (சுவிஸ்) – 1995


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவு

எறிகணைகள் ஒருபுறம்
குண்டு வீச்சுக்கள் ஒருபுறமாய்
ஓட ஓட விரட்ட
உடுத்திய உடுப்புடன்
குழந்தையும் கையுமாய்
குதிகால் அடிபட ஓடியபோது.

தட்டாமல் கதவைத் திறந்து
தங்கிட இடமும்
உண்டிட உணவும் தந்து
உபகாரம் செய்தவரை
யாரென்றே தெரியாது.

ஆனால்
உறவினர் என்று சொல்லிட
அவர்களையன்றி
எவரை நான்
முன்மொழிவேன்.

*(குருநகர் மக்கள் சந்தித்த இடப்பெயர்வுகள் நினைவாக)*

**'அவலத்தின் இராகங்கள்'** (சுவிஸ்) – 1995


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுதான் வழமை

சுழன்று வீசும் சோளகக் காற்றை
சுவர்கள் தடுத்தால் வியர்க்குமென்று
முற்றத்தில்
சுக கீதம் பாடிடும்
காற்றை ஏற்றபடி
தூங்கிக் கொண்டிருந்தேன்.

நடுச்சாமம் அமைதியான நேரம்
செவிப்பறை உடைந்ததுபோல்
எழுந்தது ஓசை.
இதயம் துடித்தது, உடல் பதறியது,
முதல் முதல் உலகத்தைப் பார்ப்பவன்போல்
விழித்துக் கொண்டிருந்தேன்.
மற்றவர்கள்
என்னை அழைத்தவண்ணம்
வெளியேறிக் கொண்டிருந்தார்கள்.
வெளியே சென்றேன்,
வீதியில் ஜனங்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள்.

குழந்தைகளின் கூக்குரல்
சிறுவர்களின் அழுகுரல்
பெரியவர்களின் அதட்டல்
இதயம் உடைந்து சிதறியதுபோல்
நெஞ்சம் துடித்துக் கொண்டிருந்தது.

என்னென்று கேட்டேன்
"எல்லோரும் மேல்வீடு தேடி ஓடுகிறார்கள்"
கூறிய மனையாள் கையைப் பிடித்திழுத்தபடி
ஓட ஆயத்தமானாள்.
தடுத்து நிறுத்தி, மற்றவர்களைப் பார்த்தேன்
எவருமே இல்லை.
நான் நிற்பதால்தான் அவளும் நிற்கிறாளா?
மர்மமான சூழலைப் பற்றி வினாவினேன்.
"கேட்டது ஷெல்லடிச் சத்தம்
தொடர்ந்து நாலு தரம் அடிப்பார்கள்
அதனாலே எல்லோரும் மேல்வீடு தேடி ஓடுகிறார்கள்"
மனைவியின் கூற்றில் நிலமை புரிந்தது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயம் மென்மேலும் படபடத்தது,
சிறிது நேரம் அமைதி!

"இனிமேல் அடிக்கமாட்டான் உள்ளே போங்கோ"
சிறுமியின் குரல் அமைதியைக் குலைத்தது
நான் புரியாமல் பார்த்தேன்.
பத்து நிமிடங்களுக்குள் அடித்து முடிந்திடுமாம்
நேரம் கழிந்து விட்டது
சிறுமியின் ஞானம் சிந்திக்கத் தூண்டியது.

தெரு மீண்டும் நிறைந்துவிட்டது
விபரம் அறிய ஒவ்வொருவரும்
மாறி மாறி விசாரித்துக்கொண்டார்கள்.
வாகன இரைச்சல் கேட்டது.
"அம்புலன்ஸ்"
சைக்கிளில் பலர் ஓடினார்கள்.
"தமிழீழ காவல் துறையினர்"
பரவலாக குரல்கள் கேட்டது.

காரிருளானாலும்
நடமாட்டங்களை உணர முடிகின்றது.
ஒரு மணி நேரங் கழித்து
விபரங்கள் பறந்து வந்தது.
வீடொன்றில் ஷெல் விழுந்து
நால்வர் இறந்து விட்டார்களாம்
அறுவருக்கு கடுங் காயமாம்.

யாராக இருக்குமென்பதை உணர்ந்தவர்கள்
எனக்கும் உணர்த்திவிட்டு
அனுதாப வார்த்தைகளுடன்
கலையத் தொடங்கினார்கள்.
நிசப்தம் நிலவியது
மௌனமாய் படுக்கைக்குச் சென்றேன்
"இதுதான் வழமை"
என்றாள் மனையாள், அமைதியாக..

*(05.06.1994 இல் குருநகரில் நிகழ்ந்த சம்பவம்.*
*நான் முதற்தடவையாகக் கேட்ட ஷெல் சத்தம்)*
**'அவலத்தின் இராகங்கள்'** (சுவிஸ்) – 1995


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடையாளம்

காற்றின் தாலாட்டல்களில்
கடல் நீரோட்டத்தோடு
மிதந்து வந்தது பிணம்.
அடையாளம் தெரியவில்லை
ஒருவார காலமாக எவரேனும்
காணாமல் போன தகவலும் இல்லை
எனவே
எங்கோ நடந்த வேட்டையில்
ஏதோ ஒரு குடும்பத்தை
அனாதை ஆக்கியதின்
அடையாளமாக மட்டும்
அந்தப் பிணம் தெரிகின்றது.

*(ஆனி.1994 இல் குருநகரில் கண்ட சம்பவம்)*
**'அவலத்தின் இராகங்கள்'** (சுவிஸ்) – 1995

## உறக்கம்

சில இரவுகளில்
எறிகணைகளின் முற்றுகைக்குள்
சிக்குண்டவர்களின்
பரிதாபங்களை
மறுநாள் காலை
அயலவர்கள் சொல்லக் கேட்கும்போதுதான்
செவிகளும்
உறங்குகின்றதென்பதை
உணர முடிகின்றது
எத்தனை இரவுகள்
நித்திரை மறந்த செவிகளல்லவா?

*(ஆனி.1994 இல் குருநகரில் உணர்ந்த அனுபவம்)*
**'அவலத்தின் இராகங்கள்'** (சுவிஸ்) – 1995


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களமேடு

மேடை அமைத்து
விதை விதைத்து
முளை வரும்வரை
பட்ட கடனோ சிலநூறு

முளை யெடுத்து
நாத்து நட்டபின்
தளிராகி செடியாகி மலராகி
கனியாகும் வரை
கரைந்த பணமோ பல்லாயிரம்

கனி கனிந்து
பயன் தரும் நேரம்வரை
கண் விழித்துக் காத்திருந்து
கனி பறிக்கும் வேளை
காலமெனும் கடும் புயல்
காலனாகத் தோன்றி
கடுகேனும் இரக்கமின்றி
வேரோடு அழித்துவிட்டு
வேதனையைக் கொடுத்துவிட்டு
கற்பிழந்த கன்னிகையாய்
களமேடு காட்சி தர
வெற்றிக் களிப்பில்
வேகமாயச் சென்றதது

செடியின் நிலை போலன்றோ
செந்தமிழைப் பேசுதலால்
செந்நீரைச் சிந்துகின்றார்
எனக் கூறிக்
கண்ணீர் விட்டுக் கதறுகிறாள்
தன்வீடு களமேடாய்க்
கண்டுவிட்ட காரிகையவள்

'தமிழொலி' (சுவிஸ்) - 1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடமாடும் சக்திகள்

விளை நிலத்தை உழுது
விதை விதைத்த பொழுது
வளம் காணும் சிந்தனையை
வளர விட்டி ருந்தேன்

பயிரையும் முந்திக் கொண்டு
புல் முளைத்த பொழுது
பதை பதைக்கும் வெய்யிலிலும்
பிடுங்கி எறிந்து விட்டேன்.

அரும்பிய முளை தன்னில்
அயலவர் கண் பட்டபோது
அடை காக்கும் கோழியாய்
அணைத்துக் காத்தி ருந்தேன்.

தளைக்கும் பயிர் தன்னில்
தீயவை அணைந்த போது
தீயாக மாறி நான்
தடுத் தழித்து விட்டேன்.

தலை நிமிர்ந்து நின்று
தானியம் சிரித்த போது
தடை யின்றி வாழ்வும்
தரமாகு மென்றி ருந்தேன்.

நடந்ததோ வேறொன் றென்று
நான் அறிந்த போது
நடைப் பிண மாகியே
நடை போட லானேன்

நானிலத்தில் இன்று நடப்பதோ
நாம் நினைப்பவை களல்ல
நம்மையும் மீறியே என்றும்
நடமாடும் சக்திகளை நாமறிவதில்லை.

'தமிழொலி' (சுவிஸ்) - 1992


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கரகாட்டம்

மண்டைதீவுக் கடற்கரையில்
கறுப்புச் சட்டைக்காரரின்
கரகாட்டத்தை கண்டவர்கள்
கொண்டுவந்த செய்திகேட்டு
குருநகரே குமுறி அழுதது.

உழைத்திட உறுதியுடன்
கடல் சென்றவர்கள்
உயிரற்று வருவாரென எவர் கண்டார்.

முப்பத்தொரு உடல்கள்
வெட்டப்பட்டு கிழிக்கப்பட்டு
சுடப்பட்டு கிடந்ததை
பொறுக்கி எடுத்து
சிறு படகில்
கொண்டுவந்தவன் ஒருவன்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இறக்கிய குவியலில்
உடலங்கள்
துண்டாடப்பட்ட உறுப்புகள்
பார்த்தவர்கள் விழி
நீரால் மறைத்தது
உணர்வுகளின் உரசல்
உதிரத்தை உறைய வைத்தது

குழுமி நின்றவர்களிடையே
ஆயிரம் ஷெல்லுகளின்
வெடி ஓசையை மிஞ்சிடும் அளவுக்கு
அழுகுரல்.
கதறி அழுதது
உயிரற்ற உடல்களின்
உரிமையாளர்கள் மட்டுமா?
அறிவிழந்து விழுந்தது
துண்டாடப்பட்ட உறுப்புகளின்
அன்புக்குரியவர்கள் மட்டுமா?

சோகத்தை சுமந்து
சோபையை இழந்து
சொல்வதற்கு வார்த்தைகளின்றி
மௌனமாய் நடந்த ஊர்வலத்தில்
முப்பத்தியொரு சடலங்களும்
புதைகுழி நோக்கிச் சென்றுகொண்டிருந்தன.

*(10.06.1986 மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட*
*குருநகர் கடற்றொழிலாளர் நினைவாக)*
**'அவலத்தின் இராகங்கள்'** (சுவிஸ்) - 1995


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாட்சியம்

யாழ் கோட்டையை எட்டிட
இந்திய இராணுவம்
பகிரதப்பிரயத்தனம்
செய்துகொண்டிருந்தது.

நான்கு திசைகளாலும்
எறிகணைகள் – துவக்கு வேட்டுக்கள்
இடைவெளிகளின்றி
வீடுகள். பள்ளிக்கூடங்கள்
ஆலயங்களிளெல்லாம்
தடம் பதித்துக் கொண்டிருந்ததால்
கை, கால், உயிரிழந்தவர்களிள்
பட்டியல் நீண்டு கொண்டேயிருந்தது.

ஓடங்கள் மீது செல்வதால்
தப்பிவிடும் உயிர்களென்ற
நிம்மதிப் பெருமூச்சுடன்
நம்பிய தீவொன்று நோக்கி – மக்கள்
நகர்ந்து கொண்டிருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலங்கு வானூர்தியின்
வரவைக் கண்ட அப்பாவிகளின்
ஓலங்கள் அடங்குமுன்
அவலங்கள் அரங்கேறின
மழைபோல் துப்பாக்கி ரவைகள்
குழந்தைகள், சிறுவர்கள்
பெண்கள், முதியவர்களின்
குருதியில் கடல் நீர்
சிவப்பாக மாறியது.

"படகுகளில் வந்த இருபது புலிகளை
இந்திய வான்படை அழித்தொழித்தது"
இந்திய வானொலியும், பத்திரிகைகளும்
இயம்பிக் கொண்டேயிருந்தது.
காயங்களுடன் தப்பியவர்களின்
உண்மைச் சாட்சியங்களை
உலகத்திற்கு எடுத்தோதுவது யார்?

*(21.11.1987 இல் அராலி கடல் படுகொலை செய்யப்பட்ட குருநகர் மக்கள் நினைவாக)*

**'அவலத்தின் இராகங்கள்'** (சுவிஸ்) – 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய பிறப்பு

மண்டைதீவு ஷெல்லுகளின்
விண்ணதிரும் சத்தம் கேட்டு
விடிந்தும் விடியாததுமாய்
படுத்தும் படுக்காததுமாய்
பதறியடித்து ஓடும்
பரிதாபச் சூழலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தில் வட்டமிடும்
விமானங்கள் போடும் குண்டுகள்
வீடுகளை தரை மட்டமாக்க
உயிரைக் கையில் பிடித்தபடி
ஊருக்கு ஊர் ஓடும்
உறுதியற்ற நிலையினில்

ஆலவட்டம் போடும் ஹெலிகளின்
ஆக்கிரமிப்பில் தப்பிட
ஆங்காங்கே மறைந்து
அபயம் தேடிடும்
அவலச் சுமையினில்

மனித எலும்புகளும், சதைகளும்
இரத்தக் கறைகளிலுமான
யாகப்பர் ஆலயத்தின் சிதைந்த
கற் குவியல்களின் மேல்
கைகளை விரித்தபடி
யேசு பிறந்து கிடந்தார்.

புதிய பிறப்பா?
பதட்டத்துடன் விழித்தேன்
கனவு...

ஷெல்லுகளும் குண்டுகளும்
மனித சதைகளைத் தேடும் சத்தங்கள்
கேட்டுக் கொண்டேயிருந்தது.
அது கனவு அல்ல...

*(13.11.1993 இல் குருநகர் புனித யாகப்பர் ஆலயம் குண்டுவீச்சால் தகர்க்கப்பட்டு 9 உயிர்கள் பறிக்கப்பட்டதன் நினைவாக)*

**'அவலத்தின் இராகங்கள்'** (சுவிஸ்) – 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முழுக்கு

பகலெல்லாம்
கொல்லப்பட்டவர்களின்
உதிரங்கள்,
மாலையானதும்
சூரியனைச் சிவப்பாக்கி
அடி வானத்தையும்
சிவப்பாக்கி விட்டது.

இரவெல்லாம்
கடலில் அழிக்கப்பட்டவர்களின்
குருதியில்
மூழ்கிய கதிரவன்
காலையில்
எழுகின்றான் சிவப்பாக.

**'அவலத்தின் இராகங்கள்'** (சுவிஸ்) - 1995

## உறுதி.

அதிகாலை
கலகலப்பாக இருந்தது வீடு

இரவு தொழிலுக்குப் போன
கணவனும், பிள்ளையும்
வருவார்கள் மீனுடன்
என்ற அக்களிப்பு

ஏனென்றால்
இரவெல்லாம் விழித்திருந்தேன்
எந்தச் சூட்டுச் சத்தமும்
கேட்கவில்லை.

*(ஆனி.1994 இல் குருநகரில் உணர்ந்த அனுபவம்)*

**'அவலத்தின் இராகங்கள்'** (சுவிஸ்) - 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கை

காலையில் எழுந்திடும் கதிரவனை
கண்குளிரக் கண்டிடும் களிப்பு
மாலையில் மறையும் சூரியன்
மனதை தொட்டிடும் மகிழ்ச்சி
சோலைகளில்லை என்றாலும்
சோர்வைத் தராத காட்சிகள்.

சிறியதொரு தீவு அதனைச்
சுழன்று செல்லும் கடல்நீர்
சீறிடும் காற்றில் தெறித்திடும்
சிறுநீர்த் துளிகளின் எழில்
பீறிட்டுப் பாயும் இயந்திர
பாய்ப் படகுகளின் ஊர்வலம்.

கடலின் நடுவினை ஊடறுக்கும்
கருங்கோடான பண்ணை பாலம்
தொடுவானத்தில் ரதங்கள் போல
தொடராகத் தெரியும் வாகனங்கள்
இடைவெளியால் பார்த்து மகிழும்
தொலைதூரத் தீவுக் கூட்டங்கள்.

வாடைக் காற்றின் குளிர்மையில்
வெள்ளம் பெருகித் தழும்பிட
கூடி நண்பர்களுடன் கடலில்
சுழியோடி நீந்தும் நேரம்
கோடி பெற்றாலும் கிடைக்குமா?
கேட்கவே செய்யும் உள்ளம்.

சாயந்திரமானால் சந்திக்குச் சந்தி
சந்தித்து சல்லாபித்து வாதிட்டு
காயும் நிலவினில் ஆயிரம்
கதைகள் சொல்லி கழிந்ததை
ஓய்வின்றி நினைத்து மகிழ்ந்தேன்.
ஒன்பது ஆண்டுகளாக சுவிற்சலாந்தில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த மண்ணின் சுகம்தேடி
செறிந்துள்ள சொந்தங்கள் நண்பர்கள்
சிந்தை நிறைந்தவர்களை நாடி
சென்றேன் பிறந்த மண்ணிற்கு
விந்தை. கண்களை குளமாக்க
வியப்புற்று நின்றேன் மரமாக.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர்
ஒளியாகப் பதிந்த அத்தனையும்
சின்னா பின்னமான காட்சிகளை
சரித்திரமாய் கண்டேன் கலங்கினேன்
அன்னியன் கற்பழித்த வடுக்களின்
அடையாளமாக ஊரைக் கண்டேன்.

சுருங்கிவிட்ட சொந்தங்களை எண்ணி
செந்நீர் வடிந்து நின்றேன்
சரிந்த குடும்பங்களின் கதிக்கு
சாட்சியான சிறுவர்களைக் கண்டேன்
நெருப்பிலே புகையின்றி வயிற்றிலே
புகைவரும் குடும்பங்களை பார்த்தேன்.

கல்லாய்க் குவிந்து கிடக்கும்
யாகப்பர் ஆலயம் கண்டேன்
சல்லாபித்து மகிழ்ந்தவர்கள் கொலையுண்ட
சரிதைகளை சொல்லக் கேட்டேன்
இல்லங்களெல்லாம் குண்டடியால்
இடிபட்டுக் கிடப்பதைக் கண்டேன்.

ஷெல்லடியின் ஓசையில் படுக்கையுடன்
சிதறியோடும் மக்களைப் பார்த்தேன்
எல்லாவற்றையும் ஜீரணிக்கும் மக்களிடம்
எழுந்துள்ள நம்பிக்கையையும் கண்டேன்
மலரும் தமிழீழம் அங்கேநாம்
மானத்துடன் வாழலாம் என்பதே!

*(01.07.1994 இல் நான் குருநகர் வந்ததன் நினைவாக)*

**'அவலத்தின் இராகங்கள்'** (சுவிஸ்) - 1995


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உறவின் தொடர்

தொலை தூரத்தில்
மரண ஓலங்கள் எழுந்த போது
மௌனமாய் அஞ்சலி செலுத்தினேன்.
வேற்று ஊரில்
வேதனைக் குரல் கேட்டபோது
வார்த்தையால் அனுதாபம் தெரிவித்தேன்.
என் ஊரில்
எத்தனையோ உயிர்கள் வீழ்ந்தபோது
எல்லோரையும் போல் கடமையாற்றினேன்.
அடுத்த வீட்டில்
அவலக்குரல் காதைப் பிழந்தபோது
அனுசரணையுடன் ஆறுதல் கூறினேன்.
வீட்டிலே
விழுந்தது இடி எனும்போது
துடிக்கிறேன், துவழுகிறேன்
முடிவின்றி கண்ணீர் வடிக்கிறேன்.
ஏன்?
இரத்தத்தின் உருத்துக்களல்லவா?
உறவின் தொடர் கதைகளல்லவா?

**'உணர்வுகளின் சங்கமம்'** (சுவிஸ்) - 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமத்துவம்

புதை குழிகளில்
புதைந்து கிடந்த
மனித உடல்களின்
எஞ்சிய எச்சங்கள்
இனங்காணப்பட்ட பட்டியலில்
சமத்துவம் காணப்பட்டது

புதைக்கப்பட்டவர்கள்
சாதி சமய வேறுபாடுகள்
வதிவிட பணநிலை வேற்றுமைகள்
எதுவுமே இன்றி -ஒன்றாக
புதைக்கப்பட்டிருந்தார்கள்
புதைத்தவர்கள்
சமத்துவத்தின் கர்த்தாக்கள்.

**'மின்மினி'** (சுவிஸ்) - 2000

## முடிவுரை

உறங்கிய இரவுகளை
கணக்கிட்டுப் பார்க்கிறேன்
நிறைவாக உணவுண்ட
நாட்களைக் கூட
நினைத்துப் பார்க்கிறேன்

இடைவெளி இல்லாத
இயந்திர வாழ்வியலில்
இதயம் கண்ட நிம்மதியை
எண்ணிப் பார்க்கிறேன்.

தொடர் கதைதான்
தொடர் கதைக்கு ஒரு
முடிவுரை கிடைக்காதா?
அடிமனம் எழுப்பிடும்
விடைகாணா வினாவிது.

**'மின்மினி'** (சுவிஸ்) - 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலில் வெளிக்கொண்டுவரப்பட்ட வழக்கிலிருந்த சொற்கள்

அற்ஹோம்
அரிந்து
அணியம்
அரிக்கன் லாந்தர்
அளி
அயிர
அம்பா
அத்தாங்கு
அடிகம்பாகம்
அடி கயிறு
அரிப்பு
ஆர்க்கு
ஆசந்தி
ஆஞ்சான
இரட்டு
இளக்காரம்
ஈலக்கண்ணி
ஈரவலை
உடக்குப்பாஸ்
உள்ஒட்டம்
உருவுதல்
ஊண்
எருவலை
ஏரா
ஒட்டர்கதவு
ஓடுதல்
கரவலை
கடகம்
கவிர்
கட்டுமடி
கல்லடி
கலக்கெறிதல்
கடிப்புவலை
கடல்சொறி
கடையால்
கல்யாணம்
கன்னிக்கால்
கடைப்பாய்
கம்பான் கயிறு
கருக்கோப்பு
கானத்தடி
கும்பா
குறோசுமை
குழைவு
கூறல்
கூறப்பாய்
கூனி
கைவலை
கெழிதல்
கொண்டடி
கொண்டலம்
கோஸ்
கோடான்
கோண்
பசான்
பட்டி
பருமல்
பழங்கயிறு
பறி
படுப்புத் தூண்டல்
பாடு
பாய்மரம்
பாச்சுவலை
பிதைதல்
பிச்சை
பிலாவளிச்சல்
பிள்ளைப் பெருங்குடா
பிதைப்புவலை
புரி
புணை
பெருக்கங் கயிறு
போடுகாசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிந்து
வளிச்சல்
வடிக்கல்
வலைபடுத்தல்
வண்டிக்கயிறு
வலிந்த மரக்கோல்
வாய்வலை
வாட்டாளை
வார்த்தைப்பாடு
வாகுதல்
வாய்க்கயிறு
விலங்குமரம்
வீச்சுமரம்
வெச்சாப்பு
வெண்நூல்
வெள்ளாப்பு
வெளி ஓட்டம்
மட்டம் கட்டுதல்
மணி இறப்பரித்தல்
மரக்கோல்
மதகு
மடங்கு
மடி
மடவலை
மண்டாடி
மந்து அடித்தல்
மண்டாக் கம்பி
மாரிவலை
மாலக்கண்ணி
மாண்பாடு
மிதந்தலை
மீன் மீளுதல்
முட்டுக்காலி
முண்டி
முச்சை
முறைக்காவல்
மூடப்பெட்டி
மேலாப் பாய்ச்சி
மோவலை
தனிப்பங்கு
தங்கூசி
தரித்துக்கட்டும் கயிறு
தண்டயல்
தட்டு
தாங்குதல்
திருப்பலி
தீடை
தீர்வைப்பயணம்
தூறு
தொட்டதாய்
தொட்டதகப்பன்
தொட்ட பிள்ளை
தோடைக்காரர்
நடுமடி
நச்சுநீர்
நடுமடி
நடுவணி
நிலவலை
நிறைப்பு
நுள்ளான் கயிறு
யாழி
றெக்ளமேசன்
ரேகு
லாவுதல்
லோமியா

மென்மேலும் என் பணி தொடர
உங்கள் ஆசிகள்...

***கலையார்வன்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org